வரு.73 இல. 16 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී


2021 ஏப்ரல் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
April 18 Sunday, 2021

40/-





ஆளுநர் வடபுலத்தோருக்கு விடுக்கும் செய்தி 02


இலக்கை எட்டுமா ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடை? 12


துக்கத்தை மடைமாற்றும் விவேக் இனி இல்லை 13


வறுமையை தாண்டி சாதனை நாயகனாக உருவெடுத்த நிஸ்ஸங்க 24

### கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டம் தொடர்பில் எதிரணி போலிப்பிரசாரம்

# துறைமுக நகரின் முழு நிலமும் இலங்கைக்கே சொந்தமானது

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு நாட்டுக்கு பாதகமாக ஒரு போதும் செயற்படாது



**அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் கெஹலிய நாட்டு மக்களுக்கு உறுதி மொழி**

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**


கொழும்பு, துறைமுக நகர ஆணைக் குழுச் சட்டம் தொடர்பில் போலியான பிரசாரங்களை எதிர்தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர். துறைமுக நகரத்தின் முழுமையான நிலப்பரப்பும் இலங்கைக்கே சொந்தமானது. ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒருபோதும் நாட்டுக்கு பாதகமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்காதென்ற உறுதிமொழியை வழங்குவதாக வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். முழு உலகப் பொருளாதாரமும் கடுமையான வீழ்ச்சிக்கண்டுள்ள சூழலில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் ஓர் உபாய மார்க்கமாகவே கொழும்பு துறைமுக நகரத்தை பயன்படுத்த எதிர் பார்க்கிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வலுவடைவதையும் மக்கள் மீதான சுமைகள் குறைவடைவதையும் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களே இத்திட்டம் தொடர்பில் போலியான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லும்

10




## வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க பின்புலம் அவசியம்



### துறைமுக நகர ஆணைக்குழு ஊடாக அரசு ஏற்பாடு

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

முதலீடுகளை மேற்கொள்வதற்கான பின்புலம் நாட்டில் இருந்தால் மாத்திரமே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை நோக்கி வருவார்கள். அதற்கான பின்புலமே கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில்

10



புத்தாண்டை முன்னிட்டு தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு பிரதமர் தலைமையில் பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்று (17) காலை 7.16க்கு நடைபெற்றது. நிகழ்வில் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மூன்று மாதங்களில் 1,600 பேர் இணைப்பு

## இராணுவம் மீது யாழ். இளைஞர்களுக்கு நம்பிக்கையும் உயர் மரியாதையும்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பெருமிதம்



**யாழ்.குறூப் நிருபர்**

இராணுவத்துக்கு ஆட்சேர்ப்புக்காக கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வரும் ஆட்சேர்ப்புப் பணியின் போது 1,600 க்கும் மேற்பட்ட யாழ். தமிழ் இளைஞர், யுவதிகள் இலங்கை இராணுவத்தில் சேர்வது, அந்த இளைஞர்கள் எங்கள் அமைப்பின் மீது வைத்திருக்கும்

10

### சர்வதேச ரீதியில் கொரோனா தாக்கம்

## இரு மாதங்களில் இரட்டிப்பாக அதிகரித்துள்ள தொற்றாளர்கள்

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

சர்வதேச ரீதியில் கடந்த இரண்டு மாதங்களில் கொவிட்19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுப்

10

## அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் எனக்கில்லை

### பொதுவேட்பாளர் செய்தி குறித்து வேலன் சுவாமிகள்



**யாழ்.விசேட நிருபர்**

அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் ஒருபோதும் என்னிடம் கிடையாதென வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார். வேலன் சுவாமிகளை முதலமைச்சர்

10

### அரசின் வடக்கு அபிவிருத்தி பணிகளில்

## TNA யின் ஒத்துழைப்புக்கு ஆளுநர் சார்ள்ஸ் பாராட்டு



**கே.அசோக்குமார், லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பு கிடைப்பதாக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

10

## முன்னணி நகைச்சுவை நடிகர் விவேக் நேற்று காலமானார்



### தமிழக பொலிஸ் மரியாதையுடன் உடல் தகனம்

திடீர் மாரடைப்பு காரணமாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த சின்னக் கலைவாணர் நடிகர்

10

### தடைசெய்யப்பட்ட 11 இஸ்லாமிய அமைப்புகளின்

## சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தடைசெய்யப்பட்ட 11 இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்யுமென

10

## யாழில் கல்வி நடவடிக்கைகள் நளை முதல் மீள ஆரம்பம்

### அரசாங்க அதிபர் மகேசன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட தற்போதைய நிலைமை தொடர்பில்

10

### நாட்டில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும்

## ரூ. 128 கோடி மதிப்புள்ள 128 Kg ஐஸ் போதைப்பொருள் பறிமுதல்



### இரு பெண்கள் உட்பட 13 பேர் கைதாகியுள்ளனர்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

இலங்கையில் கடந்த ஒரு வார காலமாக நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் ஊடாக 128 கோடி இலங்கை ரூபாய் மதிப்புள்ள சுமார் 128 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இரண்டு பெண்கள் உட்பட 13 சந்தேக நபர்கள்

10



**விக்கல் வீராச்சாமி**



தலைவர் என்ன கடும் யோசனையில் ஆழ்ந்து போயிருக்கிறார்....

நாலு நாளா அறிக்கை விட எந்த விடயமும் கிடைக்கலையாம், அதுதான் சின்னக் கலைவாணர் விவேக் சம்மந்தமா எழுத காத்திருக்கிறார்..!!!

## வவுனியாவில் கைக்குண்டுகள் செயலிழந்த நிலையில் மீட்பு

### இந்திய இராணுவம் பயன்படுத்தும் வகையானதாம்



**வவுனியா விசேட நிருபர்**

இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதாக கருதப்படும் இரு கைக்குண்டுகள் செயலிழந்த நிலையில் வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளன. வவுனியா, ஈரப்பெரியகுளம், நவகமுவ பகுதியில் இவ்விரு கைக்குண்டுகளும் (16) மாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

10

# காணாமல் போனோர் தொடர்பில்

# என்னுடன் எவருமே பேசியதில்லை

## வடமாகாண ஆளுநர்

வடக்கின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கல்வி சுகாதாரம் விவசாயம், மீன்பிடி, கிராமிய உட்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் கைத்தொழில் துறைகளை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் பல இக்காலங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மாகாணசபை செயற்படாத நிலையில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் திணைக்களங்கள் அமைச்சர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார். மக்களுடன் மிக நெருக்கமாக செயல்படும் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் தற்போதைய வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், சிறந்த ஆளுமை உடையவர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள கட்டியெழுப்பப்பட்டு வரும் வடமாகாணம் பல்வேறு துறை அபிவிருத்திகளை இலக்காகக் கொண்டு பெரும் எதிர்பார்ப்புகளுடன் உள்ள நிலையில் வட மாகாணத்தின் ஆளுநராக பதவி வகித்து அதன் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள், வாழ்வாதாரத்தில் மக்களை மேம்படுத்தும் திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தினகரன் வாரமஞ்சரி சார்பில் மேற்கொண்ட நேர்காணல் இது.



**திருமதி பி.எம். எஸ். சார்ள்ஸுடன்** ஒரு நேர்காணல்

நேர்காணல்:
கே. அசோக்குமார்,
லோரன்ஸ் செல்வநாயகம்
படங்கள்: கயான் புஷ்பிக்க

**கேள்வி: வட மாகாணத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கூறுவீர்களா?**

**பதில்:** வடக்கின் அபிவிருத்தி ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. குறிப்பாக இக் காலங்களில் கல்வி, சுகாதாரம், கிராமிய உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் அதற்கு இந்த வருடத்திற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளோடு ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புதல், குறிப்பாக கணிதம்,விஞ்ஞானம்,தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார். அந்த வகையில் குறிப்பிட்டளவு ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 90 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 200க்கும் அதிகமான ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் ஒரு மாத காலத்தில் அந்த நியமனங்கள் வழங்கப்படும் என கூறமுடியும்.

அதிகமாக பின்தங்கிய பகுதிகளில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புதல், பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

**கேள்வி: வடக்கில் சுகாதாரத் துறையில் நிலவும் குறைபாடுகள், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விளக்குவீர்களா?**

**பதில்:** குறிப்பாக வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஆளணிப் பற்றாக்குறை, டாக்டர்கள் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இந்த வருடத்திற்கான திட்டங்களில் அவை உள்வாங்கப்பட்டுள்ளன.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். ஜனாதிபதியுடனும் அது தொடர்பில் நாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அடுத்து வரும் சில மாதங்களில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

**கேள்வி: வட மாகாணத்தில் தொடர்ச்சியாக காணப்படும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் குறிப்பிட முடியுமா?**

**பதில்:** ஜனாதிபதியும் பிரதமரும் நீர்ப்பாசன அமைச்சரும் அதற்கான ஒரு விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். இந்த மாதத்தில் அந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள நிலையில் 80 வீதமான மக்களின் குடிநீர் பிரச்சினைகளுக்கு அதன் மூலம் தீர்வு கிடைக்கும். அதே போன்று அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் அமைச்சினூடாக வடமராட்சியில் குடிநீர் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்கள் மூலம் யாழ்.குடா நாட்டின் பெரும்பாலான மக்கள் தங்கள் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

அத்துடன் கிளிநொச்சிக்கு நீர் வழங்கும் திட்டம், முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கும் நீர் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி: இரணைமடு நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதற்கான திட்டம் தொடர்பில் பேசப்பட்டதே அதன் தற்போதைய நிலை என்ன?**

**பதில்:** இல்லை. அந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது. அதேவேளை தீவகப் பகுதிகளுக்கு நீர் வழங்கும் நடவடிக்கைகள் அந்தந்த பகுதியின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**கேள்வி: அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கின்றதா?**

**பதில்:** அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடும் திணைக்களங்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர்களில் ஒத்துழைப்பு கிடைக்கின்றது என்பதை குறிப்பிட முடியும்.

**கேள்வி: குறிப்பாக வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் தென் மாகாணத்திற்கு தெரியாத நிலையே காணப்படுகிறது. அது தொடர்பில் நீங்கள் கூற விளைவதென்ன?**

**பதில்:** அதற்கு முக்கிய காரணம் வடமாகாணத்தின் இத்தகைய செயற்திட்டங்கள் தொடர்பில் தேசிய ஊடகங்கள் போதியளவில் வெளிப்படுத்துவதில்லை. குறிப்பாக எனது ஊடகப்பிரிவு மூலம் அவ்வப்போது அனைத்து செய்திகள் தகவல்களும் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டு வந்தாலும் அவை எந்தளவு பிரசித்தப்படுத்தப் படுகின்றன என்பது தெரியவில்லை.

**கேள்வி: வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலீடுகள் தொடர்பில் தெரிவிக்க முடியுமா?**

**பதில்:** வடக்கைப் பொறுத்தவரை சுற்றுலாத்துறை, விவசாயம், கைத்தொழில் துறை, மீன்பிடித்துறை போன்றவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறான முதலீடுகள் பெருமளவு வேலைவாய்ப்புகளுக்கும் சந்தர்ப்பமாக அமையும். அவற்றிற்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகின்றன. பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீடுகள் கொண்டுவரப்பட வேண்டும் அதற்கான தேவைகள் அதிகமாக வடக்கில் காணப்படுகின்றன. புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் வடக்கில் முதலீடுசெய்வதற்கு முன் வருவார்களேயானால் அவர்களும் அபிவிருத்தி மற்றும் முதலீடுகளில் பங்களிப்பு செய்ய முடியும் அவ்வாறானவர்களை நாம் வரவேற்பதோடு அவர்கள் என்னோடு பேச்சுவார்த்தை நடத்தலாம்.

**கேள்வி: பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?**

**பதில்:** ஆம்! நாம் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் அந்த அபிவிருத்தி திட்டங்களை விரைவாக முன்னெடுக்ககுமாறும் கேட்டுக் கொண்டுள்ளோம்.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் மற்றும் உல்லாசப் பிரயாணிகள் வருவதற்கு சுமார் ஒன்பது மணித்தியாலங்களை செலவிட வேண்டியுள்ளது.

ஏற்கனவே விமான சேவைகள் நடைபெற்று அவை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதை ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

**கேள்வி: வடக்கில் தீவகப் பகுதிகளில் சீனாவின் மின் உற்பத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே? அது தொடர்பில் தெளிவு படுத்துவீர்களா?**

**பதில்:** சீனா தனித்து அவ்வாறு மின்னுற்பத்தி திட்டங்களை முன்னெடுக்கவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்திட்டங்களின் கீழ் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டங்களில் கேள்வி மனு கோரலில் சீனாவும் உட்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

**கேள்வி: வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில், குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?அது தொடர்பில் அவர்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்களா?**



**பதில்:** இல்லை அவ்வாறான பேச்சு வார்த்தைகள் எதுவும் நடைபெறவில்லை.எவரும் என்னிடம் வந்து பேசவுமில்லை. அது தொடர்பில் துறை சார்ந்த அமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

**கேள்வி: வடமாகாண சபை இயங்காத நிலையில் மக்களுக்கான சேவைகள், அதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன?**

**பதில்:** வடமாகாண சபை செயற்படாத நிலையில் மாகாண சபை மற்றும் அமைச்சுக்கள் ரீதியான சகல நடவடிக்கைகளையும் ஆளுநரே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அது பாரிய பொறுப்பாக இருந்தாலும் திட்டங்களை சீராக முன்னெடுக்க முடிகின்றது.

**கேள்வி: நீங்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக பதவி வகித்தபோது உங்கள் கடமைகள், செயற்பாடுகளுக்கு பெரும் அழுத்தம் கொடுக்கப்பட்டது, இங்கு அவ்வாறான நிலை காணப்படுகின்றதா?**

**பதில்:** உண்மையில் வடக்கில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர். மக்களுக்கான செயற்திட்டங்களில் அவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். கிழக்கில் அவ்வாறான நிலை காணப்படவில்லை.

**கேள்வி: காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை மற்றும் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீண்ட கால பிரச்சினைகளாக உருவெடுத்துள்ள நிலையில் அது தொடர்பில் உங்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா? நீங்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக செயற்பட்ட காலத்தில் சுமார் 12,500 முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெறுவதற்கு வழி வகுத்தமை தொடர்பில் நாம் அறிவோம். அந்த வகையில் மேற்படி விவகாரம் தொடர்பில் தங்களின் பங்களிப்பு என்ன? புனர்வாழ்வளிக்கப்பட்ட அவர்கள் நேரடி புலி உறுப்பினர்கள். எனினும் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அவ்வாறு அல்ல. ஏதாவது வகையில் அவர்களுக்கு உதவியவர்களே. அந்த நிலையில் அவர்களின் விடுதலை தொடர்பில் உங்களது பங்களிப்பு என்ன? உங்களால் ஏதாவது பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதா?**

**பதில்:** தொடர்பில் இதுவரை எவரும் என்னோடு பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அந்த விடயங்கள் தொடர்பில் நான் அறியாமல் ஒன்றும் செய்ய முடியாது. என்னிடம் எவராவது வந்து பேச்சுவார்த்தை நடத்தினால் அதற்கான கவனத்தை செலுத்த முடியும்.

**கேள்வி: அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் அரசியல் கைதிகள் அல்ல என்ற ஒரு கூற்றை அரசாங்கம் தெரிவிக்கின்றது. சுமார் இருபத்தைந்து வருடங்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த கைதிகளையும் முன்பு செய்தது போல் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யலாமே?**

**பதில்:** இந்த இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு வித்தியாசம் காணப்படுகிறது. யுத்தத்தின்போது சுமார் மூன்று இலட்சம் மக்கள் இராணுவத்தினரின் பகுதிக்கு வரும்போது அவர்கள் கிட்டத்தட்ட அரசாங்கத்திடம் சரணடைந்தார்கள். அந்த வகையில் அவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாக இருந்தது. அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதியிடம் அந்த நேரம் நாம் சிபாரிசுகளை முன்வைத்திருந்தோம். அவர் அந்த சிபாரிசை ஏற்றுக்கொண்டு புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். சரணடைந்தவர்களுக்கான ஒரு செயற்பாடாக அது காணப்பட்டது.

எனினும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். அதனால் இந்த விடயத்தை நீதிமன்றத்தின் ஊடாக கையாள முடியும். அதனால் தான் அவர்கள் புனர்வாழ்வு என்ற விடயத்தில் உள்ளடக்கப்படவில்லயென நான் நினைக்கின்றேன்.

**கேள்வி: அது தொடர்பில் உங்களால் ஏதாவது பரிந்துரைகளை முன் வைக்க முடியுமா?**

**பதில்:** அதைத்தான் நான் கூறுகின்றேன். சரணடைந்தவர்களை எவ்வாறு பராமரிப்பது அல்லது புனர்வாழ்வளிப்பது என்பது ஒரு விடயம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்பது சட்டத்திற்கு உட்பட்ட விடயம். இது சட்டத்தின் ஊடாகவே பார்க்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

**கேள்வி: காணாமல்போனவர்கள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** அது தொடர்பில் இதுவரை என்னிடம் எவரும் பேசவில்லை. எனினும் நான் அரசாங்க அதிபராக பதவி வகித்த காலத்தில் காணாமல் போன சிறுவர்களை தேடி அலைந்த பெற்றோர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான பிரிவு ஒன்றை ஏற்படுத்தி செயற்படுத்தினோம்.

அதன் ஊடாக நாம் செயற்பட்டு சுமார் 300 சிறுவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைத்திருந்தோம். அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி க்கும் அந்த விடயம் தெரியும். காணாமல் போன பலரை அதன் ஊடாக நாம் குடும்பங்களுடன் ஒன்றிணைக்க முடிந்தது.

தற்போது காணாமற்போனோர் சம்பந்தமாக எவரும் என்னிடம் பேசுவதில்லை. எனினும் காணாமற்போனோர் தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் ஒரு குறிப்பிட்ட குழுவினர் மேற்கொள்ளும் செயற்பாடாகும். அது ஒரு அரசியல் நோக்கமாகவும் காணப்படுகிறது. உண்மையில் அவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் அவர்கள்உரிய தரப்போடு பேச வேண்டும். அது இதுவரை நடைபெறவில்லை.

**கேள்வி: வடக்கில் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி கூறுவீர்களா?**

**பதில்:** ஆம். அது தொடர்பில் நான் நேற்றைய தினமும் திறைசேரியின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அதன்போது ஒரு தொகை நிதிக்கான இணக்கம் காணப்பட்டது.

**கேள்வி: தீவகப்பகுதிகளுக்கான படகுச் சேவைகளை முறையாக நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா?**

**பதில்:** ஜனாதிபதியிடமும் இந்த விடயத்தை நான் முன்வைத்துள்ளேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

- புலம்பெயர் முதலீட்டாளர்கள் என்னுடன் முதலீடு தொடர்பில் பேசலாம்
- ஒருமாத காலத்தில் இரண்டாயிரம் ஆசிரியர்கள் வடக்கில் நியமிக்கப்படுவார்கள்

# சகல கடும் போக்கு கொண்ட அடிப்படைவாத அமைப்புக்களும் தடை செய்யப்பட வேண்டும்!!



**இலங்கை பல்லினங்கள் வாழும் சமூகமாகவும், பல்வேறு சமயங்களை பின்பற்றும் மக்கள் வாழும் நாடாக திகழ்ந்து வருகின்றது. இருந்த போதும் காலத்துக்கு காலம் இலங்கையில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் என்பது காணாமல் போய் ஒரு இனம் இன்னொரு இனத்தை சந்தேகமாக பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**

இலங்கையில் அரசியல்வாதிகளின் சுயலாப அரசியல் காரணமாக இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மனித உரிமைகள் என்பன கேள்விக் குறியாகியுள்ளது. அதிகளவான வன்முறைகளும் பாரிய மனித உரிமை மீறல்களும் இனங்களுக்கிடையில் மதங்களின் பெயரால் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சர்வமத குழுக்கள் செயலிழந்துள்ளன. அதனை தொடர்ந்து அடிப்படை மதவாத செயற்பாட்டுக்கான தீவிரவாத குழுக்கள் இலங்கையின் அப்பாவி மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றது.

பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களை சேர்ந்த அடிப்படைவாத அமைப்புக்கள் சக சகோதர இனங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதமாக தீவிரவாத நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இலங்கை நாட்டில் தொடர்ச்சியான வன்முறைகள் காரணமாக நாடு அமைதியற்ற நிலையிலும் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை சந்தித்த நாடாகவும் தோற்றம் பெற்றுள்ளது.

இலங்கையில் ஈஸ்டர் தாக்குதலின் தொடர்ச்சியாக முஸ்லிம் அமைப்புக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த இலங்கை அரசு பதினொரு இஸ்லாமிய கடும் அடிப்படைவாத அமைப்புக்களை இலங்கையில் தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நாட்டில் சமாதானம் தொடர்வதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கமைவாக நன்னோக்கத்துடன் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் நலனிலும் உருவாக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதில் மேற்கூறிய அமைப்புக்கள் தடை செய்யப்படுவதாக ஜனாதிபதியால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட குறித்த அமைப்புக்களுக்கு ஆதரவளிப்போர், மீள் உருவாக்கம் செய்ய முனைபவர்களுக்கு பத்திலிருந்து 20 வருடங்களுக்கு சிறைத்தண்டனை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் கடும் தீவிர போக்குடைய அமைப்புக்களின் ஆதரவுடன் கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள் மீது குண்டுத்தாக்குலை மேற்கொண்டவர்களையும், அவர்களை வழிநடத்தியவர்களையும் கைது செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் இச்சட்டங்களால் எதுவும் அறியாத அப்பாவி மக்கள் பாதிக்கப்படக் கூடாது.

இலங்கையில் சக இனங்களுடன் ஐக்கியமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் சமூகத்தினர் மீது பெரும்பான்மையிரால் வலிந்து ஏற்படுத்தப்பட்ட வன்முறைகள் காரணமாக மத அடிப்படைவாதிகள் பாதிக்கப்பட்டிருந்த முஸ்லிம் சமூகத்திற்குள் ஊடுருவி அரேபிய கலாசாரத்தை உள்நுழைத்தனர். இலங்கையில் தமிழர்கள் மீதான உள்நாட்டு வன்முறையானது முஸ்லிம் மக்களிடையிலும் பாரிய தாக்கத்தையும் அழிவுகளையும் உண்டு பண்ணியிருந்தது. மேய்ப்பர்கள் இல்லாத ஆடுகளாக தவித்த முஸ்லிம் மக்களிடையே உள்நுழைந்த மத அடிப்படைவாதிகள் அரேபிய கலாசாரத்தை பரப்பியதுடன், அரேபிய ஆடைகளை அறிமுகப்படுத்தி, சகோதர இனங்களுடன் அவர்களின் உறவுகளிலும் இடைவெளியை ஏற்படுத்தினர்.

இலங்கையில் மௌலவிகளால் வீடுகளில் முஸ்லிம் மாணவர்களுக்கு போதிக்கப்பட்ட சமயம் சார்ந்த போதனைகள் நிறுத்தப்பட்டு, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட முஸ்லிம் கடும்போக்கு சமயத்தலைவர்களால் அரபுப் பள்ளிகள் உருவாக்கப்பட்டு 'கறாம்' மற்றும் 'காபிர்' போன்ற தீண்டாமை வார்த்தை பிரயோகங்களுடன் கடும் மததீவிரவாத பிரசாரங்கள் சகோதர இனங்களின் உறவுகளிலிருந்து அப்பாவி முஸ்லிம்களை அந்நியப்பட வைத்தது.

இலங்கையில் முஸ்லிம் மக்களிடையே தோன்றிய பல மதவாத அமைப்புக்கள் தப்பிளிக் ஜமாத் என்றும், தவ்பீக் ஜமாத் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்தும் மதத்தின் பேரில் வன்முறையில் ஈடுபட்டும் அப்பாவி முஸ்லிம் மக்களை இன்று நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர்.

இலங்கையில் சமாதானத்தை தொடர்வதற்கும், நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகவும் கடும் போக்குடைய முஸ்லிம் அமைப்புக்கள் மாத்திரமற்றி சிங்கள கடும் போக்கு அமைப்புகளும், இந்து தீவிரவாத அமைப்புக்களும் உடனடியாக தடை செய்யப்பட வேண்டியவையாகவே இருக்கின்றன.

ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச விதிகளுக்கு மாறாக மனிதாபிமானமற்ற முறையில் ஒரு தனிப்பட்ட மனிதன் மீதோ அல்லது ஒரு சமூகத்தின் மீதோ உயிர், உடமைகள், அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் சுயமரியாதை, கொள்கைகள் ஆகியவற்றை பறிக்கும் எந்தவொரு செயலும் தீவிரவாதமாகும். இந்த தீவிரவாதத்தின் தொடர்ச்சியாக கொல்லப்படுவது, சித்திரவதை செய்வது, பொருட்களை கொள்ளையடிப்பது, மக்களை அகதியாக்குவது போன்றன பயங்கரவாதமாகும்.

இலங்கையில் சிங்கள பௌத்த கடும் போக்கு அடிப்படைவாத அமைப்புகள் சக இனங்களுக்கு எதிராக பகிரங்கமாக தனது தீவிரவாத நச்சு விதையை விதைத்து வருகின்றன. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் வெளியிட்டு வரும் கடும் போக்கு கருத்துக்கள் தொடர்பாக மௌனம் சாதித்ததன் விளைவு இலங்கை நீதிமன்றத்தையே அவமதித்து கருத்து கூறும் அளவிற்கு அவை வளர்ச்சியடையக் காரணமாக அமைந்தது.

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக விரும்பத்தகாத செயற்பாடுகளையும், கருத்துக்களையும் முன்வைத்துவரும் இவை தமக்கு சாதகமாக செயற்படாத அரசாங்கத்தையும் நீதிமன்றங்களையும் விமர்சித்து வருகின்றன.

தீவிரவாத கடும் பிற்போக்குத்தனமான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நபர்கள் அந்த தீவிரவாதிகளின் கொள்கைகளினாலேயே பாரிய பின்னடைவுகளையும் அழிவுகளையும் சந்தித்த உலக வரலாறுகள் எமக்கு உதாரணங்களாக இருக்கின்றது.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தம் 2009ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அகதிகளாகவும், திறந்தவெளி சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டிருந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறிய நிலையில் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது என்கின்ற நிம்மதி பெருமூச்சோடு தங்கள் வாழ்வாதாரங்களை மெதுவாக கட்டியெழுப்பி முன்னேறிய நிலையில் இலங்கையில் மீண்டும் மதவாத, இனவாத அமைப்புக்களின் தோற்றம் சமாதானத்தையும். அமைதியையும் விரும்பும் பெரும்பான்மையான மக்களிடையே அச்சத்தை தோற்றுவித்திருந்தது.

குறிப்பாக வடக்கு கிழக்கில் திடீரென தோற்றுவிக்கப்பட்ட கடும் போக்கு இந்துத்துவ அமைப்பானது தமிழ் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் குறிவைத்து தனது கடும் மதவாத, சாதியவாத கொள்கைகளுடன் உருவாகியுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மாத்திரமல்ல சமாதானத்தை நேசிக்கும் தமிழர்கள் மத்தியிலும் ஒரு அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் பிற்போக்குத்தனமான மதவாதத்தையும், இனவாத கருத்துக்களையும் முன்வைத்து இனங்களின் உணர்வுகளை தூண்டி சகோதர இனங்களுக்கு எதிரான வன்முறைகள், யுத்தங்கள் உருவாக்கப்பட்டு நாடு பொருளாதார ரீதியிலும், உயிர் அழிவுகளை சந்தித்திருந்தது.

இந்தியாவில் சிவசேனா என்ற இந்த கடும் போக்கு அமைப்பு முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் மாத்திரமல்ல தலித்துக்கள் என அழைக்கப்படும் சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக வன்முறைகள் மூலம் அம்மக்களை அழித்து அடக்கி ஒடுக்கி அவர்களின் உரிமைகளை பறிக்கும் தீவிரமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பின் தலைமையில்தான் இராமர் கோவில் கட்டுவதற்காக குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்க்கப்பட்டது.

சிவசேனா தீவிரவாத அமைப்பானது முற்போக்குவாதிகள், கல்விமான்கள், பகுத்தறிவாளர்கள், இடதுசாரிகள் போன்றவர்களை எதிர்த்தும் அல்லது அழித்தும் வருகின்றது. இவ்வாறான பிற்போக்குத்தனமான அடிப்படைவாதத்தை கொள்கைகளைக் கொண்ட ஒரு அமைப்பு இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் தோற்றுவிக்கப்பட்டுள்ளமையானது சமாதானத்தையும் சகவாழ்வையும் விரும்பும் அனைத்து மக்களையும் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

இலங்கையில் 1970 வதுகளில் குறிப்பாக வடக்கில் தமிழர்களால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மை தமிழர்கள் தங்களுக்கு இந்து ஆலயங்களில் வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட வேண்டும், தேநீர் கடைகளில் சம உரிமை வழங்கப்பட வேண்டும், கல்வி உரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கிளர்ச்சி செய்தனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதிய ரீதியாக ஒடுக்குதலுக்கு உள்ளான மக்கள் ஆலயப் பிரவேசம் என்றும் தேநீர்கடை போராட்டம் என்றும் போராட்டத்தின் மூலமே அன்று தங்கள் உரிமைகளை பெற்றிருந்தனர்.

தமிழர்களில் உயர்சாதியினர் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் ஒடுக்குதலுக்கு உள்ளான தமிழர்கள் கல்வி உரிமையை பெற்றுக்கொள்வதையோ, அரச வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதையோ விரும்பவில்லை.

இவ்வாறான பிற்போக்குத்தனமான சிந்தனைக்கும், தமிழர்களே தமிழர்களை ஒடுக்கி அடக்கி வைத்து அடிமைப்படுத்துவதற்கும் அடிப்படை காரணமாக வர்ணாசிரமம் என்ற சாதிய ரீதியிலான இந்து சமயத்தின் சித்தாந்தமே காரணமாக இருக்கின்றது.

தொடர்ச்சியாக தீண்டாமைக்கு உள்ளாகி வரும் ஒடுக்கப்பட்ட மக்களின் சாதிய ரீதியிலான விடுதலைக்கான உரிமைப் போராட்டம் வடபகுதியில் ஓரளவு வெற்றி பெற்றிருப்பினும் மறைமுகமாக தீண்டாமைக் கொடுமைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது என்பதற்கு அண்மையில் கிளிநொச்சி பரந்தனில் பாடசாலை மாணவன் ஒருவர் பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் பாட மறுப்பு தெரிவிக்கப்பட்டு சாதிய அடிப்படையில் வெளியேற்றப்பட்ட நிகழ்வானது அனைத்து ஊடகங்களிலும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் சாதியம் விடுதலைப்புலிகளின் துப்பாக்கி நிழலில் உறக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் அது மெதுவாக விழிப்பு நிலையை அடைந்து தீவிரவாத முகமூடியை அணிந்துகொண்டு புது வீரியத்துடன் சமூகத்தை நாசம்பண்ண கிளம்பியுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)

**எம்.ஜி.ரெட்னகாந்தன்...**

# மக்களோடு இணைந்த மாமனிதன்

**மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 64வது பிறந்ததினம் (16.04.2021 ஆகும்). அவர் மரணித்தபோது பாராளுமன்றத்தில் சந்திரசேகரன் பற்றி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு.**



மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டு விளங்கிய ஓர் இளைஞனாக எங்களுக்கு அறிமுகமான சந்திரசேகரன், கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்களுடன் இணைந்து இயங்கியிருக்கின்றார். சந்திரசேகரன் இளைஞனாக இருந்த காலத்தில் மிகுந்த துடிப்புள்ளவராக விளங்கினார். அவர் தன்னுடைய உரைகளினாலும் எழுச்சிமிக்க நடடிவக்கைகளினாலும் தமிழ் இனத்தின் அடையாளத்தை முதன்மைப் படுத்தினார். தமிழ் மொழியையும் தமிழர்களின் கலை, கலாசாரங்களையும் பேணிப் பாதுகாத்து, தமிழ் இனத்தின் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதில் மிகவும் அக்கறை கொண்டவராக விளங்கிய அவர், மலையக மக்களிடத்தில் மலையக மக்கள் என்பதற்கு அப்பால் 'நாங்கள் தமிழ்மொழியைப் பேசுகின்ற இனமாகிய தமிழர்கள்" என்ற உணர்வை நிலைநாட்டினார். அவர் மலையகத்தில் மாத்திரமன்றி குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வெளி நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்ற இடங்களிலும் தமிழ் மக்கள் மத்தியில் ஆற்றிய எழுச்சி மிக்க உரைகளால் தானொரு சிறந்த தமிழ்த் தலைவன் என்பதை அடையாளங்காட்டி நின்றதன் காரணமாக அம்மக்களின் மனங்களில் அன்பையும் அபிமானத்தையும் ஆழமான பற்றையும் ஏற்படுத்தியிருந்தார். சந்திரசேகரன் தனது இளம்பராயம் முதல் தான் சார்ந்திருந்த மலையச் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அம்மக்களுடைய அடிப்படை உரிமைகளாகிய குடியுரிமை தொடக்கம் வாக்குரிமை வரையில் அவற்றுக்காகப் போராடினார். அது மட்டுமன்றி, தொழிற்சங்க உரிமைகளுக்காகவும் தொழிலாளர்களின் தனித்துவத்தைப் பேணுவதற்காகவும் குரல் கொடுத்துப் போராடியவர் என நாம் அவரை அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

காலஞ்சென்ற தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தனித்துவமிக்க மூத்த தலைவராக விளங்கிய காலங்களிலே அவரது அன்புக்கும் பண்புக்கும் பாத்திரமாக விளங்கிய சந்திரசேகரன் ஆரம்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சினியின் உறுப்பினராக இருந்து மலையகத் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காக நீண்டகாலமாகக் குரல் கொடுத்துப் போராடியவராவார். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தற்குப் பிறகு முதலாவதாக ஆட்சியமைத்த அரசாங்கம் டி.எஸ். சேனநாயக்க பிரதமராக இருந்த அரசாங்கம் கிட்டத்தட்ட 10 இலட்சம் மலையக மக்களுடைய குடியுரிமையை பறிக்கக்கூடிய குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்தில், அந்தச் சட்டத்தை பெரும் தலைவராக இருந்த தந்தை செல்வநாயகமும் அவரைச் சார்ந்த கட்சித் தலைவர்களும் எதிர்த்தார்கள். அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் குடியுரிமையை இழப்பார்கள், வாக்குரிமையை இழப்பார்கள் என்று தந்தை செல்வா அன்று எச்சரித்தார். அத்துடன், நாங்கள் எல்லோரும் இப்பொழுதே ஒன்றுபட்டுப் போராடினால்தான் எதிர்காலத்திலே இலங்கையில் வாழுகின்ற தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்குமென்று அன்று பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் அவர் குரல் கொடுத்ததோடு, அந்தச் சட்டத்திற்கு எதிராகவும் வாக்களித்தார். மேலும், அக்குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்களை நடாத்தி மலையக மக்களுடைய பேரன்புக்கும் பாசத்துக்கும் உரித்தான ஒரு தலைவராக தந்தை செல்வா அவர்கள் விளங்கிய நேரத்தில், அமரர் சந்திர சேகரன் அவர்களும் அதே பற்றுறுதியுடன் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறும் தமிழரசுக் கட்சினுடைய நிகழ்வுகள், போராட்டங்கள் என்பவற்றில் பங்குகொண்டு, அவற்றுக்கு ஆதரவு கொடுத்தவராக தனது இளமைக் காலம் முதலே விளங்கி வந்தார். 1977 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26 ஆம் திகதி தந்தை செல்வா அவர்கள் மறைந்த நேரத்தில், அமரர் சந்திரசேகரன் ஆற்றிய உரையானது, ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்தது மட்டுமல்ல, உணர்வுபூர்வமாகவும் இருந்தது. அத்துடன், அவர் மலையகம் முழுவதும் தந்தை செல்வா பெயரில் அனுதாபக் கூட்டங்களை நடாத்திய விதத்தைப் பார்த்த பொழுது, எங்களுடைய இதயம் அவர்மீது மிகவும் பற்றுக்கொண்டது. அவருடைய உரையும் செயற்பாடுகளும் எங்களுக்கிடையில் புதியதொரு பரிணாமத்தில் புரிந்துணர்வை ஏற்படுத்தி, அவருடன் இணைந்து பணியாற்றக்கூடிய அளவுக்கு அமைந்திருந்தன. அமரர் சந்திரசேகரன் தன்னுடைய மக்களுக்காக தொழிற்சங்க உரிமைகளுக்கு அப்பால், தமிழ் இனத்தினுடைய அடையாளத்தைப் பாதுகாக்கின்ற வகையில் பல போராட்டங்களை நடாத்தியபொழுது, அவர்மீது பலவகையான வழக்குகள் தொடரப்பட்டன. சிறையிலே அடைக்கப்பட்டார். சில வேளைகளில், அவர் துன்பப்பட்டு நோய்வாய்ப்பட்டவராகவும் இருந்தார்.

அவர் கொள்கைவாதியாகவும் இலட்சியவாதியாகவும் தனது வாழ்க்கையை வரித்துக்கொண்டவர். அவர் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்தார் என்பதை நாங்கள் அனுபவ பூர்வமாக அறிந்திருக்கிறோம். மிகப் பெரியதொரு தொழிற்சங்கமாக விளங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் தனது இளம்பராயம் முதல் உழைத்த இளம் தொழிற்சங்கவாதியாக விளங்கிய அவர், அன்றைய நாட்களில் அவருக்கு ஏற்பட்ட ஒரு சில கருத்து வேற்றுமைகளின் காரணமாக அக்கட்சியிலிருந்தும் விலகி 'மலையக மக்கள் முன்னணி" என்னும் தொழிற்சங்க அமைப்பொன்றை உருவாக்கி அதன் தலைவராக இருந்து, அதனூடாக அவர் செல்லும் இடமெல்லாம் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுத்துப் போராட்டங்களை நடாத்தி வந்தார். சந்திரசேகரன் தனது பாராளுமன்றப் பதவிக்காலத்திலும் தொழிற்சங்கவாதியாக இருந்தகாலத்திலும் எவருக்கும் அடிபணியாது மக்களுக்காகப் போராடுகின்ற உணர்வு கொண்ட மிகவும் நிதானமான தலைவராக விளங்கினார். அவருடைய உரைகளும் பேச்சுகளும் மிகவும் தெளிவானவையாக, எழுச்சிமிக்கதாக மற்றையவர்களைக் கவர்ந்திழுக்கக் கூடியதாக அமைந்திருந்தன.

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத காரணத்தினால் ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் நடத்தப்பட்ட போராட்டங்களை அவர் மானசீகமாகவும் பகிரங்கமாகவும் ஆதரித்து வந்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டி வந்தார். அதன் மூலம் இந்த நாட்டிலே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று நம்பினார். அதுமட்டுமன்றி, இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் பொழுது அது மலையகத் தமிழ் மக்கள் உட்பட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஒரு பாதுகாப்பைத் தேடித்தரும். அதன் மூலம் அவர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து ஒரு விடிவை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணத்துடன் அவர் பல தடவைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதை நாங்கள் அறிவோம்.

இலங்கையின் வரலாற்றில் மலையகத் தமிழர்களை மிகவும் மோசமான அடிமை விலங்கிலிருந்து விடுவிப்பதற்காகப் போராடிய தொழிற்சங்கங்கள் அரசியலில் ஈடுபட்ட காலத்தில், அம்மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று, ஓர் அரசியல் பலம்மிக்க ஜனநாயக சக்தியாக மிளிர்ந்து, அதற்கு மூலாதாரமான தலைமைத்துவத்தைப் பெற்றுப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுகின்ற அளவுக்கு உயர்ந்திருந்தார். அந்தக் காலகட்டத்தில் அவர் தான் சார்ந்த மலையக மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்திருந்ததுடன், தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைப் பெற வேண்டுமென்ற பற்றுறுதியுடன் அப்போராட்டத்திலிருந்து எந்த வகையிலும் விலகாது மிகுந்த உறுதியுடனும் துணிச்சலுடனும் அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் செயற்பட்டார்.

சந்திரசேகரன் அவர்கள் தமிழ் மக்களுடைய ஜனநாயக ரீதியான போராட்ட காலத்திலும் சரி, ஆயுதப் போராட்டங்கள் நிகழ்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்த காலங்களிலும் சரி, மலையகத்திலே பல கூட்டங்களை நடத்தியதுடன், எங்களையும் அங்கு அழைத்து உரையாற்ற வைத்திருக்கின்றார். அப்பொழுது அந்த மக்கள் அவருக்குப் பின்னால் தமிழ்த் தேசிய இனத்தினுடைய விடுதலைக்காக அணிதிரண்டார்கள். அவ்வாறான ஒரு சமுதாயத்தையே அவர் அங்கு உருவாக்கியிருந்தார். பெரும்பாலும் மலையகத் தமிழர்களுடைய பிரதிநிதிகளாக பல தொழிற்சங்கங்கள் இருந்த நேரத்திலும் பொது நலனில் அக்கறை கொண்டு முழுச் சமுதாயத்தினதும் ஓர் அங்கமாக இருந்து தமிழ் மக்களுடைய விடுதலைக்காக, விடிவுக்காக உழைப்பதில் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமான நிலைமையில் தயாரான நிலையில் அவர் இருந்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

**எச்.எச்.விக்கிரமசிங்க...**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

பிலவ வருடம் சித்திரை மாதம் 05ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 05

# வீதி விபத்துகளுக்கு வேண்டும் ஒரு முற்றுப்புள்ளி

கடந்த ஒரு வருட காலமாக நாம் இடைவிடாது பேசி வந்திருக்கும் ஒரு விஷயம் என்னவென்றால், அது கொவிட் 19 தொற்று மற்றும் அது ஏற்படுத்தக்கூடிய மரணம் தொடர்பானதாகவே இருந்திருக்கிறது. சில சமயங்களில் கொவிட் தொற்றுக்கு நாம் அனாவசியமான அதிக முக்கியத்துவம் அளித்துவிட்டோமோ என்றும் தோன்றுகிறது. ஏனெனில் இத் தொற்றுக்கு வழங்கிய முக்கியத்துவத்தால் வேறு சிலவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தவறிவிட்டதாகவே தோன்றுகிறது. இத் தொற்று காரணமாக நாடளாவிய ரீதியாக காய்ச்சல், தடிமன், தலைவலி, சளிப்பிரச்சினை, வயிற்றுப் பிரச்சினைகள் போன்றவை குறைந்து விட்டன. இவற்றின் பொருட்டு மருத்துவமனைகளுக்கு படையெடுத்தோர் தொகை கணிசமாகக் குறைந்து விட்டதாக சுகாதாரத்துறை கணித்திருக்கிறது. அதுபோலவே சாலை விபத்துகளும் மரணங்களும் கடந்த ஆண்டில் வீழ்ச்சி கண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்பத்திரிகளுக்கு செல்வோர் தொகை குறைந்ததால் அரசுக்கு மருத்துவ செலவுகள் குறைந்த அதே சமயம் நோயாளர் தரப்பிலும் மருத்துவம் தொடர்பிலான செலவுகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இன்னொரு வகையில் சொல்வோமானால், சுயமாகவே குணமாகக் கூடிய அல்லது நாமாகவே குணப்படுத்தக் கூடிய 'வியாதி'களுக்குத்தான் நாம் இவ்வளவு காலமாக தனியார் மற்றும் அரச மருத்துவமனைகளுக்குச் சென்று அனாவசிய செலவுகளை ஏற்படுத்தி வந்திருக்கிறோம் என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

எளிமையான ஆனால் பலன் தரக்கூடிய சுகாதார பழக்கவழக்கங்களை நாம் தற்போது கைகொள்ளப் பழகியிருக்கிறோம். நோய்களில் இருந்து அவை எம்மைக் காக்கின்றன என்பது தற்போது ஆதாரபூர்வமாக ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. இது போலவே மேலும் சில பழக்க வழக்கங்களையும் நாம் கைகொள்வோமானால் மேலும் நம் உடலையும், உயிரையும் வேறு சிலரின் உயிர்களையும் எம்மால் காப்பாற்ற முடியும் என்பதை இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

நாம் இங்கே குறிப்பிட விரும்புவது நாட்டில் அதிகரித்துவரும் சாலை விபத்துகளும் மரணங்களும் மற்றும் அவயங்களை இழப்போரின் எண்ணிக்கை பற்றியும்தான். இரண்டுகோடி மக்கள் வசிக்கும் ஒரு நாட்டில் 24மணித்தியாலத்தில் 123 விபத்துகள் என்றும் 10 பேர் உயிரிழந்தனர் என்றும் இச் சம்பவங்களில் 77 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். கடந்த மூன்று தினங்களில் 40 பேர் வீதி விபத்துக்களில் மரணமடைந்துள்ளனர். எதை எச்சரிக்கை மணியாகக் கொள்ள வேண்டும். விபத்தில் ஏற்படும் காயங்கள் நெடுநாள் சிகிச்சையையும் நிரந்தரமான அவய இழப்புகளையும் மாறா வடுக்களையும் தாங்க வேண்டும் என்பதைப் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும் பண்டிகைக் காலப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் எழுநூறுக்கும் அதிகமான வாகனசாரதிகள் மது போதையில் வண்டிகளை செலுத்தியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நத்தார், புத்தாண்டு, சித்திரை பண்டிகை போன்ற தேசிய பண்டிகை காலத்தில் கொழும்பு போன்ற பெரு நகரங்களில் மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்த வேண்டாம் என்ற அறிவிப்பு பிரசாரங்களை போக்குவரத்து பொலிஸார் நீண்ட காலமாகவே மேற்கொண்டு வந்துள்ளனர். சில வருடங்களுக்கு முன்னர் நெஞ்சைத் தொடும் ஒரு வீதிப் பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் சிறுமியர் தமது தந்தைமாரிடம் மதுவருந்திவிட்டும், அலட்சியமாகவும், கைதொலைபேசியில் உரையாடிக்கொண்டும் வாகனமோட்ட வேண்டாம் என மன்றாடும் விளம்பரங்கள் சாலையோரங்களில் சாரதிமார் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததன. எனவே சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்காது' என்ற பட்டுக்கோட்டையார் வரிகளின் அர்த்தத்தைப் போலவே பொலிஸார் தம்மாலானவற்றை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆனால் எமது சாரதிமாரில் குறிப்பிடத்தக்க அளவினர் வீதி விதிகளையும் சட்டங்களையும் கொஞ்சமேனும் மதிப்பதற்குத் தயாரில்லை. கடந்த மூன்று மாதங்களில் 300 மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக பொலிஸார் வெளியிட்டிருக்கும் தகவல் மேம்போக்காக பார்ப்பதற்கானது அல்ல. அவை ஏற்படுத்தியிருக்கும் வலிகள், இழப்புகள், இறப்புகள், நிர்க்கதியாகி வீதிக்கு வந்துள்ள குடும்பங்கள் என்பனவற்றையும் கணக்கில் கொள்ளும்போது சாரதிமாரின் அலட்சிய பாவத்தையும் மேம்போக்கான தன்மையையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஒரு விஷயம், அது எதுவானாலும் சரி, அளவை மிஞ்சுகின்றபோது அதைக் கட்டுப்படுத்தும் எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டேயாக வேண்டும். அந்தச் சூழலுக்கு நாம் தள்ளப்பட்டிருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது. மதங்களை நாம் உளப்பூர்வமாக அணுகுவதில்லை என்பதும் அதை கிரியைகள் சார்ந்த சடங்காகவே கருதுவதால்தான் மதங்கள் போதிக்கும் தத்துவங்களை நாம் நம் வாழ்வில் பயன்படுத்துவதில்லை என்பதும் உண்மையாகவே தெரிகிறது.

அதனால்தான் வெளியில் இருந்து புதிய கருத்துகளையும் உதாரணங்களையும் நாம்பெற வேண்டியிருக்கிறது. இலங்கையில் வீதி விபத்துகளும் அலட்சிய வாகன செலுத்தலும் சடுதியாகவும் தொடர்ச்சியாகவும் அதிகரித்து செல்வதால் புதிய மற்றும் கடினமான சட்டங்களும் விதிகளும் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இலங்கையை விட அதிக எண்ணிக்கையில் வாகனங்களை சாலைகளில் கொண்ட மேற்கத்திய நாடுகளில் இந்த அளவுக்கு தொடர்ச்சியாக வாகன விபத்துகளும் மரணங்களும் நிகழ்வது மிகக் குறைவு. ஏனெனில் அங்கே சாரதிகளின் வீதி ஒழுக்கம் கண்டிப்புடன் கண்காணிக்கப்படுகிறது. தண்டனைகளும் கடுமையானவை.

தயவு தாட்சண்யம் பார்க்கப்படுவதில்லை. வீதி விதிகளை மீதியமை, மதுவருந்திய நிலையில் வாகனம் செலுத்தியமை, அதிக வேகம் போன்ற குற்றச்சாட்டுகளில் அரசியல் பிரபலங்கள் சிக்குவதும் தண்டம் செலுத்துவதும் அந் நாடுகளில் சாதாரணம். மறைந்த எடின்பரோ கோமகனும் தான் செலுத்திய வாகனம் விபத்துக்குள்ளானதால் தன் சாரதிப் பத்திரத்தை பொலிசாரிடம் ஒப்படைக்க நேர்ந்தது. இவ்வாறான முன்மாதிரிகளை இந் நாட்டில் காண்பது துர்லபம்.

எனவே வீதி விதிகளையும் அதற்கான தண்டனைகளையும் இலங்கையில் கடுமையாக்க வேண்டும். போக்குவரத்து பொலிஸார் சுதந்திரமாக இயங்குவது அரசினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்து பொலிஸாரிடம் சிக்கியதுமே 'எனக்கு டிரஃபிக் ஓ.ஐ.சியை நன்கு தெரியும்' என்றுதான் பேச்சை ஆரம்பிப்பார்கள். இது பொலிஸாருக்கு விடுக்கும் ஒரு மென் பயமுறுத்தல்தான். பொலிஸார் தமது கடமைகளை எந்த அச்சமின்றியும் மேற்கொள்வதற்கு அனுமதித்தாலேயே வீதி விபத்துகளை பெருமளவில் குறைக்க முடியும். எதை வேண்டுமானாலும் செய்துவிட்டு விக்கினமின்றி தப்பிக்கலாம் என்ற மக்களின் மனப்பான்மையை முறித்தெறிவதே இங்கே முக்கியம்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியல் யாப்பு

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில், இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாக அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



*புதிய அரசியலமைப்பின் வரைபு எதிர்வரும் ஜூன் மாதம் அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த கால வரலாற்றுத் தவறுகளை புதிய அரசியலமைப்பின் ஊடாகத் திருத்த முடியும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.*

*"தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் பல விடயங்கள் காலத்துக்குப் பொருத்தமானதாக இல்லையென்பதால் அவற்றை மீண்டும் மீண்டும் திருத்துவதில் முழுமையான பலன் கிடைக்காது. எனவே புதிய அரசியலமைப்பொன்றே காலத்தின் தேவையாகும். இதனை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்றும் அவர் கூறியிருந்தார்.*

*1978ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது இதுவரை 20 தடவை திருத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தார்.*

*ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையிலான இந்தக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான காமினி மாரப்பன, மனோகரா டி சில்வா, சஞ்ஜீவ ஜயவர்தன, பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், பேராசிரியர் நசீமா கமுர்தீன், கலாநிதி சர்வேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி சமன் ரத்வத்த, பேராசிரியர் வசந்த செனவிரத்ன ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.*



**'தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் பல விடயங்கள் காலத்துக்குப் பொருத்தமானதாக இல்லையென்பதால் அவற்றை மீண்டும் மீண்டும் திருத்துவதில் முழுமையான பலன் கிடைக்காது. எனவே அனைத்து இனங்களுக்கும் பொருந்தக் கூடிய புதிய அரசியலமைப்பொன்றே காலத்தின் தேவையாகும்'**

**– அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்**

*இந்தக் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதுடன், குறித்த நிபுணர்கள் குழு பல்வேறு தரப்புக்களிடமிருந்து யோசனைகளைப் பெற்று வருகிறது.*

*கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக முழு பாராளுமன்றமும் அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டதுடன், வழிநடத்தல் குழுவொன்றும் நியமிக்கப்பட்டு சில நாட்கள் கூடி ஆராயப்பட்டிருந்தது.*

*பல்வேறு தரப்பினரின் யோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதும், அரசியலமைப்பு தயாரிக்கும் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு விட்டன. வெறுமனே ஒரு கண்துடைப்புக்கான முயற்சியாகவே இது இருந்தது. உண்மையில் அரசியலமைப்பொன்றைக் கொண்டு வர வேண்டிய தேவை இருந்திருந்தால் நிச்சயமாக அதனை சரியான முறையில் செயற்படுத்தியிருக்க முடியும்.*

*இவ்வாறான நிலையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டு வரப்பட்ட 19 வது திருத்தச் சட்டம் பல்வேறு குழப்பங்களுக்கு வழிவகுத்தது என்றே கூற வேண்டும். பாராளுமன்றத்தில் இதனை நிறைவேற்றும் போது குழு நிலையில் 100 இற்கும் அதிகமான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதுடன், இதில் பல தெளிவற்ற நிலைமைகள் காணப்பட்டன.*

*இதிலிருந்த தெளிவற்ற விடயங்களால் கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்திரமற்ற அரசியல் சூழல் ஏற்பட்டு சுமார் ஒன்றரை மாதங்கள் எந்தவொரு அரசாங்கமும் இல்லாத நிலைமையும் உருவானது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பது இதன் பிரதான நோக்கமாகவிருந்தது. குறிப்பாக ஒரு தனிநபரை இலக்காகக் கொண்டதாக நல்லாட்சி அரசாங்கத்தினால் அவசர அவசரமாக இத்திருத்தம் முன்வைக்கப்பட்டது.*

*எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்து ஒரு சில வாரங்களிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்குக் காணப்படும் தடைகளை விலக்கும் வகையில் 20 வது திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தார். பொதுத் தேர்தலில் இதற்கான ஆணையைப் பெற்றமையால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20 வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.*

*எனினும், காலத்தின் தேவைக்கு ஏற்ற மாற்றங்களை உள்ளடக்கியதாக புதிய அரசியலமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவிருந்த ஜனாதிபதி, இதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தார். இந்தக் குழு பல்வேறு அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களிடமிருந்து யோசனைகளைப் பெற்றுள்ளது.*

*'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற நிலைப்பாடு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் முஸ்லிம் விவாகச் சட்டம், கண்டிய திருமணச் சட்டம் மற்றும் தேசவழமை சட்டம் போன்ற தனிப்பட்ட சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.*

*இவை தொடர்பில் புதிய அரசியலமைப்புத் தயாரிப்பில் கவனம் எடுக்கப்படும் என நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.*

*அதேநேரம், தமது அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலான சட்ட ஏற்பாடுகளும் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என சிறுபான்மைக் கட்சிகள் பலவும் சுட்டிக் காட்டியுள்ளன.*

*குறிப்பாக நாட்டில் உள்ள அனைத்து இனங்களும் தாம் இலங்கையர் என்பதை உணரக் கூடிய வகையில் புதிய அரசியலமைப்பு அமைய வேண்டும் என்றும், எந்தவொரு இனத்தவரும் இரண்டாம் தர நபர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும் விடயங்கள் இதில் உள்ளடக்கப்படக் கூடாது என்றும் சிறுபான்மை கட்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன.*

*எனவே, நாட்டில் உள்ள அனைத்து இனத்தவர்களின் கரிசனைகளையும் உள்ளடக்கியதாக புதிய அரசியலமைப்பு அமைய வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கையின் அரசியலமைப்புத் தயாரிப்புகளின் வரலாற்றை எடுத்து நோக்கும் போது, ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.*

*இதற்கு சிறந்த உதாரணம் தற்பொழுது நாம் பயன்படுத்தும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பாகும். அப்போது ஆட்சியிலிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தான் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் இதனைத் தயாரித்திருந்தார். அதன் பின்னர் அதிகாரத்துக்கு வந்த பலரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கூறி வந்தாலும் அவர்களால் அதனை நடைமுறையில் செயற்படுத்த முடியாது போய் விட்டது.*

*கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இதற்கான ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவையும் குழப்பத்திலேயே முடிந்தன. இவ்வாறான அரசியல் பின்னணியிலேயே பொதுஜன பெரமுன அரசாங்கம் புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணியில் தீவிரம் காட்டியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் நிலையில் அனைத்து இனங்களும் திருப்திப்படும் வகையில் புதிய அரசியலமைப்பைத் தயாரித்தால் அதனை இலகுவில் நிறைவேற்றி விட முடியும்.*

*அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் பலரும் இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு விடும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இவ்வாறு கொண்டு வரப்படும் அரசியலமைப்பானது சகலருக்கும் சாதகமாக இருக்க வேண்டும் என்பதே பலருடைய அவா.*



**'முஸ்லிம் விவாகச் சட்டம், கண்டிய திருமணச் சட்டம் மற்றும் தேசவழமை சட்டம் போன்ற தனிப்பட்ட சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்பில் புதிய அரசியலமைப்புத் தயாரிப்பின் போது கவனம் செலுத்தப்படும்'**

**–நீதி அமைச்சர் அலி சப்ரி**

**'ஒரே நாடு ஒரே சட்டம்' என்னும் கொள்கையே அனைத்து இனங்களையும் சரிசமமாக கருதுவதற்கான சரியான வழி என்பதே அரசின் நிலைப்பாடு. ஆனால் தமது இனத்தின் அபிலாஷைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதில் சிறுபான்மைக் கட்சிகள் அக்கறை**

**பி.ஹர்ஷன்...**




# மாகாணசபைத் தேர்தல் நடத்துவதில் எதிர்நோக்கப்படும் முட்டுக்கட்டைகள்!

**ஒரு நாட்டின் ஜனநாயகம் என்பது குறிப்பிட்ட காலத்துக்குள் நடத்தப்படும் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுவதுண்டு. இலங்கையைப் பொறுத்த வரையில் தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற போதும், சுமார் நான்கு வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமலிருப்பது பெரும் குறையாகக் கருதப்படுகிறது.**

குறிப்பாக எதிர்க் கட்சியில் உள்ள சிறுபான்மை பங்காளிக் கட்சிகள் தங்களுக்கிடையில் சந்திப்பை நடத்தி இவ்விவகாரம் குறித்து கலந்துரையாடவிருப்பதுடன், தமக்கிடையிலான பேச்சுக்களைத் தொடர்ந்து, ஆளும் கட்சியில் உள்ள பங்காளிக் கட்சிகளைச் சந்திப்பதற்கும் திட்டமிட்டுள்ளன.

அதன் பின்னர் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுக்கள் நடத்தப்படவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்

பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பின்னர் விரைவில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டிருந்த போதும் கொவிட் 19 தொற்று சூழல் காரணமாக தேர்தல்களை நடத்தும் செயற்பாடுகள் இழுபறி நிலைக்குச் சென்றன. கொவிட் தொற்று பரவுதல் நிலைமை தற்பொழுது ஓரளவுக்குக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதால் மீண்டும் மாகாணசபைத் தேர்தல்கள் குறித்த பேச்சுக்கள் அரசியல் அரங்கில் அடிபடத் தொடங்கியுள்ளன.

இவ்வருட இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேலிடத்திலிருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ள போதும், மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படுமா என்ற விடயத்தில் ஆளும் கட்சியில் உள்ளவர்களே மாற்றுக் கருத்துகளை முன்

டுள்ளது. ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போனஸ் ஆசனங்களை வழங்குவது, ஒரு தொகுதியில் ஒரே கட்சியில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுவது போன்ற பல்வேறு யோசனைகள் இந்த வரைபில் முன்வைக்கப்பட்டிருப்ப

ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது மாகாணசபைத் தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படுவதற்கான அறிகுறிகளே அதிகம் காணப்படுகின்றன.

மான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும், தேவையான திருத்தங்களை பரிந்துரை செய்வதும் இக்குழுவின் பொறுப்பாக அமையும். குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பெரும்பாலும் இவ்வாரம் இக்குழு பற்றிய அறிவிப்புக்கள் வெளியாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளின் அடிப்படையில் எடுத்துப் பார்க்கும் போது அரசாங்கம் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது.

இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் தம்மை ஒரு சில சிரேஷ்ட உறுப்பினர்கள் புறக்கணிக்கும் விதத்தில் நடந்து கொள்வதாகவும், அரசாங்கத்தில் காணப்படும் தவறுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்தும் பங்காளிக் கட்சிகள் தமக்கிடையில் கலந்துரையாடியுள்ளன. எனினும், அரசாங்கத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்பது தமது நோக்கம் இல்லையென இச்சந்திப்பில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்

கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

இந்த அரசியல் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது, மாகாண சபைத் தேர்தலொன்றுக்குச் செல்லும் போது ஆசன ஒதுக்கீடு உள்ளிட்ட விடயங்களில் ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அதேநேரம், மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது பற்றியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.

எனினும், தனித்துப் போட்டியிடுவதா அல்லது இணைந்து போட்டியிடுவதா என்பதில் அக்கட்சி இறுதி முடிவொன்றுக்கு வரவில்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

இட ஒதுக்கீடு உள்ளிட்ட அரசியல் ரீதியான சவால்களுக்கு மத்தியில் விலைவாசி அதிகரிப்பு, கொவிட் 19 பாதிப்பினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்பு உள்ளிட்ட சவால்களும் இம்முறை மாகாணசபைத் தேர்தல்களில் தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. கொவிட் 19 சூழலால் மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் மாகாணசபைத் தேர்தல் அரசியல்வாதிகளுக்கு எந்தளவு ஆதரவாக இருக்கும் என்பது நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பாக விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகள் மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்கொண்டு செல்வதில் அசௌகரியங்களுக்கு வழியேற்படுத்தியுள்ளன.

## அரசாங்கத்தின் உறுதிப்பாடான நகர்வு ஒருபுறமிருக்கையில், உத்தேச திருத்தத்தில் உடன்பாடு இல்லாத நிலையில் சிறுபான்மை பங்காளிக் கட்சிகள்!



வைத்து வருகின்றனர்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ள போதும், இறுதியான தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லையென்றே அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் நிச்சயமாக பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை நிறைவேற்றி அல்லது மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாணசபைத் தேர்தல் சட்டம் திருத்தப்பட்டது. இதற்கமைய 50 சதவீத தொகுதி முறையும், 50 சதவீத விகிதாசார முறையும் என்ற கலப்பு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதும், தொகுதிகளை வரையறுக்கும் எல்லை நிர்ணய அறிக்கை நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாலேயே தோற்கடிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் கட்டாயம் சட்டத் திருத்தமொன்றுக்குச் செல்ல வேண்டும்.

இல்லாது போனால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து பழைய முறைக்குச் செல்வதற்கான பிரேரணையொன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்வாறான நிலையில், கடந்த மாத இறுதியில் கூடிய அமைச்சரவையில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டிருப்பதுடன், புதிய மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலமொன்றை சமர்ப்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதாவது 70 சதவீத தொகுதி வாரிமுறை, 30 சதவீத விகிதாசார முறையில் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூல வரைபொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்

தாகத் தெரியவருகிறது.

இருந்த போதும், அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருப்பது அரசியல் காய்நகர்த்தல்கள் மூலம் தெளிவாகிறது. குறிப்பாக பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன இந்த உத்தேச வரைபை விமர்சித்துள்ளன.

இந்த உத்தேச வரைபை அவர்கள் தமக்கு சாதகமாகப் பார்க்கவில்லையென்பது இந்த விமர்சனங்களின் மூலம் புலப்படுகிறது. மறுபக்கத்தில் ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் இதனை ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டில் இல்லை. இந்த சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு சிறுபான்மை கட்சிகள் தயாராகி வருகின்றன.

இருந்த போதும், இவ்வருட இறுதிக்குள் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். மாகாணசபைத் தேர்தல்களின் முயற்சியாக தமது கட்சி சார்ந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை ஜனாதிபதியும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இச்சந்திப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மறுபக்கத்தில், மாகாணசபைத் தேர்தல் குறித்த சட்ட ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு பாராளுமன்றத்தில் விசேட தெரிவுக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பான பிரேரணை கடந்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் சபையில் நிறைவேற்றப்பட்டது. இந்த விசேட குழு 15 உறுப்பினர்களைக் கொண்டு அமையவுள்ளதுடன், சபாநாயகரினால் குழு நியமிக்கப்பட்டதை அடுத்து 06 மாதங்களில் அதன் பரிந்துரை வழங்கப்படும்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்த

## சட்டமூல பிரேரணையை எதிர்க்க சிறுபான்மை கட்சிகள் ஆயத்தம்! எதிர்க் கட்சியில் உள்ள சிறுபான்மை பங்காளிக் கட்சிகளும் தங்களுக்கிடையில் சந்திப்புகளை நடத்த திட்டம்

அரசாங்கத்தின் ஏற்பாடுகள் இவ்வாறானதாக இருக்கும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தமக்கிடையிலான சந்திப்புக்களை நடத்தியிருப்பது அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் குறித்து அவர்கள் அதிருப்தியடைந்த நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் மாகாணசபைத் தேர்தல் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன், எல்லை நிர்ணயத்தில் தீர்வு காணாமல் மாகாணசபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது என்ற நிலைப்பாடு





## தற்பொழுது உள்ள சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின் நிச்சயமாக பாராளுமன்றத்தில் பிரேரணை–யொன்றை நிறைவேற்றி அல்லது மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். எல்லை நிர்ணயத்தில் தீர்வு காணாமல் மாகாணசபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதும் சாத்தியமில்லை!



இது அரசாங்கத்தின் மீதான நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கலாம் என ஆரசியல் ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, சுமார் நான்கு வருடங்களுக்கு மேலாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமையால் உள்ளூர் மட்டத்தில் செயற்படும் அரசியல் தலைவர்கள் பலர் அதிருப்தியடைந்திருப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தம்மை மதிக்காமல் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை அவர்கள் முன்வைத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே அடிமட்டத்தில் தமக்கான ஆதரவை தக்க வைத்துக் கொள்வதற்கு சகல கட்சிகளுக்கும் தேர்தலொன்றுக்கான அவசியம் காணப்படுகின்றது என்ற கள யதார்த்தமும் காணப்படுகின்றது.

# பன்மைத்துவத்தை மறுத்தலின் ஆபத்து

**விடுதலை அரசியலையே தமிழ்ச் சமூகம் அவாவி நிற்கிறது. போருக்கு முதலும் போரின்போதும் போருக்குப் பிறகும் அதனுடைய வேட்கை இதுவே. ஒரு சிறிய தரப்பினரே இந்த நிலைப்பாட்டில் தொடரப்பட்ட அரசியலை ஆய்வுக்குட்படுத்திப் பார்க்கின்றனர்.**

அவர்கள் இதைப் புதிய உள்ளடக்கத்துடன், புதிய விதமாக முன்னெடுக்க வேண்டுமென்று கருதுகின்றனர். அப்படி முன்னெடுக்கும் போதே அது சாத்தியப்படும் என்பது இவர்களுடைய நம்பிக்கை. இது கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலானது.

ஏனையோர் எந்தவிதமான யோசனையும் இல்லாமல் பழைய பாணியிலான அரசியலையே தொடருகிறார்கள். இதைத் தமிழ்ச் சனங்களும் எந்தவிதமான கேள்வியுமில்லாமல் ஆதரிக்கிறார்கள். ஆனால் இதற்கிடையில் உள் நாட்டிலும் வெளிச் சூழலிலும் ஏராளம் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுமிருக்கின்றன. இதையெல்லாம் கணக்கிலும் கவனத்திலும் கொள்ளாத அரசியலினால் எந்தப் பயனும் விளையாது. வெறுமனே காலமே கடந்து செல்லும்.

ஆகவே தமிழ்ப் பெருந்திரளினரின் அரசியல் என்பது தேக்கமும் பின்னடைவும் உடைய அரசியலாகவே தொடரப்படுகிறது. இது போராட்டத்திலும் போரிலும் தோற்றுப் போன சமூகத்துக்கு எந்த வகையில் பொருத்தமானது? இதுவே நாம் எழுப்புகின்ற அடிப்படையான – பிரதானமான கேள்வியாகும்.

அரசியலில் பார்வைகள் மாறுபடலாம். கருத்துகள், அபிப்பிராயங்களில் வேறுபாடுகளிருக்கலாம். ஆனால் யதார்த்தமும் உண்மையும் மாறாது.

பாதிக்கப்பட்ட நிலையிலேயே இன்று தமிழ்ச் சமூகம் உள்ளது. அதுவும் வார்த்தைகளால் விளக்கி விடமுடியாதளவுக்கான பாதிப்பை அது சந்தித்து நிற்கிறது.

அப்படிப் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் சமூகத்தின்அரசியலை முன்னெடுப்போர் எவ்வளவு பொறுப்போடும் கவனத்தோடும் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இவர்கள் அதைச் செய்கிறார்களா? அப்படி யாராவது அல்லது எந்தத் தரப்பாவது செய்திருந்தால் தயவு செய்து அதை யாராவது பட்டியலிட்டுக் கூறுங்கள்.

தமிழ்ச் சமூகம் கடந்த 40 ஆண்டுகளில் சந்தித்த அல்லது எதிர்கொண்ட பாதிப்புகள் சாதாரணமானவையல்ல. பல்லாயிரம் உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. இது இலகுவில் மறந்தும் கடந்தும் செல்லக் கூடிய ஒன்றா? இப்படித்தான் பல ஆயிரக் கணக்கானவர்களின் உடல் உறுப்புகளின் இழப்பும். உங்கள் உடலின் ஒரு சிறுபாகத்தையாவது இழந்திருந்தால் தான் தெரியும் இழப்பின் வலியும் இழப்பின் கனதியும். இப்படி உடைமைஇழப்புகள், உறவுகளின் இழப்புகள், தொழில் இழப்பு, வருமான இழப்பு, வளங்களின் இழப்பு என ஏராளம் இழப்புகள் உண்டு.

இதையெல்லாம் கணக்கிற் கொண்டே நாம் எதிர்கால – நிகழ்கால அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதுவே முதற் பொறுப்புடைய செயலாகும். இல்லையெனில் அது மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும்.

மட்டுமல்ல அது எதிர்த்தரப்பினருக்கு ஒத்துழைப்பதாகும். அதாவது ஒடுக்குமுறையாளரின் நோக்கை நிறைவேற்றுவதாகும். இதையே இப்பொழுது தமிழ்த் தேசியத் தலைமைகள் அனைத்தும் செய்கின்றன. இது மறைமுகமாக அரசை – ஒடுக்கும் தரப்பை ஆதரித்துச் செயற்படுவதாகும். ஆனால் இது வெளிப் பார்வைக்குப் புலப்படாது. இதைத்தான் வர்க்க ஒற்றுமை என்கிறோம். மேல் வர்க்கத்தினர்களுக்கிடையிலான இரகசியக் கூட்டு இது.

இதனால்தான் இந்த அரசியலையும் இந்தத் தலைமைகளையும் மறுதலிக்க வேண்டியிருக்கிறது. இது விடுதலை அரசியலுக்கு எதிரானது அல்லவா! ஒடுக்குமுறைக்கு ஆதரவளிக்கும் தரப்புகளை – ஒடுக்குமுறையாளரின் நோக்கை நிறைவேற்றுவோரை எப்படி விடுதலை அரசியலுக்குரியவர்களென்று ஏற்றுக் கொள்வது?

எனவேதான் இன்றைய இந்தத் தமிழ்த் தேசியவாதத் தரப்புகளை நாம் கேள்விக்குட்படுத்த வேண்டியுள்ளது. விடுதலை அரசியலுக்கு இது மிக மிக அவசியமானது.

அரச ஆதரவுத் தரப்புகளையிட்டு நமக்கு எந்தக் குழப்பமும் இல்லை. அவை நேரடியாகவே – வெளிப்படையாகவே செயற்படுகின்றவை. இவை அப்படியல்ல. அழகிய முலாம் பூசியவை. தாம் எதிர்ப்பு அரசியலை – விடுதலை அரசியலை செய்வதாகச் சொல்லிக் கொண்டு ஒடுக்குமுறைக்கு ஆதரவான மறைமுக நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றவை.

என்பதால் நாம் இவற்றைப் புறக்கணித்து மெய்யான விடுதலை அரசியலுக்கான வழிகளைத் தேட வேண்டும்.

அதுதான் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலான புதிய அரசியல். பன்மைத்துவத்தை வலியுறுத்தும் அரசியல்.

ஒடுக்குமுறையாளர் பன்மைத்துவத்தை மறுதலித்தால் நாம் அதை வலியுறுத்துவோம். பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் எவரும் பன்மைத்துவத்தை நிராகரிக்க முடியாது. அப்படிப் பன்மைத்துவத்தை மறுதலித்தால் அது அவர்களுக்கே ஆபத்தாக முடியும். ஏறக்குறைய புலிகளுக்கு நேர்ந்ததும் இதுவே.

வரலாற்றின் படிப்பினை என்பது இதுதான். அது பெரிய – சிறந்த அகல் விளக்காகும். புதிய பாதைகளுக்கான வழிகளைத் திறத்தலாகும்.

இதை தமிழ்ச் சமூகம் புரிந்து கொள்ள மறுத்தால் அதற்கு விடுதலையே இல்லை. விடுதலை இல்லை என்றால் முன்னேற்றமும் இல்லை. இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

இதைப் புரிந்து கொள்வது அவசியம். பாதிக்கப்பட்டோர் தம்மைக் குறித்தும் தம்முடைய எதிர்காலத்தைக் குறித்தும் மிக மிக அவதானமாக இருப்பது கட்டாயமானது. தவறின் அது சுய அழிவிலேயே கொண்டுபோய் விடும்.

இதுதான் வரலாறு சொல்லும் பாடமும் வரலாற்றின் நிபந்தனையுமாகும்.

யாரும் இதை மீறிச் செயற்பட முடியாது. ஏனெனில் வரலாறு ஒரு கண்டிப்பான பேர்வழி. அது அறிஞர்களின் அனுபவ மொழி.

இப்பொழுது ஒரு கேள்வி.

அப்படியென்றால் ஆதிக்க அரசியலை ஒடுக்குமுறை அரசியலை முன்னெடுக்க என்னதான் வழி என.

இப்படிக் கேட்டால் அது மிகப் பெரிய நாடகமன்றி வேறில்லை. நடிப்புச் சுதேசிகளிடமிருந்து நாம் முதலில் விடுபட வேண்டும்.

அது விடுதலையின் முதலாவது படியாகும்.



**பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் எவரும் பன்மைத்துவத்தை நிராகரிக்க முடியாது. அப்படிப் பன்மைத்துவத்தை மறுதலித்தால் அது அவர்களுக்கே ஆபத்தாக முடியும். ஏறக்குறைய புலிகளுக்கு நேர்ந்ததும் இதுவே.**

**கருணாகரன்...**



இந்திய உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் கீழ் இயங்கும் கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார மையத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கலாநிதி சுபாஷினி பத்மநாதனால் இலங்கையில் ராமாயணச் சுவடுகள் பற்றிய ஆய்வுத்திறன்சார் ஆங்கில மொழியிலான சொற்பொழிவு இடம்பெற உள்ளது. இதனை பார்வையாளர்கள் அனைவரும் சுவாமி விவேகானந்தா கலாச்சார மையத்தின் முகநூல் வாயிலாகப் பார்வையிடலாம்.


ஆரோக்கியமான கீழ்ப்படியும் கூந்தலுக்கு

## எள் எண்ணெய், மல்லிகைச் சாறு, சிவப்பு வெங்காய சாறு, தேங்காய் எண்ணெயின் குணநலனின் சக்தி



ஆண், பெண் வேறுபாடுகளின்றி, நம் அனைவரின் வெளித்தோற்றத்திற்கு உச்ச செல்வாக்குச் செலுத்தும் காரணி, தலைமுடியாகும். ஒரு பெண்ணின் சிகை அலங்காரம் அவளது ஆளுமைக்கு ஒரு காரணியாகவும் அமைகின்றது. அதனால்தான் கூந்தல் பெண்கள் ஒரு அணியும் ஒரு ஆபரணமாகக் கருதப்படுகிறது. எந்தவொரு பெண்ணும் தன் அழகைப் பற்றி அக்கறை காட்டுவது போலவே, அவளுடைய கூந்தலை பராமரிப்பதிலும் சமஅளவான ஈடுபாட்டை கொண்டிருக்க வேண்டும். பெலும்பாலான பெண்கள் நீளமான கூந்தலைப் பெற முயற்சி செய்தாலும், கூந்தல் வலிமையாகவும், ஆரோக்கியமாகவும், அடர்த்தியாகவும் இருப்பதே மிக முக்கியமான அம்சமாகும்.

கூந்தல் பராமரிப்புக்கு, இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்துவது, பண்டைய காலம் முதல் இன்று வரை நம் நாட்டு மக்களால் நடைமுறையில் உள்ள ஒரு விடயமாகும். தலைமுறை தலைமுறையாக கூந்தல் பராமரிப்புக்காக சுதேச மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கான காரணம், அவற்றில் காணப்படும் மருத்துவ குணமும் அதன் மூலமான சிறந்த பிரதிபலனுமேயாகும். இவ்வாறு பயன்படுத்தப்படும் எள் எண்ணெய், சிவப்பு வெங்காயச் சாறு, மல்லிகைச் சாறு, தேங்காய் எண்ணெய் போன்ற இயற்கை மூலப்பொருட்களால் கூந்தல் மற்றும் தலையின் மேற்பரப்புக்கு வழங்கப்படும் போசணையானது விலைமதிப்பற்றதாகும்.

எள் எண்ணெயின் பயன்பாடு மருத்துவ மதிப்பின் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. மருத்துவ எண்ணெய்கள் உற்பத்தியில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. கூந்தலை ஆரோக்கியமானதாக பராமரிக்க எள் எண்ணெய் உதவுகிறது. பண்டைய காலம் முதல் இன்று வரை எள் எண்ணெய், கற்றாழை, தேங்காய் எண்ணெய், வெந்தயம், கறிவேப்பிலை, ஆனைக்கொய்யா போன்றவற்றை கலந்து உச்சந்தலையில் பூச பயன்படுத்தப்படுகின்றது.

எள் எண்ணெய் ஆனது, விற்றமின் E உள்ளிட்ட போசணைகளால் நிறைந்துள்ள எண்ணெய் என, ஆயுர்வேதம் கூறுகிறது. எள் எண்ணெயை உச்சந்தலையில் தடவி மசாஜ் செய்வதன் மூலம் தலைக்கு ஈரப்பதனும், உலர்ந்த கூந்தலை மென்மையாக தக்க வைத்துக் கொள்ளவும் முடிகின்றது. தினமும் இதைச் செய்துவருவதன் மூலம் நீங்கள் பளபளப்பான கூந்தலை பெற முடியும். உச்சந்தலையில் எள் எண்ணெயை அடிக்கடி தடவுவதன் மூலம், தலைக்கு கிடைக்கும் போசணை காரணமாக, தலைவலி, முடி நரைத்தல், கூந்தல் உதிர்தல் போன்ற நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடிவதுடன் கூந்தல் வளர்ச்சியையும் அது ஊக்குவிக்கிறது. எள் எண்ணெய், தலைக்கு குளிர்ச்சியை வழங்குவதோடு, வெயில் காரணமாக கூந்தலுக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கிறது. தலையின் தோல் வரட்சி காரணமாக ஏற்படும் அரிப்பை குறைக்கும் எள் எண்ணெயானது, தலைவலியை தவிர்ப்பதற்காக தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிவப்பு வெங்காயத்தை நன்றாக அரைத்து பெறப்படும் சாற்றை உச்சந்தலையில் தடவுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் பண்டைய காலத்திலிருந்த மக்கள் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். பெண்கள் இன்றும் சிவப்பு வெங்காயச் சாற்றை எடுத்து உச்சந்தலையில் தடவுகிறார்கள். ஏனெனில் அது மயிர்க்கால்களுக்கு போசணையை வழங்குவதன் மூலம், கூந்தல் வளர்ச்சிக்கு அவசியமான போ'ாக்கை வழங்கி, இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகின்றது. உலர்ந்த மற்றும் சேதமடைந்த கூந்தலுக்கு நிவாரணமளிக்கவும் கூந்தல் நுனி பிளவடைவதை குறைக்கவும் உதவுகின்ற சிவப்பு வெங்காயச் சாற்றை அடிக்கடி பயன்படுத்துவதன் மூலம் பளபளப்பான கூந்தலைப் பெற முடியும்.

மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வு போன்ற மன ரீதியான நோய்களைப் போக்குவதற்கான நறுமணம் கொண்ட மருந்தாக பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் 'ஜெஸ்மின்' என அழைக்கப்படும் மல்லிகைச் சாறு, உள்ளூர் ஆயுர்வேதத்தின் மூலப்பொருளாகவும், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பெறுமதிமிக்க மூலப்பொருளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மல்லிகை மலர்ச் சாற்றில் உள்ள கூறுகள், கூந்தல் உதிர்தலைக் குறைக்கின்றன. இயற்கையாக ஈரலிப்பை வழங்கும் மல்லிகைச் சாறு, தலையின் தோல் உலர்வடைவதைத் தடுத்து, பொடுகு ஏற்படுவதை குறைக்கவும் உதவுகிறது. மல்லிகையின் சாரத்தின் தனித்துவமான நறுமணம் மனதை அமைதியாக பேண எவ்வாறு உதவுகின்றது என்பது உண்மையிலேயே ஆச்சரியமளிக்கும் விடயமாக காணப்படுகிறது.

இலங்கைப் பெண்கள் தங்களது கூந்தலின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளும் விடயங்களில் தேங்காய் எண்ணெயின் பயன்பாடு மிக பிரதான இடத்தை வகிக்கின்றது. பெரும்பாலான பெண்கள் தங்களது வீட்டில் தயாரிக்கும் தேங்காய் எண்ணெயுடன், இயற்கையான தாவரச் சாறுகள் மற்றும் இயற்கை மூலப்பொருட்களை சேர்த்து தங்கள் கூந்தலில் சேர்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பெரும்பாலான மூலப்பொருட்களானவை, இலங்கையின் ஆயுர்வேத பாரம்பரியமாக கருதப்படும் உள்ளூர் இயற்கை மூலப்பொருட்களாக காணப்படுகின்றன. மல்லிகை மலர்ச் சாறு மற்றும் எள் எண்ணெயுடன் கலந்த தேங்காய் எண்ணெயை தலைக்கு பயன்படுத்துவது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஆயினும், கூந்தலுக்கான அனைத்து தேங்காய் எண்ணெய்களையும் இவ்வாறு ஒரே மாதிரியானதாக கருதி பயன்படுத்த முடியாது என்பதால், இது வேலைப்பளுமிக்க பெண்களுக்கும் ஆண்களுக்கும் இயற்கையாக உள்ள பயன்பாட்டில் சிக்கலை ஏற்படுத்துகிறது. அத்துடன் அவை கொண்டுள்ள மணம் மற்றும் ஒட்டும் தன்மை காரணமாக விரும்பத்தகாத வகையிலும் அமைந்து விடுகிறது. இதன் விளைவாக, வீட்டில் தயாரிக்கப்படும் தேங்காய் எண்ணெய்களைப் பயன்படுத்துவதானது, பணிக்குச் செல்லும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரு தொந்தரவான விடயமாக அமைகின்றது.

அறிமுகப்படுத்தப்படும் “குமாரிகா நரீங் ஹெயார் ஒயில் - ஹெயார் தினிங் கண்ட்ரோல்” - வழமையான கூந்தல் எண்ணெய்களைப் போலல்லாமல், இது கூந்தலுக்குத் தேவையான போ'ாக்கை அளிப்பதுடன், கூந்தல் மெலிதாகும் பிரச்சினைக்குத் தீர்வையும் வழங்குகிறது. வீட்டிலேயே கூந்தலைப் பராமரிக்கும் ஆண்களும் பெண்களுமாகிய உங்களுக்கு, “குமாரிகா ஹெயார் தினிங் கண்ட்ரோல்” மூலம் கிடைக்கும் புதிய வாசனை மற்றும் போ'ாக்கு காரணமாக, நெகிழ்வானதும், ஸ்டைலானதுமான கூந்தலைப் பெறலாம். தொழில் துறையில் ஈடுபடும் நீங்கள், பணிபுரியும் சூழலில் கூட எவ்வித சந்தேகமுமின்றி பயன்படுத்தக்கூடிய வகையில் இது உற்பத்தி செய்யப்பட்டுள்ளமையானது, மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக இலங்கையர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் மூலிகைச் சாறுகள், எள் எண்ணெய், மல்லிகைச் சாறு, சிவப்பு வெங்காயச் சாறு மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகிய 4 மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும், “குமாரிகா ஹெயார் தினிங் கண்ட்ரோல்” ஆனது, முடியின் உள்ளேயும், தலையின் மேற்பரப்பிலுள்ள தோலுக்கும் போ'ணையை வழங்குவதன் மூலம், கூந்தலில் காணப்படும் பிரச்சினை கொண்ட தன்மைகளை நீக்கி, பளபளப்பான, கீழ்ப்படியும் கூந்தலை பெற வழிவகுக்கின்றது.

“குமாரிகா ஹெயார் தினிங் கண்ட்ரோல்“ எண்ணெயானது, உங்கள் பரபரப்பான வாழ்க்கை முறைக்கேற்ப எளிதாகவும் குறைந்த நேரத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. “குமாரிகா ஹெயார் தினிங் கண்ட்ரோல்” எண்ணெய் மூலம், ஆரோக்கியமானதும் பளபளப்பானதும் கீழ்ப்படிதலும் கொண்ட கூந்தலை நீங்கள் தனதாக்கிக் கொள்ள முடியும் என்பதுடன், அதன் இனிமையான நறுமணம், நாள் முழுவதும் உங்களை புத்துணர்ச்சியுடனும் புதிதாகவும் வைத்திருக்க உதவும்.





## 30 இலட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபா;

# 15 பில்லியன் ரூபா அரசினால் ஒதுக்கீடு

### புதுவருட காலத்தில் மக்களின் கஷ்டத்தை போக்கும் திட்டம்

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்தது முதல் பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் ஏற்பட்ட பின்னடைவு, மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பொருளாதார தாக்கம், பொருளாதார நெருக்கடி என பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பிரயத்தனம் மேற்கொள்ளும் நிலையிலே கொரோனா தொற்று எனும் உலகளாவிய பாதிப்பை எதிர்கொள்ள நேரிட்டது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி,கல்வி,சுகாதாரம் அன்றாட வாழ்க்கை என அனைத்திலும் தாக்கம் செலுத்திய இந்த வைரஸ் பாதிப்பு மரத்தால் விழுந்தவனை மாடு குத்தியது போன்ற நிலைமைக்கு தள்ளியது எனலாம்.

கொரோனா தாக்கம் மாத சம்பளம் பெறும் குடும்பங்களை விட அன்றாடம் உழைத்து காலத்தை ஓட்டும் குடும்பங்களையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களையும் அதிகமாக நெருக்கடிக்குள் தள்ளியது. பெரும் நெருக்கடி நிலையிலும் அந்த மக்கள் குறித்து சிந்தித்து அவரகளுக்கு உதவி வழங்க பொதுஜன பெரமுன அரசாங்கம் பல செயற்திட்டங்களை முன்னெடுத்தது. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வருமான வழியிழந்த தரப்பினருக்கும் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் அன்று ஆரம்பித்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் வழிகாட்டலுடன் இந்த செயற்பாடு இடம்பெற்றாலும் இதன் பின்னணியில் முன்னாள் அமைச்சரும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தலைவருமான பெசில் ராஜபக்ஷ இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வறுமை ஒழிப்பிற்காக பல்வேறு திட்டங்களை செயற்படுத்திய அவருக்கு வறிய மக்களின் இதயத் துடிப்பு நன்கு தெரியும். வறுமை கோட்டிற்குக் கீழ் இருந்து மக்களை மீட்டெடுக்கும் திட்டங்கள் ஒருபக்கம் இடம்பெறுகையில் மறுபக்கம் அவர்களுக்கான நிவாரண செயற்பாடுகள் அவரின் ஆலோசனையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



இந்த நிலையிலே சிங்கள தமிழ் புத்தாண்டை எப்படி கொண்டாடுவது என்று ஏக்கத்துடன் இருந்த வறிய குடும்பங்கள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியது. கடந்த வருடம் புத்தாண்டில் கொரோனா தாக்கத்தினால் வீடுகளில் முடங்கி இருக்க நேரிட்டது.ஆனால் இம்முறை நிலைமை ஓரளவு சீராகியுள்ள நிலையில் புத்தாண்டை கொண்டாடும் ஆர்வம் அனைவருக்கும் இருந்தது.பின்தங்கிய குடும்பங்களுக்கு எவ்வாறு உதவுவது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தலைவரான பெசில் ராஜபக்ஷ தலைமையிலான குழு சில வாரங்களுக்கு முன்னரே ஆராய்ந்தது. இதற்கு பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அவர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவொன்றை வழங்குவதே உகந்தது என இந்தக் குழு பரிந்துரை செய்தது.

வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில், இந்த சிறப்பு புத்தாண்டு கொடுப்பனவை ஏப்ரல் 11 தொடக்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, ரூ. 5,000 கொடுப்பனவைப் பெற தகுதியானவர்களை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை பிரதமர் அலுவலகம் வெளியிட்டது. நாட்டில் நிலவும் கொவிட்19 நோய்த்தொற்று நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையானது, நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்களுக்காக விடுக்கப்பட்டது.

அதற்கமைய, கொவிட்19 பரவலைத் தொடர்ந்து ரூபா 5,000 விநியோகிகப்பட்ட குடும்பங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த 10 பிரிவுகளைச் சேர்ந்தவர்களிலிருந்து 7 பிரிவினர் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய

1. சமுர்த்தி பெறுநர் குடும்பங்கள்
2. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள்
3. முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
4. ஊனமுற்றோர் கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
5. சிறுநீரக நோய் காரணமான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
6. நூறு வயதை கடந்தவர்களுக்கான கொடுப்பனவு பெறும் குடும்பங்கள்
7. கோரிக்கை விண்ணப்பம் முன்வைத்து தகுதி பெற்ற குடும்பங்கள்

(மேலுள்ள 6 பிரிவுகளின் கீழுள்ள கோரிக்கை முன்வைத்து உதவி பெற தகுதியான குடும்பங்கள்)





அத்துடன் ஒரே குடும்பத்தில் இருவர் இதற்கான தகுதியை பெறும் நிலையில், அக்குடும்பத்திற்கு உச்சபட்சமாக ரூ. 5,000 மாத்திரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

குடும்பங்களிடையே காணப்படும உப குடும்பங்களுக்கும் குறித்த ரூ. 5,000 கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதோடு அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை பிரதேச செயலாளரினால் எடுக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

(21ஆம் பக்கம் பார்க்க)

**ஷம்ஸ் பாஹிம்...**

# மோடியின் வங்கதேச விஜயமும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களின் வலுவடையும் எதிர்ப்பும்



பாரத பிரதமர் நரேந்திரமோடி கடந்த மார்ச் 26ம் திகதி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக வங்கதேசம் சென்றிருந்தார். 1971வரை கிழக்கு பாகிஸ்தான் என அறியப்பட்ட வங்காளிகள் பெருமளவில் வாழும் பிரதேசம், அதன் பின்னர் வங்கதேசம், பங்களாதேஷ் என அறியப்படலாயிற்று. இன்றைய வங்கதேச பிரதமர் ஷேக் ஹஸீனாவின் தந்தையார் ஷேக் முஜீபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முழு அளவிலான யுத்தம் மூண்டது. அந்த யுத்தத்தில் கிழக்கு பாகிஸ்தான் முழுவதும் இந்தியவசமானது. யுத்தம் முடிவடைந்து இந்திய இராணுவம் அப் பிராந்தியத்தில் இருந்து வாபஸ் பெற்றதும் அப் பூமி பங்களாதேஷ். வங்கதேசம் என உத்தியோகபூர்வமாக அறியப்பட்டது. அதன் முதல் பிரதமராக முஜிபுர் ரஹ்மான் பதவியேற்றார். இந்தியாவின் – அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் உதவியில்லாமல் வங்கதேசம் உருவாகியிருக்க முடியாது. வங்கதேசம் உருவாகக் காரணமாக இருந்த தேசத் தந்தையான முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்ப அங்கத்தவர்களும் சதிப்புரட்சி மூலமாக சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்பொழுதில் ஷேக் ஹஸீனா வெளிநாட்டில் தங்கியிருந்ததால் அவர் மட்டும் தப்பிப் பிழைத்தார்.

கட்டுரையை படிக்கு முன் வங்கதேசம் பிறந்த கதையை வாசகர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதால்தான் இந்த பின்னோட்டம்.

வங்கதேசம் தனது ஐம்பதாவது பிறந்த தினத்தை பொன் விழாவை – கொண்டாடியபோது பிரதம விருந்தினராக பாரதப் பிரதமர் மோடியை ஷேக் ஹஸீனா அழைத்திருந்தார். ஏனெனில் இந்தியாவின் தயவின்றி வங்கதேசம் உருவாகியிருக்க முடியாது. எனவே மோடியவர்களை அழைப்பது முஜிபுர் மஹ்மானின் மகளுக்கு எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். அதனால்தான் டாக்கா சதுக்கத்தில் நடைபெற்ற பேரணி ஒன்றில் கலந்துகொண்ட அந் நாட்டின் பிரதமர், "இந்தியாவும் வங்கதேசமும் கைகோர்த்து முன்நோக்கி நகர்ந்தால் எமது மக்கள் அபிவிருத்தி காண்பது தவிர்க்க முடியாததாகிவிடும்" என்று தனது உரையில் குறிப்பிட்டார். டாக்கா விமான நிலையம் வந்து மோடியவர்களை அவர் நேரில் வரவேற்கவும் செய்தார்.



பிரதமர் மோடியின் விஜயத்தின் போது வர்த்தகம், அனர்த்த முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், விளையாட்டுத்துறை தொடர்பாக ஐந்து இருதரப்பு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. வங்கதேச அணுமின் நிலைய உட்கட்டுமான அபிவிருத்தி திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான ரயில் சேவையும் இப்பயணத்தின் போது இரு தலைவர்களும் ஆரம்பித்து வைத்தனர்.

மோடியின் இந்த இரண்டு நாள் பயணம் மொத்தமும் ரோஜாப்பூ படுக்கையாக இருக்கவில்லை. மோடி வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் அவர் டாக்கா வந்த மார்ச் 26ம் திகதியே ஆரம்பமாகியிருந்தன.

(21ஆம் பக்கம் பார்க்க)

**நோமன் ஹுசைன் ...**




# பெருந்தோட்டக் கட்டமைப்பின் பிடியில் இருந்து விடுபட்டாக வேண்டும்!

'பொது நிர்வாக செயற்பாடுகளுக்குக் கீழ் பெருந்தோட்ட மக்கள் முற்றுமுழுதாக உள்வாங்கப்பட்டால் மட்டுமே தமது அபிலாஷைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இம்மாற்றம் ஏற்படாத பட்சத்தில் பிற சமூகத்திடம் இருந்து ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியை மட்டுமே கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்' 'தோட்டம் – கிராமங்களுக்கு இடையிலான ஒட்டுறவின்மை தோட்டக் குடியிருப்புகள் சாதீய ரீதியில் பகிரப்பட்டமை கூட திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளேயாகும். பெருந்தோட்ட மக்களின் சகல தேவைகளும் தோட்ட நிர்வாகங்கங்களாலேயே நிறைவேற்றப்பட்டன. தேவைகளே அவைகளை தீர்மானித்தன. தேவையானவற்றை தோட்ட நிர்வாகங்களே வழங்கும். அவைகளால் மட்டுமே தம்மை பராமரிக்க முடியும் என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டு அமோகமாக அறுவடையும் பெறப்பட்டது'

## தோட்டங்களில் இருந்து வெளியேறுவது தீர்வாகாது

சம்பள நிர்ணய சபைக்கூடாக தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளம் பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இது எவ்வளவு காலத்துக்கு தொடரும்? எதிர்காலத்தில் சம்பள அதிகரிப்பு எவ்வாறு நிகழும் என்பதை ஊகிக்க முடியாதுள்ளது.

மலையக தொழிற்சங்கங்களுக்கும் தோட்டக் கம்பனிகளுக்கும் இடையிலான முரண்பாட்டினை மேலும் முறுக்கி விடவும் சம்பள நிர்ணய சபையின் தீர்மானம் உதவியுள்ளது. இதன்மூலம் கூட்டு ஒப்பந்தம் சவாலுக்கு உட்படுத்தப்படுமா என்னும் கேள்வி எழுந்துள்ளது. கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் தமது முடிவை கம்பனித் தரப்பு மீள் பரிசீலனை செய்யுமா? எனினும் கம்பனிகள் தொழிற்சங்கங்களோடு இவ்விடயத்தில் இணங்கிப் போகலாம் எனும் எதிர்வு கூறல்களும் இல்லாமல் இல்லை.

எது எப்படியோ பெருந்தோட்டக் கட்டமைப்புக்கூடாக கம்பனி தரப்பின் பிடி கைநழுவ ஆரம்பிக்குமாயின் அது நல்ல சகுணமே என்று கருதுவோரும் உளர். எனினும் பெருந்தோட்டக் கட்டமைப்பின் கிடுக்குப்பிடி, அதற்கு இரையாகிப் போகும் தொழிற்சங்கங்களின் பலவீனம் இரண்டுமே நான்கு தலைமுறைகளை முடக்கிப் போடும் சங்கதிகளாக உள்ளன.

இதன் வளர்முகமும் இதனால் தளர்வடைந்து போயுள்ள ஒரு சமூகம் எப்படி வழி நடத்தப்பட்டது என்பது பற்றிய தேடல் இது...

மலையக சமூகம் இன்று பின்னடைவு கண்டிருப்பது ஒன்றும் புதிய தகவலல்ல. அயல் நாட்டு உள்நாட்டு சமூக பரிமாணங்களோடு ஒப்பீடு செய்யும்போது இந்த யதார்த்த நிலைமை தெளிவாகப் புரியும். சமூக ரீதியிலான ஆய்வுகளை உள்வாங்கிக் கொண்டு ஏற்ற இறக்கங்களை இனங்கண்டு அதற்கேற்புடைய தான சமூக அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் முதன்மைப்படுத்தாமை மலையகத் தலைமைகள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளாகும். ஏனெனில் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் தொழிற்சங்க அரசியல் முன்னெடுக்கப்பட்டமையே இதற்கு அடிப்படையாக அமைகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை பெருந்தோட்டத் தொழிலாளர்களது சமூகநலன் பாதுகாப்பு என்பது ஆரம்ப காலந்தொட்டே தொழிற் சட்டத்துக்கு கீழேயே இருந்து வருகின்றது. இதனை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு பெருந்தோட்ட முகாமைத்துவத்திடம் உள்ளது. ஆனால் பெருந்தோட்ட முகாமைத்துவம் தோட்டத் தொழிலாளரின் நலனைவிட தமது ஆதாயத்தில் மட்டுமே அக்கறை காட்டி இயங்குவதால் தோட்ட மக்களுக்கான சேவையை மிக அடிமட்ட ரீதியிலேயே மேற்கொண்டு வருகின்றது. பெருந்தோட்ட முறைமைகளுக்கான ஆட்சேர்ப்பு என்பது இப்படித்தான் ஆரம்பித்தது.

இலங்கை போன்ற நாடுகளில் பெருந்தோட்ட முறைமை நடைமுறைக்கு வருவதற்கு முன்பு அமெரிக்காவின் சில இடங்களிலும் கரீபியன் தீவுகளிலும் தான் ஆரம்பிக்கப்பட்டது என்பது ஆய்வாளர்களின் குறிப்பு. ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி கப்பல் மூலமாக இந்நாடுகளுக்கு கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டதே வரலாறு. இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் அடிமைத் தொழிலாளர்களாக நடத்தப்பட்டார்கள். பிற்பட்ட காலத்தில் அடிமை நிலை வர்த்தகத்துக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டு அடிமை முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. இதனாலேயே ஆங்கிலேய அரசாங்கம் அண்டை நாடான இந்தியாவிலிருந்து ஆட்களை திரட்ட வேண்டி ஏற்பட்டது. ஏனெனில் இலங்கையில் பெருந்தோட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது இத்தோட்டங்கள் அடிமை தொழிலாளர்களை நம்பியிருக்கவில்லை என்பர் வரலாற்றாய்வாளர்கள்.

ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே இவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்த ஒப்பந்தமானது ஐந்தாண்டு வரையறையைக் கொண்டிருந்தது. கங்காணிமாரின் பொறுப்பில் வந்தவர்களும் இவர்களுக்குள் அடங்கினார்கள். குறிப்பிட்ட காலம் பெருந்தோட்டங்களில் வேலை செய்த பின்னர் மீண்டும் தாய்நாடு திரும்பலாம் என்ற அடிப்படையிலேயே இவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆனால் இவ்வாறு வந்தவர்கள் பிற்காலத்தில் தாம் குடியேறிய புதிய நாடுகளிலேயே வாழ தலைப்பட்டமை ஒரு திருப்பமாக அமைந்தது. இதனால் இலங்கை போன்ற நாடுகளில் இது சமூக, அரசியல் ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்கவே செய்தது. தவிர புதிதாக ஒரு தேசிய இனமாக இவர்களை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் தோற்றுவித்தது. ஆரம்பக்காலத்தில் இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தோட்டங்களில் இருந்து மாறி வேறு தோட்டங்களுக்கோ, வேறு இடங்களுக்கோ சென்றால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து மறுபடியும் அவர்களை அதே தோட்டத்திற்குக் கொண்டு வரலாம் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தது.

பெருந்தோட்ட கட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே சிங்கள கிராமங்களோடு திட்டமிட்ட இடைவெளியை ஏற்படுத்திய தன் பயனை அடைந்தே வந்துள்ளது. சிங்கள கிராமத்தவர்கள் போல காணியுரிமை, வீட்டுரிமை என்ற அகவுணர்வு வந்துவிடாதபடி தொழில் ரீதியான ஒரு வாழ்விட பின்புலத்தைக் கொண்டதே மலையக சமூகம் என்று சுயவிமர்சனம் செய்து கொள்ளும்படியான ஒரு நிலைமையைத் தோற்றுவிப்பதில் பெருந்தோட்டக் கட்டமைப்பு எதிர்பார்த்த வெற்றியைத் தக்கவைத்தே வந்துள்ளது.

தோட்டம் கிராமங்களுக்கு இடையிலான ஒட்டுறவின்மை தோட்டக் குடியிருப்புகள் சாதீய ரீதியில் பகிரப்பட்டமை கூட திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளே ஆகும். பெருந்தோட்ட மக்களின் சகல தேவைகளும் தோட்ட நிர்வாகங்கங்களாலேயே நிறைவேற்றப்பட்டன. தேவைகளே அவைகளை தீர்மானித்தன. தேவையானவற்றை தோட்ட நிர்வாகங்களே வழங்கும். அவைகளால் மட்டுமே தம்மை பராமரிக்க முடியும் என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டு அமோகமாக அறுவடையும் பெறப்பட்டது. ஒரு வகையில் இது எழுதப்படாத அடிமை சாசனம். 1930களில் பெருந்தோட்ட மக்களின் நிலையை அரை அடிமை நிலையென கணித்து கண்டனம் வெளியிட்டது இந்திய அரசு. ஆனால் அதிலிருந்து இம்மக்களை விடுவிக்க எதனையும் செய்யவில்லை. இதனாலேயே வெளிநாட்டு கம்பனிகள் வெளியேறிய பின்னும் சுதேசிய நிர்வாகம் அதே அடிமை நிலை போக்கிலேயே இம்மக்களை நடத்த ஆரம்பித்தது.

பொது நிர்வாக செயற்பாடுகளுக்குக் கீழ் பெருந்தோட்ட மக்கள் முற்றுமுழுதாக உள்வாங்கப்பட்டால் மட்டுமே தமது அபிலாஷைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இம்மாற்றம் ஏற்படாத பட்சத்தில் பிற சமூகத்திடம் இருந்து ஒப்பீட்டளவில் மட்டுப்படு த்தப்பட்ட வளர்ச்சியை மட்டுமே கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதே பலரின் அபிப்பிராயமாகும். தோட்ட நிர்வாகங்கள் தொழில் வழங்குனர்கள் என்ற வட்டத்துக்குள் முடக்கப்பட்டால் மட்டுமே பொது நிர்வாக சேவைகள் பெருந்தோட்ட பிரதேசங்களையும் சென்றடைய முடியும்.

தேயிலைத் தோட்டத் தொழிலைக் கைவிடுவதே பெருந்தோட்டக் கட்டமைப்பிலிருந்து வெளியேறுவதற்கான மார்க்கம் என்றும் சிலர் எண்ணுகிறார்கள்.

பெருந்தோட்ட நிர்வாக கட்டமைப்பு முறையே மலையக அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடுகின்றதே தவிர அத்துறைசார் தொழில் அல்ல. எனவே தான் அத்தொழிலைக் கூலித்தொழில் என்ற நிலைமையிலிருந்து விடுவித்து கௌரவமான தொழில் என்ற உணர்வை உருவாக்க வேண்டியது அவசியமானது.

மலையகத்தில் புதிய கிராமங்கள் அமைப்பதும் ஆசிரியர் தொழில் பெற்றுக் கொடுப்பதும் அடிப்படை ரீதியிலான சமூக மாற்றத்துக்கு வழி வகுத்துவிடப் போவதில்லை. வாழ்விடவுரிமை, வேலைவாய்ப்பின்மை இரண்டும் மட்டுமே பின்னடைவுக்கான காரணங்கள் அல்ல. தோட்டத் தொழிலையும் ஆசிரியர் தொழிலையும் விட்டால் வேறு தொழில் வாய்ப்புகள் கிடையாது. பொருளாதார வளத்துக்கான ஊக்கிகள் எதுவும் காணப்படவில்லை. இதனால் ஆயிரக்கணக்கானோர் தோட்டங்களை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்கள் மீண்டும் மலையகம் திரும்புவதற்கான வகையில் தொழில் பேட்டைகள் ஏற்படுத்தியாக வேண்டும்.

எனினும் பெருந்தோட்ட கட்டமைப்பின் இறுக்கமான கெடுபிடிகள் விடுபடும் வரையில் இது சவால்களையும் நிர்வாக ரீதியிலான சிக்கல்களையும் தோற்றுவிக்கவே செய்யும் என்பதை மறுப்பதற்கு இல்லை. பெருந்தோட்டக் கட்டமைப்பின் பிடியில் இருந்து விடுபட்டாக வேண்டும்!

பன். பாலா ...

# வீட்டு வேலைத் தொழில் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும்!

## வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை

உலகில் பலநாடுகளில் வீட்டு வேலைத் தொழிலாளர்கள் அணிதிரட்டப்பட்டு வருவதுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல்களும் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் 15 வருடங்களுக்கு முன்னர் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் என்ற பெயர்கூட இருக்கவில்லை. 'வேலைக்காரி' என்ற சொற்பதமே பயன்படுத்தப்பட்டு வந்தது. செங்கொடி பெண்கள் இயக்கம் இவ்வீட்டுவேலைத் தொழிலாளர்களை அணி திரட்டியதுடன், இத்தொழில் தொடர்பாக சமூகத்தின் சிந்தனையிலும் மாற்றத்தை கொண்டு வந்தது. அத்தோடு மட்டுமல்லாது, வீட்டுவேலைத் தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு தொழிற்சங்கம் அவசியம் என்பதனை உணர்ந்து 2012 மார்ச் மாதம் இவர்களுக்கான தொழிற்சங்கத்தை பதிவு செய்தது.



2012இலிருந்து வீட்டுவேலைத் தொழிலாளர்கள் அணிதிரட்டப்பட்டு வருவதுடன், அவர்களுக்கான சட்ட பாதுகாப்பை ஏற்படுத்துமுகமாக பல்வேறு கலந்துரையாடல்களை தொழில் அமைச்சு மற்றும் தொழில் ஆணையாளருடன் நடத்தி வந்துள்ளதுடன் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கத்தினால் தங்களது கோரிக்கைகளை சட்ட வரைபுகளாக தயாரித்து அரசிடம் கையளித்துள்ளது. ஒருபக்கம் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோடு நின்றுவிடாது மறுபுறம் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பதற்கூடாகவும், வீட்டு வேலைத் தொழிலாளர்களின் உரிமை மீறல்களை தடுக்கும் செயற்பாடுகளை செய்து வந்துள்ளது.

வீட்டுவேலைத் தொழிற்சங்க கிளைக் காரியாலயங்கள் ஐந்து மாவட்டங்களில் இயங்குகின்றன. அக்காரியாலயங்களில் குறிப்பாக தொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் புகார்களை பதிவு செய்யும் புத்தகங்கள் உள்ளன. தொழிலாளர்கள் தங்கள் புகார்களை தொழிற்சங்க காரியாலயத்திற்கு வழங்கிய பின்பு காரியாலய மட்டத்தில் அப்பிரச்சினைக்கு ஏற்ப சம்பந்தப்பட்டவருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படும்.

உதாரணமாக : தொழில் தருனர் ஏற்றுக்கொண்ட சம்பளத்தை விட குறைவாக வழங்கினார் எனின், அத் தொழில்தருனருடன் தொழிற்சங்கம் கலந்துரையாடி அப்பிரச்சினையை தீர்க்க முற்படும்.

சில பிரச்சினைகள் தொழில் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், வீட்டு வேலைத்துறைக்கு சட்டங்கள் இல்லாததனால் அவை முடிவுக்கு கொண்டு வரமுடியாமல் போயுள்ளது. தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கம் தொழில் ஒப்பந்தங்களை தொழில் வழங்குனருடன் மேற்கொள்ளும் நடவடிக்கையும் 2015ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க இதுவரை 32 ஒப்பந்தங்கள் தொழில் வழங்குனருக்கும், வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்திற்குமிடையில் கையெழுத்திடப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாது அந்தந்த மாவட்டங்களில் தற்போது வீட்டுவேலைத் தொழிலாளர்களே தங்களது நாள் மற்றும் மாத சம்பளங்களை நிர்ணயித்துள்ளார்கள். எனினும் சட்டங்கள் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பிற்கு மிக அவசியம். ஆனால் அரசு, சட்டங்களை கொண்டு வரும்வரை நாம் காத்திருக்க முடியாது. எனவே மேலே கூறிய செயற்பாடுகள் அனைத்தும் தற்காலிகமாக தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கவே உதவும். அத்துடன் இச்செயற்பாடுகளின் விளைவால் சட்டம் வந்ததும் அவை அமுல்படுத்த இலகுவாக அமையும்.

அண்மையில் இவ்விடயம் தொடர்பாக அரசுடன் ஏதாவது கலந்துரையாடல்களை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

தொழில் அமைச்சுடன் தொடர்ந்தும் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. சென்ற வருடம் இடம்பெற்ற கலந்துரையாடலில் வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்தினால் வீட்டுவேலைத் தொழிலாளர் சாசனம் (Charter) தொழில் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 30.03.2021ஆம் திகதி தொழில் அமைச்சின் செயலாளருடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் விடுமுறை தொடர்பான சட்டங்களைக் கொண்டு வருவதற்கான ஆழமான கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், இத்தினத்தில் வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத் தலைவர் சத்தியவாணி, செயலாளர் லட்சுமி மற்றும் கிராம கமிட்டி தலைவர் புஸ்பராணி ஆகியோரினால் தற்போது வீட்டுவேலைத் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு புதிய சட்டங்களை கொண்டு வருவதன் அவசியமும் தெளிவாக விளக்கப்பட்டது. வீட்டுவேலைத் தொழிலாளர்கள் இன்று அணிதிரட்டப்பட்ட ஒரு சங்கத்தின் கீழ் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க செயற்பட்டு வருகின்றார்கள். எனவே, வீட்டுவேலைத் தொழிலாளர்களை அணித்திரட்டப்படாத தொழிலாளர்கள் என்று இன்று கூறமுடியாது. சட்டரீதியாக வீட்டுவேலைத்துறையை அங்கீகரிப்பதற்கூடாக, இத்துறை பாதுகாக்கப்படுவதுடன் இத்துறையில் செயற்பட்டுவரும் பல ஆயிக்கணக்கான தொழிலாளர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும். வீட்டு வேலைத் தொழில் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும்.



மேனகா கந்தசாமி ...

## மலையகத்தில் கணனிக் கல்வி அறிவு :

# மீண்டும் இயங்கத் தொடங்கியிருக்கும் பிரஜாசக்தி நிலையங்கள்



பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்களின் நலன் கருதி பல மில்லியன் செலவில் ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பொது நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் அந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காகவுமே உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும் இதன் பெறுமதியை உணராத சில விசமிகள் இவற்றிக்கு சேதம் விளைவித்து எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கின்றனர்.

இவ்வாறு பெறுமதிமிக்க பொது நிறுவனங்களை சேதப்படுத்துபவர்கள் எவராக இருந்தாலும் கட்சி, மதம், மொழி, இனம் பாராமல் உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

மலையக பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும்எத்தனையோ பாடசாலை மாணவர்கள் தங்களின் கல்வி நடவடிக்கையை முடித்துவிட்டு தொழிலுக்காக காத்திருக்கின்றனர். இவர்களின் தொழில் வாய்ப்புக்கு நவீன தொழிநுட்பம் இன்றியமையாதது. இந்நிலையில் சகல துறைகளிலும் கணினி அறிவு மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது கணணியை கற்றுக்கொள்வதற்கு வசதி வாய்ப்பு இல்லாமல் பலர் சிரமப்படுகின்றனர்.

இவ்வாறான தொரு சூழ்நிலையில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கணினி மையங்கள் மலையகத்தில் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அந்த வகையில் பொகவந்தலாவை கெர்க்ஸ் சோல்ட் தோட்டப் பகுதியில் உள்ள பிரஜாசக்தி நிலையமானது சுமார் 12 வருட காலமாக மூடப்பட்ட நிலையில் காணப்படுவதோடு பயன்பட முடியாதளவிற்கு அந்த நிலையம் சேதமடைந்தும் காணப்படுகிறது.



சேதப்படுத்தப்பட்டுள்ள பொகவந்தலாவ கெர்கஸ்வேல்ட் பிரஜாசக்தி நிலையம்

2008ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இந்த பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்டப் பகுதியில் பிரஜா சக்தி நிலையம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



இப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கமையவே இது அமைக்கப்பட்டது. பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு பிரஜாசக்தி நிலையம் இதுவாகும்.

கெர்கஸ்வோல்டின் ஐந்து பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், சாஞ்சிமலை, வானகாடு, பொகவந்தலாவ நகரப்பகுதியில் உள்ள மாணவர்கள் என குறைந்தது ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த பிரஜா சக்தி நிலையத்தை பயன்படுத்தி வந்தனர். 2008ம் ஆண்டு இனந்தெரியாத நபர்களால் நிலையத்தின் கண்ணாடியை கல்லெறிந்து சேதப்படுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அங்குள்ள உபகரணங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தினார் என்று பிரதேச மக்கள் வேதனையோடு சொல்கிறார்கள்.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின்போது கூட இந்த நிலையத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை. இந்த புதிய அரசாங்கத்தின் ஊடாக இந்த பிரஜா சக்தி நிலையத்திற்கு புத்துயிர் கொடுத்து மாணவர்களின் நலன் கருதி மீண்டும் பிரஜாசக்தி நிலையம் திறக்கப்பட வேண்டும் என்பது பெற்றோரின் கோரிக்கையாகும்.

இது குறித்து பிரஜாசக்தி நிலையங்களுக்கு பொறுப்பான அருள்சாமி பரத்திடம் தொடர்பு கொண்டு கேட்டோம். நாடளாவிய ரீதியில் தோட்ட மாணவர்களின் கணணி புலமையினை விருத்தி செய்வதற்காக மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நாடளாவிய ரீதியில் 2006 ஆண்டு பிரஜாசக்தி திட்டத்தைக் கொண்டுவந்தார். இதன் மூலம் கணனி அறிவு மாத்திரமின்றி அடிப்படை ஆங்கிலம், தொழில் வழிகாட்டல், சுயதொழில் போன்ற பல்வேறு நோக்கங்களையும் இளைஞர்களால் அடைய முடிந்தது.

இதற்கமைய நுவரெலியாவில் 15 பிரஜாசக்தி நிலையங்களும், கண்டியில் 06, பதுளையில் 09, கேகாலையில் 04, களுத்துறை, மாத்தறை, காலி உட்பட நாடாளவிய ரீதியில் என மொத்தமாக 45 பிரஜாசக்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு பிரதேச மக்களின் நன்மை கருதி உருாக்கப்பட்ட பிரஜா சக்தி நிலையங்கள் முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் எண்ணக்கருவில் தோன்றியதாலோ என்னவோ 2015ம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பிரஜாசக்தி நிலையங்களை கைகழுவியது. இதனால் பல நிலையங்கள் இயங்காது மூடப்பட்டன.

எனினும் இது முழுக்க முழுக்க தோட்டத்தில் வாழும் இளைஞர் யுவதிகளின் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி உருவாக்கப்பட்டதன் காரணமாக இதனை மீண்டும் புத்துயிர் கொடுக்க வேண்டும் என்று தற்போது ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய இன்று மூன்று நிலையங்களைத் தவிர ஏனை அனைத்து நிலையங்களும் இயங்கத் தொடங்கின. அவற்றுக்கு தேவையான கணனிகள் மற்றும் நவீன உபகரணங்கள் அமைச்சின் மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இந்த நிலையங்களை பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் பொது மக்களுக்கே உள்ளது. அமைச்சு மட்டத்தில் 25 காவலாளிகளை இந் நிலையங்களில் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்கால சந்ததியினருக்காக உருவாக்கப்பட்ட இந்நிலையங்களை பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். இவ்வாறு பரத் அருள்சாமி எம்மிடம் தெரிவித்தார். நல்லது. பிரஜாசக்தி மீது கல்லெறிவது மலையகக் கணனிக் கல்விமீது கல்லெறிவதற்கு சமன் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஹட்டன்
கே. சுந்தரலிங்கம் ...

# பாரபட்சம் பாராது அனைத்து பகுதிகளிலும் அபிவிருத்தி

## முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார்

அரசாங்கத்தின் பொறுப்பான அரச பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் அலுவலக ரீதியாக இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டிருந்தாலும் கடந்த அரசாங்கத்திற்கு ஆதவு வழங்கியவர்களாகும். இந்த தரப்பினரை சரியாக அடையாளம் காணாது அவர்களையே மீண்டும் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளில் வைத்திருப்பது மிகவும் வருத்தம் தருகின்றது என்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கி செவ்வி....



**அரசுக்கு எதிராக மக்களை திசைதிருப்பும் முயற்சிகள் பலமாக மேற்கொள்ளப்படுகின்றனவே? இதன் உண்மை என்ன?**

உங்களின் கூற்றை நான் ஏற்றுக் கொள்கிறேன். உண்மையில் எதிர் தரப்புகள் அரசாங்கத்திற்கு எதிராக பொய் பிரச்சாரங்களையும் வதந்திகளையும் மட்டுமல்லாது அரசை விமர்சிப்பதில் மிகவும் வல்லுனர்களாக இருப்பதை எங்களால் மறுக்க முடியாது. முக்கியமாக நல்லாட்சி என்ற போர்வையில் இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் ஆண்ட கடந்த ஆட்சியினரால் அன்று நாட்டுக்கு பாதகம் விளைவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பிரதிபலன் தான் அவை. நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற சதித் திட்டங்கள் வியாபார ஒப்பந்தங்கள் ஏற்றுமதி இறக்குமதி போன்ற விடயங்களின் பிரதிபலன்தான் இன்று நாம் அனுபவிப்பவை. அது மட்டுமல்லாமல் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பான அரச பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் அலுவலக ரீதியாக இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டிருந்தாலும் கடந்த அரசாங்கத்திற்கு ஆதவு வழங்கியவர்களாகும். இந்த தரப்பினரை சரியாக அடையாளம் காணாது அவர்களையே மீண்டும் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளில் வைத்திருப்பது மிகவும் வருத்தம் தரும் பலவீனமாகும்.

இவற்றை மாற்றுவதற்கு அரசாங்கம் நல்ல முறையில் தீர்வு எடுக்காத வரையில் நீங்கள கேட்ட கேள்வி சரியானதென்றே நான் நினைக்கின்றேன்.

**இந்த அரசாங்கத்தின் முஸ்லிம்கள் மீதான நடவடிக்கைகள் சமகால அரசியல் நகர்வுகள் குறித்து அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர் என்ற வகையில் நீங்கள் கூறும் கருத்து என்ன?**

இலங்கையில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறுபான்மை முஸ்லிம் சமூகமான நாங்கள் சுய மரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ்ந்து வந்தவர்கள். இலங்கையின் சுதந்திரத்திற்கும் முன்பும் பின்பும் அது போல் மன்னர்கள் ஆட்சி செய்த காலம் தொட்டு முஸ்லிம்களான நாங்கள் மிகவும் கௌரவமாக வாழ்ந்து வந்தோம். இருந்தாலும் அண்மைக்கால நிகழ்வுகள் காரணமாக இன்று இந்நாட்டு முஸ்லிம்கள் விரும்பியோ விரும்பாமலோ அனுபவித்துக் கொண்டிருக்கும் அவதிகள் எங்கள் மனதை மிகவும் வேதனை கொள்ள வைக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை ஒரு நல்ல மனோநிலைக்கு கொண்டு வருவது மட்டுமல்லாமல் முஸ்லிம் சுய மரியாதையுடன் கௌரவமாக வாழக் கூடிய ஒரு ஸ்ரீலங்காவை அமைக்க வேண்டிய ஒரு பாரிய பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. ஆதலால் அப்படியான சூழலை அமைப்பதற்கு உரிய சக்தியையும் வசதியையும் தர வேண்டும் என்று இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

**இலங்கை முஸ்லிம்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு எப்படியான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று சொல்கின்றீர்கள்?**

நான் இலங்கையின் பிரஜை. அந்த மனோநிலையில் இருந்து பேசுவதையே விரும்புகிறேன்.

எங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்கே எங்கள் பெற்றோரால் ஒரு பெயர் வைக்கப்படுகிறது. அதிலும் நாங்கள் வாழும் வாழ்க்கையை அல்லது எங்கள் நடவடிக்கைகளை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு எங்களுக்கு என்று ஒரு மார்க்கம் உள்ளது. நாங்கள் கொள்கை அடிப்படையில் அப்படி பிரிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் எங்கள் உடம்புக்குள் ஓடிக் கொண்டிருக்கும் இரத்தமும் நாங்கள் பிறப்பதும் இறப்பதும் வித்தியாசம் இல்லை. அரசியல் இலாபங்களுக்காக அல்லது எங்கள் சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாங்கள் மிகவும் புனிதமாக நேசிக்கும் சமயத்தை பலி கொடுக்கக் கூடாது.

எந்த சமூகத்திடமும் இறையச்சமோ அல்லது மார்க்கமோ இல்லை என்பதே விளங்குகின்றது.

**நீங்கள் சொல்லும் கருத்துகளில் நான் நிறைய நியாயத்தைக் காண்கின்றேன். இந்த அடிப்படையில் இன்று ஆட்சியில் இருப்பது உங்கள் அரசாங்கம் ஆதலால் அரசாங்க தரப்பில் இருந்து கொண்டு இவற்றை எவ்வாறு அணுகலாம்?**

நீங்கள் கேட்கும் கேள்வியிலேயே இதற்கு பதிலும் உள்ளது. இன்று இந்த நாட்டில் ஒரு பலமுள்ள அரசாங்கம் உள்ளது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்கின்றீர்கள். இந்த அடிப்படையில் முக்கியமாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த ஆட்சியை அமைப்பதற்கு உடந்தையாக இருக்க வில்லை என்ற கருத்து பரவலாக பேசப்பட்டாலும் ஆட்சிக்கு வந்ததன் பின்பு இந்த நாட்டில் சகல மக்களுக்கும் ஒரு நேர்மையான ஆட்சியை கொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசாங்கத்தின் நோக்கம். கொவிட் தொற்றால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை அடக்குவது சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தேசிய பட்டியலில் முஸ்லிம் உறுப்பினர்களுக்கு இடமளிக்கப்பட்டதுடன் நாட்டின் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டமை மட்டுமல்லாமல் அரசின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமை உட்பட பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது என்ற வகையில் எங்களோடு தூரமாக இருந்து அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கும் அரசாங்கம் மீது வீண் பழிபோடுபவர்களுக்கும் எங்களோடு ஒன்று சேர்ந்து இந்த நாட்டை கட்டி எழுப்ப வருமாறு அன்பாக அழைக்கிறேன்.

நேர்காணல்:
இக்பால் அலி ...





# வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும் கொழும்பு துறைமுக நகர்

## காய்நகர்த்தல்கள் யாருக்கு கை கொடுக்கும்?

பாராளுமன்றத் தேர்தல் நடந்து ஒரு வருடம் பூர்த்தியாகாத நிலையில்தான், அரசாங்கத்திற்குள் அதிருப்தி அலைகள் அடிக்கத் தொடங்குகின்றன. எல்லாம், ஜெனீவாத் தோல்விகளின் எதிரொலிகள்தான். அரசு மீது, தென்னிலங்கைக்குள்ள பிடிப்பைத் தகர்த்தெறிய இந்தத் தோல்விகளைப் பயன்படுத்தப் பார்க்கின்றன பங்காளிக் கட்சிகளும், பிரதான எதிர்க்கட்சியும். சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுவரும் தொடர் பின்னடைவுகள், சீனாவின் தலையீடுகளை அதிகரித்துள்ளதாகவே, தென்னிலங்கைக்கு காட்டப்பட்டு வருகிறது. இதில், அரசாங்கம் இரண்டு சங்கடங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஒன்று பங்காளிக் கட்சிகளின் அதிருப்தி. இரண்டாவது ஐக்கிய மக்கள் சக்தியின் வியூகங்கள். பங்காளிக் கட்சிகளில் பிரதானமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடுகளுடன், ஏனைய உதிரிக் கட்சிகள் உடன்படும் விடயங்களிருக்கிறதே, எப்படியோ இணங்கித்தானாக வேண்டும் என்ற கட்டாயத்தை அரசுக்கு இது ஏற்படுத்தியுள்ளது.

ஜெனீவாவில் மண்கவ்வ நேர்ந்த விடயத்துக்கு அவசரமாகச் செய்யும் சிகிச்சைதான் மாகாண சபைத் தேர்தல். எப்படியும் நடத்தியே தீர வேண்டிய கட்டாயத்தை, இந்தியாவின் நடுநிலைமையும், சர்வதேச நெருக்குதல்களும் ஏற்படுத்தியுள்ளது. இதற்காகத்தான் இந்த அவசரம். இந்நிலையில் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள யோசனைகள், பங்காளிகளுக்குப் பிடிக்கவில்லை. தொகுதிரீதியான தெரிவில், ஒரே கட்சியில் மூன்று வேட்பாளர்களை நிறுத்தும் விடயம், பங்கிடலில் பங்காளிகளுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது.

உதாரணத்திற்கு கொழும்பு மேற்கு தொகுதியை எடுத்துக் கொண்டால், ஒரு கட்சிக்கா? மூன்று வேட்பாளர் அல்லது அரசின் கூட்டுக்கா? என்ற சிக்கல் எழுகிறது. அரசின் கூட்டுக்காக இருந்தால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுறு பெரமுன என்பன வேட்பாளர்களை நிறுத்தும். கூட்டுக்குள்ளே குத்துவெட்டை ஏற்படுத்தாதா இது? என்பதுதான் எழுந்துள்ள சிக்கல். ஒரு கட்சிக்காக இருந்தால் ஜனாதிபதி, பிரதமர் என ஆரம்பமாகும் அதிகாரத் தொடரில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாய்ப்புக்கிட்டும்தானே! இதுமாத்திரமல்ல, அளவுக்கு அதிகமாகவுள்ள வேட்பாளர்கள் அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு இந்த முறைதானே அவசியம். முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களின் அழுத்தமும், இத்தேர்தலை நடத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி விட்டதே. எல்லாமே விகிதாசாரத் தெரிவில் என்றால், எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கலாம், அப்படியில்லையே! இந்தமுறை. அதற்காகத்தான் ஒரே தொகுதியில் மூன்று வேட்பாளர்கள். எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிந்தனையே இப்புதிய முறையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இனி, எஞ்சியுள்ள முப்பது வீத, விகிதாசாரத்தில்தான் எதையாவது பெறவேண்டி வரும் இந்தப் பங்காளிகளுக்கு. இதற்காகவே சிறிய கட்சிகள் இதை எதிர்க்கின்றன.

தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களின் பிடிகள் இருக்கும் வரைக்கும், இத்தளத்தை நம்பியுள்ள சிறிய கட்சிகளுக்கு உண்மையில், இது பாதிப்பையே ஏற்படுத்தும். மட்டுமல்ல ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள சிறியவர்களுக்கும் இதுதான் நிலைமை. வடக்கு, கிழக்குக்கு வெளியில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம் பிரதிநித்துவம் மற்றும் அடையாளமாக வாழும் தமிழர்களின் தெரிவுகளையும் இப்புதிய முறை கேள்விக்குட்படுத்தப் போகின்றது. மறுபக்கத்தில் யாரைத் திருப்திப்படுத்த இந்த அவசரம். புலிகள் இல்லாத நிலையில், யாருக்குத் தேவை அதிகாரப் பகிர்வு என்கின்றனர் பௌத்த மதகுருமார். ஏற்கனவேயிருந்த அதிகாரத்தையே, வடமாகாண சபை முறையாகப் பயன்படுத்தவில்லை. இன அடையாளத்துக்கான அதிகாரப் பங்கீடுகள், புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளையே பலப்படுத்தும் என்பதுதான் பௌத்த மகாபீடங்களின் கருத்தாகவுமுள்ளது. இதற்காகத்தான் உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்தி, மக்களின் நேரடித் தொடர்புகளை மத்திய அரசாங்கம் பேண வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த சலசலப்புக்கள் போதாதென்பதற்காக, கொழும்பு துறைமுக நகரம் பற்றியும் அரசாங்கத்தின் முக்கிய எம்.பிக்கள் முணுமுணுக்கத் தொடங்கியுள்ளனர். சீனாவின் கொலனியாக இலங்கை மாறும் அபாயத்தையே இது ஏற்படுத்தும் என்கிறார் விஜயதாச ராஜபக்ஷ எம்.பி. இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதில், கணிசமான பங்காற்றிய அபயராம விகாராதிபதி முறுத்தட்டுவ தேரரும், துறைமுக நகரம் சிங்கள சமூகத்திற்குள் ஆழமான அச்சத்தை ஏற்படுத்தி உள்ளதால், தேர்தலுக்கு அவசரப்படுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்கிறார். இவ்வாறான அச்சத்தை ஐக்கிய மக்கள் சக்தியும் மற்றும் ஜே.வி.பியுமே ஏற்படுத்தி வருகின்றன. கொழும்பு துறைமுக நகருக்கான பொருளாதார ஆணைக்குழுவை நியமிப்பதற்கான அனுமதி கோரும் விடயம் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்படவுள்ளது. இது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டால், ஐந்து அல்லது ஏழுபேர் கொண்ட குழுவை ஜனாதிபதி நியமிப்பார். இந்தக் குழுவே, இந்நகரத்தின் கொடுக்கல், வாங்கல்களைக் கையாளும். இவை, சீனாவின் நாணயத்தில் தான் (யுவான்) இடம்பெறும்.

உள்நாட்டு வர்த்தகர்கள், இந்த கொழும்பு துறைமுக நகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. கொழும்பு மாநகர சபையோ அல்லது நாட்டின் எந்தவொரு உள்ளூராட்சி மன்றமோ இந்நகரின் செயற்பாடுகளுக்கு வரிவிதிப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. அதாவது, உள்நாட்டு வரிகளிலிருந்து இந்நகரம் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இவை, அனைத்தையும் ஜனாதிபதி நியமிக்கும் குழுவினரே செய்யவுள்ளனர். இந்தக் குழுவுக்கான அனுமதியை பாராளுமன்றம் தர மறுத்தால் நிறைவேற்று அதிகாரத்தால், ஜனாதிபதி நியமித்துக்கொள்வார். இதில் ஊடகங்களும், அதிலும் அரசுக்கெதிரான சில, ஒருபிடி மண்ணளவை எகிப்திய பிரமிட்டுக்களாகக் காட்டுவதிலேதான் குறியாகச் செயற்படுகின்றன.

இருக்கட்டும் இவை.திங்கட்கிழமை (19) நடைபெறவுள்ள அரச உயர்மட்டச் சந்திப்புக்களில் எல்லாம் தீர்ந்து விடலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு அமைச்சுக்கள், மாவட்டங்களை வெல்வதால் கிடைக்கும் இவ்விரண்டு போனஸ் ஆசனங்களில் ஒவ்வொன்று, விகிதாசாரத்தில் எஞ்சியதிலும் சில ஆசனங்கள் என்ற உடன்பாடுகள் வந்தால், முரண்பாடுகள் முடிந்துவிடாதா? பிறகென்ன பங்காளிகள்தான் அரசின் பிரதானிகள் என்ற நிலையும் வந்துவிடும்.

இருப்பினும், சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை, கொழும்பு துறைமுக நகரால் நாட்டுக்குள் நடக்கவுள்ள நகர்வுகளைத் தூக்கிப் பிடிக்கும் பொறிமுறைகள் மற்றும் பிரச்சாரங்கள்தான், மாகாண சபைத் தேர்தலில் எதிரணியினரின் இலக்குகளையாவது காப்பாற்றும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாவதற்குள், சீன அரசாங்கத்தின் மிகப்பிரதான அரசியல் புள்ளிகளின் மற்றொரு விஜயமாகவே, பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது.

சுஐப் எம்.காசிம்...

# எண்பதாவது அகவையில் கால் பதிக்கும் எழுத்தாளர் ஞானசேகரன்

ஈழத்தின் முன்னணி எழுத்தாளரும் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான தி. ஞானசேகரன் 15.04.2021 அன்று எண்பதாவது வயதில் கால் பதிக்கின்றார். பல்வேறு சாதனைகளைக் கொண்ட இவர் சிறுகதை, நாவல், பயணக் கட்டுரை, பத்தி எழுத்துக்கள் எனப் பலதுறைகளில் கால் பதித்துள்ளார். இத்துறைகளில் உயரிய விருதுகளையும் பெற்றுள்ளதுடன் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளார். இவரது படைப்புகள் விமர்சகர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரை ஒரு வாழ்நாள் சாதனையாளர் என குறிப்பிடுவதற்கு அவரது எழுத்துப் பணிகள் போதுமானவை. எனினும் ஈழத்து இலக்கிய சஞ்சிகையான ஞானம் மூலம் இவர் சாதித்தவை ஏராளம்.



ஞானம் சஞ்சிகையை தனது அறுபதாவது வயதில் ஆரம்பித்த இவர் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இடைவிடாது மாதா மாதம் இச் சஞ்சிகையை வெளியிட்டும் கணனி மூலமும், சர்வதேசம் எங்கும் வலம் வர வைத்துள்ளார். மலர்ந்து 400 இதழ்களுடன் மறைந்து போய் விட்ட மல்லிகையின் பின்னர் அதிக இதழ்களை வெளிக்கொணர்ந்து தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானம் எதிர்காலத்தில் அதிக இதழ்களைக் கொண்டுவந்த ஈழத்து இலக்கிய சஞ்சிகையாக மிளிரும் என்பது உறுதியானது.

ஞானம் புது எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது. இன்னும் பலரை வளர்த்து எடுத்துக்கொண்டிருக்கின்றது. ஈழத்தில் மாத்திரமின்றி புலம்பெயர் நாடுகளிலிருந்தும் தமிழ் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து வருகின்றது. ஞானத்திற்கு என்று ஒரு வாசகர் வட்டம் உலக நாடுகள் பலவற்றிலும் வியாபித்து உள்ளது. அந்நாடுகளில் தமிழ் உயிர் மூச்சுடன் வாழ ஞானமும் பங்காற்றுகின்றது என்றால் அது மிகையாகாது. ஞானத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற சிறுகதைப் போட்டிகளில் புலம்பெயர் எழுத்தாளர்களும் தொடர்ந்து பரிசில்கள் பெற்று வருகின்றார்கள்.

ஞானசேகரன் என்ற தனிமனிதனின் எழுத்துச் சாதனைகள் ஒருபுறம் இருக்க, ஞானத்தின் வெளியீட்டில் அவரது மனைவி ஞானம், மகன் பாலச்சந்திரன் என குடும்ப உறுப்பினர்களும் இணைந்து கைகோர்த்து பங்காற்றுகின்றமை சிறப்பம்சமாகும். இப் பணி ஞானசேகரனுக்குப் பின்னரும் ஞானம் தொடர்ந்து வெளிவரும் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சிறுகதைத் தொகுதிக்கான சாகித்திய விருது, நாவல்களுக்கான சாகித்தியவிருது, அவரது நாவலான எரிமலைக்கு சர்வதேச விருது எனப் பல விருதுகளைத் தன்னகத்தே பெற்றுள்ளதுடன் இந்த எண்பதாவது வயதிலும் ஓய்வின்றி எழுதிக்கொண்டிருக்கிறார் என்பதையும் குறிப்பிடத் தான் வேண்டும்.

ஈழத்திரு நாட்டை உலுப்பிய வடக்கு கிழக்கு மக்களின் போராட்டம், அதற்கு எதிரான அடக்கு முறை யுத்தம் என்பன ஆரம்பித்தமைக்கான காரணங்களை மையமாகக் கொண்டு இவர் எழுதிய எரிமலை பலராலும் பாராட்டப்பட்டது.

தற்போதும் இடைவிடாது எழுதிவரும் ஞானசேகரன் தொடர்ந்தும் எழுதுவதற்கு இறைவன் உடல் ஆரோக்கியத்தை வழங்கவேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டு அகவை எண்பதில் கால் பதிக்கும் அவரை வாசகர்கள், இலக்கிய உலக நண்பர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.

ச. முருகானந்தன்...


# பிரதம இதழாசிரியராக இருந்து பணிப்பாளரான சிவநாயகம்

**இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத்துறையின் முன்னோடி எனக் கல்விச் சமூகத்தால் போற்றப்படும் இதழியல் மேதை எஸ். டி. சிவநாயகம் அமரத்துவம் அடைந்து தற்போது 21 ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன. அன்னாரின் சிரார்த்த தினம் 22.04.2021ல் இடம்பெறுகின்றது.**

பத்திரிகைத்துறையில் ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி புகழ்பெற்ற சிவநாயகம், 1948ஆம் ஆண்டில் தினகரன் தேசிய நாளிதழில் இணைந்து, தனது பத்திரிகைப் பணியை தேசிய ரீதியில் ஆரம்பிக்கும் வாய்ப்பைப் பெற்றார். பின்னர் சுதந்திரன் வார இதழிலும், அதனைத் தொடர்ந்து வீரகேசரி தேசியப் பத்திரிகையிலும் இதழாசிரியராகப் பணியாற்றியிருந்தார்.

பிற்காலத்தில் தினபதி எனும் நாளிதழையும் சிந்தாமணி எனும் வார இதழையும் புதிதாக உருவாக்கி அவற்றின் பிரதம இதழாசிரியராக இறுதி வரை, அதாவது அந்தப் பத்திரிகை ஸ்தாபனம் மூடப்பட்ட காலம் வரை (1966 – 1990) பணியாற்றினார்.

தினபதி மற்றும் சிந்தாமணிப் பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தியமைக்காக, அவற்றின் பிரதம இதழாசிரியராக விளங்கிய சிவநாயகத்தை, அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து பெருமைப்படுத்தியது. இலங்கை தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில் இக்கௌரவம் வரலாறு படைத்த ஓர் அம்சம் எனலாம்.



ஆசிரியர் சிவநாயகம் தனது சிந்தாமணி| பத்திரிகையில், "அண்ணாவுடன் ஐந்து சந்திப்புகள்" எனும் மகுடத்துடன், தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சராகத் திகழ்ந்த பேரறிஞர் சி.என். அண்ணாத்துரையுடனான தனது சந்திப்புகளை தொடர் கட்டுரையாக எழுதியிருந்தார். தமிழ்நாட்டின் மூதறிஞராக விளங்கிய கி.ஆ.பெ. விஸ்வநாதன் இந்தத் தொடர் கட்டுரைகளை வாசித்துவிட்டு, ஆசிரியர் சிவநாயகத்தை பகிரங்கமாகவே பாராட்டியிருந்தார்.

அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் உயிருடன் இருந்தபோதே, அன்னார் பற்றிய வரலாற்று நூல் ஒன்றையும் "தலைவர் தொண்டமான்" எனும் தலைப்புடன் ஆசிரியர் சிவநாயகம் எழுதியிருந்தார். இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கியபோதே, தமிழக மூதறிஞர் விஸ்வநாதன் ஆசிரியர் சிவநாயகத்தைப் பாராட்டியிருந்தார்.

பத்திரிகைத் துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்த எஸ்.டி. சிவநாயகம், சாயி பாபா ஆன்மீக நிலையத்தின் ஊடாக சமய, சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர் ஆவார். கொழும்பு சத்ய சாயி பாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்ட போது, அதன் ஸ்தாபகத் தலைவராக சிவநாயகம் ஏகமனதாகத் தெரிவானார். தொடர்ந்து 25 ஆண்டுகளாக அதே சாயி ஸ்தாபனத்தின் தலைவராக சிவநாயகம் பணியாற்றினார்.

1979 ஆம் ஆண்டில் அப்போதைய நீதி அமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்ட கல்குடா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய கே. டப்ளியூ. தேவநாயகத்தின் உதவியுடன் பாராளுமன்ற சட்ட திட்டங்களுக்கு அமைவாக, சத்ய சாயி பாபா (இலங்கை) நம்பிக்கையகம்| எனும் சாயி அறக்கட்டளை நிறுவனத்தையும் சிவநாயகம் உருவாக்கினார். இதுவே, இலங்கையில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட 'சாயி அறக்கட்டளையகம்| என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவா இராஜஜோதி...

# தரம்-5 மாணவர்களுக்கான நூல் தமிழ் சங்கத்தில் இன்று வெளியீடு

கொழும்பு_4 இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ஏ.சந்திரபவன்( BA, Dip in teach, PGDE, M.Ed ) எழுதிய 'சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்_ தரம் 5' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை(18.04.2021) பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ரி.முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறுகின்ற இவ்வைபவத்தில், இந்துக் கல்லூரி அதிபர் கடம்பேஸ்வரன் மணிமார்பன் முதன்மை அதிதியாகவும், கொழும்பு வலயக் கல்விப் பணிமனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பிரபா, இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் ரி.பி.பரமேஸ்வரன், கொ/சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் அருந்ததி இராஜ விஜயன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்கின்றனர்.

முதல் பிரதியை உதவி அதிபர் எஸ். கே. சோதிலிங்கம் பெற்றுக் கொள்கின்றார்.

கௌரவ அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர் சாந்தி விஸ்வநாதன், விரிவுரையாளர் சி.சிவசங்கர் ஆகியோர் பங்கேற்கின்றனர். நூலாசிரியரான இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ஏ.சந்திரபவன், எமது தினகரன் பத்திரிகையில் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகின்ற 'புலமைக் கதிர்' கல்விப் பகுதியை தயாரித்து வழங்குபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கைக்குண்டுகள்...

இப்பகுதியிலுள்ள வெற்றுக் காணியொன்றில் மழை காரணமாக மண் அரித்துச் செல்லப்பட்ட இடத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள் காணப்பட்டதையடுத்து ஈரப்பெரியகுளம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிசார் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். இரு கைக்குண்டுகளும் இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்ற மில்ஸ் 36 வகையைச் சேர்ந்த கைக்குண்டுகள் எனவும், அவை செயலிழந்து காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இரு கைக்குண்டுகளையும் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இப் பகுதியில் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாமென்ற சந்தேகத்தில் நீதிமன்ற உத்தரவைப் பெற்று அப்பகுதியில் நிலத்தை அகழ்ந்து தேடுதல் மேற்கொள்ளவும் பொலிசாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இரு மாதங்களில் இரட்டிப்பாக ...

பரவல் உச்ச கட்டத்தை நெருங்குவதை இது வெளிப்படுத்துவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம் வெளியிட்டுள்ளது. பிரேசில், இந்தியா, போலந்து, துருக்கி உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் கொரோனா பரவல் நிலை தீவிரமடைந்துள்ளது. இதேநேரம், அனைத்துப் பிராந்தியங்களிலும் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# கொழும்பு தமிழ்ச் சங்க முன்னாள் செயலாளர் உதயகுமார் மறைவு



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், தற்போதைய கல்விக்குழு செயலாளருமான ஆசிரியர் க. க. உதயகுமார் நேற்று காலமானார். கொழும்பு பம்பலப்பிட்டி சென். பீட்டர்ஸ் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியரான இவர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் எனும் பதவிகளை வகித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நீண்ட கால உறுப்பினரான இவர் சமய, சமூக, ஆன்மீக பணிகளில் தன்னை அர்ப்பணித்து செயல்பட்டவர் ஆவார். அவரது இறுதிக் கிரிகைகள் இன்றைய தினம் நடைபெறும்.

## அரசியலில் பிரவேசிக்கும்...

வேட்பாளராக களமிறக்குவதற்கு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் உள்ளிட்ட சிலரினால் கலந்துரையாடல் நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையிலேயே வேலன் சுவாமிகள், அரசியலுக்கு வரமாட்டேன் என்ற அறிவிப்பை விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் எவரும் அரசியலில் பிரவேசிக்கமாட்டார்கள். நாங்கள் அனைவரும், சமூகங்கள் மற்றும் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஒழுங்குப்படுத்தும் விடயத்திலேயே எங்களது பணியை தொடருவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவம் மீது யாழ். இளைஞர்களுக்கு...

நம்பிக்கையையும் உயர்ந்த மரியாதையையும் கடுமையாக உறுதிப்படுத்துகிறதென இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட்19 பரவல் தொடர்பான கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு இணங்க, யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வருகை தந்த இராணுவத் தளபதி, கொவிட்19 தடுப்புப் பணிகளை மதிப்பீடுசெய்தார்.

அதன் பின்னர் அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து பேசிய அவர்,

தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், பல்வேறு அதிருப்தி மற்றும் பிளவுபடுத்தும் பேச்சுக்கள் முன்வைக்கப்படுகிற போதிலும் உண்மையான சகவாழ்வுக்கான அவர்களின் தேவை மற்றும் நல்லிணக்கம் அடையாளப்படுத்துகிறது. உண்மையில் இது எங்கள் அமைப்பின் பிம்பத்தைப் பொறுத்தவரை ஒரு நேர்மறையான திருப்புமுனையாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேபோல், விமானப்படை உட்பட 7,000 க்கும் மேற்பட்டவர்கள் யாழ். தீப கற்பத்தில் கொவிட்19 கட்டுப்பாட்டுப் பணிகளில் இரவு பகலாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதனையும் பொறுட்படுத்தாமல் வைரஸ் பரவுவதைத் தடுத்து ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களை கவனித்துக்கொண்ட உங்களுக்கு முழு மனதுடன் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.





# ரமழானின் சிறப்பு

அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம் தான் ரமழான் ஆகும். இம்மாதத்தின் இறுதிப்பகுதியிலுள்ள ஒற்றைப்படையான ஓர் இரவில் தான் இக்குர்ஆன் முதன் வானத்திலிருக்கும் பைத்துல் இஸ்ஸாவுக்கு இறக்கப்பட்டது. உலகம் இருக்கும் வரையும் பிறக்கின்ற ஒவ்வொருவரதும் ஈருலக வாழ்வுக்கு நேர்வழிகாட்டுகின்ற இக் குர்ஆன் அருளப்பட்ட இம்மாதத்தின் அந்த இரவை ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாக அல்லாஹ் சிறப்பித்து வைத்துள்ளான். இம்மாத்தில் மனிதன் புரியும் ஒவ்வொரு நற்காரியத்துக்கும் ஒன்றுக்கு பத்து முதல் 700 மடங்குகள் வரை நன்மைகள் அளிக்கப்படுகின்றன. 'நோன்பு நோற்று நன்மையை எதிர்பார்த்து நின்று வணங்குபவர்களின் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்' என்றும் 'குர்ஆன் அருளப்பட்ட இரவில் நின்று வணங்குபவர்களின் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். குர்ஆனும் நோன்பும் மனிதனுக்காக மறுமையில் சிபாரிசு செய்யக்கூடிய அந்தஸ்தையும் பெற்றுள்ளன.

அதேநேரம், 'மனிதனின் அனைத்து செயற்பாடுகளும் அவனுக்குரியன. நோன்பைத் தவிர. அது எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்' என்று அல்லாஹ்வே கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் குறிப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு எண்ணிறைந்த சிறப்புக்களை தன்னகத்தே கொண்டிருக்கும் ரமழானின் முதல் பிறையில் இப்றாஹீம் (அலை) அவர்களுக்குரிய இறை வேதமும், பிறை 06 இல் மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதமும், பிறை 13 இல் ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜீல் வேதமும், பிறை 24 இல் தாவூத் (அலை) அவர்களுக்கு சபூர் வேதமும் இறக்கியருளப்பட்டன. அல் குர்ஆன் ரமழானின் இறுதிப்பத்திலுள்ள ஓரிரவில் முதல் வானத்திற்கு இறக்கப்பட்டதோடு நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்று இஃதிகாப்பில் ஈடுபட்டிருந்த சமயமே அருளப்படவும் ஆரம்பமானது.

ஆகவே அல்லாஹ் மகத்துவப்படுத்தியுள்ள ரமழானின் சிறப்புக்களை அடைந்திடுவதில் உச்ச கவனம் எடுத்துக்கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

## யாழில் கல்வி நடவடிக்கைகள் ...

அவர் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்துக்குப் பின்னர் வெள்ளிக்கிழமை மாலை வரையான நிலைவரப்படி 1,116 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 12 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன் இன்னும் 600 பேரளவில் வைத்தியசாலைகளில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்றுவருவதாகவும் அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று அச்சநிலை காரணமாக 1,784 குடும்பங்களைச் சேர்ந்த 5,042 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்று பரவல் சற்றுக் குறைந்துவருவதையடுத்து கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் குறிப்பிட்டுள்ள அரசாங்க அதிபர், யாழ். மாவட்டத்தை இயல்பான நிலையில் வைத்திருக்க மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து சுகாதார தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சொத்துக்கள் அனைத்தையும் ...

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அந்த அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து தகவல் பெறப்படுவதாகவும் கூறினார். பறிமுதல் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களின் சொத்து மற்றும் வங்கி கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் சட்ட மாஅதிபருக்கு அனுப்பப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த வாரம் அல்கொய்தா, ஐ.எஸ் உள்ளிட்ட 11 இஸ்லாமிய அடிப்படைவாத, தீவிரவாத அமைப்புகளுக்கு தடைவிதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## TNA யின் ஒத்துழைப்புக்கு...

அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடும் திணைக்களங்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு நன்றாவே கிடைக்கின்றது என்பதை குறிப்பிட முடியும்.

உண்மையில் வடக்கில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர். மக்களுக்கான செயற்திட்டங்களில் அவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். கிழக்கில் அவ்வாறான நிலை காணப்படவில்லயென்றும் அவர்தெரிவித்தார்.

வடமாகாண அளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் எமது தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட நேர்காணலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.கொழும்பிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ உபசெயலகத்தில் அவரைச் சந்தித்து உரையாடியபோது...

அவர் தெரிவித்த கருத்துக்கள் முழுமையான நேர்காணலாக 02 ஆம் பக்கம் பார்க்கலாம்..

## துறைமுக நகரின் முழு நிலமும்...

இந்தத் திட்டத்தை எவ்வாறேனும் தடுத்து நிறுத்துவதற்கான செயற்பாட்டையே எதிர்தரப்பினர் செய்து வருகின்றனர்.

கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு பின்னர் முழு உலக பொருளாதாரமும் பாரிய நெருக்கடியையும் வீழ்ச்சியையும் சந்தித்துள்ளது. உலகில் ஸ்திரமான பொருளாதாரங்களும் வீழ்ச்சிக்கண்டுள்ளன. நாம் ஒரு சிறிய நாடாகும். இந்த உலக பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். எமது சுற்றுலாத்துறை முழுமையாக வீழச்சிக்கண்டுள்ளது. நாட்டுக்கு அமெரிக்க டொலர்கள் அவசியமான தருணத்தில் தான் சுற்றுலாத்துறை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளன. உலக சந்தையில் கனிய எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

எமது நாட்டை கட்டியெழுப்புவதற்கு உள்ள ஒரே வழி வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்குள் கொண்டு வருவதாகும். கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் ஊடாக முதலீட்டாளர்களை அழைத்துவர வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்று அவசியமாகும். அதனையே உருவாக்கியுள்ளோம். இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் நடைமுறையை நாட்டின் சாதாரண சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டே மேற்கொள்கிறோம். அவசர அவசரமான சட்டங்களை கொண்டுவந்து நிறைவேற்றவில்லை. சட்டவாக்கத்துறை, நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத் துறையை நாம் எந்தவொரு இடத்திலும் மீறிச் செயற்படவில்லை. முத்துறைகளுக்கும் உட்பட்டுதான் இந்தப் பணி இடம்பெறுகிறது.

எதிர்தரப்பினர் கூறும் கூற்றுக்குள் நூற்றுக்கு இருநூறு சதவீதம் பொய்யானவையாகும். துறைமுக நகரத்தின் நிலப்பரப்பு இலங்கைக்குச் சொந்தமில்லையென கூறுகின்றனர். நிலப்பரப்பை இலங்கையுடன் இணைக்கும் வர்த்தமானி பத்திரத்தில் 2019ஆண்டு ஓகஸ்ட் 2ஆம் திகதி முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தனதான் கையெழுத்திட்டுள்ளார். அதன் பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிலப்பரப்பை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரித்துள்ளார். ஆகவே, எதிர்தரப்பின் கூற்று முற்றிலும் பொய்யானதாகும்.

துறைமுக நகரத்துக்கான சட்டமூலத்தை அவசர சட்டமாக கொண்டுவர முற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். அவரது கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இச்சட்டமூலத்திற்கு எதிராக இதுவரை 21 மனுக்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. போதுமான கால இடைவெளியில் தான் இந்தச் செயற்பாடு இடம்பெறுகிறது. மறைப்பதற்கு எதுவும் இல்லை. இச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதென சட்ட மாஅதிபர் எமக்கு அறிவித்துள்ளார். அதனை விஜேதாஸ ராஜபக்ஷவும் பார்த்திருப்பார். சட்ட மாஅதிபரின் அறிவிப்பை அடுத்துதான் அடுத்தகட்ட செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம்.

நாட்டுக்கு பாதகமான எந்தவொரு செயற்பாட்டையும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் செய்யாதென்ற சான்றிதழை நாம் தருகிறோம் என்றார்.

## ரூ. 128 கோடி மதிப்புள்ள...

கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு, வத்தளைப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி 113 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 101 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, ஜாஎல பகுதியில் 15 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 06 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குவதாக போலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மொத்தம் 07 சந்தேக நபர்களிடமும் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து, ஐஸ் போதைப் பொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலையொன்றை கைப்பற்றுவதற்கான இயலுமை பொலிஸாருக்கு கிடைத்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பின்னர் கடந்த 12ஆம் திகதி சப்புகஸ்கந்த பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் ஊடாக 110 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் 05 சந்தேக நபர்களை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர். அதைத்தொடர்ந்து மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வசமிருந்து 2.433 கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 128 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

துபாயில் தலைமறைவாகியுள்ள நிபுண என்ற நபரினாலேயே, இந்த போதைப்பொருள் விநியோகம் நடைபெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி போலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன், இந்த போதைப்பொருளை நாட்டுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ரூபன் மற்றும் லால் என்ற இருவரே செயல்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சந்தேக நபர்களும், இருவேறு நாடுகளில் தலைமறைவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த சந்தேக நபர்கள் அனைவரும், இலங்கை போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களெனவும் அவர் கூறினார்.

போதைப்பொருள் வெளிநாடுகளில் இருந்தே, இலங்கைக்கு கடத்தப்பட்டு வந்துள்ளது. இந்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய, வெளிநாடுகளில் வாழும் நபர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான சிவப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி போலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## வெளிநாட்டு முதலீட்டாளர்களை...

கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியை மீண்டும் வலுப்படுத்துவோமென நாம் கூறியிருந்தோம். அதன் பிரகாரம் மீண்டும் ரூபாயின் பெறுமதி அதிகரித்து வருவதை காணலாம். ஆனால், ரூபாயின் பெறுமதியை மீண்டும் வலுவாக்க முடியாதென எதிர்கட்சியிலிருந்து பொருளாதார நிபுணர்கள் கூறி குறுகியகால நன்மையை அடைந்திருந்தனர்.

அதேபோன்றுதான் தற்போது கொழும்பு துறைமுக நகரத்திட்டம் தொடர்பிலும் கூறுகின்றனர். கடன்களுக்கு பதிலாக நாட்டுக்கு புதிய வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவரும் ஒரு வேலைத்திட்டமே துறைமுக நகரத்தின் ஊடாக செய்ய முற்படுகிறோம். முதலீட்டாளர்களுக்கு முதலீடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே துறைமுக நகர ஆணைக்குழுக் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரச் சட்டம் எந்த விதத்திலும் நாட்டுக்கு பாதகமானதல்ல. புதிதாக 83,000 ஆயிரம் தொழில்கள் இங்கு உருவாகும். இவ்வாறு 83,000 ஆயிரம் தொழில் வாய்ப்புகள் எமக்கு கிடைக்கப்பெற்றால் டொலர்கள் வெளியில் செல்லாது நாட்டுக்குள்ளேயே இருக்கும். டுபாய், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு இலகுவாக வெளிநாட்டு முதலீடுகள் வரவில்லை. முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட்டதன் பின்னரே அந்த விடயம் சாத்தியமானது. போட்டிமிக்க சந்தை சூழலில் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமெனில் அதற்கான பின்புலத்தை நாட்டில் உருவாக்க வேண்டும். அதனையே செய்து வருகிறோம்.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு முதலீடாக வருமென நாம் எதிர்பார்க்கிறோம். தற்போதைய சூழலில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள்தான் எமக்கு முதலீடாக வருகிறது. 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு முதலீடுகள் வருமானால் நாட்டில் பாரிய அபிவிருத்திகள் ஏற்படும். புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். தேசிய வருமானம் அதிகரிக்கும் என்றார்.

## முன்னணி நகைச்சுவை நடிகர்...

விவேக் தனது 59 ஆவது வயதில் நேற்று அதிகாலை காலமானார். சென்னையில் வசித்து வந்த நடிகர் விவேக், மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் (ஏப்.16) காலை 11 மணியளவில் சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மருத்துவமனையில் எக்மோ சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில்,நேற்று அதிகாலை 4.35 மணியளவில் அவர் உயிரிழந்ததாக மருத்துவமனை தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவரின் உடல் விருகம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு நண்பர்கள், திரைத்துறை பிரபலங்கள், நடிகர்கள், நடிகைகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், மறைந்த நடிகர் விவேக்கின் உடல் நேற்று மாலை பொலிஸ் மரியாதையுடன் விருகம்பாக்கம் மின் தகன மேடையில் தகனம் செய்யப்பட்டது.

நடிகர் விவேக் உடலை பொலிஸ் மரியாதையுடன் தகனம் செய்ய தமிழக அரசு நேற்று முடிவு செய்தது. தமிழக சட்டசபை தேர்தல் விதிகள் நடைமுறையில் உள்ளதால் நடிகர் விவேக் உடலை பொலிஸ் மரியாதையுடன் தகனம் செய்ய தேர்தல் ஆணைக்குழுவிடம் தமிழக அரசு அனுமதி கோரியிருந்தது.

இதனை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு நடிகர் விவேக்கிற்கு தமிழக அரசு சார்பில் பொலிஸ் மரியாதை அளிக்க அனுமதி அளித்தது.

நடிகர் விவேக்கின் கலை மற்றும் சமூகச் சேவையை கௌரவிக்கும் விதமாக அவரது இறுதிச் சடங்கின் போது பொலிஸ் மரியாதை அளிக்கப்படுவதாகவும்தமிழக அரசு நேற்று அறிவித்திருந்தது.

தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக வலம் வந்த விவேக் (59), தமது காமெடி மூலமாக மக்களுக்கு தேவையான நல்ல கருத்துக்களை கொண்டு சேர்த்துள்ளார்.

தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத நடிகர்களில் ஒருவராக வலம் வந்தவர் விவேக். இவர் தமது நகைச்சுவை மூலமாக மக்களுக்கு தேவையான நல்ல கருத்துக்களை கொண்டு சேர்த்துள்ளார். தொடர்ந்தும் படங்களில் நடித்து வந்தார்.

நடிகர் விவேக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, நடிகர் விவேக்கிற்கு நேற்று முன்தினம் (16) திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதேவேளை, நடிகர் விவேக்கிற்கு பலவிதமான சிகிச்சை அளித்தும் இதயம் பலவீனமாக இருந்ததால் எங்களது முயற்சிகளுக்குப் பலன் இல்லை என சிம்ஸ் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

தமிழ் திரையுலகின் முன்னணி நகைச்சுவை நடிகரான விவேக் சென்னை சாலிகிராமம் பத்மாவதி நகரில் உள்ள வீட்டில் நேற்று காலை குடும்பத்தினருடன் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது அவருக்கு திடீரென்று நெஞ்சுவலியும், மூச்சுத்திணறலும் ஏற்பட்டது. மயக்க நிலைக்கு சென்றார்.

உடனடியாக அவரை வடபழனியில் உள்ள சிம்ஸ் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். விவேக்கை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். இதய செயல்பாடு குறைந்ததால், இதயத்தை முழுமையாக செயல்பட வைக்க எக்மோ கருவி பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், சிம்ஸ் மருத்துவமனையின் துணைத் தலைவர் மருத்துவர் ராஜு சிவசாமி தனியார் நிறுவன தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியதாவது:

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் நினைவிழந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். கொண்டு வரும்போது அவருக்கு நாடித்துடிப்பே இல்லை. உடனடியாக அவருக்கு அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. ஆஞ்சியோகிராம் மேற்கொள்ளப்பட்டது. இதயத்திற்குச் செல்லும் இடதுபுற இரத்தக்குழாயில் 100% அடைப்பு இருந்தது. அதைக் கண்டுபிடித்து சிகிச்சை செய்தோம்.

எக்மோ செய்த பிறகுதான் இதற்கான சிகிச்சையை மேற்கொள்ள முடிந்தது. பாதிப்பு தீவிரமாக இருந்ததால் உயிரிழக்க காரணம். இந்த உடல்நலப் பிரச்சினை ஒரே நாளில் வராது. இரத்தக் கொதிப்புக்கு அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்ததாக அவரது தரப்பில் கூறப்படுகிறது என்று அவர் கூறினார்.

தினகரன் THINAKARAN
மாணவர் கரங்களில்
'புலமைக் கதிர்'
தினகரன் இதழுடன் பிரதி வெள்ளி தோறும்
வெளிவருகின்றது 'புலமைக் கதிர்'...



தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்–கும் மாணவர்களுக்கான பயன் தரும் வினாத்தாள்கள் இலவச இணைப்பாக உங்கள் தினகரனுடன்...
கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியர்
எஸ்.ஏ. சந்திரபவன் தயாரித்து வழங்குகிறார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 318

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | | 14 |
| | 15 | | | 16 | 17 |
| 18 | | 19 | 20 | 21 | |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
பாடசாலை பெயர் ..............................
பாடசாலை முகவரி ..............................
..............................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இலங்கையின் மிக நீளமான நதி.
(07) கடிதம் என்பதை குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(10) துன்பம் என்பதன் ஒத்தபொருள். (தலைகீழான சொல்)
(16) சிற்பிகளின் கலைப்படைப்பு. (தலைகீழான சொல்)
(19) பணக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய நிதி நிறுவனம். (தலைகீழான சொல்)
(22) பறவைகளில் இவை பார்த்து ரசிக்கத்தக்க இனம். இவற்றின் குரல் ஒலியும், வாழ்க்கைக் கோலமும் ரசிக்கத்தக்கவை.
(25) ஆண் மானை குறிக்கும் மரபுச் சொல்.

**மேலிருந்து கீழ்**

(2) காவல் காப்போனை மட்டுமன்றி, மன்னனையும் குறிக்கும் சொல்.
(4) பூவின் இதழ். (தலைகீழான சொல்)
(5) காட்டுக்கு அரசன் என்று கூறப்படும் மிருகம். அதன் ஒத்தபொருள் சொற்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)
(16) உள்ளத்தில் தோன்றும் துயரச் சுமை. (தலைகீழான சொல்)
(18) அறிவுக்கண் திறக்கும் ஆசான். (தலைகீழான சொல்)
(19) நியூசிலாந்து நாட்டுக்கு உரித்தான சின்னஞ் சிறு பறவை இனம்.

**போட்டி இல. 318**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 317

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. படகு 04. நான் 07. தோகை 10. காலி
12. பாட்டு 15. களை 18. விளக்கு 22. மகன்

**மேலிருந்து கீழ்**

01. பல்லி 03. குகை 05. பாகன் 08. தோடு
11. காளை 16. கவின் 17. மலை 21. குலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 316

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
***ராஜேந்திரன் அக் ஷயா,***
*தரம் 09, மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரி, உடுபிட்டிய, உக்குவளை.*

**இரண்டாம் பரிசு**
***மு.இ. அஹமத் அரீஜ்,***
*தரம் 09, மட்/மம/வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலை, வாழைச்சேனை.*

**மூன்றாம் பரிசு**
***எம்.பி. ஷமீம் அஹ்மத்,***
*தரம் 07 பி, புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.*

### பாராட்டு பெறுவோர்


***1. எஸ். சவிலக்ஷனா,***
*தரம் 09 ஏ, பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை.*

***2.பி. ருஷானி,***
*தரம் 08, விஸ்ணு மகா வித்தியாலயம், பெரியநீலாவனை, கல்முனை.*

***3. வி. ஜதுஷன்,***
*தரம் 08, விபுலானந்த ம.ம. வித்தியாலயம், காரைதீவு.*

***4. எம்.ஏ. அப்துல் அழீம்,***
*தரம் 07, மாறை/ அல் மினா ம.வி., மீயல்லை.*

***5. லுக்மான் மின்ஹாஜ்,***
*தரம் 06 பி, மா/ஸாஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை.*



குறளமுதம் :

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்ஆடார் சோர விடல்.

***தெளிவுரை :*** *முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் சொல்லாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.*

# குடை

### சுயசரிதை



நான் இப்பொழுது ஒரு பழைய பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கிறேன். சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் புதிய குடை என்னைப் பார்க்கும்போது என் கடந்த காலம் நினைவுக்கு வருகிறது.

நான், இவ்வையகத்துக்கு வருமுன் ஒரு விஞ்ஞானியின் சிந்தனைக்குள்ளே வசித்து வந்தேன். அவர் பல காலமாக ஆராய்ச்சி செய்த பின்னர் என்னைக் கண்டுபிடித்தார். என் எஜமான் பெயர் சாமுவேல் பொக்ஸ். அவர் 1852ல் என்னை உருவாக்கினார்.

எனக்கு முதல் பல குடைகள் சில நாடுகளில் தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்தது மட்டுமல்ல, 1830இல் இங்கிலாந்தின் லண்டன் நகதில் ஆரம்பிக்கப்பட்ட 'ஜேம்ஸ் ஸ்மித் அன்ட் ஸன்ஸ் குடைக்கடை இன்றும் உள்ளது.



எனது எஜமான் நவீன முறையில் இரும்புக் கம்பிகள் மூலம் தயாரிக்கப்பட்ட குடையைக் கொண்டு செல்வதற்கும் ஏற்றாற் போல் பல வண்ண நிறங்களிலான குடையை தயாரித்தார். என்னை விலைக்கு வாங்க பலர் முன்வந்தனர். அப்போதெல்லாம் என் மனம் வேதனைப்பட்டது.

என்னைக் கேட்டு தொந்தரவு செய்வதை உணர்ந்த எஜமான், எனக்கு துணையாக சில உறவுகளை தயாரிக்கத் தொடங்கினர். அதனை சந்தைக்கு அறிமுகப்படுத்தினார். என் உறவுகளை எல்லோரும் விரும்பி வாங்கிச் சென்றனர்.

நான் மனிதர்களின் பயன்பாட்டிற்கு பல வழிகளிலும் பயன்படுகிறேன். வெயிலின்போது நிழலாகவும் மழை பொழியும்போது நனையாமல் இருப்பதற்கு பயன்படுகிறேன். என்னைப் போன்ற உறவுகள் சினிமாகாரர்களுக்கும், விளையாட்டு போட்டியின்போதும் சுற்றுலா பயணிகளுக்கும் உதவுகின்றன. அது மாத்திரமல்லாது தற்காப்பு உபகரணமாகவும் சந்தர்ப்பத்துக்கு பயன்படுத்துகின்றனர்.

என் எஜமானின் மகன் எங்கே சென்றாலும் என்னையும் அழைத்துக்கொண்டுதான் போவார். தனது தந்தையின் கண்டுபிடிப்பு என்பதை நண்பர்களுக்கு காண்பிப்பது மட்டுமல்லாது வெயில், மழை மட்டுமன்றி தற்காப்பு நடவடிக்கைக்காகவும் கொண்டு செல்வார்.

ஒருநாள் எஜமானின் மகன் மோட்டார் சைக்கிளில் என்னையும் சில வீட்டுப் பொருட்களையும் கொண்டுவரும்போது ஏதோ அவரை அறியாமல் கைதவறி விட்டுவிட்டார். நான் அவரின் மோட்டார் சைக்கிள் உள்ளே சக்கரத்துக்குள் சிக்குண்டு உடைந்து போனேன். குடையை விரித்து பார்த்த எஜமானியின் மகன் கண்கலங்கினார்.

இதையறிந்த எஜமான் 'என்ன காரியம் செய்தாய். முதன் முலில் கண்டுபிடித்து என் புகழை காட்டிய செல்வம் அல்லவா என கவலைப்பட்டார். என்ன செய்வது அதை எடுத்து பழைய பெட்டிக்குள் போட்டுவிடு என்றார்.

நன்றாக இருக்கும்போதுதான் மதிப்பும் மரியாதையும். கொஞ்சம் சறுக்கி விட்டால் எதுவுமே இல்லை என்பதை புரிந்து கொண்டேன்.

**ஏ.எம்.ஏ. றசூல்,**
தி/கிண்/அஸ்ஸம்ஸ் வித்தியாலயம்,
முள்ளிப்பொத்தானை.

# இவ்வார மழலை



**பிரனீஸ்,**
பாலகுமார் - யோகமலர் ,
கொழும்பு 15.

## தூக்கணாங் குருவிக் கூடு..!



தூக்கணாங் குருவியாரே
தூக்கணாங் குருவியாரே
அம்சமான கூடு கட்டும்
அழகான குருவியாரே
எந்தக் கலை கூடத்திலே
இப்படி யோர் கூடுகட்ட
கற்று நீரும் தெரிந்தீரோ
கற்ற இடம் சொல்வீரோ
குளத்துக் கரை யினிலே
கிளை பரப்பும் மரங்களது
கொப்பு நுனியினிலே
கூடு கட்டும் குருவியாரே
அற்புதமோ அற்புதமாய்
அமைந்த அந்தக் கூடுகளை
எப்படி நீர் அமைக்கின்றீர்
எவர்க்கு அந்த திறமை வரும்
ஆறறிவு மனிதர்களும்
அறியாத திறமை களை
ஐந்தறிவு ஜீவன் களும்
ஆற்று வதோ அதிசயந்தான்..!

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை

## மாட்டு வண்டி

வண்டி மாட்டு வண்டி
வீதியில் செல்லும் வண்டி
கண்டி மாடு ரெண்டு
சொகுசாய் இழுக்கும் வண்டி!

மேடு பள்ளம் எதிலும்
மெல்லச் செல்லும் வண்டி
பாடு பட்டு உழைக்கும்
பயிற்சி பெற்ற வண்டி

புகையைக் கக்கிச் சூழலை
மாசு படுத்தாத வண்டி
பகைமை போட்டி இன்றி,
பாதையில் செல்லும் வண்டி

தட்டு முட்டு பொருட்களை (த்)
தூக்கிச் செல்லும் வண்டி
சுட்டித் தனம் இன்றி
சுற்றி வரும் வண்டி..!

**சாரணா கையூம்**

## மகாத்மாவின் நகைச்சுவை

ஒரு சமயம் இங்கிலாந்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் காந்தியை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் காந்தியடிகளை கிண்டல் செய்யும் எண்ணத்துடன் "உங்கள் மக்கள் உங்களை ஏன் தங்கள் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டனர்? வேறு தலைவர்களே அவர்களுக்குக் கிடைக்கவில்லையா" என்று கேட்டார். காந்தியடிகள் சிரித்துக்கொண்டே "உங்களை சமாளிக்க நானே போதுமென்று நினைத்திருக்கலாம்" என்றார்.

**நூர்ஹலீனா ஹமீட்,**
மருதானை, கொழும்பு 10.





மாத்தளை, கம்மடுவ தமிழ் மகாவித்தியாலயத்தில் தவணை முடிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டி பிரதி அதிபர் ராஜ்மோகன் தலைமையில் நடைபெற்றது. வெற்றிபெற்ற அணிக்கு பணப் பரிசு மற்றும் கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டபோது....

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..............................
பிறந்த திகதி ..............................
வகுப்பு ..............................
பாடசாலை ..............................
..............................

..............................
வகுப்பாசிரியர் கையொப்பம்

வர்ணப் புகைப்படம்

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

## சிறுவர் சித்திரங்கள்



***எஸ். ரியா,***
*தரம் 06, ஓஸிஸ் சர்வதேச பாடசாலை, கொழும்பு 12.*



***எஸ். ஷேஹா,***
*தரம் 03, ஓஸிஸ் சர்வதேச பாடசாலை, கொழும்பு 12.*



***பி. மகேஷ் லக்ஸான்,***
*தரம் 04, ஸ்ரீசண்முகா தமிழ் வித்தியாலயம், கும்புக்கன, மொனராகலை.*



***பி. சதுர்ஷன்,***
*ஸ்ரீசண்முகா தமிழ் மகா வித்தியாலயம், கும்புக்கன, மொனராகலை.*

பொருளாதார அரசியல்

# உலகளாவிய சரக்கு கப்பல் போக்குவரத்து: சில பொருளாதார அவதானிப்புகள்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

அண்மையில் எகிப்தில் உள்ள சுயஸ் கால்வாயின் இரு கரைகளையும் அடைத்துக் கொண்டு எவர்கிவன் (Evergiven) என்ற கப்பல் ஒரு வாரகாலமாக நின்றதால் சுயஸ் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்துப் போனது. தற்போது அக்கப்பல் அங்கிருந்து அகற்றப்பட்டாலும் பயணிக்க அனுமதிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் தடையினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்யும் வரை எகிப்திய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட நிலையில் கப்பல் இருக்கும். மிகப்பெரிய அக்கப்பலில் உள்ள சரக்குகள் காலாவதியாவது ஒரு புறமிருக்க போக்குவரத்துத் தடை காரணமாக உலக வர்த்தகத்திற்கு ஏற்பட்ட பாதிப்பும் மிகப்பெரியதாகும்.

உலக வர்த்தகப் போக்குவரத்தின் குறிப்பிடத்தக்களவு கொள்ளளவு இக்கால்வாய் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. மாற்று வழிப் போக்குவரத்து பாதையாக ஆபிரிக்காவைச் ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றிச் செல்வதன் மூலமே சாத்தியப்படும். இன்றைய உலகின் மொத்த சரக்குப் போக்குவரத்தில் 80 சதவீதம் கடல்வழியாக மிகப்பெரிய கொள்கலன் கப்பல்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. பெருமளவு சரக்குகளை ஒரே தடவையில் கப்பல் மூலம் கொண்டு செல்ல முடிவதனால் போக்குவரத்துச் செலவு கணிசமானளவு குறைவடைகிறது. அத்துடன் மரபுரீதியான சரக்குக் கையாள்கையுடன் ஒப்பிடுகையில் கொள்கலன் கையாள்கை இலகுவானதாகவும் நேர விரயத்தைக் குறைப்பதாகவும் தானியங்கித் தொழில் நுட்பங்களுக்கு ஏற்புடையதாகவும் அமைவதால் மலிவானதாகவும் உள்ளது.

உதாரணமாக, மேற்கு ஐரோப்பாவின் துறைமுகங்களிலிருந்து சீனா போன்ற தூரகிழக்கு நாடுகளுக்கு ஒரு கொள்கலனைக் கொண்டு செல்வதற்கான செலவு 2009இல் 1395 டொலர்களிலிருந்து 2014இல் 1161 டொலர்களாக குறைவடைந்திருந்தது. எரிபொருள் விலையதிகரிப்பின் மத்தியிலும் கடல்வழிப் போக்குவரத்துச் செலவுகள் குறைவடைந்துள்ளமைக்கு விரிவடைந்து சென்ற கொள்கலன் பயன்பாடும் கப்பல்களின் அளவுகள் அதிகரித்தமையும் துறைமுகங்களின் வினைத்திறன் அதிகரித்தமையும் காரணமாகக் கூறப்படலாம்.

சர்வதேச போக்குவரத்துச் செலவுகள் வர்த்தகத்திற்கான செலவுகளிலும் பொருளாதார அபிவிருத்திக்கான செலவுகளிலும் மிக முக்கிய பகுதியாகும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின் மீது நாடுகள் விதித்துள்ள தீர்வைகள் வடிவிலான தடைகள் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் இரு பக்க வர்த்தகத்தின் மீதான மொத்தச் செலவுகளில் சுமார் 10 சதவீதம் மாத்திரமே எனக் கண்டறியப்பட்டுள்ளது. நாடுகளின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏனைய செலவுகளே வர்த்தகத்தின் மீது கடுமையான அழுத்தங்களைக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய செலவுகள் 60 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையில் இருக்கலாமென அவ்வாய்வறிக்கை கூறுகிறது.

நாடுகளின் போக்குவரத்துச் செலவுகள், அந்நாடுகள் கொண்டுள்ள கடல்வழித் தொடர்புகள், வர்த்தகத்தின் மீது நாடுகள் விதிக்கும் நிர்வாக நடைமுறைகள் என்பன அரசாங்கங்கள் விதிக்கும் தீர்வைத் தடைகளை விட கூர்மையான பாதிப்பை வர்த்தகத்தின் மீது ஏற்படுத்துகின்றன. சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரு சாதாரண நாட்டைப்பொறுத்த மட்டில் 2005 தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் கடற் போக்குவரத்து உள்ளிட்ட சர்வதேச போக்குவரத்துச் செலவுகள் அந்நாட்டின் மொத்த இறக்குமதிகளில் சுமார் 9 சதவீதமாக இருந்தது. ஆனால் நிலத்தால் சூழப்பட்ட பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் இது 11.4 சதவீதமாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வெறும் 6.8 சதவீதமாகவும் காணப்பட்டது. நீர்வழிப்போக்குவரத்து அல்லது கடற்போக்குவரத்திற்கு சாதகமான நாடுகளில் போக்குவரத்துச் செலவுகள் குறைவாக உள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

கடல்வழிப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் அதன் செலவுகளைத் தீர்மானிக்கும் ஏழு காரணிகளை அடையாளப்படுத்தலாம். முதலாவது வர்த்தகம் மற்றும் போக்குவரத்து வசதிப்படுத்தலாகும் (trade and transport facilitation). அதாவது வர்த்தகம் செய்வதற்கும் போக்குவரத்திற்கும் உரிய வசதிகள் ஒரு நாட்டின் அரசாங்கக் கொள்கைகள் ஊடாக எந்தளவுக்கு இலகுபடுத்தப்பட்டுள்ளன என்பதாகும். நாடுகளின் எல்லைகளைக் கடக்கும்போது எதிர்கொள்ளும் சவால்கள் என்பன இதில் உள்ளடக்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் ஊடாக நாடுகளின் எல்லைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் சுங்க நிர்வாக நடைமுறைகளை இலகுபடுத்தல் என்பவற்றை இதில் உள்ளடக்கலாம்.

இரண்டாவதாக, செயற்படுத்தல் செலவுகள். இதில் கடற் கலன்களை பழுதுபார்த்தல், பராமரித்தல் செலவுகள், பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் செலவுகள், ஆளணி உபகரணங்களைப் பெறும் செலவுகள், எரிபொருள் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் செலவுகள் என்பனவும் உள்ளடங்கும்.

மூன்றாவது, உலக கப்பல் போக்குவரத்துப் பாதை வலையமைப்பில் குறித்த நாட்டின் அமைவிடம். உதாரணமாக, சுயஸ்கால்வாய்க்கு அருகில் உள்ளமையால் எகிப்து அடையும் நன்மைகள் மொரிசியஸ் மற்றும் மொரக்கோ போன்ற நாடுகள் கடல்வழிப் போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ளபடியால் அவையும் செலவு நன்மைகளை பெறுகின்றன.

இலங்கையும் கூட கிழக்கு, மேற்கு கடல்வழிப்பாதையில் ஒரு முக்கிய இடத்தில் அமைந்துள்ளது. இதன்மூலம் செலவு குறைந்த சர்வதேச வர்த்தகப் போக்குவரத்தின் ஒரு முக்கிய மையமாக இலங்கை மாறமுடியும். அது மட்டுமன்றி ட்ரான்சி ப்மன்ட் (transhipment) எனப்படும் ஏற்றியிறக்கல் மையமாகவும் இலங்கை சிறப்பாகத் தொழிற்பட அதன் அமைவிடம் உதவும். கிழக்காசியாவில் இருந்து மேற்கே ஈடன் துறைமுகம் வரை கடற்பாதைக்கு மிக அருகில் அமைந்துள்ள பல்துறைமுக வசதி கொண்ட நாடு இலங்கையாகும்.



ஆயினும் மதிநுட்பமும் தூரநோக்கும் கொண்ட தலைமைத்துவக் குறைபாட்டினாலும் பிழையான அல்லது கோடலுடைய கொள்கைத்திட்டமிடல் காரணமாகவும் அரசியல் கொள்கைக் குறைபாடுகளாலும் அரசியல் எழுத்தறிவு கொண்ட வாக்காளர்கள் நாட்டில் போதியளவு இல்லாத காரணத்தினாலும் தனது இயலுமையை வெளிப்படுத்தக் கூடிய நிலையில் இல்லை.

நான்காவதாக, நாடுகளின் சந்தைகள் சார்பளவில் சிறியதாக இருப்பதும் செலவுகளை அதிகரிக்கும். சிறிய சந்தைகளில் போட்டி குறைவாக இருக்கும். தனியுரிமை அல்லது சிலருரிமைச் சக்திகள் வலுவுள்ளதாக இருக்கும். குறைந்த போட்டித்தன்மை விலைகளை அதிகரிக்கும் அது செலவுகளை மேலும் அதிகரிக்கும். எனவே சந்தைகளை விரிவாக்குவதன் மூலம் போட்டித்தன்மை அதிகரிப்பதன் ஊடாக செலவு நன்மைகளை அடையலாம்.

ஐந்தாவதாக, கப்பலேற்றப்படும் பொருளின் தன்மையும் போக்குவரத்துச் செலவைத் தீர்மானிக்கும். மூலப் பொருள்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கக் கைத்தொழில் பொருள்களின் பெறுமதி சேர்க்கையின் அடிப்படையில் அவற்றின் போக்குவரத்துச் செலவுகள் குறைந்த சதவீதத்திலேயே இருக்கும். எனவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சார்பளவில் அதிகளவு கைத்தொழிற்பொருட்களை இறக்குமதி செய்வதால் அவற்றின் போக்குவரத்துச் செலவுகள் சார்பளவில் குறைவான சதவீதத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆறாவதாக, துறைமுகங்களின் தன்மையும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளும், போக்குவரத்துச் செலவுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள துறைமுகங்களில் பல உட்கட்டுமானக் குறைபாடுகளைக் கொண்டுள்ளன. அத்தகைய ஆழமற்ற துறைமுகங்களில் பாரிய கப்பல்களை நங்கூரமிடுவது சாத்தியமில்லை. அத்துடன் கொள்கலன்களை ஏற்றியிறக்குவதற்கு எடுக்கும் காலமும் மேற்படி உட்கட்டுமானக் குறைபாடுகளால் உயர்வாக உள்ளது. இலங்கையின் கொழும்புத் துறைமுகத்திலும் கூட ஒரு முனையத்தில் மாத்திரமே பாரிய கப்பல்களை நிறுத்தும் வசதிகள் காணப்படுகின்றன.

இறுதியாக ஒரு நாட்டின் வர்த்தகப் பாய்ச்சலின் தன்மையும் போக்குவரத்துச் செலவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும். ஒருநாடு ஏற்றுமதிகளை விடக் கூடுதலாக இறக்குமதி செய்யுமாயின் இறக்குமதிகளை ஏற்றிவரும் கப்பல்கள் மீளத்திரும்பும்போது அவற்றின் கொள்ளளவை விடக் குறைவாக சரக்குகளையே ஏற்றிச் செல்ல நேரும்.

இது போக்குவரத்துச் செலவில் பாதிப்பை ஏற்படுத்தும். இலங்கை போன்ற ஒரு குன்றிமணியளவு நாட்டின் வர்த்தகத்தில் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. எனினும் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகத்தில் பாரியளவு வர்த்தகப் பற்றாக்குறை நிலவுவதால் அமெரிக்காவுக்கு சரக்குகளை ஏற்றிவரும் கப்பல்கள் மீளத் திரும்பும் போது அவற்றின் இயலளவை விடக் குறைவாகவே சரக்குகளை ஏற்ற நேர்வதால் அவற்றின் போக்குவரத்துச் செலவு சார்பளவில் உயர்வாக இருக்கும்.

இவ்வாறு சர்வதேச ரீதியில் கப்பற் போக்குவரத்துச் செலவுகள் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்படும் அதேவேளை பெற்றோலிய விலை மாற்றங்கள் போக்குவரத்துச் செலவில் துரிதமாக மாற்றங்களைக் கொண்டுவரலாம். சிறிய கப்பல்களுக்குப் பதிலாக பாரிய கொள்கலன் கப்பல்களைப் பயன்படுத்துவதன் மூலம் போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்க கடும் முயற்சி எடுக்கப்பட்டு ஓரளவு வெற்றியும் கிட்டியது. ஆனால் நாம் மேலே குறிப்பிட்ட காரணிகளால் அத்தகைய பாரிய கப்பல்களைப் பயன்படுத்துவது எல்லா இடங்களிலும் சாத்தியமில்லை.

எனவே, துறைமுகங்களின் உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதன் மூலமும் நாடுகளுக்கு அடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலமும் சர்வதேச வர்த்தகத்தின் மீதான செலவுகளை குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது நல்ல விடயமே.

# ஜோ பைடன் ஏன் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்தார்?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் ஆட்சிக்கு வந்த பின்னர் அமெரிக்க ரஷ்ய முறுகல் உலக அரசியலில் தீவிரமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க வெளிவுறவுக் கொள்கையிலும் பாதுகாப்புக் கொள்கையிலும் பாரிய மாற்றங்களை மேற்கொண்டுவரும் பைடன் நிர்வாகம், ரஷ்யாவுடனான உறவில் தொடர்ச்சியாக சவாலை ஏற்படுத்தி வருகின்றது. பதவிக்கு வந்த ஆரம்பத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினோடு சுமூகத்தன்மையை பேணிக்கொண்டார். எனினும் நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையீடு செய்ய முயன்றதாகவும், ரஷ்ய எதிர்கட்சி தலைவர் நவால்னியை விசம் வைத்து கொல்ல முயற்சித்தத்ததாகவும் அமெரிக்கா குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்தது. இதனால் புடினை ஒரு கொலைகாரர் என்று ஜோ பைடன் விமர்சனம் செய்திருந்தார். இதனால் ஏற்பட்ட நெருக்கடியில் ரஷ்யா தனது தூதுவர்களை அமெரிக்காவில் இருந்து வெளியேற பணித்தமை இரு நாட்டுக்குமான இராஜதந்திர உறவை முறித்துக்கொகொள்ளும் நிலை ஏற்பட்டது. இத்தகைய போக்கு மேலும் அதிகரிக்கும் விதத்தில் ரஷ்யாவின் 30க்கும் மேற்பட்ட நிறுனங்கள் மீது பொருளாதார தடையை விதித்ததோடு அமெரிக்காவில் இருந்து சுமார் 10க்கும் மேற்பட்ட ரஷ்ய இராஜதந்திரிகளை வெளியேற்றும் உத்தரவையும் 15.4.2021 இல் ஜோ பைடன் பிரகடனப்படுத்தியுள்ளார். இக்கட்டுரை இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் எற்பட்டுள்ள விரிசலையும் அதற்கு பின்னால் உள்ள அரசியலையும் ஆராய்வதாக அமையவுள்ளது.

ஜோ பைடனின் நிர்வாகம் ரஷ்யா மீது இரு பாரிய குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றது. முதலாவது, அமெரிக்கா மீது சூரிய காற்றின் மூலம் (solar wind) சைபர் தாக்குதலை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது என்பதாகும். இது அமெரிக்காவின் உளவுத் தகவல்களையும், பொருளாதார கட்டமைப்புக்களையும் தகர்க்கும் விடயமாக உள்ளதாம். இதனை ரஷ்ய உளவுத்துறை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் உண்டு என்றும் குறிப்பிடுகின்றது அமெரிக்கா. இரண்டு, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய தலையீடு அத்தகைய சைபர் தாக்குதல் மூலம் செய்துள்ளது என்பதாகும்.



இத்தகைய நடவடிக்கைக்கு எதிராகவே அமெரிக்கா ரஷ்யா மீதான பொருளாதார தடையை முன்வைத்துள்ளதென்றும், இவ்வாறான செயன்முறை இராஜதந்திர ரீதியாக முன்னோக்கி செல்ல உதவும் என்றும், வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கை ரஷ்யா மீது மூலோபாய மற்றும் பொருளாதார ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என பைடன் நிர்வாகம் கருதுகின்றது. அவ்வாறு கருதுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்றே சர்வதேச மட்டத்திலான ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஏனெனில், ரஷ்யா பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இத்தடையானது ரஷ்யாவின் கடன்படும் நிலையை மேலும் மோசமாக்க வாய்ப்புள்ளது என அத்தகைய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஏற்கனவே 180 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்படும் நிலையில் உள்ள ரஷ்யா, அதிலிருந்து விடுபடுவதற்கு பதிலாக இப் பொருளாதாரத் தடையால் பாரிய நெருக்கடியை எதிர்க்கொள்ளும் என்றும் பைடனின் நிர்வாகம் எதிர்பார்க்கிறது. ஆனால் இத்தகைய பொருளாதார தடைக்கு பின்னால் வேறும் பல காரணங்கள் உண்டு என்று கணிப்பிட முடியும்.

பொருளாதார தடையினால் கடந்த காலங்களில் அமெரிக்கா 40க்கும் மேற்பட்ட சுற்றுத்தடைகளை அறிவித்த போதும் ரஷ்யாவை கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ முடியவில்லை என்ற உண்மையையும் குறிப்பிடுதல் அவசியம். முதலில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்கான அரசியல் காரணிகளை விளங்கிக்கொள்ள வேண்டும்.

தற்போது ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் தீவிரமான இராணுவ அணிவகுப்புகளும், குவிப்புகளும் எல்லைப் புறங்களில் நிகழ்ந்து வருகின்றது . உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது இராணுவத்தையும், போர்க்கப்பல்களையும் நகர்த்தி வருகின்ற சூழல் ஒன்றையும் அவதானிக்க முடிகின்றது. அது மட்டுமன்றி உக்ரைனின் எல்லையோர பிரதேசமான கிரிமியாவை கைப்பற்றிய ரஷ்யா மீளவும் அப்பகுதியை நோக்கி தனது படைகளை குவித்து வருகின்றது. இது இரு நாட்டுக்குமான யுத்தமாக மாறலாம் என்றே அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன. இதனால் இதை கையாள்வது அமெரிக்காவின் மிகப்பிராதன நோக்கமாக விளங்குகின்றது.

இரண்டாவது, ஆப்கானிஸ்தானில் நிலைக்கொண்டுள்ள அமெரிக்க துருப்புகளை நோக்கி அண்மைக்காலமாக தலிபான்களில் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. இத்தகைய தாக்குதலில் பங்கெடுக்கும் தலிபான் போராளிகளுக்கு ரஷ்யா பொருளாதார மற்றும் இராணுவ தளபாட உதவிகளை வழங்கி வருவதாக அமெரிக்காவின் சர்வதேச புலனாய்வு பிரிவு அமெரிக்க நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது. அதற்கான முழுமையான ஆதாரங்கள் திரட்டப்படாவிட்டலும் ரஷ்யா அதிலொரு பங்காளர் என்பதை புலனாய்வு தகவல்கள் தெளிவுப்படுத்துகின்றன. பைடனின் நிர்வாகம் செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் அமெரிக்க துருப்புகளை முழுமையாக ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றுதல் என்ற முடிவினை கடந்த 15ம் திகதி அறிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது. இவ்வாறு பல அமெரிக்க ஜனாதிபதிகள் கடந்த காலத்தில் அறிவித்த போதும் ஆப்கான்ஸ்தானில் இருந்து அமெரிக்க துருப்புகள் முழுமையாக வெளியேறவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. இத்தகைய நடவடிக்கை அமெரிக்காவிற்கு ஒரு பாரிய பின்னடையவாக அமையும் என்று சர்வதேச ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் அரசியல் புவியலாகவும், புவிசார் அரசியலாகவும் ஆப்கானிஸ்தான் ஒரு புறம் ரஷ்யாவாலும், மறுபுறம் ஈரானாலும் சூழப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பை தொடர்ந்து குண்டுவெடிப்புகள், தற்கொலை தாக்குதல்கள், ஏவுகணை தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அதிகரித்துள்ளன.

மூன்றாவது தென்னாசிய பிராந்தியத்துக்குள் வலுவான இராணுவக் கட்டமைப்பை கொண்ட மியன்மரோடு ரஷ்யா இராணுவ உடன்படிக்கையினை கடந்த வார நடுப்பகுதியில் அத்தகைய உடன்படிக்கையின் பிரகாரம் ஆயுத தளபாடங்கள் வழங்கப்படுவதோடு, ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் இலகுரக ரொக்கட் தாக்குதலுக்குரிய ஆயுதங்கள் போன்றவற்றுடன் ஆயுதப் பயிற்சியுடன் தொழிநுட்ப ஆயுதங்கள் இயக்குவதற்கான பயிற்சியைவழுங்கவும் ரஷ்யா முன்வந்திருப்பதாக உடன்படிக்கை உறுதிப்படுதுகின்றது. எனவே இத்தகைய நகர்வு மியன்மார் இராணுவத்தையும் இராணுவ ஆட்சி முறையையும் அங்கீகரிப்பதோடு தென்னாசிய பிராந்தியத்தில் சீன ரஷ்யா மியன்மார் என்ற அடிப்படையிலான நெருக்கம் அமெரிக்க நகர்வை தகர்ப்பதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தோ பசுபிக் உபாயத்தைத் தகர்க்கும் வகையில் ரஷ்யா அமைத்திருக்கிறது சீன, ரஷ்ய, மியன்மார், ஆப்கானிஸ்தான், வட கொரிய கூட்டணி

நான்காவது, அமெரிக்க நட்பு அணியான ஸ்கொட் நாடுகள் என்றழைக்கப்படும் அவுஸ்திரேலியா, இந்தியா, யப்பான் என்பவற்றின் இந்தோ பசுபிக் உபாயம், ரஷ்யாவினது நகர்வுகளினால் சவால் மிக்க சூழலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மியன்மார் உடனான சீனரஷ்ய உறவு, ஆப்கான் தலிபானுடனான ரஷ்ய உறவு அத்தகைய நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துவதாக உள்ளது. இதனுடன் மேலதிகமாக ஈரான், ரஷ்ய, சீன நட்புறவு பலமான அணியாக விளங்குவது இதன் இருப்பை மேலும் பாதிப்பதாகவும் இத்தகைய உறவு நிலையிலேயே இலங்கையும் உட்பட்டுள்ளது என்பதையும் இந்தோ பசுபிக் உபாயத்தின் நகர்வுகளை பாரியளவு பாதிக்கும் ஒன்றாக மாறியுள்ளது.

ஐந்தாவது, ரஷ்யாவினது புலனாய்வு துறையும் நிர்வாகத்துறையும் அமெரிக்காவின் உலகளாவிய வியூகங்களை தடுக்கும் விதத்தில் உள்நாட்டிலும் அமெரிக்காவிற்கு வெளியேயும் அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளினால் அமெரிக்க நிர்வாகம் நேட்டோவுடனான உறவையும், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவையும் , பிரித்தானியாவினுடைய உறவையும் பலப்படுத்தினாலும், ரஷ்யாவின் ஐரோப்பா நோக்கிய நகர்வுகளையும், ஆசியா நோக்கிய நகர்வுளையும் அமெரிக்காவினால் எதிர்க்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. அத்தகைய இருப்பை மீளமைக்கும் முயற்சிகளை ஜோ பைடன் மேற்கொண்டதோடு ஆப்கானிஸ்தான், ஈரான் , மியன்மார் என்பன சிரியாவிற்கு ஒப்பான ஓர் அரசியல் களத்தை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் நேட்டோ விஸ்தரிப்பையும் ஆசியா மீதான ஆதிக்கத்தையும் மீள உறுதிப்படுத்தும் விதத்தில் ரஷ்யா மீதான பொருளாதார தடையை அமெரிக்கா பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆனால், சமகால உலக அரசியல் போக்கை அவதானிக்கின்றபோது சிரியாவில் இருந்து கொள்கை ரீதியாக வெளியேற்றப்பட்ட அமெரிக்க தற்போது ஆப்கானிஸ்தானில் இருந்தும் வெளியேறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே மேற்காசியா முழுமையாக அமெரிக்காவின் கட்டுபாட்டில் இருந்து விலகுவது மட்டுமன்றி இந்தோ – பசுபிக் உபாயத்திற்கு பாரிய நெருக்கடியையும் ஏற்படுத்தும் விதத்தில் ரஷ்சியா சீனா வடகொரியா ஈரான் வரிசையில் தற்போது மியன்மரும், இணைந்துள்ளது. இது இந்தோபசுபிக் அரசியலில் மட்டுமல்ல அமெரிக்க நலன்களில் வலுவான ஒரு பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே இவற்றை தடுப்பதும் வெற்றிக்கொள்வதும் அமெரிக்க அணிக்கு பாரிய சவாலான ஒன்றாக விளங்கப்போகின்றது.

# துக்கத்தை மடைமாற்றும் விவேக் இனி இல்லை

என் தற்கொலைப்பாதையில்
நடந்துகொண்டிருக்கும்போது
ஒரு நவநாகரிக இளைஞனாக
அவன் பேசும் ஆங்கிலம் நினைவுக்கு வந்ததும்
புன்னகையுடன் திரும்பிவந்துவிட்டேன்
வாழ்க்கையின் சிக்கலான
புதிர்வட்டப்பாதையில்
நான் சுழன்றுகொண்டிருந்த நாளில்
அவன் ஒரு ட்ராஃபிக் போலீஸ்காரனுக்கு
எட்டுப் போட்டுக் காட்டும் காட்சியில்
என மனம் இலகுவாகிவிட்டது
அழவைப்பதற்கு
ஆயிரம் பேர் இருக்கிறார்கள்
சிரிக்க வைப்பதற்கு
யாரோ சிலர்தான் இருக்கிறார்கள்
பார்த்துச் சிரிப்பதற்கான
அபத்தங்களுக்கு பஞ்சமேயில்லை
சிரிக்கக் கற்றுதருபவர்களில்
ஒருவன் இல்லாமல் போகிறான்
நமக்கு நிறைய
சிரிப்பு தேவைப்படும் காலத்தில்
ஒரு சிரிக்கவைப்பவன் இறக்கக்கூடாது
இவ்வளவு இருள் நிரம்பிய காலத்தில்
ஒரு விளக்கு அணைந்திருக்கக்கூடாது
என் கனவுகளில் வர ஸ்ரீதேவி இல்லை
என் காதில் ஒலிக்க எஸ்.பி.பி இல்லை
என் துக்கத்தை மடைமாற்ற விவேக் இல்லை
இப்படியே போனால்
இனி நான்
தனியாகத்தான்
சாகவேண்டும் போலிருக்கிறது

**மனுஷ்ய புத்திரன்**

கருத்துள்ள நகைச்சுவை நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தவர் சின்னக் கலைவாணர் பத்மஸ்ரீ விவேக். 1961 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி கோவில்பட்டி அருகே உள்ள பெருங்கோட்டூரைச் சேர்ந்த சிவ. அங்கய்யா பாண்டியன், மணியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விவேக். இவருடைய முழுப் பெயர் விவேகானந்தன். இவரது தந்தை ராமநாதபுரம் மாவட்ட மண்டபத்தில் ஆசிரியராக பணியாற்றியவர்.

மதுரையில் உள்ள அமெரிக்கன் கல்லூரியில் பி.காம் பட்டம் பெற்ற இவர், அதே துறையில், எம்.காம் முதுகலைப் பட்டமும் பெற்றார். சிறிது காலம், தொலைபேசி ஒபரேட்டராக மதுரையில் வேலைப் பார்த்தார். பிறகு, சென்னைக்கு வந்து, டி.என்.பி.எஸ்.சி குருப் நான்கு தேர்வில் வெற்றிப் பெற்று, சென்னைத் தலைமை செயலகத்தில் ஜூனியர் உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

ஆரம்பத்தில் நாடகங்களில் நடித்து வந்த இவர், இயக்குநர் சிகரம் கே.பாலசந்தரின் அறிமுகம் கிடைக்க, அவருடைய இயக்கத்தில் உருவான 'மனதில் உறுதிவேண்டும்' படத்தின் மூலம், நடிகராக அறிமுகமானார். அந்தப் படத்தில் சுஹாசினியின் சகோதரராக சிறிய வேடத்தில் நடித்த இவர் மீண்டும் கே.பாலசந்தர் இயக்கிய 'புது புது அர்த்தங்கள்' படத்தில் நடித்து பிரபலமானார். அந்தப் படத்தில், இவர் பேசிய 'இன்னைக்கு செத்தா நாளைக்கு பால்' என்ற வசனம் இவரைப் பிரபலப்படுத்தியது.

அதன் பிறகு 'ஒரு வீடு இரு வாசல்', 'புது மாப்பிள்ளை', 'கேளடி கண்மணி', 'இதய வாசல்', 'புத்தம் புது பயணம்' எனப் பல படங்களில் நடிக்கத் தொடங்கினார். இதுவரை 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். 90களில் திரைத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்கு முன்பு 'மேல் மாடி காலி' என்கிற சின்னத்திரை தொடரிலும் நடித்தார்.

தொடர்ந்து தமிழில் எண்ணற்ற படங்களில் நடித்தார். 'காதல் மன்னன்', 'நினைவிருக்கும் வரை', 'வாலி', 'ஆசையில் ஓர் கடிதம்', 'திருநெல்வேலி', 'முகவரி' உள்ளிட்ட பல படங்களில் விவேக்கின் நகைச்சுவை, இன்றளவும் பிரபலமாக இருக்கிறது. இன்று தமிழின் முதன்மை நட்சத்திரங்களாக அறியப்படும் விஜய் மற்றும் அஜித்தின் ஆரம்பகாலப் படங்களில் விவேக்கின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

ஒரு கட்டத்தில் விவேக் இல்லாத படங்களே இல்லை எனும் அளவுக்கு முக்கிய நாயகர்களின் அத்தனை படங்களிலும் விவேக் இடம் பெற்றார். 'அள்ளித் தந்த வானம்', 'ஷாஜகான்', 'யூத்', 'ரன்', 'பெண்ணின் மனதை தொட்டு', 'சாமி' என பல படங்களில் விவேக்குக்கென தனியாக ஒரு நகைச்சுவைப் பகுதியே ஒதுக்கப்பட்டது. அது படங்களின் வெற்றிக்கும் முக்கியக் காரணமாக அமைந்தது.

தனது நகைச்சுவையில் பெரும்பாலும் சமூக சீர்திருத்தக் கருத்துகளை உட்படுத்தி, ரசிகர்களைச் சிரிக்க வைத்ததோடு, சிந்திக்கவும் வைப்பதே விவேக்கின் நோக்கமாக இருந்தது. இதனால் 'சின்னக் கலைவாணர்' என்றும், 'மக்களின் கலைஞன்' என்றும் அடைமொழியைப் பெற்றார்.

லஞ்சம், மக்கள் தொகை பெருக்கம், அரசியல் ஊழல்கள், மூட நம்பிக்கை, சுய ஒழுக்கம் இல்லாமை உள்ளிட்ட பல விஷயங்களின் விமர்சனத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இவருடைய நகைச்சுவை காட்சிகள் இடம் பெற்றன. அவை மக்கள் மனங்களில் தாக்கத்தையும் ஏற்படுத்தின.

தமிழில் அனைத்து முன்னணி கதாநாயகர்களின் படங்களிலும் நடித்துள்ள இவரை, 'பஞ்ச்' படத்தின் மூலம் கதாநாயகனாக நடிக்க வைக்க முயற்சி செய்தார் கவிஞர் கண்ணதாசனின் மகன் அண்ணாத்துரை. அதன் பிறகு 'சொல்லி அடிப்பேன்' படத்தில் கதாநாயகனாக நடித்தார். அந்தப் படம் இன்னும் வெளியாகவில்லை.

அதன் பின் பல வருடங்கள் நாயகனாக நடிக்காத இவர் கடந்த சில வருடங்களில் முதன்மை கதாபாத்திரத்தை ஏற்று 'நான்தான் பாலா', 'பாலக்காட்டு மாதவன்', 'வெள்ளைப் பூக்கள்' போன்ற படங்களில் நடித்தார். இவருக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. இதில் 'வெள்ளைப் பூக்கள்' முழுக்க முழுக்க அமெரிக்க வாழ் இளைஞர்களால், அமெரிக்காவில் எடுக்கப்பட்ட திரைப்படம். இதில் ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரியாக விவேக்கின் நடிப்பு பேசப்பட்டது.

ரஜினிகாந்த், விஜய், அஜித், தனுஷ், சிலம்பரசன், சூர்யா, விஷால், ஜெயம் ரவி, கார்த்தி, கவுதம் கார்த்திக், ஹரிஷ் கல்யாண் என சென்ற தலைமுறையிலிருந்து இந்தத் தலைமுறை நடிகர்களின் படங்கள் வரை நடித்து முத்திரை பதித்தவர் விவேக். கடந்த வருடம் வெளியான 'தாராளப் பிரபு' திரைப்படத்தில் நாயகனுக்கு அடுத்து பிரதானமான கதாபாத்திரத்தில் நடித்துப் பாராட்டைப் பெற்றிருந்தார் விவேக்.

ஒரு நாடகக் கலைஞனாகத் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி, சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேல் சிறந்த நகைச்சுவை கலைஞனாக தன்னுடைய ஆளுமையைக் கோலோச்சி வந்த விவேக், சொந்த வாழ்க்கையிலும் சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே. அப்துல் கலாமின் மிகப்பெரிய அபிமானியான விவேக், கலாம் பெயரில் 'க்ரீன் கலாம்' என்கிற மரம் நடும் முன்னெடுப்பை, கலாமின் வழிகாட்டுதலின் கீழ் தொடங்கினார். இதுவரை பல லட்சக்கணக்கான மரக்கன்றுகளையும் நட்டுள்ளார். ப்ளாஸ்டிக் ஒழிப்புக்கு எதிரான தமிழக அரசின் பிரசாரத்துக்குத் தூதராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் விவேக். இவை தவிர மக்களுக்கு விழிப்பு உணர்வு தரும் அரசின் பல விளம்பரங்களில் விவேக் இடம்பெற்றுள்ளார். சில நாட்களுக்கு முன்பு வரை கூட கொரோனா தடுப்பூசியை அனைவரும் போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஊடகங்களில் பேசி தனது சமூக வலைதளப் பக்கத்திலும் விவேக் பகிர்ந்திருந்தார்.

அவரது சமூக ஊடகப் பகிர்வுகள் பெரும்பாலும் சக நடிகர்களைப் பாராட்டியோ அல்லது எதாவது விழிப்புணர்வோ செய்தியாகவோ, விவேகானந்தர், அப்துல்கலாம் உள்ளிட்டவர்களின் கூற்றுகளாகவோ தான் இருக்கும். திரைத்துறையில் இருக்கும் கலைஞர்களைப் பாராட்ட விவேக் என்றுமே தயங்கியதில்லை. இசையிலும் பெரிய ஆர்வம் கொண்ட விவேக் பலருக்குப் பாடல் பாடி, பியானோ வாசித்து அதன் மூலம் வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

திரைப்படத்துறையில் இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக, 2006ஆம் ஆண்டு தமிழக அரசின் கலைவாணர் விருதை வென்றார். 2009ஆம் ஆண்டு, நாட்டின் நான்காவது உயர்ந்த விருதுகளில் ஒன்றான 'பத்மஸ்ரீ' விருது, விவேக்குக்கு வழங்கி கௌரவித்தது இந்திய அரசாங்கம்.

'உன்னருகே நானிருந்தால்', 'ரன்', 'பார்த்திபன் கனவு', 'அந்நியன்', 'சிவாஜி' போன்ற திரைப் படங்களுக்காக தமிழ்நாடு அரசின் சிறந்த நகைச்சுவை நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. 2002ல் 'ரன்', 2003ல் 'சாமி', 2004ல் 'பேரழகன்' உள்ளிட்ட திரைப்படங்களுக்காகச் சிறந்த நகைச்சுவை நடிகருக்கான 'ஃபிலிம்ஃபேர் விருதும் பெற்றிருக்கிறார்.

இவரது மனைவி பெயர் அருள் செல்வி. இவருக்கு அம்ரிதாநந்தினி, தேஜஸ்வினி என்கிற இரு மகள்கள். பிரசன்ன குமார் என்கிற ஒரு மகன். பிரசன்ன குமார் 2015ஆம் ஆண்டு காலமானார்.

அனைத்து முன்னணி நடிகர்களுடனும் புதிய நடிகர்களுடனும் நடித்துவிட்ட விவேக்கிற்கு திரைத்துறைக்கு வந்த நாளிலிருந்தே கமலுடன் சேர்ந்து நடிக்கவேண்டும் எனும் ஆசை இருந்து வந்தது. ஷங்கர் இயக்கத்தில் கமலின் நடிப்பில் 'இந்தியன் 2' தொடங்கப்பட்டது. 'என்னுடைய நீண்டகாலக் கனவு உலகநாயகன் கமலுடன் நடிக்க வேண்டும் என்பது. அந்தக் கனவு 'இந்தியன் 2' வின் மூலமாக நனவாகப் போகிறது. அவருடன் இந்தப் படத்தில் நானும் நடிக்கிறேன்' என்று தன் நீண்ட கால கனவு குறித்து தன் வலைதளப் பக்கங்களில் தெரிவித்திருந்தார் விவேக்.

கடந்த 16ம் திகதி திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட விவேக் நேற்று 17ம் திகதி அதிகாலை காலமானார். கலாமின் கனவை நிறைவேற்றிக் கொண்டிருந்த கமலுடன் நடிக்க வேண்டும் எனும் விவேக்கின் இந்தக் கனவு முழுமை அடையாத நிலையிலேயே முற்றுப்பெற்றதுதான் பெரும்சோகம்.

**-கனி**



# ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்தியவர்



எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.கே முஹம்மத் ஜமாலுதீன் தனது 87ஆவது வயதில் கடந்த ஜனவரி 5ஆம் திகதி தெஹிவளையில் காலமானார்.

மூத்த வானொலி ஒலிபரப்பாளரான ஜமாலுதீன், புகழ்பூத்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஹிந்தி, உருது அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் வர்த்தக சேவைப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

எருக்கலம்பிட்டி மொஹிதீன் கப்புடையார் குல்சூம் உம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வராகப் பிறந்த இவர், இந்தியாவின் லக்னோ பல்கலைக்கழகத்தில் உருது, ஹிந்தி, சமஸ்கிருதம், சாஸ்திரிய சங்கீதம் கற்று பாண்டித்தியம் பெற்ற பின்பே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலைக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் கற்றார். அக்கல்லூரியில் முதல் முஸ்லிம் மாணவத்தலைவராகவும் பணிபுரிந்தார். கல்லூரிப் படிப்பினை முடித்த பின் இவரது திறமை பற்றி கேள்விப்பட்ட யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட செனட்டர் கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் இவருக்கு தபால் அட்டை ஒன்றை அனுப்பி, இவரை கொழும்புக்கு அழைத்துள்ளார். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் 3 வருட காலம் ஆசிரியராகப் பணிபுரிந்த பின்பே இவர் லக்னோவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

லக்னோவில் தனது பட்டப்படிப்பினை மேற்கொள்ளும்போது இவர் அடிக்கடி காஷ்மீருக்கு விஜயம் செய்துள்ளார். இந்த விஜயங்களின் போது காஷ்மீர் மக்கள் எதிர்கொள்ளும் துயரங்களை நேரில் கண்டறிந்த பின் காஷ்மீர் மக்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின் காஷ்மீர் கல்வி ஆய்வு வட்டத்தை ஏற்படுத்தி இறக்கும் வரை அதன் தலைவராகப் பணிபுரிந்தார்.

அம்மக்களது அவல நிலையை எடுத்துக் கூறுவதற்காக கொழும்பில் அடிக்கடி கருத்தரங்குகளை நடத்தியதோடு, பிரசுரங்களையும் வெளியிட்டார். ஐக்கிய நாடுகள் சபையில் 'காஷ்மீர் ஓர் அனாதை' என்ற தலைப்பில் ஆங்கில நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

1991 முதல் காஷ்மீர் போராட்டத்திற்கு இவர் ஆற்றிய பங்களிப்புக்காகப் பாகிஸ்தான் அரசு இவரை பாகிஸ்தானுக்கு அழைத்து 2016 மார்ச் 23ஆம் திகதி அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி மாமூன் ஹுஸைன் பாகிஸ்தானின் மூன்றாவது உயர் விருதான சிதாரா அல் இம்தியாஸ் என்ற விருதினை வழங்கி கௌரவித்தார்.

1966 முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முழுநேர ஒலிபரப்பாளராகவும் ஹிந்தி, உருது சேவையில் முதல் இலங்கை பொறுப்பாளராகவும் மத்திய கிழக்கு சேவையின் உதவிப் பணிப்பாளராகவும் பணிபுரிந்த இவர், 1987 இல் வர்த்தக சேவையின் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். வடக்கு கிழக்கு யுத்த காலத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் ஊழியர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட போது இவர் வானொலி தமிழ்ப் பிரிவை முழுமையாக இயக்கியதனை வானொலி ஊழியர்கள் இன்றும் நினைவு கூர்கின்றனர். 60 70களில் வானொலி ஆசிய சேவை அதிகாரியாகவும் பணிபுரிந்தார். இந்திய பாகிஸ்தான் நாடுகளிலிருந்து இலங்கை வந்த பிரமுகர்களையும் ஹிந்து சினிமா உலக நட்சத்திரங்களையும் பாடகர்ளையும் பேட்டி கண்டு, ஆசிய சேவையில் ஒலிபரப்பி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். இந்திய பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி மற்றும் மகாத்மா காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தி மற்றும் ரவிசங்கர், நூர்ஜஹான் போன்றவர்களை பேட்டி கண்டுள்ளார். ஆறாவது பாப்பாண்டவர் இலங்கை வந்த போது அவரது விஜயத்தை ஆசிய நேயர்களுக்காக நேரடி ஒலிபரப்பு செய்தார். இலங்கை வானொலியில் மத்தியகிழக்கு சேவையை முதன்முதலாக ஆரம்பித்து அரபு மொழியில் செய்திகளை ஒலிபரப்பிய பெருமையும் இவருக்கு உரியது. இஸ்லாமிய இசை வளர்ச்சியின் வரலாற்றினைச் சித்தரிக்கும் சங்கீத நிகழ்ச்சியை இலங்கை ரூபவாஹினியில் மூன்று முறை தயாரித்து அரங்கேற்றினார்.

இவருடைய கலை இலக்கியப் பங்களிப்புக்காக மறைந்த முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் 1994இல் அவரது 'வாழ்வோரை வாழ்த்தும்' திட்டத்தில் 'சாஹேஸ் சுபான்' (மொழிகள் வேந்தர்) என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்திய மர்ஹூம் ஜமாலுதீன் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. 'ரேடியோ சிலோன் கோட் பாதர் ஒப் பொலிவூட்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

பாகிஸ்தானுடன் மிக நெருங்கிச் செயற்பட்ட இவர், பாகிஸ்தானின் தேசிய தினத்தில் பிறந்துள்ளார். இவரது மறைவும் பெப்ரவரி 5ஆம் திகதி காஷ்மீர் ஒருமைப்பாட்டு தினத்திலேயே இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**- என்.எம்.அமீன்**

# கவிதை மஞ்சரி

கிருஷா

## நான் சொல்லிக் கொள்வது

கவி ஏ.எம். கஸ்புள்ளா, சின்னக்கிண்ணியா

குடியை வாழ்க்கையாக்கி
குடியைக் கெடுப்பவனும்
கூடிக் கூடி தெருவில்
காலம் கழிப்பவனும்
இருப்பதைக் கொடுக்க
இரக்கம் கொள்ளாதவனும்
குறுக்கு வழியில்
குதூகலம் காண்பவனும்
பரம்பரைச் சொத்தில்
பசியைப் போக்குபவனும்
பிறரது சொத்தை
பிடுங்கி வாழ்பவனும்
வறுமை மிகுந்தவர்
வலியை உணராதவனும்
பெறுமதிமிகும் கல்வியை
பெறத் தவறியவனும்
பெற்றவர் மனதினை
புண்படச் செய்தவனும்
ஏற்றம் காண்பது
எங்ஙனம்? எளிதல்லவே!

## நித்திரை இழந்த விழிகள்

பாண்டியூர் பொன். நவநீதன்

அம்மாவுக்குப் பிள்ளை
கருவில் சுமை
அப்பாவுக்குப் பிள்ளை
கருமச் சுமை
பெற்றார்கள் தம்
பிள்ளை குட்டிகளைச்
சுமக்கத்தான் வேண்டும்
அந்த வகையில்
தாய்க்கும் கண் விழிப்பு
தந்தைக்கும் கண் விழிப்பு...
எத்தனையோ இராத்திரிகள்
நித்திரையை இழந்து போனேன்
அத்தனை இராத்திரியும்
அயராது கண் விழித்துப்
பற்றுடன் உழைத்தமையால்
புத்திரரைக் கட்சிதமாய்
வளர்த்து விட்டேன்
இனியாவதுமிங்கே நின்மதியாக
நித்திரைக்குப் போகலாம்
அதுவரைக்கும்
பெற்றார் இருவருக்கும்
நித்திரையிழந்த விழிகள்!

## நியதி

வித்தகர் கு. சண்முகம் வந்தாறுமூலை

சுரக்கும் பாலை கறந்தெடுக்க மடி கொடுத்த பசுவும்
பார வண்டி தானிழுக்க தோள் கொடுத்த எருதும்
வயல் மிதித்து பண்படுத்திச் சேறாக்கம் எருமையும்
ஒரு நாள் இறைச்சிக்காக இறப்பதுதான் நியதியோ!

பலம் மிகுந்த விலங்கு என நாமம் சூட்டி தினமும்
மரம் இழுத்து மாய்கின்ற கொம்பன் யானையும்
பணத்துக்காக மிகக் கொடூரமாக ஒரு பொழுதில்
தந்தம் எடுக்க இரக்கமின்றி கொல்வதுதான் நியதியோ

முட்டையிட்டு தானம் கொடுக்கும் கோழியும்
குழையும் நீரும் கொடுத்து வளர்த்த வெள்ளாடும்
விருந்தென்று வரும்போது கதறக் கதறக் கொன்று
சுவையான இறைச்சிக் கறியாக்கி உண்பது நியதியோ

சீமான் வீட்டு நாய்க்கு சோறும் சுவையான கறியும்
கோமான் வீட்டு செல்லப் பூனைக்கு தறாமல்
குடிக்கப் பாலும் படுக்க மெத்தையும் கிடைக்கும்போது
ஏழைக் குழந்தைக்கு கொடிய வறுமைதான் நியதியோ

காயும் கனியும் குளிர்ந்த நிழலும் கொடுத்த மரம்
இலை கொட்டி கொடுமை நாளும் செய்கிறதென்று
காரிகை அந்த வீட்டுக்காரி மூக்கால் முனைய
வீட்டுக்காரன் மரத்தை வெட்டி வீழ்த்தியது நியதியோ

## வாராய்

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

விம்மலது நீங்க விடிவோடு வாராய்
வியாபித்த எதிர்பார்ப்பு நிறைவேற வாராய்
செம்மையாய் வாழ்ந்திட வழிகாட்ட வாராய்
சிறப்பான வாழ்வுதனில் திளைக்க செய்ய வாராய்
அம்மாவென்று கதறுகின்ற உறவிழந்த சொந்தங்கள்
உறவுகளைப் பெற்று ஆனந்திக்க வாராய்
நிம்மதியாய் ஞாலத்திலே வாழவைக்க வாராய்
நீதியும் நியாயமும் நிலைபெறவே வாராய்



## கொரோனாவுடன் வாழ்வோம்

சீ. ரவீந்திரன், களுவாஞ்சிகுடி

நம் நாட்டில்
கொரோனா எனும்
கொடிய நோயை
முதன் முதலாய் கண்டபோது
ஊரடங்குபோட்டார்கள்
அல்லோல கல்லோலம்
ஆளையாள் முந்திக்கொண்டு
பொருட் கொள்வனவு செய்தார்கள்

இப்போது எம் நாட்டில்
எழுபதாயிரத்தை
எட்டி நிற்கிறது
தொற்றிவரும் கொரோனா
ஆனால் எங்களுக்கோ
எல்லாம் வழமைதான்

பழகுங்கள் பழகுங்கள்
கொடிய கொரோனாவுடன்
வாழப் பழகுங்கள்
வேலை இல்லாமல்
வெளியில் போக வேண்டாம்
மறக்க வேண்டாம்
முகக் கவசம் முக்கியம்
அடிக்கடி கைகளை
அலசிக் கழுவ வேண்டும்

ஒரு மீற்றர் இடைவெளியை
ஒவ்வொருவரும் கடைப்பிடித்து
கைகூப்பி வணங்குகள்
கைகுலுக்க வேண்டாம்
கூட்டமாய் நிற்க வேண்டாம்
கூட்டங்களும் போட வேண்டாம்
ஆவி பிடியுங்கள்
அடிக்கடி சுடுநீர் குடியுங்கள்
அப்பப்போ
சுகாதாரத் துறையினரின்
அறிவுரையைக் கேளுங்கள்
வாழலாலம் நாம் கொரோவுடன்
பழகி வாழலாம்



## எல்லை இல்லாதது

நீ பி அருளானந்தம்

அன்பு எனும் சொல்
எம் தாயவளின் அன்பே
நெஞ்சமதில் கொடிப்படர்ந்து
முதல் முடிவாய் மேன்மை தரும்
பெற்ற தாய் அவளே
முதன்மை ஆம் முதல்
எனும் சொல்லினுக்கமைந்த
உலகினுக்கே ஓர்
மகா சக்தியுமாம்
இச்சொல் எவர் செவி
சேர்தலும் ஏன்
இதை கருதி சொன்னாய்
எனும் கேள்வி கேட்டால்
எவர்க்கும் எக்காலமுமே
வாழ்வில் அவர்
உய்யவாறு முடியுமோ?
நம்மை பத்து மாதம் வயிற்றில்
சுமந்திருந்து பெற்ற அன்னையவள்
சக்திக்கு நிகர் மற்றுமோர்
மகா சக்தி இவ்வுலகில்
நாம் அறியவும் அறிந்ததுமாய்
வேறுண்டோ சொல்லுதி
மாரியில் கிடைக்கும்
மழையின் குளிர்ச்சி
அவளன்புக்கு சரிநிகரோ
அடித்தலும் இடித்தலுமாய்
வான் முழங்க மனம் இடித்து
உடைந்து ஏங்கி என் பிள்ளை
என் பிள்ளை என்றவள்
மார்போடெம்மை கட்டி
உடனே அணைத்திட்டளே
அந்த பாசத்தின் சூடான இதம் தானே
நாம் முதன் முதலில் அறிந்தோம்
கண்ணினை காக்கின்ற
இமைபோல எமை காத்து
அன்று அளந்த அளவென்று இலாது
பசித்து அழும் போதெல்லாம் பாலமுது ஊட்டி
செய் தவத்தினால் நான் பெற்ற என் பிள்ளை
என தவழ்ந்து வரும் போதும்
கைகளை நீட்டி தூக்கி
இடுப்பிலிட்டு நிலா காட்டி
உண்ண சோறு ஊட்டி
இனிதே உண்டான பின்பு
அழுகுரல் பிறக்க
தேனின் மொழியாய்
சொற்கள் அமுதில் அள்ளி
உற்ற தன் தாலாட்டு இசையாலே
செவி நிறைத்து தூங்கச் செய்து
நாம் பொன் சேர்க்கும் இக்
காலத்தின் முன்பாகவே
எம் மென் கால்களிலே
கைகளிலே வளையலிட்டு
பார்த்து மனம் குவித்து இரசித்து
வளர்ந்திடவும் பள்ளிக்கனுப்பி
நன்மை பெறும் கல்வி எல்லாம்
கற்றிட வைத்து ஆளாக்கி
உண்மை நிற்கும் நெஞ்சினனாய்
நின்ற நிலையில் வாழவும் செய்து
ஆனது அனைத்தும் எமக்கென்றே
அளித்த எம் தாயவளின் சந்திர வதனம்
சித்திரை முழு நிலா தேய்ந்திடினும்
ஒளிர் விஞ்சும் முழு நிலவாய்
எம் வாழ்வின் எல்லை காண்பளவும்
நிலை நிறக்குமன்றோ
அழியாதே மனதில் என்றும்

## பார்புகழும்

அலிறிஸாப், அக்குறணை

எறும்புபோல்
உன் வாழ்வை
மாற்றிக்கொள்
வறுமை
உனைவிட்டு
விலகும்
காகம் போல்
உன்வாழ்வை
மாற்றிக்கொள்
சோம்பலும்
சுயநலமும்
உனைவிட்டு
அகலும்
பசுவைப்போல்
உன் வாழ்வை
அமைத்துக்கொள்
சாந்தமும் அமைதியும்
உனை ஆட்கொள்ளும்
நிலவு போல்
உன் வாழ்வை
அமைத்துக் கொள்
எல்லோருக்கும்
ஒளிகொடுத்து
அன்பால்
உலகாள்வாய்
நாய்போல்
உன் வாழ்வை
அமைத்துக்கொள்
நன்றியுள்ளவன்
நல்லவன் என்று
பார் புகழும்!

## கை உணர்த்தும் மெய்!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

வாழும் வாழ்க்கை!
வலுவான நம்பிக்கை!
ஆளில் இரண்டு கை!
அனைத்தும் செய்யும் கை!
வாழ்வில் வாகை!
வந்தாள் உவகை!
இறைவனுக்காய் தொழுகை!
இறைவனிடமே அழுகை!

பெண்ணுக்கு பொன்னகை!
பூ முகத்தில் புன்னகை!
கண்மணியாய் உன் காரிகை!
கருத்தெழுத உனக்குத் தூரிகை!
கண்ணுறங்க உனக்குப் படுக்கை!
உன் கரப்பட்டால் அது தொடுகை!
தள்ளாடும் உன் வாழ்க்கை!
தலையில் விழும் வழுக்கை!

வண்ணச்சோலை அது பொதிகை!
வற்றாத நதி என்றால் அது வைகை
எண்ணக்கவி நீ எழுதினால்
இருக்கவேண்டுமே எதுகை
தாயிலே குடியிருந்த நாமெல்லாம்
கொடுத்தோமா வாடகை?
வாழும் வையகம் நமக்கு வாடிக்கை!
வையகத்தில் நிகழ்வதெல்லாம் வேடிக்கை!

வருடமொன்று வந்துவிட்டால்!
வந்துவிடும் பல பண்டிகை
நாளும் நல்லறிவு பெறுவதற்கு
நாம் படிக்கவேண்டும் பத்திரிகை
ஆடிய ஆட்டம் அரங்கேற்ற
அவசியம் தேவை ஒத்திகை!
ஓடி நாம் ஒழிந்தாலும் வாழ்வில்
மரணம் நம்மை முற்றுகை!

## கவிதைச் சமர்

பி. லோகநாயகி, கினிகத்தேனை

கனவாகவே கலைகிறது
ஒவ்வொரு விடியலிலும்
ஆயிரம் ரூபாய் கிடைக்கிமோ
கிடைக்காதோ என
ஏங்குது எங்கள் உள்ளம்
வெயிலிலும் மழையிலும்
அட்டைக்கும் உதிரத்தை கொடுத்து
நேரம் பாராமல் கொழுந்து பறித்து
சம்பளம் போட்டதுமே – காசு
போன இடம் தெரியல்ல எங்களுக்கு
இனியாவது கிடைக்குமா ஆ

## திரும்பி வராத காலங்களுக்காக!

சி. மேகவர்னன். கனடா

தப்பி தடுமாறும்
மண் மடல் கண்டு
தடுமாறியது எம்
உள்ளம் இங்கு

குண்டு வந்து
செம்மண் புழுதியை துளைக்க
திக்கு திசை தெரியாது
ஓடினோம் அகதியாய்

வலியோடு வழி தெரியா
பயணங்கள் வலிந்து
இரவு பகல் பாராது
உழைத்தோம்

ஊரென்றும் உறவென்றும்
பணத்தை இறைத்தோம்
இளமையை நாம்
இங்கு தொலைத்தோம்

(b)பார் பாராய்
கிளாஸ் பொறுக்கி
கழுவினோம்
பார் எங்குமே வந்த நாம்
ஊருக்குள்ளே (B) பார் வரும்
என்று எண்ணவில்லை

வாழ்க்கை பாலைவனமாய் போச்சு
ஓடி ஓடி உழைத்த கால்கள்
ஒட்டகம் கேட்குது
நடை பயணம் போக

பார்வை மங்கிப் போன கண்கள்
கண்ணாடி தன் முன்னாடி
போடச் சொல்லுது
எலும்புக்கும் தசைக்கும்
இழுவை போராட்டம் நடக்குது

இதயம் அடிக்கடி
எச்சரிக்கை விடுக்குது
கையும் கொஞ்சம் கொஞ்சமாய்
நம்பிக்கை இழக்குது

எம் உடலும்
பெட்டியை தேடுது
உண்டியல் பணம்
இனியும் வருமோ
தெரியாது.

## நலமாய் வாழ்ந்திடுவோம்!

பா. முருகானந்தன், உடப்பு.

பிலவ எனும் தமிழ் சித்திரைவருடப்
பிறப்பு பிறந்ததே! சித்திரைக் கனி
எல்லாம் கனிந்தது காசினி எங்கும்!
வாழ வரம் தரும் தாவரங்களும்
வளம் சேர்க்க ஆயத்தமாகின!
பல மூலிகைகள் ஒன்று சேர்த்து
காய்ச்சி செய்த மருத்து நீரை
சிரசு முதலான மெய்க்கும் வைத்தும்!
குடும்பத்தாருடன் நீராடியும் புனிதராய்
தூய ஆடைகள் அணிந்தும்!
தூயவராய் நோய் நொடிகள்
அகன்ற மனிதராகவும்! எல்லாம்
வல்ல இறைவனை வணங்க
ஆலயம் சென்றும்! அருள் பெற்றும்!
போற்றத்தக்க பெரியவர்களின் பாதம்
பணிந்தும்! ஆசிபெற்றும் கைவிசேடம்
பெற்றும்! உணவு முதலான
பட்சணங்கள், கனிகள்! சொந்த
பந்தங்களுடனும் அயலாருடனும்!
உண்டு களித்தும்! நலமாய்
வாழ்ந்திடுவோமே! யாம் யாவருமே!



## கண்ணே கனியமுதே



வான்மதி

பிள்ளை என்று உன்னை
ஈன்றெடுத்தேன் நான்
அழகான மகவு என்று
எல்லோரும் சொன்னார்கள்
உன் பொக்கை வாய்க் காட்டி
சிரிக்கத் தொடங்கினாய்
அதன் பின் தவழ்ந்து வந்தாய்
அதன் பின் கைத்தட்டி சிரித்தாய்
என் கண்ணே தத்தித் தத்தி
தாலி வந்தாய்
பின் நடக்கத் தொடங்கினாய்
எல்லாவற்றையும் விட என்னை
"அம்மா" என்று விழிக்கச் செய்தாய்
என் காதில் தேன் பாய்ந்தது
மனதில் பால் வார்த்தாய் கண்ணே
'மலடு" என்ற பட்டத்தில் காக்க
வந்தே கண்ணே நீயே என் கணியமுதே

# ஒரு அடியாளின் ஆட்டோபயக்ரபி



பிரதான வீதியின் ஒரு ஓரம்.. நடுச்சாமம் பன்னிரண்டுமணி ஆவதற்கு இன்னும் அரை மணி நேரம்... இரவு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.. காலையில் கொளுத்தும் வெயிலுக்கு சமமானதொரு குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது... விட்டில் பூச்சிகள் விளக்கை சுற்றிக் கொண்டிருக்க.... பிரச்சார மேடைக்கு பலகைகள் மூன்று வாகனங்களில் வந்து இறங்கிய வண்ணம் இருந்தன.. ஒரு பலத்த அமைதி.........

புதிய ஜனாதிபதி அறிவிக்கப்பட்டு சில மாதங்களினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது அடுத்த பாராளுமன்றத் தேர்தலும் அதற்கு MP சீட்டை பற்றிக் கொள்ளவும் ஏற்கனவே அமைச்சராக இருந்தவர்கள் தாங்கள் இந்த ஐந்து வருடமும் சும்மாவே இருந்து சுகமான ஒரு வாழ்வை மக்களின் வரிப்பணத்திலிருந்து எடுத்து ஏப்பம் விட்டதை எண்ணி எண்ணி.. எப்படித்தான் இனி பிரசாரம் செய்து இந்த மூடத்தனமான மக்களை ஏமாற்றுவது என்று எண்ணிக்கொண்டிருந்தனர்... அது மட்டுமல்லாது சென்ற முறை பாராளுமன்றத்தில் சேர்த்துக்கொள்ளப்படாமல் வாக்குகளில் வரட்சி கண்ட சில அரசியல்வாதிகள் no pay லீவு எடுத்தது போல இந்த ஐந்து வருட காலத்தையும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் எப்படியாவது MPபதவியை எட்டிப் பிடித்தே ஆக வேண்டும் எனும் நோக்கில், கல்யாண வீடு தொடக்கம் கபூர் ஸ்தானம் வரை தரிசித்து சில உத்திகளை உபயோகித்து காலம் கழித்தனர்.. எப்படியோ இந்த இரு தரப்பினரும் தமது சுய நல அரசியல் விருத்திக்கும், வரிப்பண சுரண்டலுக்கும், contract கொள்ளைகளுக்கும் தத்தமது கொள்கைகளில் குறிக்கோளாய் இருந்தார்கள்...

பிரதான வீதியின் ஒரு ஓரம்.. நடுச்சாமம் பன்னிரண்டுமணி ஆவதற்கு இன்னும் அரை மணி நேரம்... இரவு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது.. காலையில் கொளுத்தும் வெயிலுக்கு சமமானதொரு குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது... விட்டில் பூச்சிகள் விளக்கை சுற்றிக் கொண்டிருக்க.... பிரச்சார மேடைக்கு பலகைகள் மூன்று buddyகளில் வந்து இறங்கிய வண்ணம் இருந்தன.. ஒரு பலத்த அமைதி.........

ஹாஷிம்...நைட் ஹோட்டலில் உண்ட இறைச்சி ரொட்டியை சோடா குடித்து எரித்துக்கொண்டு.. சுவரில் சாய்ந்த வண்ணம் நாமிஸை நோக்கி..

"டேய் இன்டக்கி ஸ்டேஞ் அடிக்க நீ வாறா?"

என்று கேட்டவுடன்...

தொண்டையை சரி செய்து கொண்டே நாமிஸ் பதிலளித்தான்...

" ஓம் ஓம் வாறன்... வீட்ட அவள் கத்துறாள்... பிள்ளைக்கி புது உடுப்பும் வேண்டல்லயாம்.. அது மட்டுமில்லாம மாட்டெறச்சி வேண்டி திண்டு எத்துன நாள் டா... நமக்கு ஒரு தொழில் இருந்தா ஏன் இதுகள்.. சரி சரி நான் வீட்ட கொஞ்சம் போய்ட்டு வாறன்.. "

"ஒண்டும் யோசிக்கத் தேவெல்ல தலைவர் வெண்டா தொழில் இரிக்கி.. "

"இப்டித்தான் அந்தாள நம்புற பொறகு எவனாச்சும் காசெடுத்துக்கு வந்து கொட்டுவான் அவனுகளுக்கு குடுத்துப்புட்டு நம்மள பொறகு பாப்பமே எங்குற.. நம்மளுக்கும் என்ன செய்ர எண்டு வெளங்காம இளிச்சிக்கு மனசுக்க சலிச்சிக்கி போறான்.."

"சரி சரி நீ போய்ட்டு வாவன்... இப்பதியே பிந்திட்டு"

" சரி சரி நான் வாறன்.. என்னயாலும் எண்டா கோள் அடி"...............

அடியாளின் ஆரம்ப காலம்......

ஊரில் இருந்து கொண்டு உம்மாவிடம் பணம் பறித்து வாப்பாவின் சைக்கிள் திறப்பில் போலித் திறப்பொன்றை அடித்து தன்னிடம் வைத்துக்கொண்டு அவர் இல்லாத நேரம் அந்த சைக்கிளை எடுத்து மாப்பிள்ளை போல் ரெடியாகி நெஞ்சை உயர்த்தி உலாவித்திரிந்து... .தனது வாலிபத்தை வீணாக்கிய நாமிஸ், படிப்பதை நிறுத்தி விட்டு சாப்பாடு முஸ்பாத்தி என்று காலம் கழித்து கல்யாணம் எனும் ஒரு நிலை வந்ததன் காரணமாய் வேறு வழி இல்லாமல் வெளிநாடு செல்ல முடிவு செய்தான். அவன் படித்தவரைக்கும் அப்ளை பண்ணக் கூடிய தொழிலாக இருந்தது ட்ரைவரும் ஹொட்டல் சர்வரும் தான்..... வேறு வழியில்லாதவன் வெளிநாடு சென்று உழைத்து வெக்கமே இல்லாமல் சீதனமும் வேண்டி கல்யாணம் முடித்து... வெளிநாட்டு வாழ்க்கை வெறுத்தவன் ஊரில் ஏதாவது செய்து பிழைக்கலாம் என்ற எண்ணத்துடன் நாடு திரும்பினான்.

அவன் உழைத்த ஊதியத்தில் செலவு கழித்து சேர்த்த சேமிப்பெல்லாம்.. வாங்காமத்தில் கூட ஒரு வளவு வேண்ட போதுமானதாக இருக்கவில்லை... கல்யாணம், பிள்ளை குட்டி என்று குடும்பஸ்தன் நாளை எப்படி குடும்பம் நடாத்துவது என்று எண்ணி யோசனையில் ஆழ்ந்திருக்க அவனை அழைத்துக் கொண்டு அந்த அரசியல்வாதியிடம் சென்றது ஹாஷிம் தான். நாமிஸ் வெளி நாட்டிலிருந்து வந்து ஆறு வருடங்கள் இருக்கும்.. ஐந்து வருடத்தின் முன்.. ஹாஷிம் அவனை தலைவரிடம் கொண்டு சென்ற போது அவனை காவல் நாய்க்குப் பக்கத்திலே வைத்துவிட்டு, உள்ளே சென்று தலைவரிடம் காதுக்குள்ளே முணு முணுக்க மூன்று நாழிகைக்கும் குறைவில்லாமல் அந்த கதையை கேட்ட அவர் தனது கைகளால் ஹாஷிமை போகும் படி கை அசைத்தது நாமிஸூக்கு அவமானத்தை தந்தது.. அந்த அசைவில் மரியாதை என்பது மண்ணளவிலும் இருக்க வில்லை... தலைவரின் முகச்சுளிப்பு நாமிஸை முகம் குனிய வைத்தது.. தலைவரை சந்தித்து விட்டு வந்த ஹாஷிம்..

"இந்த general electionல வின் பண்ண பொறகு பாப்பம் எண்டிரிக்கார்.. அப்ப அவர் அப்டி எங்க நம்மள எடுபுடி வேலைக்கு கூப்டாலும் போக யோசிக்கப் படா.. என்ன வெளங்குதா"

வறுமையின் வாட்டுதலாலும் வேறு வழியே இல்லை என்ற நாமிஸ்....

"அதெல்லாம் பிரச்சினெல்ல... அழ்ழாஹ் எண்டு தொழில் கடச்சா சரி"

" அப்டி இருந்தா சரிதான், நாளைக்கு மீட்டிங் இரிக்கி.. சும்மா சண்ட சாமான் கொளுகும்.. நம்முட பழைய ராக்கிளி.. கருங்கனிப் பொல் இருந்தா எடுத்துக்கு வா"

" சரி சரி"

ஹாஷிமின் சொல்லிலும் தலைவரின் சைகையிலும் அறவே நம்பிக்கையில்லாத நாமிஸ் வேறு வழியே இல்லை என்று அழ்ழாவையும் மறந்து அவர்களை நம்பியிருந்தான்.. அடுத்த நாள் ஹாஷிம் சொன்னது போல் மீட்டிங்கிற்கு ராக்கிளியும் கருங்கனிப் பொல்லையும் எடுத்து வந்த நாமிஸ்... முகத்தில் முக்காடும் கையில் ராக்கிளியும் என்று கூட்டத்திற்குள் நின்றான்.. தலைவரின் முட்டாள் தனமான ஒரு பேச்சின் காரணமாய் சண்டை கூட.. தொழில் எடுக்க வேண்டும் என்ற ஒரு அவசியத்தின் காரணமாய்.. எடுத்து வந்த உபகரணங்களை உபயோகித்தான்... சண்டை அதிகமாகி அமளி துமளியாயிற்று.. அடியும் உதையும் முது கெலும்பில் ஒரு பலத்த காயமுமாய்... பொலிஸில் பிடிபட்ட நாமிஸ்... தலைவரின் பவரை பயன்படுத்தி ஏழு நாட்களில் வெளியில் வந்தான்...

அன்றிலிருந்து தலைவர் நாமிஸை கண்டால் சிரிப்பது வழக்கம்.. ஆனால் அவர் சிரிப்பு நீடிக்கவில்லை. அவர் பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார்.. அவரையே மலைபோல் நம்பியிருந்த நாமிஸூக்கு ஆப்பு அடித்தது அந்த தேர்தல். இனி மேல் ஒரு வருடம்.... எப்படியோ வயரிங் அடிப்பது, பெய்ன்ட் அடிப்பது என்று அவனுக்கு தெரியாத தொழிலையும் பழகி எடுத்து வருமானம் பிறக்க வழி சமைத்து வாழ்க்கை நடாத்தினான். இவனது பழக்கத்தை காணும் எல்லா முதலாளிகளும் மூன்று மாதங்களுக்குமேல் வைத்திருந்ததே இல்லை.. இவனுக்கு அறிவெனும் ஒரு விடயம் இருப்பதாக அவனே உணர்ந்ததில்லை.....

கூடுவார் கூட்டமும்... பிரச்சினை, வாழ்க்கை, கஷ்டங்கள் கூடக் கூட கஞ்சா தண்ணி என்று பழகத்தொடங்கினான்..... தலைவரும் இவனை ஒரு கைப்பொம்மை போல் வைத்திருந்து அவரது எடுபிடி வேலைக்கு நாமிஸை நன்றாக உபயோகப் படுத்தினார்.. தலைவருக்கு சோற்றுப் பாசல் கொண்டு வருதல், வாகனம் ஓட்டுதல், Facebookல் கீழ்த்தரமான பேச்சுக்களை கூச்சமே இல்லாமல் கதைத்தல், கஞ்சா கொண்டு வருதல், சாராயம் ஊற்றிக்கொடுத்தல் என்று தனது காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான்...

இவனது கஞ்சாப் பழக்கம்.. தனது மனைவியின் நகைகள், சொத்துக்களை விற்கும் படியாக்க.... நாமிஸின் சகலன்மார் எல்லோரும் இவனை, வெறுப்புடன் தாக்கி அடி உதையென்று உதைத்து வீதியிலேயே அவமானப்பட்டு.. இரண்டு மாதம் எழுந்திருக்க முடியாமல் வாட்டில் கிடந்தான்..... அழ்ழாஹ் இவனது வாழ்கையில் இரக்கம் காட்டி கஞ்சா பழக்கத்திலிருந்து விடுவித்தார்.. ஆஸ்பத்திரியிலிருந்து வந்தவன் மீண்டும் வெளிநாட்டிற்கு செல்ல ஆயத்தமாகி, தலைவரிடம் கூறி... மனைவியின் நகையை வீசா மற்றும் டிக்கட் செலவுகளுக்காய் விற்றான்.... இந்த முறை அவனுக்கு நல்ல ஒரு கம்பெனியில் ட்ரைவர் தொழில் கிடைத்தது அது மட்டுமல்லாமல் புட், அகமெடேஷன் அலவ்வென்ஸூம் கிடைத்தது.. ஆகாச கோட்டை கட்டிய அவன் ஆனந்தத்தில் அமர்ந்திருக்க.. அவன் கற்பனை கூட பண்ணாத அளவுக்கு ஒரு முடிச்சு காத்திருந்தது...

பொலிஸ் கெரக்டர் எடுக்கச் செல்லும் போது இவனது பழைய அடியாள் தொழிலுக்கான கேஸ் பதியப்பட்டிருந்தது.. இதனால் பொலிஸ் கெரக்டர் சிக்கலாக மாற..... லஞ்சம் கொடுத்து வேலை முடிக்கப் பார்த்தான்.. ஆனால் விதி இன்னும் அவனது வாழ்க்கையை வினாக்குறியாக மாற்றியது..... அங்கு OIC யாக இருந்தது எதிர்க்கட்சியில் இருந்த ஒரு அரசியல் தலைவனின் கையாள்..... அது மட்டுமல்லாது, நாமிஸின் தலைவனின் காருக்கு பெச் போட்டதற்காகவும்... வீதியில் செல்லும் போது கல்லால் அடித்து கண்ணாடியை உடைத்ததற்காகவும் OIC யின் மச்சானை, உப்பள ரோட்டில் வைத்து அடி அடியென அடித்த நாமிஸின் மேல் எல்லோரும் கண் வைத்துக் கொண்டிருந்தனர்.. இதுவே சரியான சந்தர்ப்பம் என OIC அவனது விளையாட்டை துவங்கினான்..... உதவி அற்றிருந்த நாமிஸ் தலைவரிடம் போய் முறையிட்டும்... பவரே இல்லாத அந்த மனிதனால் ஏதுமே செய்ய இயலாமலிருந்தது... நாமிஸூம் இயன்றளவில் குறுக்கு வழி பார்த்து வெளிநாடு செல்ல முயன்றான்.. ஆனால் அவன் போன எல்லா குறுக்கு வழியும் முட்டுச் சந்தாக அமைந்தது...

இதெல்லாம் நடந்து வருடங்கள் சக்கரமாய் சுழன்று... அவனது வாழ்க்கை சென்று கொண்டே இருந்தது............. இன்று இவ்வளவும் நடந்து ஆறு வருடங்கள் இருக்கும்...

வீட்டிற்கு சென்ற நாமிஸ் அவன் மனைவியின் ஒப்பாரி ஓலத்தைக் கேட்டு ஒன்றுமே செய்ய இயலாமல்... வீட்டிலிருந்து மீண்டும் நடந்தே வந்தான் பிரச்சார மேடை அடிக்க...

"எனக்கு என்ன செய்ர எண்டும் வெளங்குதில்லடா"

"என்ன பொண்டாட்டிய பத்தி யோசிக்காயா"


"அவள் உண்மையா பாவம்.. நான் இன்னா பாக்குர காவாலி வேலைக்கு.. என்ன காளி கோட்டுக்கு இழுத்திரிக்கனும்.. அவளும் விடிவு வரும்... விடிவு வரும் எண்டு என்ன நம்பி நம்பி.. மடைச்சியாகுறாள்"

நாமிஸின் கண்களில் கண்ணீர் கசிந்தது... ஹாஷிமினால் ஆறுதல் கூற முடியவில்லை... அவன் மௌனித்திருக்க....

நாமிஸ் கீழே கிடந்த தூணை நிமிர்த்தி மேடைக்கு அடித்தளம் இட்டு.. கண்ணைத் துடைத்து.... துடைத்து வேலையை தொடர்ந்தான்....

-வதாவதன்-

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல :40



திரு/திருமதி/செல்வி ..........................................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................................

..........................................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :40

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. யமன்.
4. வீடு அல்லது காணியின் பாதுகாப்புக்கு, அதன் எல்லையில் அமைக்கப்படுவது.
6. முப்பது நாள் கொண்டது.
8. ஒரு செயலின் வெற்றி தோல்வியை முன்னதாகவே தெரிந்துகொள்ளும்படி நிகழ்வதாக நம்பப்படும் அறிகுறி.
11. செல்வம் குழம்பிக் காணப்படுகிறது.
13. உறைப்புத்தன்மை. (திரும்பியுள்ளது)
14. உணவு.
15. நீர்நிலை. (குழம்பியுள்ளது)
16. பெண்கள் கலந்துகொள்ளும் ஒருவகை நடனம்.
17. வறுமையில் இருப்பவர்.
19. படகு.
20. வெண்மைத் திரவம்.
21. களவு.
22. இராமாயணக் கதையில் வரும் ஒரு பெரும் நகரம்.

**மேலிருந்து கீழ்**

1. தயக்க உணர்வு.
2. ஒருவரை அழிக்கும் செயல்.
3. ஒரு காட்டு மிருகம். (தலைகீழ்)
5. கடிதம்.
7. இசை. (தலைகீழ்)
9. கிளைக்குக் கிளை தாவும் பிராணி.
10. காடு குழம்பிக் காணப்படுகிறது.
12. சுமை மேலோங்கி விட்டது.
16. எண்ணிக்கையில் அதிகம்.
17. உயரத்திற்கு ஏறிச்செல்ல பயன்படுவது.
18. ஒருவகை மலர்.
19. பெண்களின் காதணி.
20. அரைப்பகுதி.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 39

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. செழிப்பு 3. சக்தி 5. ஆலம் 7. புவி 8. வம்சம் 9. கர்ணன் 11. விரோதி 12. அவனி 14. யாக்கை 16. துளை 18. சிசு 19. கிளி 20. காரிகை 21. விமானி

**மேலிருந்து கீழ்**

1. செம்பு 2. புலவர் 3. சன்னியாசம் 4. தினை 6. ஆணவம் 9. கதிரை 10. தை 11. வித்து 13. அக்கினி 15. மாளிகை 17. காளை 18. சிகை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 38

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**எஸ். தவநாயகி,**
24/41, செல்வநாயகம் வீதி,
முதலாம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.

இரண்டாம் பரிசு
**இல்யாஸ் தாஸிம்,**
இல. 23ஏ, இப்றாஹிம் வீதி,
தொட்டவத்தை,
பாணந்துறை.

மூன்றாம் பரிசு
**ஏ.எல். அப்துல் ஜலீல்,**
191/3, மூர் வீதி,
மன்னார்.

### பாராட்டு பெறுவோர்

**1. திருமதி எஸ். பாக்கியநாதன்,**
இல. 100/1, உடையார் வீதி,
காரைதீவு 02.

**2. எம். அப்லால் அஹமட்,**
337, மங்கெதர,
நாங்கல்ல.

**3. இஷாரா பேகம் ஜமீல்,**
அசோக்க வித்தியாலயம்,
இ.எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.

**4. எஸ். கனகரெத்தினம்,**
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**5. ஆர். ஜயந்திமாலா,**
இல. 228, வகுகப்பிட்டிய,
புசல்லாவ.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இறாகம, வெலிசர, கொள்வனவு பிரிவிற்காக வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்களை கொள்வனவு செய்தல் (CEFAP UNIT)

1. பெறுகை அலகிற்காக வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்களை **(CEFAP Unit)** கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த இலக்கத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டுள்ள தகைமைகளுக்கு அமைந்தொழுகும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படும்.

   ஒப்பந்த இல.: **CEFAP/PRT/04/2021 – Red Phosphorus 20.0 Mts**

2. விலைமனுக்கோரல் சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமுள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் மேலதிக தகவலை இறாகம, வெலிசர, அரசாங்க வெடிமருந்துகள் களஞ்சியசாலை, வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகின் பெறுகை அலுவலகரிடமிருந்து (தொலைபேசி: 0112-958227) அல்லது வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் பெறுகை அலகின் பணிப்பாளரிடமிருந்து (தொலைபேசி: 0112-955514) பெற்றுக் கொள்ளலாம்.

4. 2021 ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 2021 மே 31 ஆம் திகதி வரையும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,500 ரூபாவை செலுத்திய பின்னர், வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்கள் அலகின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம்,விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். (வெளிநாட்டு வழங்குநர்கள் பொருத்தமான உள்ளூர் முகவரொருவரை நியமிக்கலாம்).

5. அனைத்து விலைமனுக்களும் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமெனவும் அத்துடன் நிபந்தனையற்ற விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரித்தான விலைமனுப்பிணையானது விலைமனுக்களைத திறக்கும் திகதியிலிருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமெனவும் விலைமனுப்பிணையானது இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

6. கொள்வனவிற்கான ஒப்பந்தம் வழங்கிய பின்னர், வரிகள் நீங்கலாக விலைமனுப் பெறுமதியின் 10% இற்கான நிபந்தனையற்ற செயற்பாட்டு பிணையொன்றை விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.

7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2021 ஜுன் 01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-01, பிளாக்ஸ்டாவ் பாதை, (Flagstaff) இலங்கை கடற்படை தலைமையகம், கேள்விச் சபையின் தலைவரிடம் கையளிக்கப்படல் வேண்டும் அல்லது அதே முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கடற்படை தலைமையலுவகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே, சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

8. இலங்கை கடற்படையின் www.navy.lk என்ற இணையதளத்தில் மேலதிக விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்,**
**வர்த்தக ரீதியிலான வெடிமருந்துகள், சுடுகலன்கள் மற்றும் தோட்டாக்களுக்கான அலகு,**
**அரசாங்க வெடிமருந்துகள் களஞ்சியசாலை,**
**வெலிசர,**
**இறாகம.**

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## கொச்சிக்காய் சாகுபடித் திட்டத்திற்காக வட மத்திய மாகாணத்தில் 400 சொட்டு நீர்ப்பாசன முறைமைகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் (ASMP) செலவை நோக்கி 58.63 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு இந்த கடன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை கொச்சிக்காய் சாகுபடித் திட்டத்திற்காக வட மத்திய மாகாணத்தில் 400 சொட்டு நீர்ப்பாசன முறைமைகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலின் ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்கு செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கொச்சிக்காய் சாகுபடித் திட்டத்திற்காக வடமத்திய மாகாணத்தில் 400 சொட்டு நீர்ப்பாசன முறைமைகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்டப் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | ஒப்பந்த இலக்கம் | அளவு | விலைமனுப் பிணை பெறுமதி (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் மாவட்டத்தில் 200 சொட்டு நீர்ப் பாசன முறைமைகள் | LKA-MOA-PMU-229403-GO-RFB | 200 | 840,000.00 | 20,000.00 |
| பெலன்னறுவை மாவட்டத்தில் 200 சொட்டு நீர்ப் பாசன முறைமைகள் | LKA-MOA-PMU-229404-GO-RFB | 200 | 840,000.00 | 20,000.00 |

3. உலக வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2021/04/19 தொடக்கம் 2021/05/10 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். திட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப்பணமாக கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
6. 2021.05.10 அன்று பி.ப. 2.00 க்கு அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மின்னணு விலைகேட்பு அனுமதிக்கப்படமாட்டாது. தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. 2021/05/10 அன்று பி.ப. 2.00 க்கு கீழுள்ள முகவரியில் தனிப்பட்ட ரீதியில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் முழுமையான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அசல் மற்றும் நகல் பிரதிகள் வெவ்வேறாக இடப்பட்டு மூடப்பட்ட கடித உறையில் முறையே "அசல்" மற்றும் "நகல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரையிடப்பட்ட ஒற்றைக் கடித உறையில் மூடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தை பதிவிட்டு கொச்சிக்காய் சாகுபடித் திட்டத்திற்காக வட மத்திய மாகாணத்தில் 400 சொட்டு நீர்ப்பாசன முறைமைகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் (ஒப்பந்த இலக்கத்தை உள்ளடக்கவும்) என்று குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது;

**தலைவர்**
**திட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை**
**தொ.: 0112696086 அல்லது 0777419521**
திகதி: 2021.04.19

---

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

**316 வெற்றிடங்கள்**
**ஆடை தயாரிப்பு/ புடவைகள்**

Juki Machine Operators/ Trainees/ Helpers. வத்தளையில் அமைந்திருக்கும் ஏற்றுமதி தரத்தில் துணி உற்பத்தி செய்யப்படும் கம்பனிக்கு துவாய் மற்றும் பெட்ஷீட் தைப்பதற்கு அனுபவமுள்ள தையல் இயந்திர இயக்குநர்கள் (Juki Machine Operators) பயிற்சி பெற விரும்பும் தையல் இயந்திர இயக்குநர்கள் (Juki Machine Trainee Operators) மற்றும் ஆண், பெண் உதவியாளர்கள் (Helpers) தேவை ( Sub Contract கொடுக்கப்பட மாட்டாது.) ஒருநாள் சம்பளம் ரூ.1200/ , தங்குமிட வசதி இலவசம், குறைந்த விலைக்கு மூன்று நேர ஆகாரம். (மாதாந்த சம்பளம்) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இல.18, வெலிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல 0766200300. 028644

**319 வெற்றிடங்கள்**
**வீட்டு வேலையாளர்கள்**

அநுராதபுர வீடொன்றில் தங்கியிருந்து சமையல், சுத்திகரிப்பு வேலைக்கு 45 வயதிற்கு குறைவான பெண் தேவை. சம்பளம் 25, 000/. 0704209 551. 028702

மாலபே கஹன்தொட்ட வீதியில் வீடொன்றில் கிழமை நாட்களில் வருகை தரக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. அழையுங்கள் 0774245678 028795

வீடொன்றிற்கு பெண் தேவை. சமையல் செய்வதற்கும் சுத்தம் செய்வதற்கும். 0717268835/ 0777268835 028838

வெள்ளவத்தையிலுள்ள வீடொன்றிற்கு சமையல் மற்றும் சுத்தம் செய்வதற்கு அனுபவமுள்ள பணிப்பெண் தேவை. முன்னைய அனுபவம் தேவை. அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்க்கப்படும். தொடர்பு இல. 0771 512093 028734

**320 வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு ராஜகிரி கெண்டினுக்கு அனுபவமுள்ள ரொட்டி பாஸ், சோடீஸ் பாஸ், ரயில் என்ட் கறி பாஸ் தேவை. கிச்சன் ஹெல்பர், பன்டரி வேட்டர்கள் தேவை. (சிங்களத்தில் கதைக்கவும்.) 0717799520, 076042298. 028704

கொழும்பு 04 இலுள்ள உணவகம் ஒன்றிற்கு உணவக ஊழியர்கள் அவசரமாக தேவை. திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் தங்குமிடம் hrmrburger@gmail.com 0117111055 028542

**322 வெற்றிடங்கள்**
**மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

இலங்கையின் உயர்தர பலகைத் தரை நிறுவும் நிறுவனத்திற்கு உயர்தர குத்தகைக்காரர்கள் தேவைப்படுகின்றனர். உயர்தர சம்பளம், வருகைக்கான கொடுப்பனவு மற்றும் வாரா வாரம் பணம் செலுத்துகை. தொடர்பு கொள்ளவும். 0768256572/ 0768256575/ 0775056555 028864

பாணந்துறையில் இயங்கி வரும் தளபாட உற்பத்தி நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தச்சன், கை உதவியாளர், Spray Paint செய்பவர்கள், Sofa Upholstery செய்பவர்கள், Sofa frame செய்பவர்கள் உடனடி வேலை. வாய்ப்பு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 07 77772686. 028645

**323 வெற்றிடங்கள்**
**தொழிலாளர்கள்**

ஒருகொடவத்த வேலை தளத்தில் சுத்திகரிப்பு சேவைக்காக ஆண், பெண் தேவை. சம்பளம் 900/ இலிருந்து மேல் நோக்கியது. காலை, மத்தியானம் உணவு இலவசம். அரசாங்க படியும் உண்டு. தொடர்புகளுக்கு. 0772771022. 028608

**325 தொழில்துறை**
**பொது**

தொழிற்சாலைக்கு பிளாஸ்டிக் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திர வேலைக்காக பயிற்சியுள்ள தொழில்நுட்பவியலாளர் மற்றும் பெண், ஆண் பிள்ளைகள் தேவை. சிறந்த சம்பளம், OT, பகல் உணவு, நிரந்தர வேலை, இல. 36 B. எஸ் த எஸ் ஜயசிங்க மாவத்தை, களுபோவில. 0777190907 028646

பார்மசி விற்பனை உதவியாளர் ஆண்/ பெண் அனுபவத்துடன் நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து நல்ல சம்பளம் மேலதிக கொடுப்பனவு. 0717508485 028319

ஹோமாகம, பனாகொட (டெம்பள் பேர்க் கைத்தொழில் பேட்டை) உற்பத்திக் கம்பனிக்கு உற்பத்தி பகுதி ஊழியர்கள் தேவை. வயதெல்லை 18 30/ தங்குமிடம் உண்டு நல்ல சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக்கள் அழையுங்கள் 0778869803/ asifplastic508@gmail.com 028092

## சொந்த விடயம்

**528 தங்குமிட வசதிகள்**

ஆண்களுக்கு அறை இணைந்த குளியலறையுடன் வாடகைக்கு உண்டு. 3 மாத முற்பணம். இல.121/ 1, சரணங்கர ரோட், தெஹிவளை. 0777499038/ 0777983989/ 0777337032. 028544

தங்குமிட வசதி பொரல்ல பள்ளிவாசலுக்கு அருகில் மாணவர்கள். தொழில் புரிவோருக்கு தங்குமிட வசதி உள்ளது. 0776510877, 0716615733 028831

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

**புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**Contract No.: PD/NMD/LINM/2021/001**

கீழே விபரிக்கப்பட்டவாறு, கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

**01 ஆம் அட்டவணை:**

| அம்ச இல. | செயற்றிட்டப் பெயர் மற்றும் ஒப்பந்த இல. | பெசேவ நீங்கலாக ஒப்பந்தங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) | தகுதியுள்ள CIDA திவுத் தரம் | விலைமனு செல்லு படியாகும் காலம் (வரையும்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | கொழும்பு தேசிய அருங்காட்சியக காணிச்சீராக்கல் முறைமையை மேம்படுத்தல் - கட்டம் I மற்றும் கட்டம் IV – PD/NMD/LINM/2021/001 | 36,607,500 | 10,000 | 400,000 | 150 நாட்காட்டி நாட்கள் | சி-5/ எஸ்பி 1 மற்றும் மேற்பட்டது | 2021 செப்டம்பர் 02 ஆம் திகதி. |

01. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.

02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையிலும் விலைமனுக்கோரல் ஆவணத்திலும் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-07, மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள, பிரதான கணக்காளரிடமிருந்து (தொலைபேசி: 0112-688146) பெற்று 2021 ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 2021 மே 07 ஆம் திகதி வரையும் சாதராண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

04. 2021 ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 2021 மே 07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையிலுள்ளவாறு தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கொழும்பு-07, மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள, பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரினாலும் கொள்வனவு செய்யப்படலாம்.

05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படுவதும் வர்த்தக வங்கியொன்றினால்/ நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான வங்கி உத்தரவாத முறைமையில் விலைமனுவானது விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணைகளின் பெறுமதி மற்றும் விலைமனுப்பிணைகளின் செல்லுபடியாகும் காலம் ஆகியன 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயகம், தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம், இல. 53 மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, கொழும்பு-07 என்று முகவரியிடப்படல் வேண்டும்.

06. 2021 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம், இல. 53, மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர், விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கொழும்பு-07, மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2021 ஏப்ரல் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கூட்டமொன்று நடைபெறும். இக்கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்களும் சமுகமளிக்கும்படி தீவிரமாக மதியுரை வழங்கப்படுகின்றனர்.

08. விலைமனுதாரர்களை தெரிவு செய்வதில் அவர்களின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவச்சொத்து நிலபரம் ஆகியன தீவிரமாக மதிப்பீடு செய்யப்படும். குறைவான செயற்பாட்டை வெளிப்படுத்தும் விலைமனுதாரர்கள் எந்த விலைமனுவையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.

09. எந்தவொரு விலைமனுவையும் தயாரிப்பதற்கான ஏற்படும் ஆகுசெலவு தொடர்பாக தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள எவ்வித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது. பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமானதொன்றை ஏற்றுக் கொள்ளவும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

10. தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள பூச்சியல் ஆய்விற்கான பிரதி பணிப்பாளரிடமிருந்து (தொலைபேசி: 0112-695686) மேலதிக பணிப்புரைகள் மற்றும் தள விஜயம்/ தெளிவுறுத்தல்கள் ஆகியவற்றை சேகரித்துக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம்,**
**இல. 53, மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,**
**கொழும்பு-07.**

## வாழ்வாதாரமா சேதாரமா 174



தமிழ்க் கவி பேசுகின்றார்

# அருமை பெருமையெல்லாம் இழப்பில்தான் தெரியும்

தமிழ் சிங்கள புத்தாண்டு வெகு லாவகமாக வந்து விட்டது. அதற்கு என்ன? தலைவலியா காச்சலா இல்லை கொரனாவா எதுவும் இல்லை. அது பாட்டுக்கு வந்துவிட்டது. தமிழர்களினதும் சிங்களவர்களினதும் ஒற்றுமைக்கு உதாரணமா? அந்த இரு இன மக்களும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கிராமங்களையோ நகரங்களையோ சென்று பார்த்து புரிந்து கொள்ளலாம்.

முன்னொரு காலத்திலே எங்கள் கிராமத்தில் இரு இன மக்களும் வாழ்ந்தோம் அவர்கள் புது வருடத்தை எப்படி அனுசரிப்பார்கள். நாம் எப்படி அனுசரிப்போம். என்றெல்லாம் எனது பேரப்பிள்ளைகளுக்கு சொல்லி மகிழ்ந்தேன். இடையில் ஒரு முப்பது வருடங்கள் எப்படி ஓடிப்போனது.

ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு. எமது வீடு முன் கிராமத்தில் இருந்தது. எமது சேனைப்புலவு ஒரு மைல் பின்னால் இருந்தது. இரண்டுக்கும் இடையில் ஒரு ஒழுங்கை முழுதும் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. போற வாற வழிதானே. அதோடு ஒரே கிராமம். அவர்களும் நாங்களும் செம்புலப் பெயல் நீர்போல அப்படி மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். அவர்களுடைய கோவில்களுக்கு நாங்களும் எங்களுடைய கோவில்களுக்கு அவர்களும் திருவிழா காண செல்வதுண்டு. அவர்களுடைய திருமண விழாக்களில் நாங்களும் எங்களுடைய திருமணவிழாக்களில் அவர்களும் கலந்து கூடி சமைத்துண்டு மகிழ்ந்தோம். ஆடை அணிமணி சூடி மகிழ்ந்தோம். அம்பத்தெட்டாம் ஆண்டு திடீரென நாம் அவர்களை சந்தேகக் கண் கொண்டு நோக்க அவர்களும் அதேபோல எம்மை நோக்க கலவரமில்லாமலே நாம் கலங்கி விலகினோம். அந்த கிராமத்தில் நாம் பெரும்பான்மையாக இருந்ததால் அவர்கள் வேற்றூருக்கு சென்றனர். ஆயினும் என்ன இப்போதும் அவர்களை எங்காவது கண்டால் கட்டித்தழுவி குசலம் விசாரித்து மகிழத்தான் செய்கிறோம் சின்ன வயது ஞாபகங்கள் எம்மை புளகித்து மகிழவைக்கிறது.

எத்தனை இன்பங்களை இழந்துவிட்டோம். அவற்றின் சுவையை எமது சந்ததிக்கு மறைத்து வைத்தோம். ஒற்றுமை, புரிந்துணர்வு அன்பு பரிமாற்றம் என்பதற்கெல்லாம் மொழியும் நாடும் தேவையா என்ன? எங்கோ ஒருவன் பதவியில் இருப்பதற்காக ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நஞ்சூட்டி விட்டானோ என்று எண்ணத் தோன்றுகிறது. எழுபதாண்டுகள் கடந்தும் அவர்கள் தெளிவாகத்தான் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை சம்பந்தம் சமபோசனம் கூடி வாழும் வாழ்க்கை. நாம்தான் எங்கள் வாழ்க்கையை தொலைத்தோம். தேடியும் கண்டடைய முடியாத சோக நினைவுகளை தாங்கி அல்லலுற்றோம்.

இப்போது சில வருடங்களாக மறுபடியும் அவர்களுடனான புது வருடக் கொண்டாட்டம். களை கட்டுகிறது. முகமூடிகள் அணிந்திருந்தாலும் சமூக இடைவழி பேணப்பட்டாலும் அன்புக்கு அடைக்கும் தாழ் இல்லைத்தானே. எல்லா இடங்களிலும் மக்கள் அன்பாகத்தான் இருக்கிறார்கள்.

ஆனால் ஊடகங்கள் அரசியல் பேசுவோர் அடிக்கடி மக்களைத்திரட்டி நியாயம் பேசுவோர் கூறுவதை பார்த்தால். இலங்கையில் இரண்டு ஏன் மூன்று இன மக்களும் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போலவே தோன்றுகிறது. இது போதாது என்று இப்போது மதங்களுக்கு இடையிலும் சின்னச்சின்ன தீப்பொறிகள் விழுகின்றன. சில பற்றிக் கொள்கிறது. சில அணைந்து போகிறது. அன்றாட வாழ்க்கையை வாழ்வதில் எவ்வளவு பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலை உள்ளது. அதைப்பற்றி யாரும் பேசக்காணோம். அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் ஆனைவிலை குதிரைவிலை.

ஆனாலும் என்ன? பயறு வாங்கி பயற்றம் பணியாரம் சுட்டோம். என்றால் ஆ அப்படியா? என்று வாயைப்பிளந்த என் அயல்வீட்டுக்காரி. 'நாங்கள் கேக் அடிச்சம் கேசரி கிண்டினம் லட்டு பிடிச்சம். என்று பச்சைத்தண்ணியில் பலகாரம் சுட்ட கதையை சொன்னாள். அதெப்படி மூன்று பலகார வகையிலும் மூலப்பொருள் இரவல். நமது மண்ணில் விளையாத பொருள். அது மட்டுமல்ல எமது பண்பாடு பழக்க வழக்கங்களை நமது சந்ததிக்கு தெரிவிக்கும் நிகழ்ச்சிகள் இந்த பண்டிகைகளும் எமது சடங்கு சம்பிரதாயங்களும்தான். நாம் தமிழர் என்பதும் நமக்கொரு பண்பாடு பழக்க வழக்கம் உண்டென்பதையும் தெரிவிப்பன இந்த பண்டிகைகள்தானே. அப்படியிருக்க எமது பண்பாட்டை எமது சந்ததிக்கே தெரியாமல் மறைத்து விடும் இந்த மக்கள் தாம் என்ன இனம் என்பதை மறந்து போகிற சந்ததிக்கு காரணமாகிறார்கள். புத்தாண்டு தினத்தில் இன்றும் பாற்சோறு சமைப்பதை நிறுத்தவில்லை. யாழ்ப்பாண மக்கள் தைப்பொங்கலைப்போல சித்திரைக்கும் பொங்கலிடுவதை வழக்கமாக கொண்டிருக்கின்றனர்.

தமிழர்களுடைய வழிபாட்டு சடங்குகளை படிப்படியாக நாம் மறந்து விட்டோம்.அங்கே பிராமண ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இன்னமும் சைவ வெள்ளாளர் பூசை செய்து கொண்டிருக்கும் கோவில்கள் வன்னிக் கிராமங்களில் உண்டு. ஆனால் அங்கேயும் திருவிழா அன்றைக்கு கடமையாற்ற ஒரு பிராமண குருக்கள் அழைக்கப்படுகிறார். ஏன் என்றால் 'சனத்தை திருத்தி செய்ய வேணுமே'என்கிறார் பூசகர்.

ஆக மக்கள் சிறீமான் பொது ஜனம் இப்போது வாழ்வது சொந்த மண்ணிலென்றாலும் அவர்கள் மேல்நாட்டு மோகத்துடன் வாழ்கிறார்கள். என்அம்மா ஐம்பது அறுபது வருடத்துக்கு முன்பே சொல்வாள். 'சனம் இங்கிலீசும் ஸ்ரைலுமா திரியிறதப் பாத்தா தாங்கள் அய்ரோப்பாவிலதான் பிறந்தம் எண்டு சொல்லிருங்கள். என்ன செய்யிற தோல் கறுத்துப் போச்சு'என்று.

உலகம் முழுதும் சென்று வாழ்ந்தாலும் இன்றைக்கு வெளிநாடுகளில் வாழ்வோர் எமது கலாச்சார உணவு வகைகளையம் உடைகளையும் தேடி அணிகின்றனர். அதேபோல எமது கலாசார விழாக்களையும் அனுசரிக்கின்றனர். தனியே பாடசாலைகள் அமைத்து தமிழ் மொழியை கற்பிக்கின்றனர்.

இதே வகையில்தான் அவர்களுடைய புத்தாண்டுக் கொண்டாட்டமும் அமைகிறது. பலகாரக்கடையில் அரியதரம் முறுக்கு பயற்றம்பணியாரம் என்பவை விற்பனைக்கிருக்கிறதாம். அது தவிர யூரியூப் சானலில் இந்த தமிழ் பலகாரங்கள் செய்வது எப்படி என்று பல பதிவுகள் வந்துள்ளன. சிரிக்காதீங்க. ஒரு கிராமத்து பழமொழி நினைவுக்கு வருதா..

"அப்பன் மாண்டா தெரியும் அப்பன் அருமை. உப்பு சமைஞ்சா தெரியும் உப்பின் அருமை" சொந்த நாட்டின் அருமை பெருமையெல்லாம் அதன் இழப்பில் தெரிகிறது. இதில் திரும்பவும் தாய்நாடு திரும்ப முடியாதவர்களும் அடக்கம்.

எமக்கென்ன எவ்வளவுதான் சோகங்களை சுமந்தாலும் சொந்த மண்ணில் வாழும் பேறு கிடைத்திருக்கிறது. ஆனால் இங்கிருந்து அங்கத்தைய வாழ்க்கையை கனவு காண்போர் போலவே அங்கே இருந்து கொண்டே இங்குள்ள வாழ்க்கையை கற்பனை செய்வோரையும் குறிப்பிடலாம். இவை அனைத்துக்கும் என்னதான் காரணம் நாம் எமது அயலானை நேசிக்க முடியவில்லை முயலவில்லை என்பதுதான். எமக்கு தெரியாத எனைய மொழிகளை கற்றுக்கொண்டு அங்கேயும் இரண்டாம் மூன்றாம்தர பிரசைகளாக வாழத்தான் செய்கிறோம். அது எமக்கு சுமையாகத்தான் இருக்கிறது. ஆனால் விதி வலியது..

அப்பாடா எனது அயல்வீடான செனுதி வீட்டில் பட்டாசு கூட்டம் கூட்டமாக வெடிக்கிற சத்தம் காதைப்பிளக்கிறது. மிக அழகாக தூய தமிழில் பேசும் அந்த ஆறு வயது சிங்களச்சிறுமி அவளது தம்பியை கையில் பிடித்தவாறே என் வீட்டுக்கு ஓடி வருகிறாள். ஒரு நேரம் அத்தம்மா என்பாள். ஒருநேரம் பாட்டீ என்பாள். மகிழ்ச்சி என்பது இதுதான். இன்பமெங்கே இன்பமெங்கே என்று தேடு அது எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு. அன்புதான் இன்ப ஊற்று.



## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்



# பறக்கும் வடை

வெயில் "சுள்"ளென்று எரித்தது; மாரி கால வெயிலுக்கு எப்போதுமே ஒரு வரவேற்பு இருக்கும்; பொதுவாக மனிதர்களின் மனங்கள் ஒரு நிலையில் இருப்பதில்லை எதையும் எப்போதும் ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பதுமில்லை வெயில் காய்ந்தால் அதைத் தாங்கிக் கொள்ளாமல் "என்ன வெயிலப்பா இது? இன்னும் மழையைக் காணவில்லையே.." என்று ஏங்குவார்கள்; மழை பெய்யத் துவங்கினால்"சே " கொஞ்ச நேரமாவது இந்த மழை வெட்டார்ந்து வெயில் விழாதா எனப் பரிதவிப்பார்கள்; தொடர்ச்சியாகப் பெய்த மழை அன்று கொஞ்சம் ஈவு கொடுத்தது; சம்பலோடு சேர்த்து உம்மா கீரை வடை போட்டார்; அவசரமாக வீட்டுக்குள் நுழைந்த வாப்பா வந்த கதியோடு பிய்ந்துபோய்க் கிடந்த சாய்வு நாற்காலியில் தலையணையைப்போட்டுக் கெழிந்து வடையைச் சம்பலில் தொட்டுத் தொட்டுத் தின்றது, இப்போது மழை பெய்தாலும் எழும் புழுதி மனத்தில் எனக்கு அந்த ஞாபகங்கள் துளிர்க்கும்..

உளுந்து வடையைப் பார்க்க வேண்டுமென்றால் மேற்கே பள்ளி எதிர் சுலைமான்ட தேநீர் கடைக்குத்தான் போக வேண்டும்; அங்கு உளுந்து வடை ஒரு முறத்தில் கிடக்கும்; கடையின் பின் பக்கம் உட்கார்ந்து சீட்டாட ஓர் இடம் இருக்கும்; வீட்டுக்கு யாராவது வந்துவிட்டால் மாமி என்னை அங்குதான் அனுப்புவார்; "சுலைமான்ட கடையில சீட்டாட்டம் நடக்கும் போய் கூட்டிட்டு வா.." என்பார்; நான் சென்று சீட்டாட்டத்தை ரசிப்பதுமாதிரி நின்றுகொள்வேன்; மூன்றும் ஒன்றும் நான்கு என்று கூட்டி எடுப்பதுதான் சீட்டாட்டம் என்று நினைப்பேன்; ஒரு கடதாசி விசிறிபோல் ஒவ்வொருவரும் கையில் பிடித்திருக்கும் சீட்டுக்களில் அப்படித்தான் வரிசைக் கிரமத்தில் எண்களும் ஆங்கில எழுத்துக்களும் அடங்கித் தெரியும்; குருத்து மணல் பரப்பி மணல் கலைந்து போகாதிருக்க நான்கு சட்டகங்களிலும் தென்னங் குற்றிகள் போட்டிருப்பார்கள்; "ஜோக்கர்" என்று எழுதப்பட்டு வயிறு துருத்திய ஒருவரின் படம் அச்சிட்ட இரண்டு கார்ட்டுகளைப் புறம்பாக மணலில் குத்தியிருப்பார்கள்; மாமா ஆட்டத்தை முடித்துக் கொண்டு வரும்வழியில் எனக்கு முள்ளி மிட்டாய் வாங்கித் தருவார்; "மாமி ஏன் சுணங்கியது." எனக் கேட்டால் "காலைக்க நின்றவரைக் கூட்டிட்டு வாறேன் என்று சொல்லு.." என்பார்..

அந்த வடை சுடும் இடம் எங்கள் வீட்டின் பக்கத்தில் தான்; அதனோடு ஒட்டியதாக ஒரு பேக்கரியும் இருந்தது; அதன் குசினி மேலே அருமையான புகை போக்கியும் கட்டி விடப்பட்டிருந்தது; என்றாலும் அந்தப் புகைக்கு அதன் வழியாகப் போவதற்கு கொஞ்சம் கூட இஷ்டமில்லை; பல சமயம் ஈர விறகினால் புகை கிளம்பி சங்கடம் வருவதும்தான் அது கலைந்து எங்கள் முற்றத்திலும் ஒரு சுற்றுச் சுழன்று விட்டுத்தான் நகரும்; ஒரு நேரம் பஞ்சு ரோமங்கள் உயிர் பெற்று எழுந்து மேல் நோக்கிப் பறந்து வேகமாகப் புகைக் கூண்டின் வழியாக வெளியேறிப் போவதை பார்த்து ஆனந்தக் கூச்சலிடுவேன்..

வீட்டுக்குள் தனியாக விளையாடி அலுத்துவிட்டால் எதிரே ஒரு பெரிய வெளித் திடலிருக்கிறது; அந்தத் திடலுக்குச்சென்று படர்ந்து கிளை பரப்பியிருக்கும் தூக்கு மூஞ்சி மரத்தின் கீழ் அமர்ந்து கொள்வேன்; வேகமாக வீசும் காற்றில் ஒரு பக்கமாக உடுத்தியிருக்கும் சேர்ட் எவ்விப்போய் ஆளை இழுக்கும்; ஒரே வரிசையில் புங்க மரமும் கூடவே அத்திடலுக்குத் தகுதியான நிழலைத் தந்துவிடும்; அங்குதான் வடை மைனரும் ஒரு கண்ணாடிப் பெட்டியில் "பறக்கும் வடை" வைத்திருப்பார்; அவர் நிற்கும் இடத்துக்கு என்னைக் கடக்கும் காற்றே அங்கு இழுத்துச் செல்லும்; அந்தப் பெரு மரத்தின் போருக்குள் நின்றே அவர் வியாபாரத்தை முடிப்பார்; காலையில் பறவை பிடிப்பவர்கள் வந்திருப்பார்கள்; அவர்கள் ஆளுக்கொன்றை வாங்கி வைத்துச் சுவைத்து உண்பார்கள்; பின்னர் பிடித்த பறவையின் கால்களில் இரண்டு மூன்று வடைகளைக் முடிந்து நெடிய நூல்களில் பறவைகளை விடுவார்கள்; அவை பறந்து உயர்ந்த மரமொன்றில் தங்கி நிற்கும்; அதன் கால்களில் உள்ள வடைகளைக் கொறிக்க ஏனைய பல பறவைகள் அவ்விடம் கூடும்; அந்நேரம் வலு மிக்க கட்டப்பொல்லினால் குறி பார்த்துத் தெறிப்பார்கள்; பறவைகள் கீழே விழும்; இந்த யுக்தியை கொண்டாடவே "பறக்கும் வடை" என்று பெயர் வந்ததாக அங்குள்ளோர் கூறக் கேட்டடிருக்கிறேன்...

இன்றும் அப்படித்தான்; வழக்கமாக மாடுகளை மேயவிட்டு இளைப்பாறும் ஷரீப் மாமாவோடு வயலுக்குச் சென்றால் எந்நேரமும் வடை சுடும் வாசம் பரவிக் கொண்டே இருக்கும்; மரங்களின் நிழல்களிலிருந்து வெயிலைச் சுமக்கும் வயல்களில் நடப்போம்; வரப்புகளைத் தாண்டுகையில் மாத்திரம் வடை வாசம் தடைப்படுகிறது; வயல்களின் ஒரு முனை முடிந்த நிலையில் ஒற்றையடிப் பாதையைக் கடக்கையில் சலசலப்போடு ஆறு ஓடிக் கொண்டிருக்கும்; வடை பொரியும் மணம் முன்பை விட அதிகமாகிக் கூடவே கிழங்கு அவிந்து ஆவி வெளியேறும் வாசமும் வருகிறது; சுற்றிலும் தேடுகிறேன்; வடையோ கிழங்கோ எதுவுமே அங்கு இல்லை; வாசம் உடலெங்கும் புகுந்துகொள்ள மூக்கைக் கூர்மையாக்கிச் சுவாசிக்கிறேன்; ஆற்றில் வலது காலை நனைத்தபடி "மருமகன் இங்கு வடை விற்கவோ வாங்கவோ யாருமில்ல, இன்னா வாற மணம் மரங்களுடையது.." வீதிக்கு ஏறுமுன் "இதுதான் அந்த மரமா?" என ஒவ்வொன்றாகப் பார்த்து ஏமாந்திருக்கிறேன்; "அது எந்த மரமென்று யாராலும் கண்டு பிடிக்கவே முடியாதாம்.." என்று மாமா சொல்லிக் கொண்டு வந்தார்...

மரங்களின் இறக்கைகளின் கீழ் நின்றுகொண்டு மனிதர்கள் ஆங்காங்கே பேருந்தை வழி மறிக்கப் பார்ப்பார்கள்; அவர்களிடமிருந்து சற்றுத் தள்ளி அடர் மீசையோடு பெட்ரீஷ் நின்றிருப்பார்; கையில் அகலமானதொரு வேஷன் வைத்திருப்பார்; அதன் முக்கால் பகுதிவரை இறால்வடை, போண்டாவடை, மசாலாவடை என அடர்ந்திருக்கும்; கூடவே 'சிக்னல்' விளக்கின் நிறமொன்றையொத்த மோர் கொச்சிக்காய்கள் பொரித்து அவை அடுக்கப்பட்டிருக்கும்; பேருந்தில் அவரும் ஏறிக் கொள்ளப் பயணிகளின் மன நிலையை அவரின் உறைப்பான வடைகள் கீறிக் கொண்டிருந்தன; இவரே பேருந்து நிறுத்தும் இடங்களிலும் "வடவட வடேய்" "வடவட வடேய்" "வடவட" என்று சரணம் தப்பாமல் ஒலிகளை உருட்டி விடுவார்; பின்நாட்களில் பெட்ரீஷிக்கு வாய்த்த இடமாகத் தாஜ் மஹால் தியேட்டரை மாற்றிக் கொண்டார்; படம் ஓடி இடைவேளை நேரத்தில் திடுமெனத் தோன்றி பக்கவாட்டு ஓரமாக நடந்துவருவார்; வியாபாரம் அதிகரித்த வேளைகளில் படம் தொடக்கி விட்டால் ஒளிக்கதிர்கள் பட்டுத் திரையில் வேஷனுடன் இவர் நிழலுருவம் பென்னம் பெரிதாக அசையும்; ரசிகர்களின் கூப்பாட்டுடன் "எக்சிட்" வழியாக வெளியேறுவார்...

இலந்தை மரங்கள் எப்போதாவது கண்ணில் படுகின்றபோது ஆச்சரியமடைவேன்; எங்கள் வீட்டில் நின்றிருந்த இலந்தை மரம்போல் விரிந்து முள்ளைப் பரப்பியபடி இல்லாமல் இவை நெருங்கிப்போய் தெரிந்தது; இலந்தை மரம் என்றால் அது கைகளைக் குத்திக் கிளறி இரத்தம் உண்டாக்குவதுதான் நினைவுவரும்; பெரிய பள்ளி எதிர் ஆல மரத்தடியில் மௌஜுன் சாக்கு விரித்து, அதன்மேல் மிட்டாய் போட்ட கண்ணாடிப் போத்தல் ஒன்றும் இலந்தைப் பழம், நெல்லிக்காய், கடலைக்காய் இவற்றை வைத்திருப்பான்; ஓட்டைக் காசைச் சேர்த்து ஒரு சிறு மாலைபோல் போட்டிருப்பான்; நானும் இரண்டு மூன்று கைக் குத்தளவு இலந்தம்பழம் வாங்கி மூத்தம்மாவிடம் கொண்டு ஒப்படைப்பேன்; அவர் இலந்தைவடை சுடுவதில் மகா கெட்டிக்காரி; அதில் எண்ணெய்யும் காய்ச்சுவார்கள் சிறு தடிமலுக்கு உம்மா அதன் எண்ணெய்யை என் வாயிலிடுவார்; வழவழப்புக் காரணமாக நெளிவேன்; "துப்பிராதே" என்று கெஞ்சுகிற விதமாய் பார்ப்பார்; ஒருவிதப் புளிப்பாய் இலந்தம்பழ ருசி தொண்டையில் இறங்கினாலும் இலந்தை வடை, அது என்னமோ மாதிரிப் பிசு பிசுப்பாயிருக்கும்; தின்னத் தின்ன அதி மதுரச் சுவைதான்; நினைத்தால் நாவு இப்போதும் கேட்கிறது...

ஒருநாள் பள்ளி விட்டதும் சற்றே விரைசலாய் நடக்க ஆரம்பித்தேன்; என் வழியில் இடை மறித்தபடி புறாக்கூட்டுச் சந்தியருகில் நின்றிருந்தார் நண்டும்மா; ஒரு மாட்டுத் தாள் பேக்கில் நிறையத் தயிர் வடை வைத்திருந்தார்; அவர் முகத்தைப் பார்த்ததும் பரிதாபமாக இருந்தது; தன் கண்கள் இருட்டுவதாகச் சொல்லி அப்படியே உட்கார்ந்து விட்டார்; நானும் தரையில் குத்துக்காலிட்டு நின்றுருந்தேன்; எப்படியும் வீதியில் சென்றோரிடம் உதவி பெற்று அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்; என்றாலும் அவரின் வேண்டுதலுக்குத் தயிர் வடைகளை குறித்தவரிடம் ஒப்படைக்க முடியாமல்போனது; ஒரு பாழ் வளவில் வீசிவிட்டு வீட்டுக்குப்போய் சீக்கிரம் தூங்க ஆரம்பித்தேன்; அவர் தந்து விட்டுப்போன தயிர் வடைகள் பற்றி எப்போதாவது கேட்பார் என்று பயந்து கொண்டே இருந்தேன்; இரண்டு நாட்கள் கழிந்து பள்ளி நேரம் முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது நண்டும்மா மரணித்து அவர் உடலம் கடற்கரைப் பள்ளி மையவாடிக்கு கொண்டு செல்லப்படுவதைக் கண்டேன்; என் கன்னத்தில் வழிந்த நீரை அன்று யாருமே கண்டு கொள்ளவில்லை; "நண்டும்மாட தயிர் வடைபோல் இன்னும் நான் காணல்ல, அது தனிச் சுவையும் பஞ்சுபோன்ற மென்மையும்.." என்று வாப்பா வேறொரு தயிர் வடையை வாயில் அடக்கிக்கொண்டு சொல்வதைக் கேட்கச் சிரமமாக இருந்தது.







தமிழ்நாடு திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத இதழ் பல்வேறு நாடுகளில் உள்ள இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து பல இலக்கிய நிகழ்ச்சிகளை செய்து வருகிறது அந்தமான் தமிழர் சங்கத்துடன் இணைந்து 10/04/2021 அன்று அந்தமா இலக்கிய சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது விழாவில் அந்தமான் தமிழ் இலக்கிய சங்கத் தலைவர் கவிஞர் கிருஷ்ண மூர்த்தி அந்தமான் தமிழர் சங்கத் துணைத் தலைவர் தமிழ்ச்செல்வன் செயலர் கோ.காளி தாசன் மற்றும் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இனிய நந்தவனம் மாத இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தமான் சுற்றுலாவில் கலந்து கொண்ட பல்துறை சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது

# அந்தமானில் இனிய நந்தவனம் இலக்கிய சந்திப்பு



# கசப்பும்... இனிப்பும்...



– தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு

நான் செய்த பாக்கியமோ அல்லது துர்ப்பாக்கியமோ புரியவில்லை, நூலொன்று பார்வையில் பட்டு, என் மிக மதிப்பிக்குரிய 'ஒரு' பேராசிரியப் பெருந்தகை கட்டுரையைப் படிக்க நேர்ந்தது.

அது பெரிய அதிர்வலைகளை அளித்தது. நூலின் பெயர்" **'புரட்சிக்கமால் கவிதைகள் – பன்முகப்பார்வை"** தொகுப்பாசிரியர், **கலாநிதி ஸாதியா பௌஸர்.** தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர்.

நியாயப்படி பேராசிரியரின் கட்டுரை இந்தத் தொகுப்பு நூலுக்குத் தேவையற்றது. தலைப்பைத் தந்தால் அபிமானிகளும் ஒத்துக் கொள்வீர்கள்.

**'மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றிலே புரட்சிக்கமாலின் சிறுகதைகள்"** என்பது.

'புரட்சிக் கமால் கவிதைகள் பன்முகப் பார்வை" என்றதொருதலைப்பில் தொகுப்பு நூலைப் பதிப்பிக்கும் பொழுது மேற்கண்ட தலைப்புக்கு என்ன அவசியம் நேர்ந்தது? என்ன தேவை ஏற்பட்டது?

கலாநிதி அம்மையாருக்கே அது வெளிச்சப்படும்.

ஒரு நான்கு பக்க திறனாய்வு அது. சில பகுதிகளைத் தேர்ந்து தருகிறேன்.

**"புரட்சிக்கமால் கவிஞராக மட்டுமே நன்கறியப்பட்டவர்.**


**ஆயினும், அவர் கவிஞர் மட்டுமல்லர். சிறுகதை எழுத்தாளருமாவார்.**

**அவர் சிறுகதை உலகினுள் பிரவேசித்த காலம் (1945- 50) நாற்பதுகளின் பிற்பகுதியாகும். மட்டக்களப்பில் சிறுகதை தோற்றம் பெற்ற காலமும் அதுவாகும்.**

**புரட்சிக்கமாலின் சிறுகதைகளில் முஸ்லிம் சமூகத்தின் குறைபாடுகள், பிரச்சினைகள் என்பன உள்ளடக்கமாகத் திகழ்ந்தன.**

**குறிப்பாக பொருந்தா மணம், சீதனம் என்பவற்றால் முஸ்லிம், பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்,பெண்ணுரிமைகள் முதலியன பற்றி பேசுவனவாக அவை காணப்பட்டன.**

இவ்வாறு வர்ணிக்கும் "புலமை மிகு பேராசிரியர், கவிஞரின் இரு சிறுகதைகளைக் கவனத்திலெடுத்துக் கொண்டுள்ளார்.



பாரதி

சதிகாரி?

எம்.எம். ஸாலிஹ்

**'மனிதன்' – 'சதிகாரி'** என்பன அவை. 'மனித'னை மறப்போம். (நாம் அனைவருமே சக மனிதனை மறக்கிறவர்கள் தானே!") 'சதிகாரி'யை மட்டும் அடையாளம் சாண்போம்.

அவளைப்பற்றிப்! பேசுவோம்

'நஸீமா' என்ற அவள் யார்? ஓரிரு வரிகளிலும் சொல்லி விடலாம் அவளுடைய முழுச் சோகக் கதையையும் கூடப் பிரசுரித்து விடலாம். ஒரு குறுங்கதை எழுதிய **'ஸாலிஹ்'** என்ற புரட்சிக்கமால் என்ற கவிஞருக்கு, என்ட இளைமைக்கால இனிய நண்பனும், முதன் முதல் **'முஸ்லிம் சிறுகதை மலர்'** தொகுத்து வரலாறு படைத்து அகால மரணத்தை எதிர்கொண்ட **யூ.எல். தாவூத்** பிறந்த ஊரே. **'ஏரூர்'** என அழைக்கப்படும் **ஏறாவூர்.**

அந்தப் புரட்சிக் கவிமணி – கதைக்குள்ளும் நுழைந்து தன் 21ஆம் அகவையில் 'சதிகாரி' நஸீமாவைப் புரட்சிகரமாக பெற்றெடுத்தார். இன்றையப் பலருக்கும் அதிசயமான தகவலாக இது அமையும்.

அவரது கதை என்ன சொல்கிறது? அதை விவரித்ததும் அதிர்ச்சியும் ஆத்திரமும் ஒரே சமயத்தில் ஏற்படும்!

**சூரியோதயத்திற்கு, இன்னும் இரண்டொரு மணித்தியாலங்களேயிருந்தன. ஆனால் நஸீமாவை மட்டும் தூக்கம் அணைத்துக் கொள்ளவில்லை. படுக்கையிற் கிடந்த அவளுடைய இதயம். குமுறிக்கொண்டிருந்தது. மெல்லத் தனது தலையையுயர்த்திக் பக்கத்தில் படுத்திருப்பவனை பார்த்தவள் கணவன் என்பவன் சமாதி நிலையிலே தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய குறட்டைத் தொனியைத் தவிர எங்கும் நிசப்தம் நிலவியது.**

**மங்கிய வெளிச்சத்தை வழங்கிக் கொண்டிருந்த விளக்கொளியைத் தூண்டி கணவனின் முகத்தைக் கவனித்தாள். வயோதிபத்தைக் காட்டும் நெற்றிக் கீறல்களையும், கன்னங்களின் சொடிவையும் அவளாற் சகிக்க முடியவில்லை. இதய ஆழியிலிருந்து பீறிட்ட பெருமூச்சு "மரக்கட்டையில் செய்த பொம்மை" என்றது.**

**கட்டிலுக்குப் பக்கத்தில் மேசையிலிருந்த பால் கோப்பையைப் பார்த்தாள். அது அவளைப் பார்த்து எக்காளமிட்டு பேசுவதைப் போல் இருந்தது.**

**"நஸீமா பேதைப் பெண்ணே! இழந்தால் மீளமுடியாத இன்ப இரவை. அனுபவிக்கும் தகுதியற்றவளாகி விட்டாயடி. பன்றியின் முன் முத்துக்களைத் தூவும் சமூகத்தில் உங்கள் நிலையே இப்படித்தான்".**

**ஆம். இரு உள்ளங்களின் நீடிய அபிலாசைகள் சங்கமமாகும். ஒரு மகத்தான இரவு, குதூகல இரவு, முதல் இரவு அவளுக்குக் கிடைக்கவில்லை. ஏக்கம் தோய்ந்து உள்ளம். கெட்ட நினைவுகளைக் கொண்டு வந்து கொடிய செயலொன்றைச் செய்யத் தூண்டியது.**





**பழம் வெட்ட வைக்கப்பட்டிருந்த கூரிய கத்தியைக் கையிலெடுத்தவள், அந்த 'மரக்கட்டை'யில பாய்ச்சினாள். இரத்தம் பீறிட்டடித்தது. இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் ஒவ்வோர் காட்சிகள் நடனமாடின.**

**அடுத்த சில நிமிடங்களில் அவள் செய்த காரியம், சிறிதும் தாமதிக்காமல்,கத்தி முனையைத் தன் மார்புக்குத் திருப்பிக் கொண்டாள். அவளுடைய இன்ப மார்பிலே, இரத்தக்கேணி முளைத்தது. சாட்சிக் கூண்டிலேறாமல், எந்த நீதிபதிக்கும் தொந்தரவு கொடுக்காமல் தன் வாழ்க்கையைத் தானே முடிவு செய்துவிட்டாள். தனது இன்ப இரவை மகத்தான மாதியில் புதைத்து விட்டாள்! அதில் அவளுக்கு எவ்வளவோ ஆனந்தம்.**

- இவ்வளவே கதை! உங்களுக்கும் ஆனந்தம் ஏற்படுகிறதா? அல்லது வேறேதேனும் உணர்வுகள் உண்டாகிறதா?

நிச்சயத்திலும் நிச்சயமாக இஸ்லாமிய மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்குப் பயங்கரமான உணர்வு அலைகளைக் கொடுக்கும்.

காரணம் அவர்களது மார்க்கம் விலக்கி வைத்திருக்கும், தடை செய்திருக்கும் 'இரு பாதக காரியங்களை' ஒரு முஸ்லிம் பெண் செய்திருப்பதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஒன்று, சட்டப்படியான கணவனைக் கொன்றது. இரண்டு, தன்னைத் தானே மாய்த்துக் தற்கொலை செய்தது!

இரண்டுக்கும் இஸ்லாமியமார்க்கத்தில் இடமில்லை. அனுமதியில்லை!

முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டும் புனித நூலாம் **அல்குர் ஆனில், 02ஆம் (அல் பகரா) 04ஆம் (அன்னிஷா), 05ஆம் (அல் – மாயிதா)** ஆகிய அத்தியாயங்களில் இது சம்பந்தமான இறையோன் அருளுரைகள் காணப்படுகின்றன.

அவற்றின் சில வரிகள் மட்டும் இங்கே பார்வைக்கு.

- **" உங்களை நீங்களே ஆபத்திற்குள்ளாக்கிக் கொண்டு) உங்களது கரங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்.அல் – பகறா 02195ஆம் வசனம்.**
- **" உங்களையே நீங்கள் கொலை செய்து கொள்ளாதீர்கள்..." அன்னிஸா 04 29ஆம் வசனம்**
- **" எவர் ஒருவர் விசுவாசியை வேண்டும் என்றே கொலை செய்தால் அவருக்குரிய கூலி நரகமாகும்...."
அன்னிஸா 04 93 – ஆம் வசனம்**
- **" எவர் (நியாயமாக மற்றொருவரை) கொலை செய்கின்றாரோ, அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவர்..." அல் மாயிதா 05 32ஆம் வசனம்.**


இப்படி அல் குர் ஆனில் கொலைக்கும் தற்கொலைக்கும் தடை இருப்பதை எப்படி ஓர் ஆசிரியமணி, கவிமணி, தெரியாமல் புரியாமல் கதை எழுதப் புறப்பட்டார் என்ற பெரும் புதிரும் வினாக்களும் எழும்புகின்றன.

கதை எழுதியவர் இப்பொழுது எம்மை விட்டு மறைந்துவிட்டார். எழுதப்பட்ட காலமும் 72 ஆண்டுகளுக்கு முன் மட்டக்களப்பு மண்டூரிலிருந்து வெளியான இலக்கிய சிற்றிதழான **'பாரதி'** 09ஆம் இதழில் பிரசுரம்.



காலஞ்சென்ற பண்டிதர் ம. நாகலிங்கம், கு.தட்சிணாமூர்த்தி ஆகியோரும் நம்மிடையே வாழும் ந. செபரத்தினம் மூத்த எழுத்தாளரும் பதிப்பாசிரியர்கள். பின், "பாரதி"யின் முழுத் தொகுப்பும் கலாநிதி சின்னத்தம்பி சந்திர சேகரம் முயற்சியில் 2016ல் வெளியிடப்பட்டு விழா கண்டுள்ளது.

இந்தக் கதையையே, ஏற்கெனவே குறிப்பிட்ட பேராசிரியர் அய்யா (முஸ்லிம் இலக்கியங்களில் அக்கறையும் ஆர்வமும் உள்ளவர்) மண்முனை வடக்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினரின் வருடாந்த சஞ்சிகை 'தேனகம்" என்பதில், 2000ல் (21 ஆண்டுகளுக்கு முன்) **"மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றில்** புரட்சிக்கமாலின் சிறுகதைகள்" சிறப்புக் கட்டுரை



வழங்கி, இந்த இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரணான கதையைச் சிலாகித்து 4 பக்கத் திறனாய்வைச் செய்துள்ளார்.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட இலக்கியம்சார் அனைவரும் இஸ்லாமிய நெறிமுறைகளை அறியாத, புரியாத நிலையிலேயே முஸ்லிம் வாசகர்கள் ஜீரணிக்க இயலாத ஒரு காரியத்தைச் செய்துள்ளனர்.

அத்தோடு, அன்றைய முஸ்லிம் வாசகர்களும் 'பாரதி' இதழைத் தொடாதவர்களாக இருந்திருக்க வேண்டும். இருந்திருந்தால் எதிர்ப்பு ஏற்படாதிருந்திருக்குமா? போகட்டும் அவர்கள் அத்தனை பேரையும் மன்னிப்போம்.

ஆனால்... கதை எழுதிய 'பென்னாம் பெரிய ஆளுமை' புரட்சிக்கமால் எம். எம். ஸாலிஹ் என்பரை அவ்வாறு விட முடியுமா? ஏன் இப்படி மார்க்கத்திற்கு விரோதமான படைப்பை வழங்கினார்.

சரி அவரும் நம்மத்தியில் இல்லாத படியால் எந்த விரலையும் அவரை நோக்கிச் சுட்ட நமக்கு அனுமதியில்லை.

கடைசியாக நம் முன்னே காட்சி அளிப்பது, ஆரம்பத்திலேயே அறிமுகமான தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழி......... தலைவர் திருமதி ஸாதியா பௌஸரே!

கலாநிதியாக ஒரு பொறுப்பான பதவியில் உள்ள அவர், **"புரட்சிக் கமால் கவிதைகள் பன்முகப்பார்வை"** பார்த்துத் தொகுத்தது நல்ல முயற்சி. என்றாலும், சம்பந்தமே இல்லாமல் 'படைப்பிலக்கியப் பார்வையும் பார்க்கச் செய்து, அதற்காக 21 ஆண்டுகளுக்குமுன் ஒரு பேராசிரியரால் திறனாய்வு கண்ட கட்டுரையை மறுபிரசுரத்திற்கு, உள்ளாக்கியது ஏன் என்பது ஒரு கேள்வி.

இன்னொன்று அந்தக் கட்டுரையில் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரணான ஒரு கதை திறனாய்வுக்குள்ளாகி கண்டனத்திற்கு ஆளாகாமல் பாராட்டப்பட்டிருப்பது பார்வையில் படாது 2020ல் மறுபதிப்புக்குள்ளான மர்மம் என்ன?

நல்லது! நல்லது! சென்றவை சென்றவைகளாகட்டும். அவர் அதை நூலிலிருந்து நீக்கிவிட நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது.

நூல் இன்னும் விழா காணாவில்லை. வாசகர் கரங்களைச் சென்றடையவில்லை. சுற்று வட்டத்தினர் மத்தியிலேயே சுற்றுலா! நான் பெற்றதோ அவன் எண்ணப்படியும் திட்டப்படியும்!

கடமையைச் செய்வாரா கலாநிதி.

இந்தக் கசப்பை நிறுத்த முன் ஒரு மர்மத்தை உடைத்து விடுகிறேன். கதையை மிகவும் சிலாகித்து 21ஆண்டுகளுக்கு முன் திறனாய்வு புரிந்த பேராசிரியர் அய்யா நம் பெருமதிப்பிற்குரிய **செ. யோகராசா!** அவர் அறியாத புரியா தவறு!

ஓர் ஏமாற்றம்

அபிமானிகளுக்கு...

ஒரு கசப்பே முழு பத்தி எழுத்துப் பக்கத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டதால் 'இனிப்பு'க்கு இடமில்லாது போனதற்கு வருந்தி மன்னிப்பு விரும்புகிறேன்.

★ நன்றி சொல்வேன்! ஏரூர் **கவிஞர் நௌஷாத்துக்கு** 'பாரதி' இதழ்முகப்புகள் கிடைக்கச் செய்தமைக்கு!





# பெரிய மனிதர்களின் வீடுகளில் நடக்கும் அசிங்கம் பொது வெளிக்கு வரும்போது துடிக்கிறது அங்கம்!

ஒரு வித பாவனையுடன், அருகில் வந்து நின்ற அமைச்சரை விழிகளைத் தாழ்த்திப் பார்த்தாள் மலர்விழி.

"என்ன ஏதோ ஐடியா மாதிரி தெரியுதே...!" அவள் அதரங்கள் மெல்ல அசைந்தன.

"இல்ல மலர்.... எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை...." நெருங்கி வந்து அவள் விழிகளைக் கூர்ந்து பார்த்த படியே சொன்னார் அமைச்சர்.

"அது தான் அடிக்கடி வந்து தீர்த்துக் கொள்றீங்களே...!"

"இல்ல மலர் இது வேற ஆசை...!" அவள் தலையை மெல்ல தடவிய படியே சொன்னார்.

"அது என்ன அப்படிப்பட்ட ஆசை...!" இதழ்களைப் பிதுக்கினாள் மலர்விழி.

"நமக்குன்னு ஒரு குழந்தை வேணும்...!" சொல்லி விட்டு,

மலர்விழியின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை கவனித்தார். அவர் சொன்னதைக் கேட்டதும்,

மலர்விழிக்கு தூக்கி வாரிப்போட்டது.

புருவம், விஜயனின் வில்லானது.

"இல்லாத ஊருக்கு வழிகேட்கிறீங்க"

"இல்ல மலர்... நான் நடக்க கூடியதைத்தான் சொல்றேன்!".

"உங்களுக்குதான் குழந்தை இருக்கே.... அப்புறம் ஏன் இந்த ஆசை...?"

"எனக்குன்னு ஒரு குழந்தை வேணும்னு நான் சொன்னதை நீ கவனிக்க வில்லையா....?"

"அப்போ அந்தக் குழந்தை...?"

வியப்பை

விழிகளில் கட்டிக் கொண்டாள் மலர்விழி.

"பெரிய வீடுகளில் நடக்கிற அசிங்கங்களில் இதுவும் ஒன்று...

"என்ன சொல்றீங்க....?"

"வெளி உலகிற்குத்தான் நாங்கள் இருவரும் இணைபிரியா தம்பதிகள் ஆனால்... வீட்டுக்குள் உள்ளத்தால் மட்டுமல்ல உடலாலும் இணைந்ததில்லை....!"

"அப்புறம் ஏன் இந்த போலி வாழ்க்கை....!"

"அரசியல்வாதிகளின் வாழ்விலும் செல்வந்தவர்களின் வாழ்விலும் தவிர்க்க முடியாதது இது...!"

"மனக்கசப்புடன் வாழும் இப்படி ஒரு வாழ்க்கை தேவையா.... விவாகரத்து பண்ணவேண்டியது தானே!

"முடியாது... அப்படி செய்தால் சமூக அந்தஸ்து கெட்டுவிடும்.... அதனால் தான் இந்த போலி வாழ்க்கை...!"

அமைச்சர் சொன்னதைக் கேட்டுவிட்டு,

அழுவதா சிரிப்பதா என்று மலர்விழிக்குத் தெரியவில்லை!

"பெரிய இடத்து விஷயங்கள் எல்லாம்,

இப்படித்தான் இருக்கும் என்று பலரும் சொல்லி,

"அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனாலும்,

அதில் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை!

இப்போது,

அமைச்சரே சொன்ன பிறகு நம்பாமல் எப்படி இருப்பது!

அமைச்சரின் மீது,

இப்போது அவளுக்கு ஓர் அனுதாபம் தான் ஏற்பட்டது.

எது எப்படி இருந்தாலும்,

அவரது ஆசையை நிறைவேற்ற முடியாத நிலையில் அவள் இப்போது இருந்தாள்.

"என்ன மலர் நான் கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லாமல் அமைதியா இருக்கீங்க....?" அவள் ஆமையாக இருப்பதைப்பார்த்து விட்டு,

அமைச்சர் கேட்டார்


"ஏற்கனவே இருக்கும் பிரச்சினை போதாதென்று புதிய ஒரு பிரச்சினையிலும் என்னை சிக்கவைக்கப் பார்க்கிறீங்களா?"

"எந்த பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக் கொள்றேன்...!"

"அப்படீ நீங்க ஒரு காரியம் செய்யணும்!" உறுதியோடு சொன்னாள் மலர்விழி.

"என்ன காரியம்...?"

"நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்!"



"சட்ட படி திருமணம் செய்யாவிட்டாலும் என் இதயப் பூர்வமான மனைவி நீங்கதானே மலர்...!"

"ஊர் உலகம் அதை நம்பாதே!" அவள் இப்படிச் சொன்னதும்,

அமைச்சரின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

"எதற்கெடுத்தாலும்... திருமணம் செய்து கொள்ளுங்கள். என்று கேட்பதே உங்களுக்கு வேலையா போச்சி அந்த புத்தகத்துல சைன்பண்ணி உங்களை ஏத்துக் கொள்ளாட்டிலும் உங்களுக்கு நான் என்னகுறை வெச்சிருக்கிறேன். நீங்க, என்னுடையவள் தானே... இந்த வீடும் உங்க வீடுதானே ....!" ஆத்திரத்துடன் கத்தினார் அமைச்சர்.

அதைக் கேட்டு,

அதிர்ந்து போனாள் மலர்விழி விழிகள் கலங்கி, அவளை அறியாமலேயே அருவியாக நீர் கொட்டியது. சிறிது நேரத்தில், அவள்,

விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

அதைப்பார்த்ததும்,

அமைச்சரின் ஆத்திரம்,

இருந்த இடம் தெரியாமல் பறந்துபோய்விட்டது.

இப்போது,

அவள் மீது அவருக்கு அனுதாபம் ஏற்பட்டது.

தனக்காக இதுவரை காலமும், ஏச்சும் பேச்சும், அவமானமும் பட்டுக் கொண்டிருக்கும் அவளை இதற்கு மேலும் அழவிடக் கூடாது என்ற முடிவுடன்,

அவள் முகத்தை தன் பக்கம் திருப்பிய அமைச்சர்,

அவள் விழிகளில் இருந்து வடிந்தோடிக் கொண்டிருந்த நீர்த்துளிகளைத் துடைத்து விட்டார்.

பிறகு,

"மலர்... நான் சொல்றத நல்ல கேட்டுக்கோங்க.... நீங்கதான் என்னோட உண்மையான மனைவி.... அதனால் உங்ககிட்ட ஒரு குழந்தையை பெத்துத்தரும் படிகேக்காம வேறு யாருகிட்ட கேக்குறது"

"அதவிட முக்கியமான ஒரு விஷயம் இருக்கு உங்க கிட்ட சொல்ல..." கொஞ்சம் பரபரப்புடன் சொன்னாள் மலர்விழி.

"முக்கியமான விஷயமா.... அது என்னது...!" அமைச்சரின் நெற்றியில் மூன்று கோடுகள் விழுந்தன.

"ரெண்டு மூணு, நாளா யாரோ ஒருத்தன் ஒபீசுக்கு போன் பண்ணி அமைச்சரோட இருக்கிற தொடர்ப விட்டுடாட்டி என்னைய கொலை செய்யப் போறதா மிரட்டிகிட்டிருக்கான்...!"

இப்படி சொல்லி விட்டு,

அவர் தோளில் சாய்ந்து கொண்டு,

மீண்டும் விக்கி அழத் தொடங்கிவிட்டாள்.

அமைச்சரை வியப்பினுள் விழ வைத்த புதிய தகவல் இது.

அதே நேரம்,

அவருக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது.

"ஏன் இதை அப்பவே என்னிடம் சொல்லல்ல?" படபடப்புடன் கேட்டார் அமைச்சர்.

அமைச்சரின் இந்த கேள்விக்கு பதில் சொல்லாமல்,

அவள் அழுது கொண்டே இருந்தாள்!

"மலர் நீங்க... ஒண்ணுக்கும் பயப்படாதீங்க.... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்....!" என்று சொல்லியபடியே,

அவள் தலையை மெல்ல தடவி விட்டார்.

சிறிது நேரத்தில்,

அங்கிருந்து வெளியேறினார்.

வருகின்ற வழியில்,

மலர்விழியின் அழுகையும்,

அவள் சொன்ன வார்த்தைகளும் அவர் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. மலர்விழியைக் கொலை செய்யவேண்டிய அவசியம் யாருக்கு இருக்கிறது?

கண்டிப்பாக அது தனது மாமனாராகத்தான் இருக்க வேண்டும்!

அவரைத்தவிர வேறு எவருக்கும் மலர்விழியை கொலை செய்யவேண்டும் என்ற தேவை கண்டிப்பாக இல்லை!

இந்த எண்ணம் வந்ததும்,

தனது மாமனாரின் மீது,

அமைச்சருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

தனக்கு பத்தினியாக இருப்பவளோடு,

ஒப்பிடும் போது,

மலர்விழி உயர்ந்த ஒரு நிலையில் அல்லவா இருக்கிறாள்!

எனக்காகவே அவள் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவள்.

தனக்கென்று ஒரு கணவனைப்பெற்று, குழந்தை குட்டிகளோடு,

ஒரு பத்தினி பெண்ணாக வாழ வேண்டும் என்று அவளுடைய கனவுகளை எல்லாம்,

தனக்காக தியாகம் செய்துவிட்டவள் அவள்!

ஒருமனைவி செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் தனக்கு செய்து விட்டு, சமூகத்தில்,

அமைச்சரின் 'சின்னவீடு' என்ற பழியை சுமைந்து வாழ்பவள் அவள்.

உண்மையில்,

நான் அவளுக்கு செய்வது துரோகமில்லையா?

காதல் என்ற பெயரில், நான் அவளை ஏமாற்றிக் கொண்டல்லவா இருக்கிறேன்?

முதல் முறையாக இப்படி ஒரு சிந்தனை,

அவர் மனதுக்குள்,

படர்ந்து சென்றது!

நான் அவளை மட்டுமல்ல,

என்னையும் அல்லவா' ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன்.

இந்த வாழ்க்கைக்கு விரைவில் ஒரு முடிவு கட்ட வேண்டாமோ!

தனக்காகவே சகலரையும் தியாகம் செய்து விட்டு ஒருத்தியோடு வாழ்வதுதானே சிறந்தது.

அதுதானே

தர்மமும் கூட!

இனி,

எக்காரணம் கொண்டும்

மலர்விழியை இழக்க அவர்தயாராக இல்லை!

தனது அரசியல் வாழ்வில்,

அமைச்சர் பதவிவரையில் உயர்ந்து செல்வதற்கு,

ஊன்றுகோலாக இருந்த, மாமனாருக்கும்,

அவள் மகளுக்கும்,

இதுவரை காலமும் செய்த நன்றிக்கடன் போதும்?

இப்போதே ஒரு முடிவு எடுத்தாக வேண்டும்!

ஆனாலும்,

இது அதற்கான நேரமல்ல!

காரணம்,

பலகட்சிகளுடன் கூட்டு சேர்ந்து அமைத்த அரசாங்கத்தில்,

இப்போது,

பிளவு ஏற்பட்டிருக்கிறது.

இதனால்,

அரசு எந்த நேரத்திலும் கவிழலாம் என்ற நிலைமையே இப்போது இருக்கிறது.

தேர்தல் வந்தால்,

அதற்காகத் தயாராக வேண்டிய தேவையும் ஏற்படும்.

அதற்காக,

செய்த முடிவில் மாற்றம் ஏற்படுத்தவும் விரும்பவில்லை!

எனவே,


சிறிதுகாலம் பொறுமையாக இருப்பதற்கு முடிவு செய்தார் அமைச்சர்.

ஆனாலும்,

அடுத்து நடக்கப்போகும் சம்பவங்கள் அவருக்குத் தெரிந்திருந்தால்,

அவர் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கவே மாட்டார்...!

(தொடரும்)



# 109 வயதில் காலமான வேலுப்பிள்ளை ஐயா

## புதனன்று இறுதிக்கிரியை நடைபெற்றது

இலங்கையில் 100 வயதை தாண்டியும் வாழும் சிலரில் ஒருவரான ஓய்வு பெற்ற சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளரும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கொழும்புக் கிளையின் போஷகருமான அப்புத்துரை வேலுப்பிள்ளை தனது 109 ஆவது வயதில் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

02.01.1912 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் பிறந்த இவர் யாழ்ப்பாணக்கல்லூரியில் தன் கல்வியை தொடர்ந்ததுடன் கொழும்பு வெள்ளவத்தையை பின்னாளில் தன் வதிவிடமாகக் கொண்டார், அத்துடன் யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் மூத்த உறுப்பினராகவும் இருந்து நிர்வாகக் குழுவில் பலவருடங்கள் சேவையாற்றியிருந்தார்.

அமரர் ராஜலக்சுமியின் அன்புக்கணவரான வேலுப்பிள்ளை அமரர் யோகேஸ்வரி, திருநாவுக்கரசு (கணக்காளர்), சாந்தினி (முன்னாள் பிரதி அதிபர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, ஓய்வு பெற்ற அதிபர் சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு)ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது.





யாழ்ப்பாணம், கோண்டாவில் ஐயப்பன் தேவஸ்தானத்தில் ஈழத்து ஐயப்ப குருமார் ஒன்றிய அங்குரார்ப்பண விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட புத்த சாசன மத விவகார அமைச்சின் இந்து சமய விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர பாபு சர்மா குருக்களுக்கு சிவாகம ஞானவாரி எனும் சிறப்பு பட்டத்தினை கோண்டாவில் ஐயப்பன் தேவஸ்தான பிரதமகுரு சிவ ஸ்ரீ ஹரிஹர சுத குருக்கள் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இடம்பெற்ற பூஜையின் பின் நாட்டிய கலாமந்திர் இயக்குனர் வாசுகி ஜெகதீஸ் வரனின் மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வையும், நடன நெறியாள்கை செய்த நடன ஆசிரியர் வாசுகி ஜெகதீஸ்வரனுக்கான கௌரவத்தை திருமதி. சுந்தரலிங்கம் வழங்குவதையும் காணலாம்.

(படப்பிடிப்பு: கொழும்பு வடக்கு நிருபர் )



நுவரெலியா ஆவேலியா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் புத்தரிசி வழங்கும் நிகழ்வு கடந்த (14) புதனன்று நடைபெற்றது. இவ்வாலயத்தின் நிர்வாக சபை தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனிடம் புத்தரிசி கையளிக்கப்பட்டது. ஆலய நிர்வாக சபை செயலாளர் முரளீந்திரகுமார் உள்ளிட்ட நிர்வாகசபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

(கந்தப்பளை ரமணன்)


# மக்கள் வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கொழும்பு-03, காலி வீதி, 429 ஆம் இலக்கத்தில் தற்போதுள்ள பழைய கட்டிடத்தின் இடிபாடுகளை உடைத்தல் மற்றும் அகற்றல்

**Tender No.: 26/2021**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு ‘கொழும்பு-03, காலி வீதி, 429 ஆம் இலக்கத்தில் தற்போதுள்ள பழைய கட்டிடத்தின் இடிபாடுகளை உடைத்தல் மற்றும் அகற்றல் ஆகியவற்றிற்காக ஆர்வமும் தகைமையுமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து, கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பொறியியல் சேவைகளுக்கான பிரதான முகாமையாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

   தற்போதுள்ள பழைய கட்டிடமானது தரைகீழ், தரை மற்றும் ஐந்து மேல் மாடிகளை கொண்டுள்ள 3810 சதுர மீற்றர் அண்ணளவான தரைப்பரப்பைக் கொண்டுள்ளதும் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதாகும். இப்பணியானது பின்வருவனவற்றை அடக்கியுள்ளதும் ஆனால் தற்போதுள்ள மீள் வலுவூட்டப்பட்டுள்ள கட்டமைப்பு, கொத்து சுவர்கள் (masonry walls), பிரித்தடுப்புக்கள், தரை, சுவர், சீலிங் மெருகூட்டல், கதவு மற்றும் யன்னல், கூரை கட்டமைப்பு, போன்ற இன்னும் பலவும் மற்றும் இடப்பரப்பிலிருந்து அனைத்து இடிபாடுகளையும் எடுத்துச் செல்லல்.
2. ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கான காலம் 60 நாட்கள்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. கடந்த ஐந்து வருடங்களில் கட்டிடங்களின் இடிக்கும் வேலைகளில் நிகரான அல்லது உயர்ந்த நிலை தொடர்பான கடந்தகால அனுபவம் தொடர்பான விபரங்களை விலைமனுவுடன் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
5. தகைமையை பெற்றுக் கொள்ளும் விலைமனுதாரரானவர் அருகாமையிலுள்ள கட்டிடங்களுக்கு அல்லது பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்காமல் இப்பணியை தொடர வேண்டுமெனவும் அருகாமையிலுள்ள கட்டிடங்கள்/ கட்டமைப்புக்களுக்கு மற்றும் பொது மக்களுக்கேற்படும் சேதங்களை தவிர்த்து திருப்திகரமான மட்டத்தில் அனைத்து பாதுகாப்பான நடைமுறைகளையும் வழங்கல் வேண்டும்.
6. தகைமையை பெற்றுக் கொள்ளும் விலைமனுதாரரானவர் உத்தேசிக்கப்பட்ட உடைத்தல் அத்துடன் தளத்திலிருந்து இடிபாடுகளை அகற்றலுக்கான பொருத்தமான அமைவிடமொன்றையும் அனைத்து நிகரான வாகனங்கள், இயந்திராதி வகைகள் மற்றும் உபகரணங்களையும் தேவையான அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தையும் அவரினாலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.
7. தகைமை பெற்ற விலைமனுதாரர் ஒப்பந்தக்காரரின் அனைத்து தனிப்பொறுப்பு காப்புறுதி, தொழிலாளர்களுக்கான இழப்பீடு, ஆளணியினர் விபத்து காப்புறுதி கொள்கை மற்றும் மூன்றாம் தரப்பு காப்புறுதி கொள்கை ஆகியவற்றை விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு அடங்கலாக காப்புறுதி காப்பீடுகளை வழங்கல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றையும் வழங்கல் வேண்டும்.
8. பணக்கொடுப்பனவுகள் பணியை பூர்த்தி செய்த பின்னர் பொறியியலாளரின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்படுவதுடன் முற்பணக்கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
9. வேலைகளின் முழுமைக்குமான ரொக்கமாக்கப்பட்ட சேதங்கள் நாளொன்றிற்கு 10,000 ரூபாவாகும்.
10. ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக வேலைத்தளத்தை பரீட்சிக்கும்படி மதியுரை வழங்கப்படுவதுடன் வேலைத்தள பரீட்சித்தலானது 2021 ஏப்ரல் 23 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.
11. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையலுவலக கட்டிடத்தின் 6 ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்கள பொறியியல் சேவைகளுக்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011-2481513, தொலைநகல்: 011-2341591) 2021 ஏப்ரல் 20 ஆம் திகதியிலிருந்து 2021 மே 10 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை செய்யும் நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
12. 2021 ஏப்ரல் 20 ஆம் திகதியிலிருந்து 2021 மே 10 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (2,500 ரூபா) மாத்திரம் செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரியிலுள்ள பொறியியல் சேவைகளுக்கான பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
13. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021 மே 11 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Demolition & Clearing Debris of Existing Old Building at No.429, Galle Road, Colombo-03”** என குறிப்பிடப்பட்டு கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கி தலைமையலுவலக கட்டிடத்தின் 6ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்களம், பொறியியல் சேவைகள் பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
14. விலைமனுக்கள் 2021 ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
15. கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பெயரில் வழங்கப்பட்டதும், மக்கள் வங்கி நீங்கலாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து மாத்திரம் பெறப்பட்டதும் ஐம்பதினாயிரம் ரூபா தொகைக்கானதுமான (50,000 ரூபா) விலைமனு பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021 செப்டம்பர் 07 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்),**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6 ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையலுவலக கட்டிடம்,**
**இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating



தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget










Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com






Advertise Here
தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
11.8cm (Height) x 8cm (Width)
Rs. 2,000/- +VAT
Contacts :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com




# 2020 க்கான சிறந்த வர்த்தக சேவை நாமமாக டயலொக்



ஸ்லிம் மக்கள் விருதுகள் 2021 இல் இலங்கை நுகர்வோர் சேவைக்கான வர்த்தக நாமம், மற்றும் இளைஞர்களின் விருப்பத்திற்குரிய வர்த்தக நாமமாக தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் ஆண்டின் சிறந்த தொலைத்தொடர்பு வர்த்தக நாமமாக தொடர்ந்து சாதனைக்குரிய 10வது ஆண்டாகவும் டயலொக்கிற்கு வாக்களித்துள்ளனர். இலங்கை பொது மக்களின் மனதில் ஆழமான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ள வர்த்தக நாமங்களை தெரிவு செய்வதற்காக பொதுமக்களினால் வாக்களிக்கப்படும் மக்கள் விருதுகள் டயலொக் வர்த்த நாமத்திற்கு மகுடம் சூட்டப்பட்டுள்ளது.

தொற்றுநோயை எதிர்கொண்ட கடந்த ஆண்டில், இலங்கையர்கள் தங்கள் தொற்றுநோய் தொடர்பான சவால்களுக்கு உதவுவதற்காக அவர்கள் மிகவும் நம்பிய வர்த்தக நாமத்தை பயன்படுத்தினர்;. கோவிட் 19 முன்வைக்கும் சமூக சவால்களை எதிர்கொள்வதில் டயலொக்கின் முன்மாதிரியான அர்ப்பணிப்பு மற்றும் அதன் வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், சமூகங்கள் மற்றும் நாட்டிற்கு ஆதரவளிப்பதில் அதன் அசைக்க முடியாத முயற்சிகளுக்கு மக்கள் வழங்கிய பாராட்டுக்கள் மூலம் அவை அங்கீகரிக்கப்படுகின்றன.

அனைத்து சேவைத் தொழில்களிலும் சிறந்த சேவை வழங்குனரை அங்கீகரிக்கும் 'ஆண்டின் சிறந்த சேவைக்கான வர்த்தக நாமம்' விருது, தொழில்நுட்பத்தின் உருமாறும் சக்தியைப் பயன்படுத்தி, டயலொக் வழங்கும் பல்வேறு வகையாக அணுகக்கூடிய சேவைகளுக்கு ஒரு சான்றாகும். இது, இதயத்திலிருந்து சேவையை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புடன், வாடிக்கையாளர் அனுபவத்தையும் சேவை வழங்கல் சிறப்பையும் அதன் நிறுவன நெறிமுறைகளுக்கு மத்தியில் திகழ செய்கின்றது.

ஆண்டின் சிறந்த தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் எனும் விருதானது டயலொக்கின் 10 ஆண்டு கால சாதனையினை நிலைநாட்டியுள்ளது. இலங்கையரின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் மேம்படுத்துவதற்கும் வளப்படுத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை வழங்குவதனையும் அங்கீகரித்துள்ளது.

முஸ்லிம் மக்கள் விருதுகளில் வழங்கப்பட்ட 3 விருதுகள் இலங்கை மக்களால் வாக்களிக்கப்பட்டுள்ளதோடு, Brand Finance இனால் இலங்கையின் மிகவும் மதிப்பு மிக்க நுகர்வோர் வர்த்தக நாமத்திற்கான விருதும் வழங்கப்பட்டுள்ளது என்பதினால் உணரப்படுவது என்ன வென்றால் வர்த்தக நாமத்தின் தொடர்ச்சியாக ஒவ்வொரு இலங்கையரும் ஒன்றிணைக்கப்பட்டனர் என்பதே ஆகும்.

# ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்து தீர்வை விஸ்தரித்துள்ள DP லொஜிஸ்டிக்ஸ்

கொவிட்19 பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி சீனாவிலிருந்து இலத்திரனியல் பொருட்களை வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கொண்டு வந்து DP லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடட் அண்மையில் தனது ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் தீர்வை விஸ்தரித்துள்ளது.




மிகவும் சவாலான சூழ்நிலையில் இத்தீர்வு வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டது. சீன வருடப் பிறப்பு விடுமுறை தொடங்கவிருக்கும் நிலையில் விடுமுறைக்கு முன்னதாக பொருட்களை நாட்டிலிருந்து வெளியே எடுப்பதற்கு சேவைபெறுனர் சிரமப்பட்டார். விடுமுறை நாட்கள் என்பதாலும், உலகத் தொற்றுநோய் சூழல் தொடர்ந்தும் காணப்படுவதாலும் அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்கள் நிறைந்த பின்னணி காணப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே DPL, இலங்கையின் கார்கோவுடன் இணைந்து இதில் காலடியெடுத்துவைத்தது.

இதற்குத் தீர்வாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானத்தின் மூலம் பொருட்களை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தது.

DPL இன் சீனாவில் உள்ள பிரதிநிதி அந்நாட்டில் பிணைக்கப்பட்ட இடங்களிலிருந்து பொருட்களை சேகரித்து, அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்து பின்னர் ஷன்ஹாங் புடோங் சர்வதேச விமான நிலையத்துக்கு மாற்றி, குறித்த பொருட்களுக்கான சுங்க செயற்பாடுகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்து அவற்றை அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. DPL அணி அவற்றை சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தது. பொருட்களை சரியான முறையில் கொண்டுவந்து அவற்றை பாதுகாப்பான முறையில் வாடிக்கையாளரிடம் கையளிப்பதை அக்குழு உறுதிப்படுத்தியது.

விதிமுறைக்கு அப்பாற்பட்டு அசாதாரண தீர்வுகளை வழங்குவதில் DPL உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சரக்குப் பகிர்தல் பொது முகாமையாளர் .இந்திக டி.சில்வா குறிப்பிடுகையில் “DPL இன் அர்ப்பணிப்புடான துறைசார் நிபுணர்கள் குழுவுக்கு பணியாற்றவதற்கான நேரம் அல்லது நாட்கள் குறித்த எந்த வரையறைகளும் இல்லை. தனித்தனியான பொருளாதார தீர்வுகளுடன் வாடிக்கையாளர்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்ய எதை வேண்டுமாயினும் நாம் செய்வோம்” என்றார்.

# வாரபலன்




## மேஷம்

உங்கள் ராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தில் சுக்கிரன் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்று இருக்கின்றார். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே இவ் வாரம் எதிர்ப்புக்கள் நிறைந்த வாரமாக அமையப்போகின்றது. எடுத்தகாரியங்களில் வெற்றி கிடைக்கும். மதிநுட்பத்துடன் செயல்பட்டு மக்கள் செல்வாக்கை பெறப் போகிறீர்கள்.

## ரிஷபம்

10ம் இடத்தில் குருவோடும், விரயஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்ரன், சந்திரன் ஆகியவற்றின் சஞ்சாரத்தோடும் தர்மக் கர்மாதிபதி யோகத்திக் கொடுக்கும் சனி, பாக்கியஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிப்பதால் எடுத்தகாரியங்களில் வெற்றி நிச்சயம். வியக்கவைக்கும் தகவல்கள் உங்களை வந்தடைந்து கொண்டே இருக்கும். தடுமாற்றங்கள் விலகும்.

## மிதுனம்

அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கத்தோடு, கும்பத்தில் அதிசாரமாக சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவாவதால் பெரிய பாதிப்புக்கள் எதுவும் இல்லை, இருந்தாலும் பிரச்சினைகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே தான் இருக்கும். குடும்பச் சுமை அதிகரிக்கும்.கொடுக்கல் வாங்கல்களில் விழிப்புணர்சியோடு செயல்பட்டால் தான் விரயங்களில் இருந்து தப்பிக்க முடியும்.

## கடகம்

குருவின் ஆதிக்கத்தோடு, கண்டக சனி சஞ்சரிப்பதால் விரயங்களும், விருப்பத்திற்கு எதிரான சூழ்நிலைகளும் சந்திக்கும் நிலை ஏற்படலாம். இருப்பினும் தொழில் ஸ்தானத்தில் நான்கு கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டு கூட்டுகிரக யோகம் உருவாவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடும். தெய்வ வழிபாடுகள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## சிம்மம்

நினைத்த காரியம் நிறைவேறும் வாரமாக இது அமையப் போகின்றது. 9ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாயும்,10 இடத்திற்கு அதிபதியான சுக்ரனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் தொழில் வளம் சிறக்கும். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்போடு புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றி கொள்வீர்கள். பொருளாதார நிலை உயரும். மகிழ்ச்சியான தகவல்கள் வந்துகொண்டே இருக்கும்.

## கன்னி

6 ஆம் இடத்தில் குரு இருக்க பஞ்சம ஸ்தானத்தில் சனி அமர, விரயாதிபதி சூரியனோடு உங்கள் ராசிநாதன் புதன் இணைந்து அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் கிரக நிலைகளின் அடிப்படையில் பார்க்கும் பொழுது சுயவிரயங்கள் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம். உடல் நலம் சீராகும். வாய்ப்புக்கள் அதிகரிக்கும். துணிந்து எடுக்கும் முடிவால் உறவினர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## துலாம்

அஷ்டமத்து சனியின் ஆதிக்கத்தோடும் அஷ்டமத்தில் தனது செவ்வாய் சேர்க்கையோடும், 2இல் கேதுவின் சஞ்சாரத்தால் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் தானாகவே வந்து சேரும். தடைகளையும் தாமதங்களையும் தகர்த்தெறிய வேண்டுமானால் அவ்வப்போது திசாபுத்திக்கு ஏற்ப தெய்வங்களை வழிபடுங்கள்.

ஆரோக்கியத்தில் சிறு சிறு அச்சுறுத்தல்கள் வந்து மறையும்.

## விருச்சிகம்

உங்கள் ராசிநாதன் செவ்வாய், சுக்கிரனோடு பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் தொழில் ஸ்தானாதிபதி சூரியன்,லாப ஸ்தானாதிபதி புதனோடு இணைந்து புதஆதித்ய யோகம் உருவாவதால் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிட்டும். தொழில் வளர்ச்சி சிறப்பாக அமையும்.

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து இட்டு மகிழ்வீர்கள். இல்லம் தேடி நல்ல தகவல்கள் வந்துக்கொண்டே இருக்கும்.

## தனுசு

உங்கள் ராசிநாதன் குரு பகவான், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதாலும் ஏழரைச்சனியில் பாதச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதாலும் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் ஒன்றின் பின் ஒன்றாக நடைபெறலாம். வெற்றிவாய்ப்புக்கள் உங்களை தேடி வரும். தன ஸ்தானத்தில் சனி பலம் பெற்றிருப்பதால் பொருளாதாரநிலை உயரும், புனித பயணங்கள் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும்.

## மகரம்

உங்கள் ராசிநாதன் சனி, உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதாலும் ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவலும், ஆரோக்கிய தொல்லைகளை ஏற்படுத்தலாம். குடும்பச் சுமை அதிகரிக்கலாம்.

தொழில் சில ஏமாற்றங்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். தெய்வவழிபாடு மனஅமைதியை கொடுக்கும்.

## கும்பம்

உங்கள் ராசிநாதன் சனிபகவான் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயங்கள் கூடுதலாக இருக்கும், எதையும் சமாளித்து பக்குவத்துடன் நடந்துகொள்வது சிறந்தது. குடும்பச் சுமை அதிகரிக்கலாம். உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை. உங்கள் ராசியில் 2,11 ஆகிய இடங்களில் குரு சஞ்சரிப்பதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் சேமிக்க இயலாத அளவிற்கு சுபவிரயங்கள் வந்துகொண்டே இருக்கும்.

## மீனம்

உங்கள் ராசிநாதன் குரு, விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதே நேரத்தில் லாபாதிபதி சனி, லாபஸ்தானத்தில் பலம் பெற்றுருக்கிறார் எனவே வருமானங்கள் திருப்திகரமாக இருந்தாலும் செலவீனங்கள் அதிகரிக்கும்.

கொடுக்கல் வாங்கல்களில் கூடிய கவனம் தேவை.தொழில் சில ஏமாற்றங்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

# காணாமல் போனோர் தொடர்பான...

(02 ஆம் பக்கத் தொடர்)

*பழுதடைந்த படகுகளை திருத்தி அரசாங்கத்தின் ஊடாக படகுச் சேவையை நடத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் யோசனையையும் நாம் ஒரு மாதத்திற்கு முன்பு சமர்ப்பித்துள்ளோம். நேற்றைய தினம் அது தொடர்பிலும் திறைசேரியின் செயலாளரிடம் பேசியுள்ளேன்.*

**கேள்வி: வடக்கில் சொந்த இடங்களில் குடியேறுவது தொடர்பான காணி பிரச்சினைகள் உள்ளன. காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை எந்தளவில் உள்ளது.**

**பதில்:** *பாதுகாப்பு அமைச்சு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது தற்போது 8,000 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.*

**கேள்வி: வடக்கில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை போன்ற கைத்தொழில் துறை நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாமே?**

**பதில்:** *அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் சுமார் 25 ஏக்கர் காணி திருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளது. முதலீட்டாளர்களின் வருகையே எதிர்பார்க்கப்படுகிறது.*

**கேள்வி - நாட்டின் அத்தியாவசிய பொருட்களான உளுந்து, மஞ்சள் என்பன இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளன. எனினும் இவற்றின் விளைச்சல்போதுமானதாகவும் இல்லை. குறிப்பாக வடக்கில் இவற்றை செய்கை பண்ணுவதற்கான ஊக்குவிப்புகள் வழங்கப்படுகின்றதா?**

**பதில்:** *அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வருடத்திலும் சாத்தியமானதாக இவை முன்னெடுக்கப்பட்டன.*

**கேள்வி: தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் பாரம்பரிய இந்து சமய புராதன இடங்கள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் இன நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிப்பதாக அமைகின்றன. அது தொடர்பில் அண்மையில் சுமந்திரன் எம் பி யும் தமது எதிர்ப்புக்களை தெரிவித்திருந்தார். அந்த விடயம் தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** *அது தொல்பொருள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் அரசாங்கமே அது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். எனினும் அது தொடர்பில் எனக்கு எவரும் அறிவிக்கவும் இல்லை.*

**கேள்வி: வடமாகாண மக்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன? அல்லது நீங்கள் கூற முனைவது என்ன?**

**பதில்:** *வடக்கு மக்களிடம் காணப்படும் மதுபானம், போதைவஸ்து, இளம் வயதினரிடையேயான தற்கொலை முயற்சிகள் என்பவற்றை குறிப்பிட முடியும். அவற்றிலிருந்து அவர்கள் வெளியே வரவேண்டும் சிந்தனை மாற்றம் அதற்கு மிக முக்கியமானது. அதிலிருந்து அவர்கள் வெளியே வந்தால் தான் அபிவிருத்தியின் பயன்களை அவர்களால் அனுபவிக்க முடியும்.*

**கேள்வி: தற்கொலைகளுக்கு முக்கியமான காரணமாக எதை குறிப்பிடுகின்றீர்கள்?**

**பதில்:** *அது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த முடிவுகள் வெளியானதும் அதற்கான காரணங்களை கண்டறிய முடியும். எவ்வாறெனினும் அதீதமான கையடக்க தொலைபேசிப் பாவனை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்தல், பாடசாலை ரீதியில் எதிர்கொள்ள நேரும் மன அழுத்தங்கள், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு இடையிலான புரிந்துணர்வு இல்லாமை போதை வஸ்து பாவனை ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். என்றாலும் தற்போதைக்கு அதற்கான முக்கிய காரணம் என்ன என்பதை எம்மால் கூற முடியாதுள்ளது.*

**கேள்வி: யுத்தத்திற்குப் பின்னர் கணவனை இழந்த, பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் தொடர்பில் கூறமுடியுமா?**

**பதில்:** *யுத்தத்தினாலோ அல்லது இயற்கையாகவோ கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களை நாம் இனங்கண்டு அவர்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்குவது தொடர்பில் தகவல்களை திரட்டி வருகின்றோம். அவ்வாறான 65,000 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கனவே சில குடும்பங்களுக்கு உதவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.அதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும்.*

**கேள்வி: வடக்கில் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய விடயங்கள் என்ன என்பதை கூற முடியுமா?**

**பதில்:** *முதலீடுகள் நடைபெறவேண்டும். அதற்காக நாம் முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம். சுற்றுலாத் துறை, மீன்பிடித்துறை, விவசாயம் ஆகிய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.*

**கேள்வி:கல்வித் துறை வளர்ச்சியில் வடமாகாணம் எத்தகைய நிலையில் உள்ளது.**

**பதில்:** *ஆம்! வடமாகாணம் அதில் 9 ஆவது இடத்திலேயே உள்ளது. அதற்கு காரணம் வளங்கள் சமமாகப் பகிரப்பட வில்லை. குறிப்பாக நாம் கிராமிய புறங்களில் வளங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.*

*அத்துடன் ஆசிரியர்கள் இடமாற்றம்,புதிய ஆசிரியர்களை நியமித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. யுத்தம் காரணமாக கல்வி செயற்பாடுகள் பின்தங்கி விட்டன.என்று இனியும் நாம் காரணம் கூறமுடியாது. யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் முடிவடைந்து விட்டன. நாம் மிக வேகமாக முன்னேற வேண்டியுள்ளது. அதை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.*

**கேள்வி: தெற்கு மக்கள் வடக்கு மக்களை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்ற நிலையும் வடக்கு மக்கள் தெற்கு மக்களை பிழையான கண்ணோட்டத்தில் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றதே? அது தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** *இந்த விடயத்தில் ஊடகங்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. இங்கு வரும் ஊடகவியலாளர்களும் குறிப்பிட்ட சில மக்களிடம் கருத்துக்களைப் பெற்று அதனையே வெளியிடுகின்றனர். வடக்கிற்கு வருகின்ற எனது நண்பர்கள் கூட தொலைபேசி மூலம் என்னோடு தொடர்பு கொண்டு அந்த மக்கள் கஷ்டப்படுகிறார்கள் அவர்களுக்கு உதவுங்கள் என்ற வகையிலேயே தெரிவிக்கின்றனர். ஆனால் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் உள்ளிட்ட ஏனைய விடயங்களை அறிவதில்லை அல்லது வெளியிடுவதில்லை. என்றுதான் கூறவேண்டும்.*

**கேள்வி: மாகாண சபைகள் குறிப்பாக வடக்கு கிழக்குக் காகவே அறிமுகப்படுத்தப்பட்டன.அது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தற்போது நிலவுகின்றன. மாகாண சபைகள் அவசியம்தானா என்றும் ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர். அது சம்பந்தமாக நீங்கள் கூற விரும்புவதென்ன?**

**பதில்:** *மாகாண சபைகளும் மக்களுக்கான சேவையையே மேற்கொள்கின்றன. உண்மையில் அது மக்கள் சேவை பெற்றுக் கொள்ளும் ஒரு இடமாக இருக்க வேண்டும்.வெறும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் இடமாக மட்டும் அது இருக்கக் கூடாது அது எனது கருத்து.*

**கேள்வி: யுத்தத்தினால் புலம் பெயர்ந்த மக்கள் இன்னும் எந்த அளவில் வெளிநாடுகளில் உள்ளனர் என்பதை கூற முடியுமா?**

**பதில்:** *அவ்வாறான ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் சொந்த இடங்களுக்கு வரவேண்டி உள்ளனர்.*

**கேள்வி: அபிவிருத்தி உள்ளிட்ட உங்களது செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புகள் போதியளவு கிடைக்கின்றதா?**

**பதில்:** *ஆம் வட மாகாணத்தைப் பொறுத்தவரை அவர்களது கருத்துக்களும் ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் எமக்கு அதிகமாக கிடைக்கின்றன. அவர்கள் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றார்கள்.*

**கேள்வி: கிழக்கு மாகாணத்தில் நீங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலாளராக பணியாற்றிய போது அதிகமான அழுத்தங்களுக்கு உட்பட்டதை காணமுடிந்தது. அங்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு உங்களுக்கு போதியளவு கிடைத்ததா?**

**பதில்:** *உண்மையில் வடமாகாணத்தைப் போல் அல்ல. அங்கு உண்மையிலேயே அதிகமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அரசியல்வாதிகளாக இருக்கட்டும் அரச அதிகாரிகளாக இருக்கட்டும் அவர்களை கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்பட்டது. அது எமது மக்களுக்கான செயற்பாடுகளுக்கு பாரிய அழுத்தமாகவே காணப்பட்டது. வடக்கில் அவ்வாறு கிடையாது இவர்கள் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர் என்பதை கூற முடியும்.*

## மோடியின் வங்கதேச விஜயமும்... (07ஆம் பக்கத் தொடர்)

அவர் இந்தியா திரும்பிய பின்னரும் பல நாட்களாக வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வங்கதேசத்தில் நிகழ்ந்தன. பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதம்களில் பலர்காயமடைந்தனர். இறப்பர் குண்டுகளையும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் கலகக்காரர்களுக்கு எதிராக பொலிஸார் உபயோகித்தனர். சிட்டாகொங் நகரில் நடைபெற்ற வன்முறைகளில் ஒரு பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது பொலிஸ் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதில் ஐந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். 27மற்றும் 28ம் திகதிகளில் நடைபெற்ற வன்முறை ஆர்ப்பாட்டங்களில் எண்மர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணித்தனர். பிரம்மன்பாரியா என்ற நகரில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களை விவரிக்கும் ஊடகவியலாளரான ஜாவிட் ரஹீம் “இந் நகரம் பற்றி எரிகிறது. பல அரசு அலுவலகங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. பிரஸ்கிளப் கூட தாக்கப்பட்டுள்ளது. பலர் காயமடைந்துள்ளனர். நாங்கள் அச்சமடைந்திருக்கிறோம். நாதியற்றவர்போல உணர்கிறோம்” என்று வர்ணித்துள்ளார். இந்து கோவில்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தனது வங்க விஜயத்தின்போது மோடியவர்கள் இரண்டு இந்து ஆலயங்களுக்கு சென்று வழிபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை வங்கதேசம் கலவர பூமியாகவும் மதத்தீவிரவாதிகளின் வேட்டைக்களமாகவும் திகழ்ந்து வந்தது. எனினும் ஷேக் ஹஸீனாவின் தொடர்ச்சியான நடவடிக்கைகளையடுத்து 2016ம் ஆண்டின் பின்னர் வங்கதேசத்தில் தீவிரவாதத் தாக்குதல்கள் படிப்படியாகக் குறைந்து போயின. வங்கதேச மதத் தீவிரவாத அமைப்புகள் தீவிரவாத செயல்களில் ஈடுபடவில்லை. ஆனால் அது நிரந்தரமானது என்று எவரும் எண்ணிவிடக்கூடாது என அந்நாட்டின் முக்கிய ஆங்கில இதமான த டெய்லி ஸ்டார் தனது தலையங்கத்தில் சரியாகத்தான் குறிப்பிட்டிருந்தது.

ஏனெனில் மோடியவர்கள் டாக்கா வந்ததில் இருந்தே வன்முறை ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்திருந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு பண்ணியிருந்த பிரதான அமைப்பு எச்.ஐ.பீ என அழைக்கப்படும் ‘ஹெஃபாசத் ஈ இஸ்லாம் பங்காதேஷ்’ அமைப்பேயாகும். வங்கதேசத்தில் இஸ்லாத்தை பாதுகாத்தல் என்று இதைத் தமிழ்ப்படுத்தலாம். 2010ம் ஆண்டு இவ் வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக இருந்தவர் ஷா அஹ்மட் ஷாஃபி. இந்த அமைப்பின் முக்கிய அம்சம், வங்கதேச மெங்கும் உள்ள மத்ரஸாக்களில் கணிசமான தொகை இந்த அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதுதான். 2013ஆம் ஆண்டில் டாக்காவில் நடத்திய பேரணியில் இம் மத்ரஸாக்களில் இருந்து அழைத்துவரப்பட்ட ஐந்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர் என்பது இதன் வலிமையைக் காட்டும். அந்த அமைப்பு ஷேக் ஹஸீனா அரசிடம் 13 கோரிக்கைகள் கொண்டமகஜரை சமாப்பித்தது. மதநிந்தனைக்கு எதிராக மரண தண்டனை, அரசின் தேசிய மகளிர் அபிவிருத்திக் கொள்கையை கைவிடுதல், ஹிஜாப் போன்ற ஆடைகளை அணியச்செய்தல், பொது இடங்களில் சிலை போன்ற அமைப்புகளை நிர்மாணித்தலைத் தடை செய்தல், ஆணும் பெண்ணும் பொது இடங்களில் கூடிப் பழகுவதைத் தடை செய்தல் என்பன இக் கோரிக்கைகளில் சிலவாகும். ஆனால் 2013இல் எடுத்த நடவடிக்கைகளால் இந்த அமைப்பு ஒடுக்கப்பட்டது.

ஆனால் இந்த அமைப்பு ஒரு அரசியல் கட்சி அல்ல என்பது அரசுக்கு சாதகமான விஷயமாக இருந்தது. அதாவது எச்.ஐ.பீக்கு அரசாள வேண்டும் என்ற நோக்கம் இருக்கவில்லை. எனவே ஒடுக்கப்பட்ட நிலையிலும் ஹஸீனா அரசு, திரைமறைவில் எச்.ஐ.பீயுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு மட்டத்தில் அதை வைத்திருந்தது. ஆனால் கடந்த வருடம் செப்டம்பரில் அமைப்பின் தலைவர் ஷாஃபி மரணமானார். அந்த இடத்துக்கு வந்தவர் ஜூனைட் பபுனாகரி என்பவர். பதவிக்கு வந்ததுமே ஷாஃபியின் மிதவாத கொள்கைகளுக்கு பதிலாக அரசியல் அபிலாஷைகளுடன் கூடிய கொள்கைகளை வகுத்தார். த டெய்லி ஸ்டார் இதழின் சிரேஷ்ட பத்திரிகையாளரான ரஷிதுல் ஹாஸன் இது பற்றி தனது கட்டுரையில், ‘இது இப்போது உண்மையிலேயே அரசியல் கட்சியைப் போன்றது. ஆனால் அரசியல் இலக்கு அற்றது என்பதாக சொல்லிக் கொள்கிறது’ என்று எழுதியிருக்கிறார்.

எச்.ஐ.பீ புதிதாக நியமனம் செய்துள்ள புதிய கமிட்டி உறுப்பினர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களே. அதாவது எதிர்க்கட்சியான கலீடா ஸியாவின் பீ என்.பி எனப்படும் பங்களா தேஷ் தேசியவாத கட்சி அமைந்திருக்கும் இருபது கட்சிகளின் கூட்டணியைச் சேர்ந்தவர்களே இந்த உறுப்பினர்கள். மேலும் கலீடா ஸியா, தடைசெய்யப்பட்டுள்ள அடிப்படைவாத கட்சியான ஜமாத் ஈ இஸ்லாமியுடன் நெருக்கம் கொண்டவர். எச். ஐ. பீயில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் தனக்கு சாதகமான ஒரு ஆதரவு அலையை உருவாக்கி ஷேக் ஹஸீனாவின் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்றொரு வியூகத்தை அவர் அமைப்பதாகத் தெரிகிறது.

தடைசெய்யப்பட்ட ஜமாத் ஈ இஸ்லாமியின் முகவரியாக தற்போது எச்.ஐ.பீ. மாறி வருகிறது என்பது சில வங்கதேச அவதானிப்பாளர்களின் கருத்தாக உள்ளது. வங்கதேசத்தில் ஷரியா சட்டம் அமுல் செய்யப்பட வேண்டும் என்பது ஜமாத் ஈ இஸ்லாமியின் கொள்கையாகும். இதேசமயம் பாகிஸ்தான் உளவுத்துறை (ஐ எஸ் ஐ)யுடன் நெருங்கிய தொடர்புகளை இஸ்லாமி பேணி வருவதாக கூறப்படுகிறது. எச்.ஐ.பீ யுடன் இஸ்லாமி நெருக்கிவர பாக். உளவுத்துறை பின்னணியில் இருந்து செயல்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

மார்ச் 26 மோடியின் வருகையும் அதைத் தொடர்ந்து அந் நாட்டில் மறுபடியும் ஏற்பட்டிருக்கும் அமைதியின்மையும் இந்தப் பின்னணியிலேயே பார்க்கப்பட வேண்டும். கலவரம் தொடர்ந்தபோது பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் அஸாதுஸமான் கான், “எமது பாதுகாப்புப் படையினர் நிலைமையை அவதானித்து வருகின்றனர். கலவரம் முடிவுக்கு வராவிட்டால் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்” என எச்சரிக்கை விடுத்தார். இஸ்லாத்தின் பெயரால் எச். ஐ. பீ அழிவு வேலைகளை தொடர்வதாக வங்கப் பிரதமர் பாராளுமன்ற உரையில் தெரிவித்திருந்தார்.

‘வன்முறைகளில் ஈடுபட்டிருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று கண்டிப்புடன் பேசியிருக்கின்றார் வங்கப் பிரதமர். அதேசமயம் எச்.ஐ.பீ அமைப்பு உறுப்பினர்கள் மீதான எண்பதுக்கும் அதிகமான வழக்குகளை தூசி தட்டியெடுக்கவும் அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

மோடி வருகையின் பின்னர் கிளர்ந்தெழுந்திருக்கும் வன்முறைச் சக்திகளை ஒடுக்குவதில் வங்கதேச அரசு தீவிரம் காட்டி வருவதை நம்மால் பார்க்க முடிகிறது.

## 15 பில்லியன் ரூபா அரசினால்... (07ஆம் பக்கத் தொடர்)

விசேட பண்டிகை கொடுப்பனவை பயனாளிகளுக்கு மிக விரைவாக விநியோகிக்கும் பொருட்டு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன், தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில், பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை ஈடுசெய்து, அவர்களது நாளாந்த வாழ்க்கையை சீராக்கும் வகையில் இக்கொடுப்பனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வழமை போன்று இந்த திட்டத்தையும் எதிரணி விமர்சித்து கேலி செய்திருந்தது.இது மக்களை ஏமாற்றும் வெற்று வாக்குறுதியாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் திட்டமிட்டவாறு 5000 ரூபா கொடுப்பனவு திட்டம் 11 ஆம் திகதி நாடுமுழுவதும் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல் 12 ஆம் திகதி மாத்திரம் கொடுப்பனவாக 1.2 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது,

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சிரமங்களுக்கு தீர்வாக இந்த கொடுப்பனவு குறைந்த வருமானம் கொண்ட 3 மில்லியன் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பெசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைவாக 3 மில்லியன் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ரூ .5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க 15 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் ரூ .5 ஆயிரம் கொடுப்பனவை வழங்கியிருந்த நிலையில் இந்த திட்டமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலக மட்டங்களில் முறையான வழிகாட்டல்களுடன் கொடுப்பனவு பகிரப்பட்டது. வருமான வழிகள் யாவும் அடைபட்டிருந்த நிலையில் நப்பாசையுடன் இருந்த பல ஆயிரம் குடும்பங்கள் நிம்மதியாக சிங்கள, தமிழ் புத்தாண்டை கொண்டாட இந்த விசேட கொடுப்பனவு அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களில் மாத்திரம் தங்கியிருக்காது சொந்தக் காலில் எழுந்து நிற்கும் வகையில் பெசில் ராஜபக்ஷவின் தலைமையிலான செயலணி முன்னெடுக்க இருக்கும் காத்திரமான திட்டங்கள் எதிர்வரும் காலங்களில் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றும் என்று நம்பலாம்.

## சகல கடும் போக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் அவ்வாறான இந்து மத அமைப்பினரால் இந்து சமயம் அரசியல் அமைப்பில் இணைக்கப்பட வேண்டும், மதமாற்ற தடை சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும், பசு வதை நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

இக் கோரிக்கைகளை மேலோட்டமாக பார்த்தால் இந்து மக்களுக்கு சார்பான கோரிக்கையாக தெரியும். ஆனால் இக் கோரிக்கைகளில் பல ஆபத்துக்கள் மறைந்துள்ளது. இந்துமதம் இலங்கையில் சட்டமாக்கப்பட்டால் சாதிய ஒடுக்கு முறையும் சட்டமாக்கப்படும். மதமாற்ற தடைச்சட்டமானது எப்பொழுதுமே கிறிஸ்தவர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ ஆபத்தானது அல்ல தீண்டாமையால் ஒடுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்ந்து வரும் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து வெளியேற உள்ள ஒரு வாய்ப்பையும் அல்லது வாசலையும் அடைத்துவிடும் உபாயமே மதமாற்றம் என்கின்ற சட்டம், இலங்கையில் அனேக கிறிஸ்தவர்கள் திருமணங்களினூடாக இந்துக்களாக மதம் மாறியுள்ளனர். இலங்கையின் அரசியலமைப்பு சட்டம் ஒரு மனிதன் தான் விரும்பிய சமயத்தை பின்பற்ற அனுமதியளித்துள்ளது.

இலங்கையில் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்படும் இந்து ஆலயங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்படுவது நிறுத்தப்பட வேண்டும். என்ற கோரிக்கையை முன்வைக்காத சிவசேன அமைப்பு தொடர்ச்சியாக கள்ள மௌனம் சாதித்து வருவதை அவதானிக்க வேண்டும்.

இலங்கையில் பல்லின சமூகங்களும் தங்கள் சமயங்கள் ரீதியிலான போதனையின் மூலம் நல்லதொரு மானுட வாழ்வை வாழ்வதற்கு எதிர்பார்த்தே இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட மதங்களின் போதனைகளை சந்ததி சந்ததியாக ஊடுகடத்துகின்றனர்.

இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், குடும்ப வன்முறைகளை தடுக்கவும், இளைஞர்களின் போதைப்பொருள் பாவனை மற்றும் தற்கொலைகளை தடுத்து ஒவ்வொரு இனங்களின் கலை கலாசாரங்களை பாதுகாப்பதற்கும், உருவாக்கப்பட்ட மத அறநெறிப் போதனைகளை மாற்றியமைத்து, தீவிர மதவாத வெறிகொண்டு தங்கள் சகோதர இனங்களை வேட்டையாடி கொல்லும் விசம் கலந்த சிந்தனையை விதைக்கும் அனைத்து கடும் மத தீவிரவாத போக்குடைய அமைப்பக்களும் இலங்கையிலிருந்து தடை செய்யப்பட்டு துடைத்தழிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் இலங்கையில் பல்லின மக்களும் சமாதானத்துடனும், நல்லிணக்கத்துடனும் பயணிக்க முடியும் என்பதுடன் நாம் சிங்கப்பூருக்கு நிகராக கனவு காணும் இலங்கை தேசத்தை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியும்.

**பாதணிகள் உற்பத்தி நிறுவனம்**

சப்பாத்து/ செருப்பு உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றிற்கு தொழிற்றகைமையும் அனுபவமும் உள்ள உதவி முகாமையாளர்கள் (கணனியில் பரிச்சயமுள்ள) கள விற்பனைப் பிரதிநிதிகள் மற்றும் அனுபவமுள்ள பாதணிகளை தைப்பவர்களிற்கான வேலை வாய்ப்புக்கள் உண்டு. பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**யூ.பி. பியசேன என்ட் சன்ஸ்
இல. 106, பனாவல, நிட்டம்புவ**

**எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி**

**Invitations for Partnerships for LOI Holders in developing on-ground Solar Projects**

On-ground solar PV செயற்றிட்டங்களுக்கு எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி ஆனது முதலீடுகளை தேடுவதுடன் இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் Letter of Intent ஐ வைத்திருக்கும் சாரார்களை வரவேற்கின்றது.

ஆர்வமுள்ள தரப்புகள் அவர்களின் வியாபார முன்மொழிவை செயற்றிட்ட விபரங்களுடன் சமர்ப்பிக்கலாம்.

முன்மொழிவுகள் 2021 மே 13 ஆம் திகதியன்று பி.ப. 5 மணியளவில் அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர், எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி, 9 ஆம் மாடி, அட்கன் ஸ்பென்ஸ் கோபுரம்-1, இல. 305, வொக்ஷால் தெரு, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு, 0777-712683 என்ற இலக்கத்தினூடாக திரு. பிரியந்த எஸ். திசாநாயக்க அல்லது 0771-385050 என்ற இலக்கத்தினூடாக திரு. அமில வித்தாரண என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர்,
எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி.**

**இலங்கை தரைப்படை**

**பெறுகை அறிவித்தல்**

**2021 ஆம் ஆண்டிற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்கள தரைப்படை தகவல் தொழில்நுட்பவியல் தீர்வுகள் நிலையத்திற்கு (AITSC) முன்பே அச்சடிக்கப்பட்ட வெற்று அட்டைகளை வழங்குவதற்காக தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள்/ இறக்குமதியாளர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்களுக்கான அழைப்பு**

1. 2021 ஆம் ஆண்டிற்காக வேரஹேர மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கான தரைப்படை தகவல் தொழில்நுட்பவியல் தீர்வுகள் நிலையத்திற்கு (AITSC) முன்பே அச்சடிக்கப்பட்ட வெற்று சாரதி உரிமைப் பத்திர அட்டைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை தரைப்படை திணைக்கள பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
   அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கை தரைப்படையினால் உத்தரவிடப்பட்ட முன்பே அச்சடிக்கப்பட்ட வெற்று சாரதி உரிமைப் பத்திர அட்டைகள் அனைத்தையும் AITSC இற்கு எடுத்துச் செல்லல் வேண்டும்.
   ஆ. ஆர்வமுள்ள வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர, இலங்கை தரைப்படை தலைமையலுவக நிதிப் பணிப்பாளருக்கு அம்சத்திற்கெதிராக குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்ப கட்டணத்தை ரொக்கப் பணத்தில் கீழே வழங்கப்பட்டுள்ள திகதிகளில் வேலை நாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் செலுத்திய பின்னர், ஸ்ரீ ஜயவர்தனபுர இலங்கை தரைப்படை தலைமையலுவலக படைக்கலன்கள் சேவைகளுக்கான பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் அவர்களின் விலைமனுக்கோரல்களை சமர்ப்பித்தல் வேண்டும். கட்டாயமானதொரு தேவைப்படுத்தலாக விண்ணப்பதாரியானவர் உரிய முறையில் விண்ணப்பதாரரினால் கையொப்பமிட்டு அதில் அவரது உத்தியோகபூர்வ முத்திரையை பதித்த பின்னர் அதனை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வியை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “BID FOR THE SUPPLY OF (Pre printed blank driving cards) FOR THE YEAR 2021, Tender No.: (DOS/2021/3083) மற்றும் விலைமனுக்களை திறக்கும் திகதி/ நேரம் ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும்.

| தொடர் இல. | கேள்வியை அடையாளம் காண்பதற்கான இலக்கம் | விளக்கம் | NCB/ICB | எண்ணிக்கை | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் காலம் | விலைமனுக்களை மூடும்/ திறக்கும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | DOS/2021/3083 | முன்பே அச்சடிக்கப்பட்ட வெற்று சாரதி உரிமைப்பத்திர அட்டைகள் | NCB | 500,000 | 2021.04.19 ஆம் திகதியிலிருந்து 2021.05.21 ஆம் திகதி வரையும் | 2021.05.24 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு | 35,000.00 |

2. விலைமனுக்கோரல் செயற்பாடு தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 2021 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு வேரஹேர மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் விலைமனு முன்சந்திப்புக் கூட்டம் நடைபெறும்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூடும் நேரத்திற்கு நன்றாக முன்னராக கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், விரைவாகவே திறக்கப்படுமென்பதுடன் தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் தொழில் வழங்குநர்களின் அதிகாரமளிக்கப்பட்ட கடிதங்கள் ஆகியவற்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படுவார்கள்.

   **தலைவர், தரைப்படை பெறுகைக் குழு,
   படைக்கலன்கள் கிளையின் மாஸ்டர் ஜெனரல் மே/பா.,
   தரைப்படை முகாம்,
   செலிங்கோ கட்டிடம்,
   இல.: 167/30,
   அவிசாவளை வீதி, ஒறுகொடவத்த.**

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையலுவலக படைக்கலன்கள் கிளையின் மாஸ்டர் ஜெனரலிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011-2432135 – மின்னஞ்சல்: **mgobranchemail@gmail.com)** கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

   **படைக்கலன்கள் சேவைகள் பணியகம்,
   இலங்கை தரைப்படை தலைமையலுவலகம்,
   ஸ்ரீ ஜயவர்தனபுர,
   கொழும்பு.**

6. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக விலைமனுதாரர்கள் வியாபார சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்படாத மற்றும் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆவண சான்றுடன் இணைக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ள எண்ணிக்கையை மாற்றம் செய்வதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.
8. ஒப்பந்த உடன்படிக்கையை கையொப்பமிடும் திகதியிலிருந்து ஒப்படைக்கும் காலப்பகுதியானது ஆகக் குறைந்தது 90 நாட்களாகும்.
9. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் உடன்படிக்கையை கையொப்பமிடுவதற்காக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படுவார்.
10. வெளிநாட்டு விலைமனுதாரர்களுக்கு நாணயப்பத்திரத்தின் மூலம் பணக்கொடுப்பனவு வழங்கப்படும் என்பதுடன் உள்ளூர் விலைமனுதாரர்களுக்கு காசோலை மூலம் பணக்கொடுப்பனவு வழங்கப்படும்.
11. மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியான 500,000 ரூபாவிற்கு முன்வைக்கப்பட்டுள்ள விலைமனுத் தொகையானது மேற்படின், முன்வைக்கப்பட்டுள்ள விலைமனுவின் 1% ஐ விலைமனுப்பிணையாக அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் வங்கி அல்லது இலங்கை காப்புறுதி சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு பெற்ற காப்புறுதி கம்பனியொன்றின் மூலமாக வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுப்பிணையில்லாத அவ்வாறான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு உத்தரவாதங்கள் 2021.10.20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2987528, 011-2987537 ஆகிய இலக்கங்களினூடாக Group Procurement Officer இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தரைப்படை தளபதி,
இலங்கை தரைப்படை தலைமையலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.**

நீர்ப்பாசன அமைச்சு

# பதவி வெற்றிடங்கள்

## மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MWSIP)

## நிதியம் வழங்கல் வளம்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

2024 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலங்கை பொது திறைசேரியிலிருந்து ஒருங்கிணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இலகு தவணை கடன் வசதியுடன் நீர்ப்பாசன அமைச்சினால் அமுல் நடாத்தப்படும் மஹாவலி பலநோக்கு அபிவிருத்தி திட்டத்தின் பூரணமான திட்டத்தின் ஒரு பகுதியே மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டமாகும்.

**விண்ணப்பங்கள்:**
பின்வரும் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் பொருத்தமான தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுவதுடன் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவு, கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் உரித்தான அனுபவம் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் குறிப்பீடுகள் ஆகியவற்றை 2021.05.03 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை அடையும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,**
**இல.: 493-1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆகவுயர்ந்த தகைமை மற்றும் அனுபவ அடிப்படையில் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன் தெரிவானது திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். எனவே, ஆட்சேர்ப்பு செயற்பாட்டிற்கு மேற்கொள்ளப்படும் செல்வாக்கு அல்லது பிரதிநிதித்துவம் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வழியைவகுக்கும். அடிப்படை தகைமைகள், தொழில்சார் மற்றும் கல்விசார் நிரூபிப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் பூர்த்திசெய்யப்படாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவைகள்/ நியதிச்சட்ட சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களைச் சார்ந்த விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் உரித்தான திணைக்களங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறான நிறுவனங்களின் தலைமைகள், விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டால் முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்படுவார்களா என்பதனையும் குறிப்பிடல் வேண்டும்.

| பதவிகள் மற்றும் பணிவிளக்கங்கள் | தகைமைமற்றும் அனுபவம் |
|---|---|
| 1. **நிதி முகாமையாளர் (பிஎஸ் 03)**<br>**பணிவிளக்கம்**<br>திட்டத்தின் நிதியிடல் மற்றும் கணக்கிடல் முறைமைகளை தயாரித்தல் மற்றும் பேணல், நிதியங்களின் திட்டமிடல், வரவசெலவு திட்டங்களை தயாரித்தல், நிதியங்களை பெற்றுக் கொள்ளல், வங்கிகணக்குகள், பதிவேடுகளை பேணல், பணக்கொடுப்பனவுகள் மற்றும் உள்ளககட்டுப்பாடுகள், நிதியிடல் அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மீள்நிரப்பல் ஆவணங்கள், களஞ்சியசாலைகள் முகாமைத்துவ நடைமுறைகள், பொருட்களின் சரிபார்ப்பு மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் முகாமைத்துவத்தினால் தேவைப்படுத்தப்படும் வேறேதாவது நிதி தொடர்பான பணிஒதுக்கீடுகள். | * கீழே குறிப்பிட்டுள்ள தகைமைகள் 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு அமைவானவை.<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தானதுறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டம்.<br>**அல்லது**<br>உரித்தானதுறையில் பெற்றபட்டத்திற்கு நிகரானதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரானதொழில்சார் தகைமையொன்று.<br>**அத்துடன்**<br>நிருவாகமட்டத்தில் ஆகக் குறைந்தது 14 வருடபட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டம்.<br>**அல்லது**<br>2. உரித்தான துறையில் பெற்றபட்டத்திற்கு நிகரானதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரானதொழில்சார் தகைமையொன்று.<br>**அத்துடன்**<br>உரித்தானதுறையில் பெற்றதொருபட்டப்பின் பட்டம் மற்றும் கூட்டிணைந்த/ பட்டயம் பெற்றஅங்கத்துவம் அல்லது உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவன மொன்றிலிருந்து பெற்றநிகரானதொழில்சார் தகைமையொன்று.<br>**அத்துடன்**<br>நிருவாக மட்டத்தில் ஆகக்குறைந்தது 10 வருடபட்டப்பின் தகைமைப் பட்டம்.<br>3. நாடளாவியரீதியிலான அரசாங்கசேவையொன்றில் 1 ஆம் தரஅலுவலர்.<br>**அத்துடன்**<br>1 ஆம் தர பதவியொன்றில் ஆகக்குறைந்தது 5 வருடஅனுபவம். |
| 2. **பொறியியலாளர்**<br>**(பிஎஸ் 04- வகுதி A, வகுதி B)**<br>**பணிவிளக்கம்**<br>MWSIP இன் நிர்மாண வேலைகளில் செயற்றிட்ட/ பிரதிசெயற்றிட்ட பணிப்பாளருக்கு திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் அமுல்நடாத்தல் ஆகியவற்றில் சிவில் பொறியியலாளர் உதவி வழங்கல்.<br><br>3. **மண் வளபொறியியலாளர்**<br>**(பிஎஸ் 04 வகுதி A, வகுதி B)**<br>**பணிவிளக்கம்**<br>மண் வளசெயற்பாடுகள், சுரங்கநிர்மாண செயற்றிட்டத்தின் கீழ் அமுல்நடாத்தப்படும் நிர்மாணங்கள் மற்றும் வழி நடாத்தலை வழங்கல். | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில்/ மண் வளங்கள் பொறியியல் துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.<br>**அல்லது**<br>சிவில்/மண் வளங்கள் பொறியியல் துறையில் நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரானதொழில்சார் தகைமையொன்று.<br>**அத்துடன்**<br>சிவில்/ மண் வளங்கள் பொறியியல் துறையில் பெற்ற ஆகக் குறைந்தது 09/07 வருடபட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.<br>2. சிவில்/ மண் வளங்கள் பொறியியலில் நாடளாவிய அரசாங்க சேவைகளின் III/II அல்லது மேற்பட்ட அல்லது நிகரானதரத்திலுள்ள அலுவலரொருவர்.<br>**அத்துடன்**<br>III/II வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 09/07 வருட அனுபவம் |
| 4. **பொறியியலாளர்**<br>**(பிஎஸ் 04- வகுதிA, வகுதி B)**<br>**பணி விளக்கம்**<br>MWSIP இன் நிர்மாண வேலைகளில் செயற்றிட்ட/ பிரதி செயற்றிட்ட பணிப்பாளருக்கு திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் அமுல்நடாத்தல் ஆகியவற்றில் சிவில் பொறியியலாளர் உதவிவழங்கல். | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில்/ மண் வளங்கள் பொறியியல் துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.<br>**அல்லது**<br>சிவில்/ மண் வளங்கள் பொறியியல் துறையில் நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>**அல்லது**<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று |
| 5. **தொழில்நுட்ப அலுவலர்**<br>**(பிஎஸ் 06 வகுதி B அல்லது C)**<br>**பணிவிளக்கம்**<br>MWSIP இன் நிர்மாண வேலைகளின் அமுல்நடாத்தல் தொடர்பாக திட்டப் பணிப்பாளர்/ செயற்றிட்ட பணிப்பாளர்/ சிரேஷ்ட பொறியியலாளர் / பொறியியலாளர்களுக்கு உதவி வழங்கல். | **வகுதி -B**<br>1. தொழில்துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>விஷேடத்துவம் தேவைப்படும் பரப்பில் ஆகக் குறைந்தது 3 வருடஅனுபவம்.<br>2. தொழில்துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலைமற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிசான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>விஷேடத்துவம் தேவைப்படும் பரப்பில் ஆகக் குறைந்தது 7 வருடஅனுபவம்.<br>3. தொழில் துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>விஷேடத்துவம் தேவைப்படும் பரப்பில் ஆகக் குறைந்தது 12 வருட அனுபவம்.<br>**வகுதி -C**<br>1. தொழில்துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையான தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>2. தொழில்துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>விஷேடத்துவம் தேவைப்படும் பரப்பில் ஆகக் குறைந்தது 04 வருட அனுபவம்.<br>3. தொழில் துறைக்கு உரித்தானபதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>விஷேடத்துவம் தேவைப்படும் பரப்பில் ஆகக் குறைந்தது 9 வருடஅனுபவம். |

* 01/ 2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் வாழ்க்கைப்படி ஆகியன வழங்கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. மீதி செயற்றிட்ட காலப்பகுதியில் 04 வருட தடையற்ற சேவையை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வேளையில் விண்ணப்பதாரிகள் 63 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.
2. அனைத்து அலுவலர்களும் அவர்களின் கடமைகளை உரித்தான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பிறமுகவர் நிலையங்களுடனும் தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்த முறைமையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.
3. இலங்கையில் வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் வேலை செய்த அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.
4. இப்பதவிகளுக்கு ஆங்கிலத்தில் புலமை, அரசாங்க ஒழுங்கு விதிகளுடனான பரிச்சயம் மற்றும் கணனி அறிவு ஆகியன அவசியமான முன்தகைமைகளாகும்.
5. செயற்பாடு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்றிட்டங்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் வருடந்தோறும் புதுப்பிக்கப்படும் வகையில் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் அமைந்திருக்கும்.
6. 01/2019என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள மட்டங்கள் மற்றும் படிகளும் அத்துடன் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு அமைவாகவும் வழங்கப்படும். **(http://www.treasury.gov.lk)**

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு.**

சுகாதார அமைச்சு

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்

SPMC

# பெறுகை அறிவித்தல்

## களஞ்சியசாலையொன்று அமைப்பதற்காக காணியொன்றை கொள்வனவு செய்தல்

**Tender Reference: SPMC/PP/LAN/01/2021.**
**Closing on 10th May 2021 at 10.00 A.M.**

பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் யோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிற்குள் இரத்மலான பிரதேசத்தில் அமைந்துள்ள (ஐம்பதிலிருந்து-எழுபது – 50-70) பேர்ச்சு காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- ❖ இக்காணியானது நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகளை பெற்றுக் கொள்ளும் வகையிலிருத்தல் வேண்டும்.
- ❖ அகலமான நுழைவாயிலைக் கொண்டிருப்பதுடன் உட்செல்வதற்கும் கொள்கலன் ஊர்திகளை (20 அடி மற்றும் 40 அடி) இடத்திற்கிடம் இடப்பரப்பில் மாற்றுவதற்கும் நெருக்கடியற்ற பிரதேசமாக இருத்தல் வேண்டும்.
- ❖ இக்காணியானது எந்தவொரு தகராருமற்றதும், வெள்ள ஆபத்துக்களின்றியும் அத்துடன் சேற்று நிலமாகவும் இருத்தல் ஆகாது.
- ❖ 2-4 மாடிகளை கட்டுவதற்கு தடையாக இல்லாமலிருப்பதற்காக உயர் அழுத்தமுள்ள மின்சார கம்பிகள் சுற்றுப்புறத்திலும் காணிக்கு மேலாகவும் இருத்தல் ஆகாது.
- ❖ பாதுகாப்பு காரணங்களுக்காக களஞ்சியசாலையொன்றை கட்டுவதற்காக சட்ட வரையறுப்பிலிருந்து விடுபாடும் அல்லது வேறேதாவது சட்ட அலுவலர்களினால் அமுல் நடாத்தப்படும் வரையறுப்புக்களிலிருந்து விடுபாடும்.
- ❖ தனிநபர் உரிமையுள்ள காணியில்லாவிடின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தை உருவாக்குவதற்காக அடுத்துள்ள சிறிய காணிகளுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

**பின்வரும் தகவல் வழங்கப்படல் வேண்டும்**

- ❖ உரிமையாளரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்.
- ❖ காணிக்கு செல்லும் வழியின் விபரங்கள்.
- ❖ காணியின் விஸ்தீரணம் மற்றும் விற்பனை விலை.
- ❖ உறுதி மற்றும் வரைபடத்தின் பிரதிகள்.

இதற்கமைவாக, வளமுள்ள விலைமனுதாரர்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கோரல்களை 2021 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரியில் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Purchase of Land to build a warehouse" Reference : SPMC/PP/LAN/01/2021 on 10th May 2021 at 10.00 hrs** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

2637574, 2635353 மற்றும் 2636966 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வழியாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம்,**
**இரத்மலான, இலங்கை.**
**தொலைநகல்** : (00)94-11-2634771
**இணையதளம்** : www.spmclanka.lk
**தொலைபேசி** : **(00)94-11-2635353/(00)94-11-2637574/(00)94-11-2623298**
**மின்னஞ்சல்** : **spmclanka@sltnet.lk**

# இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

## மிகிந்தலை

## துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பம்/ முன்மொழிவுகளுக்கான அழைப்பு

1987 இன் 16 ஆம் இலக்கம் கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் 34(l) ஆவது பிரிவு மற்றும் அதன் பிந்தைய திருத்த விதிமுறைகளுக்கு அமைய இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை மூலம் துணைவேந்தர் பதவிக்காக ஆட்களிடம் இருந்து விண்ணப்பம்/ முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

1978 இன் 16 ஆம் இலக்கம் கொண்ட பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழு நேர அதிகாரியாவார். அவர் பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான கல்வி அதிகாரி மற்றும் பிரதான கணக்குப் பொறுப்பு அதிகாரியுமாவார். அவர் பதவி நிலையில் நிர்வாக சபை மற்றும் செனட் சபையின் உறுப்பினர் மற்றும் தலைவருமாவார்.

1978 இன் 16 ஆம் இலக்கம் கொண்ட பல்கலைக்கழக சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் விதிமுறைகளுக்கு அமைய துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அல்லது முந்தைய பதவியை கைவிட்டுச் சென்றாலே ஒழிய மூன்று ஆண்டு காலத்திற்கு அந்தப் பதவியில் இருப்பார் என்பதோடு அவர் 65 வயது பூர்த்தியாகும் வரை அல்லது துணைவேந்தர் பதவியின் காலம் முடியும் வரை என்ற இரண்டில் முதலில் நிகழ்கின்ற காலம் வரை பணியாற்றல் வேண்டும்.

கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்தல், முகாமைத்துவ கொள்கைகளை வகுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அறிமுகம் செய்தல், நிர்வாக சபையின் முடிவை செயற்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொதுவான நிர்வாகம் தொடர்பில் துணைவேந்தர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதோடு அவர் அதற்காக எப்போதும் கல்விச் சிறப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புக் கூறலுடனும், ஜனநாயக ரீதியான முகாமைத்துவம் மற்றும் செயல்திறன் மிக்க தலைமைத்துவத்தின் அடிப்படைகளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் அபேட்சகர் உயர் கல்வி அடைவை பெற்ற வெற்றிகரமான ஆராய்ச்சி பின்னணியைக் கொண்ட தலைமைத்துவப் பண்புகளை உடைய பல்வேறு தரப்புகளுடனும் உகந்த முறையில் தொடர்பைப் பேணுவதற்கு முடியுமான கொள்கை சிக்கல்கள் தொடர்பில் சிறந்த புரிதலுடைய, முடிவுகளை பலன்தரும் வகையில் செயற்படுத்த முடியுமானவராக இருத்தல் வேண்டும்.

(எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக http://www.rjt.ac.lk/news/?cat=2 என்ற பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.)

துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணிக்குழு சம்பள அளவின் உச்ச சம்பள நிலைக்கு உரித்தாவதோடு குறித்த அடிப்படை சம்பளத்தில் 15% உபசரிப்புப் படி, தொடர்பாடல் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு ஆகியவை பெறுவதற்கு தகுதி பெறுவார். இது தவிர துணைவேந்தருக்கான இல்லம் வழங்கப்படும்.

விண்ணப்பம்/ முன்மொழிவு பத்திரத்துடன் கீழுள்ள ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவரின் (துணை ஆவணங்கள் உள்ளடங்கலாக) முழுமையான சுயவிபரக் கோவை (விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.)
2. பல்கலைக்கழகத்தின் நோக்கு பற்றி தமது தனிப்பட்ட கருத்து ஒன்றுடன் அதன் மேம்பாட்டுக்காக விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் துணைவேந்தர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அவர் மூலம் பல்கலைக்ககழத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற பங்களிப்பு தொடர்பான அறிவிப்பு.
3. விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் தற்போது துணைவேந்தர் பதவியை வகிப்பதாயின் அல்லது இதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் அந்தப் பதவியை வகித்திருந்தால் அந்த பதவிக் காலத்தில் அவர் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை குறித்துக் கூறும் அறிக்கை ஒன்று.
4. முன்மொழிவாயின் முன்மொழியப்படுபவரின் விருப்பத்தைக் கொண்ட கடிதம்.
5. விண்ணப்பதாரர்/ முன்மொழியப்படுபவர் அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் தவிர்த்து வேறு உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுவதாயின் அவர் பதவிக்காக தேர்வு செய்யப்பட்டால், பணியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் என்பதன் விருப்பத்தை வெளியிடும் தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் ஒன்று.
6. 2020.05.04 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கு அமைய மூன்று அபேட்சகர்களின் பெயர் விசேட நிர்வாக சபை மூலம் பரிந்துரைக்கப்பட்ட நிர்வாக சபை கூட்ட அறிக்கையோடு நியமனத்திற்காக பரிசீலிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படும்.

விண்ணப்பங்கள் அல்லது முன்மொழிவுகள் 2021.05.19 ஆம் திகதி பி.ப. 2.30க்கு முன்னர் ''பதிவாளர்/ நிர்வாக சபைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிகிந்தலை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது தனிப்பட்ட முறையில் வந்து ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பம்/ முன்மொழிவுகளை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் முலையில் ''துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்கும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**ஏ.எம்.ஜீ.பி. அபேசிங்க**
**பதிவாளர்/ நிர்வாக சபை செயலாளர்**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**
**2021.04.18**



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 37

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

*('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்)*

### பத்திரிகையுலகில் ஒப்பாரும் மிக்காருமற்றவராகத் திகழ்ந்த எஸ்.டி.சிவநாயகம்



பத்திரிகை ஜாம்பவான் எனப் புகழ்பெற்ற எஸ்.டி. சிவநாயகம் அமரத்துவம் அடைந்து 21 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. அன்னாரது சிரார்த்த தினம் இம்மாதம் 22ஆம் திகதியாகும். அவரது நினைவுகளை மீட்டி அஞ்சலி செலுத்துவதாக இப்பத்தி அமைகிறது.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.டி. சிவநாயகம் தனது மாணவப் பருவத்திலேயே பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையால் கவரப்பட்டு அக்கொள்கைப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்.

பள்ளிப் பருவத்திலேயே 1946ஆம் ஆண்டில் பாடசாலைப் பத்திரிகையான ஐக்கியதீபம் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணியாற்றியவர். அதனை அடுத்து 1947ஆம் ஆண்டு தனது சொந்தப் பத்திரிகையான உதயம் பத்திரிகைக்கு ஆசிரியரானார்.

1948ஆம் ஆண்டில் தலைநகருக்கு வந்து தினகரனில் தனது பத்திரிகைப்பணியை ஆரம்பித்தார். அதன்பின்னர் தந்தை செல்வநாயகம்; வெளியிட்ட 'சுதந்திரன்' பத்திரிகையில் 1952முதல் 1961வரை பணி புரிந்தார். அக்காலப்பகுதியில் பல எழுத்தாளர்களை சிறுகதை ஆசிரியர்களை நாவல் ஆசிரியர்களை கவிதை எழுதுவோரை வளர்த்தெடுத்தார். 1962இல் வீரகேசரியில் இணைந்து இணையாசிரியராகப் பணி புரிந்தார்.

அதன்பிறகு 1966முதல் தினபதி தேசிய தினசரி மற்றும் சிந்தாமணி வார இதழ் ஆகியவற்றின் பிரதம ஆசிரியராகப் பணியேற்றார்;.

தியாகி அரசகேசரி நவரசகேசரி குயுக்தியார் திரிஞானி போன்ற பல புனைபெயர்களில் அவர் எழுதினார்.

கதை கட்டுரை கவிதை இலக்கியம் நாடகம் சினிமா தொலைக்காட்சி விமர்சனங்கள் வினாவிடை பயணக் கட்டுரைகள் சோதிடம் அரசியல் கட்டுரைகள் விமர்சனங்கள் ஆன்மிகம் வைத்திய ஆலோசனைகள் என்று பல்துறைசார்ந்த விடயங்களை எழுதினார்;.

சிந்தாமணி வார இதழ் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையுலக வரலாற்றிலேயே ஒரு இலட்சம் பிரதிகள் விற்கப்பட்டு சாதனை படைத்தது. 'சிந்தாமணி' பத்திரிகையை வெற்றிகரமாக நடாத்தி சாதனை படைத்தமைக்காக அதன் பிரதம ஆசிரியராக விளங்கிய சிவநாயகத்தை அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து கௌரவப்படுத்தியது. இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்த வரையில் பத்திரிகையாசிரியர் ஒருவருக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய கௌரவம் இதுவாகும்.

அவர் பணியாற்றிய நிறுவனம் மூடப்பட்டபின்னர் 1976ஆம் ஆண்டில் 'மாணிக்கம்' எனும் வார இதழில் நிர்வாக இதழாசிரியராகப் பணியாற்றினார்.

இவரது துணைவியார் மங்களாவதி சிவநாயகம்; கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்தவர். பத்திரிகை ஆசிரியரான கணவருக்குப் பள்ளிக்கூட ஆசிரியையான பாரியாரும் பக்கத்துணையாக உதவிகள் புரிந்தார்.

பத்திரிகைத்துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்த எஸ்.டி சிவநாயகம் சத்யசாயி பாபாவின் ஆன்மிக ஸ்தாபனத்தினூடாக சமய சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். கொழும்பு சாயிபாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்டபோது அதன் முதலாவது தலைவராக ஏகமனதாகத் தெரிவாகிய திரு. சிவநாயகம் தொடர்ந்து 25ஆண்டுகள் அதே சாயி ஸ்தாபனத்தின் தலைவராகவும் இருந்து சாயிபாபா அறக்கட்டளையையும் உருவாக்கியவர்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவராக இருந்து 50ஆண்டுகள் பணியாற்றிய எஸ்.டி. சிவநாயகம் 22 ஏப்ரல் 2000ஆம் திகதி அமரரானார்.

### எலிசபெத் மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகனின் மறைவு



இலங்கை சுதந்திரமடைவதற்கு முன் எம்மை ஆட்சிசெய்தவர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினர். அந்த வகையில் பிரிட்டிஷ் ராஜகுடும்பம் இலங்கை மக்களுக்கு ஒருவகையில் நெருக்கமாக இருந்து வந்திருக்கிறது. அந்த ராஜகுடும்பத்தின் இளவரசர் எடின்பரோ கோமகன் 9.04.2021இல் காலமானார். அவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு இங்கு தரப்படுகிறது.

இளவரசர் ஜேர்மனிய அரச குடும்பத்தைச் செர்ந்தவர். பிலிப் என்பது இவருக்குத் தாய்தந்தையர் இட்ட பெயர். 1921ஆம் ஆண்டு கோர்பு என்னும் தீவில் பிறந்த இவர் பிரான்ஸ் இங்கிலாந்து ஜேர்மனி ஆகிய நாடுகளில் கல்வி கற்றவர். இளவரசர் தனது இளமைக்காலத்தை பிரான்சில் கழித்தவர். இரண்டாம் உலகப்போரில் ரோயல் கடற்படையில் சேர்ந்தார். கடற்படைப் பயிற்சிக்கல்லூரியில் பயிலுனராக இருந்தபோது இரண்டு இளவரசிமார் அப்பயிற்சிக் கல்லூரியைப் பார்வையிட வந்தனர். அவர்களை அழைத்துச் சென்று சுற்றிக்காட்டும் பொறுப்பு பிலிப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களில் ஒருவர்தான் தற்போதைய அரசி எலிசபெத். அப்போது அவருக்கு வயது 13 மட்டுமே. சுற்றிக்காட்டிய இளைஞனுக்கும் இளவரசிக்கும் நட்பு ஏற்பட்டது. கடிதத் தொடர்புகள் ஏற்பட்டு காதலாகப் பரிணமித்தது.



ஆனால் இளவரசி எலிசபெத்தின் தந்தை ஜோர்ச் மன்னர் இதனை அறிந்தபோது அவர்களது காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் எலிசபெத் பிடிவாதமாக இருந்து பிலிப்பையே மணந்துகொண்டார். இவர்களது திருமணம் 29.11.1947இல் நடைபெற்றது.

அரச பாரம்பரியத்துக்கு ஏற்ப பிலிப் தனது குடும்பப் பெயரரைத் துறந்தார். பிரிட்டிஷ் குடிமகனாக மாறி தனது தாயாரின் குடும்பப் பெயரான மவுண்ட் பேட்டனை தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். திருமணம் முடிந்ததும் எலிசபெத் மகாராணியின் தந்தை ஜோர்ஜ் மன்னர் மாட்சிமை பொருந்திய இரு பட்டங்களை இளவரசருக்கு அளித்தார். இந்தப் பட்டங்கள் மூலம் பிரிட்டிஷ் அரச குடும்பத்தவராகும் தகுதி அவருக்கு வழங்கப் பெற்றது. தொடர்ந்தும் கடற்படையில் சேவையாற்றிய எடின்பரோ ஜோர்ஜ் மன்னரின் உடல்நிலை தளர்ந்த போது எலிசபெத்துக்கு உதவும் வகையில் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஜோர்ஜ் மன்னர் இறந்ததும் எலிசபெத் மகாராணியாக முடிசூட்டப் பெற்றார். மகாராணியின் கணவர் என்ற அந்தஸ்தது எடின்பரோ கோமகனுக்குக் கிடைத்தது 1957இல் பிரிட்டனின் இளவரசராக இவர் முடிசூட்டப் பெற்றார். எடின்பரோ எலிசபெத் தம்பதிக்கு சாரள்ஸ் ஏன் அன்ட்ரூ எட்வர்ட் என நான்கு பிள்ளைகளும் 8 பேரப்பிள்ளைகளும் 9 பூட்டப் பிள்ளைகளும் உள்ளனர்.

எடின்பரோ கோமகன் தான் வசித்துவந்த வின்சர் மாளிகையில் தனது 99ஆவது வயதில் காலமானார்

### திருத்தல யாத்திரையில் ஒரு ஹெலிகொப்டர் பயணம்

இமயமலையில் கேதாரநாத் பத்திரிநாத் என இரு பெரும் புண்ணிய திருத்தலங்கள் இருக்கின்றன. அவற்றைத் தரிசிக்கும் பாக்கியம் எமக்கு 2008இல் கிட்டியது. முதலில் நாம் கேதாரநாத் என்ற தலத்திற்குச் சென்றோம் இமயமலை அடிவாரத்திலிருந்து 14 கி.மீ. தூரம் வாகனம் செல்லமுடியாது. மூன்று முதல் ஐந்து அடி அகலமான மலைப்பாதை கால்நடையாகத்தான் செல்லவேண்டும். 'போனி' என்ற மட்டக் குதிரைகள்



மீது ஏறிச் செல்லலாம். குதிரைப் பாகன் எம்மைக் குதிரைமேல் ஏற்றிவிட்டு பக்கத்தில் நடந்து வருவார். போனிக் குதிரையில் ஏறிப் பயணிக்க முடியாதவர்களை 'தண்டி' என்ற சாய்வு நாற்காலி போன்ற அமைப்புள்ள பல்லக்கில் வைத்து நான்கு பேர் தூக்கிச் செல்வார்கள். இவற்றுக்கெல்லாம் வெவ்வேறு தொகையான கட்டணங்கள் அறவிடப்படுகின்றது. சமீபகாலமாக ஹெலி கொப்டரில் இந்தப் 14 கி.மீ. தூரத்தைப் பயணிக்க வசதி செய்துள்ளார்கள். இவற்றுக்குரிய கட்டணம் அதிகம். இந்த ஹெலியின் பயணம் எமக்குப் புதிய அனுபவம். அற்புதமான அனுபவமாக இருந்தது. ஹெலியில் பறக்கும்போது நான்கு புறத்துச் சுற்றுச் சூழலையும் பார்த்தபடி பறந்தோம்!மலைமுகடுகளுக்கூடாகஅவற்றில்மோதிவிடாதவாறு வளைந்தும் திரும்பியும் ஹெலி உயர உயரப் பறந்துகொண்டிருந்தது. பனிமுகடுகளிலிருந்து ஜில்லென்ற குளிர்காற்று உடலைச் சிலிர்க்க வைத்தது. மஞ்சள் வெயி லில் ஹெலியின் நிழல் மலைமுகடுகளில் ஊர்ந்துவந்து கொண்டிருந்தது. அதன் கீழே காடுகள்




நிறைந்த பச்சை மலைகள் தெரிந்தன. வெள்ளி கறுப்பு பச்சை மலைகளை நான்கு புறமும் ஒரு சேரப் பார்க்கும்போது ஆகா! அழகோ அழகு!! மலை முகடுகளைத் தழுவிவரும் மேகக்கூட்டங்கள் எம்மையும் தழுவி அரவணைத்தன.

தூரத்தே உள்ள ஒரு மலைச்சாரலில் காவி உடையணிந்த மூன்று சந்நியாசிகள் அடர்ந்த காட்டினில் இருந்து தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களது கண்கள் சூரியனை நோக்கிய வண்ணம் இருந்தன. இவர்களுக்கு இந்தத் தனிமையான காட்டில் இந்த மலைச்சாரலில் எவ்வாறு உணவு கிடைக்கும்?; காற்று வெயில் மழை போன்றவற்றில் இருந்து இவர்கள் எப்படித் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்? இரவில் இவர்களுக்கு எங்கிருந்து வெளிச்சம் கிடைக்கும்? காட்டு மிருகங்களில் இருந்து இவர்கள் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள்? இவற்றுக்கெல்லாம் ஒரே பதில் அவர்களது தவவலிமைதான்!

நாம் பயணித்த ஹெலி கேதாரநாத் தலத்தின் முன்னால் தரையிறங்கியது.

**(இனிஅடுத்த இதழில்)**

---


# படித்ததும் பகர்வதும் 41

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### ஒற்றுமையால் வெல்வோம்!



இலங்கை பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு. பௌத்தர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என பல மதங்களை பின்பற்றுகின்றவர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலாய் என பல மொழிகளை பேசுகின்றவர்களும், சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் என பல இனங்களை சேர்ந்தவர்களும் ஒன்றாக சேர்ந்து வாழ்கின்ற நாடு என்பதில் இலங்கையர் என்றும் எங்கும் எப்போதும் பெருமை பட முடியும்.

இலங்கையர் ஒவ்வொருவரும் தம்மோடு சேர்ந்து வாழ்கின்ற பிற இன, மத, மொழி மக்களையும் புரிந்துணர்வோடு, ஒன்றாக, அரவணைத்து வாழ்வதே இலங்கை நாட்டின் இன்றைய தேவையாகும். எம்மோடு சேர்ந்து வாழ்கின்ற ஏனைய மக்களின் மத, கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை புரிந்து கொண்டு அவற்றுக்கு உரிய இடமளித்து சரியான, முறையான கௌரவமளித்து, கண்ணியபடுத்தி வாழ்வதன் மூலமே சக வாழ்வு என்ற விடயம் அர்த்தமுள்ளதாக அமையும். நாடும் அபிவிருத்தியடையும். இனங்களுக்கிடையே வீண் குரோதங்களும் முரண்பாடுகளும் போட்டி பொறாமைகளும் நாட்டின் முன்னேற்றத்தை நலிவு படுத்தி நாட்டை அதள பாதாளத்தில் தள்ளி விடவே வழிவகுக்கும்.

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அவர்களது அபிலாசைகளுக்கு இடமளித்து, இயலுமான சகல வழிகளிலும் விட்டுக்கொடுத்து வாழ்வதன் மூலமே இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற நாடுகளில் அமைதியும், சமாதானமும், சகவாழ்வும் நிலைபெற்று அபிவிருத்தியும் சுபீட்சமும் உருவாக முடியும். இவற்றை நன்கு புரிந்து கொண்டு ஒரே நாட்டில் வாழும் பல்லின, பல மத, மக்கள் நாம் என்பதில் தெளிவு கொண்டு, ஒருவருக்கொருவர் அனுசரித்து வாழ்வதன் மூலமே நாமும் வென்று நாட்டையும் வெற்றி பெற செய்யலாம். இதுவே உலகில் எமது நாட்டையும் நாட்டின் கௌரவத்தையும் உயர்வடைய செய்யும்.

## நீத்தார் நினைவு

### பிரபல இசையமைப்பாளர் கே .எம். ஸவாஹிர் மாஸ்டர்



இலங்கையின் பிரபல இசையமைப்பாளர் கே .எம். ஸவாஹிர் மாஸ்டர் தனது 90வது வயதில், அண்மையில் எம்மைவிட்டும் பிரிந்தார்.

1931ல் கொழும்பில் பிறந்து, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் 1950ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் இஸ்லாமிய பாடல்களுக்காண இசைக்கலைஞராக இணைந்தார். அன்று முதல் நூற்றுக்கணக்கான இஸ்லாமிய கீதங்களுக்கு வானொலியிலும் தொலைக் காட்சியிலும் இசை அமைத்துள்ளார். பல்வேறு பொப்பிசைப் பாடல்களும் ஸவாஹிர் மாஸ்டரின் இசையில் உருவாகி பிரபலமடைந்தன.

ஸவாஹிர் மாஸ்டர் தமிழ் , சிங்கள பாடல்களுக்கும் இசையமைத்து புகழ் பெற்றார். இலங்கையின் முதல் தமிழ் படம் 'தோட்டக்காரி', 'மீனவப்பெண்' படங்களுக்கும் 'ஆதரயக்க மஹிம' போன்ற சிங்களப் படங்களுக்கும் இசையமைத்து புகழ் பெற்றார். தென்னிந்திய இசையமைப்பாளர் ரீ. ஆர். பாப்பா இலங்கை வந்து இசையமைத்த சிங்களப் படங்களுக்கு உதவி இசையமைப்பாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார். ரூபவாஹினியில் "மின்னும் தாரகை" எனும் இசை நிகழ்ச்சிக்கும் நீண்ட காலமாக இசையமைத்து வந்தார்.

இசைத் துறையில் ஏழு தசாப்தங்கள் புரிந்த அவரது இசைச் சாதனைகளுக்கு ஏராளமான விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன! 1993ல் மூஸிக் நூரி பட்டம், 1998ல் ஜனாதிபதி விருது, 2005ல் கலாபூஷணம், 2005ல் கனடாவில் இசைப்பேரொளி பட்டம், 2009ல் மெல்லிசை வித்தகர் பட்டம் போன்றவை அவற்றுள் சிலவாகும்.

எனது பாடல்களுக்கும், ஸவாஹிர் மாஸ்டர் இசையமைத்ததும், இவரது இசைக்கு நான் பாடல்கள் எழுதியதும் என் வாழ்வில் மறக்கமுடியாத தருணங்கள். இவரது வாரிசுகளான அனஸ் ஸவாஹிர், பயாஸ் ஸவாஹிர், அயாஸ் ஸவாஹிர் இலங்கையிலும், கடல் கடந்த நாடுகளிலும் இசைத்துறையில் பல சாதனைகளை படைத்து, இவரது பெயரை நிலை நிறுத்தி வருகிறார்கள்!

இவரது பிரிவால் கவலையில் ஆழ்ந்திருக்கும் அவரது வாரிசுகளுக்கும், குடும்பத்தவர்களுக்கும், ஏனைய கலையுலக அன்பர்களுக்கும் எமது ஆழ்ந்தஅனுதாபங்கள்.

## தகவல் களஞ்சியம்

- ★சுடுநீர் குளீர்நீரை நீரைவிட வேகமாக பனிக்கட்டியாக மாறும்.
- ★உலக புகழ்பெற்ற மொனாலிசாவுக்கு கண் புருவங்கள் இல்லை.
- ★மனித உடலில் மிக உறுதியான தசை நாக்கு ஆகும்.
- ★எறும்புகள் ஒரு போதும் தூங்குவதில்லை.
- ★உலகத்தில் அதிகமாக உச்சரிக்கப்படும் பெயர் முஹம்மது ஆகும்.
- ★உலக சாதனை பதிவு புத்தகமான கின்னஸ் புத்தகம் தான் பொது நூலகங்களிலிருந்து அதிகமாக திருட்டு போகும் புத்தகமாகும்.
- ★விலங்குகளில் பாய முடியாத ஒரு மிருகம் யானை.
- ★விரலடையாளம் ஒருவருக்கொருவர் வேறுபடுவது போல் நாக்கின் பதிவும் ஆளுக்காள் வேறுபடுகிறது.

## பேசும் கவிதை

### மனிதனைத் தேடி

கவிஞர்மு. மேத்தா



உன்னுடைய கொடியை
உயர்த்திப் பிடித்துக் கொள்!
எதற்காக
அடுத்தவர் கொடிக்கம்பத்தை
அறுக்கத் துடிக்கிறாய்?

உன்னுடைய மார்க்கத்தில்
பூக்களைத் தூவிக் கொள்!
எதற்காக
அடுத்தவர் மார்க்கத்தில்
முட்களைப் பரப்புகிறாய்?

உன்னுடைய தோட்டத்தில்
வேலி போட்டுக் கொள்!
எதற்காக
அடுத்தவர் தோட்டத்தில்
அத்து மீறுகிறாய்?

உன்னுடைய படத்தை
ஆணியில் மாட்டிக் கொள்!
எதற்காக
அடுத்தவர் படத்தின் மேல்
ஆணி அறைகிறாய்?

ஊரை எழுதுகிறாய்!
பேரை எழுதுகிறாய்!
எப்போது
உண்மையில் நீ யாரென்று
எழுதப் போகிறாய்?

உன்னுடைய நிறைகளை
ஊரெங்கும் சொல்லிக் கொள்!
எதற்காக
அடுத்தவர் குறைகளை
ஆராய்ச்சி செய்கிறாய்?

மதத்தைச் சொல்கிறாய்!
சாதியைச் சொல்கிறாய்!
எப்போது
மனிதன் என்று நீ
சொல்லப் போகிறாய்?

## சிந்தனை செய் மனமே

ஒரு பெண் தினமும் கோவிலுக்கு வந்து செல்வாள்! ஒரு நாள் அந்த பெண் பூசாரியிடம் " ஐயா! நான் இனி கோவிலுக்கு வரமாட்டேன்." என்று சொன்னாள். பூசாரி அவளிடம் "ஏன்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் சொன்னாள், "கோயில் வளாகத்தில் மக்கள் செல்போனில் எதைப் பற்றியோ பேசுவதை நான் பார்க்கிறேன்! கிசுகிசுக்கும் இடமாக கோயிலை சிலர் தேர்வு செய்துள்ளனர்! சிலர் பாசாங்குத்தனம் செய்கிறார்கள். மற்றும் சிலர் குறைவாக வழிபடுகிறார்கள், அதிகம் போலியாகவே வணக்க வழிபாடுகளை செய்கிறார்கள்.



இதனை என்னால் பார்க்க முடியவில்லை." இதனைக் கேட்ட அர்ச்சகர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார், பிறகு பெண்ணிடம் "சரி! ஆனால் நீங்கள் உங்கள் இறுதி முடிவை எடுப்பதற்கு முன் நான் சொல்வதை செய்ய முடியுமா!" என்று கேட்டார். அதற்கு இணங்கிய அந்தப் பெண், "சொல்லுங்கள் ஐயா! என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள். அர்ச்சகர் சொன்னார், "அம்மா! ஒரு கண்ணாடி குவளையில் தண்ணீர் நிரப்பி இரண்டு முறை கோவில் வளாகத்திற்குள் வலம் வர வேண்டும். ஆனால் தண்ணீர் தளும்பி ஒரு சொட்டும் கீழே விழக்கூடாது. என்பதுதான் முக்கிய நிபந்தனை !" பெண் அதனை ஏற்றுக் கொண்டு சொன்னாள், "என்னால் இதைச் செய்ய முடியும்! உடன் செய்கிறேன்."

அந்தப் பெண்ணும் சிறிது நேரத்தில் ஒரு கண்ணாடி குவளையில் தண்ணீர் நிரப்பி இரண்டு முறை கோவில் வளாகத்திற்குள் வலம் வந்தாள். தண்ணீர் தளும்பி ஒரு சொட்டும் கீழே விழுந்துவிடாமல் கவனமாக செய்து முடித்தாள். அதன்பிறகு கோவில் அர்ச்சகர் பெண்ணை அழைத்து அவளிடம் மூன்று கேள்விகள் கேட்டார்.

1. கையில் கண்ணாடி குவளையில் நீர் நிரப்பி வலம் வரும்போது யாராவது செல்போன் பேசுவதை நீங்கள் பார்த்தீர்களா ?
2. கோவிலில் யாராவது கிசுகிசுப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?
3. யாராவது பாசாங்குத்தனம் செய்வதை நீங்கள் கண்டீர்களா?

பெண் சொன்னாள், "இல்லை ஐயா! நான் எதையும் பார்க்கவில்லை!" அப்பொழுது அர்ச்சகர் அவளிடம், "நீங்கள் வலம் வரும்போது உங்கள் கவனமெல்லாம் கண்ணாடி குவளை மீதுதான் இருந்தது தண்ணீர் சிந்தாதபடி உங்கள் கவனம் இருந்ததால் உங்களால் வேறு எதையும் கவனிக்க இயலவில்லை. இதேபோல் இனி கோவிலுக்கு வரும்போதெல்லாம் தெய்வம் மீது மட்டும் கவனம் வையுங்கள். அப்போது வேறு எதையும் உங்களால் காண முடியாது. எங்கும் தெய்வம் மட்டுமே தெரியும்." என்றார்.

அந்தப்பெண், அப்போதுதான் இறையச்சத்தின் உண்மையான தாத்பரியத்தைப் புரிந்து கொண்டாள்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

# விளையாட்டு





## வறுமையை தாண்டி சாதனை நாயகனாக உருவெடுத்த நிஸ்ஸங்க



சர்வதேச கிரிக்கெட்டுக்குள் நுழைந்தவுடன் தங்களுடைய பெயர்களை சாதனை பெயர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு வீரர்களுக்கு அதிகம். தேடிய இலக்கினை எட்டிய பிறகு சாதனைகளை குவிப்பது அப்படி ஒன்றும் கடினமான விடயமல்ல. ஆனால் நிர்ணயித்த சாதனையை அடைவதற்கான போராட்டமும், வலியும் எமக்கான வாழ்க்கையின் பாடத்தை கற்பிக்கக்கூடியவை.

இலங்கை கிரிக்கெட்டை பொருத்தவரை, இந்த காலக்கட்டத்தில் பெரிதளவுக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்றாலும், ஒரே ஒரு வீரர் பற்றிய பேச்சுகள் தொடர்ந்தும் வந்துக்கொண்டிருக்கின்றன.

முதற்தர போட்டிகளில் அவரது சராசரி 67 ஆக இருக்கின்ற நிலையில், கன்னி டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சாதாரண விடயம்தான். இவ்வாறான சிறந்த திறமைகளுடன் கிரிக்கெட் மைதானத்தில் ரசிகர்களுக்கு சந்தோஷத்தை கொடுத்தும், தனக்கான சந்தோஷத்தை ஏற்படுத்திக்கொண்டும் இருந்த பெதும் நிஸ்ஸங்க, மைதானத்துக்கு வெளியில் வாழ்ந்த விதம் அவருக்கு மாத்திரமல்ல, கிரிக்கெட்டை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாடமாகும்.

சிறந்த ஓட்டப்பதிவை கொண்டிருந்தும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண குழாத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த பெதும் நிஸ்ஸங்க, என்சிசி கழகத்துக்காக தொடர்ந்து 2 சதங்களை விளாசி, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான குழாத்தில் இடம்பிடித்து பெற்றோர் மனதில் பூரிப்பை ஏற்படுத்தினார்.

பெற்றோர் மனதில் பூரிப்பை ஏற்படுத்தியதை விட, இன்னும் சிலரின் மனதில் நீங்காத இடத்தை பிடித்துக்கொண்ட பெதும் நிஸ்ஸங்கவின் வாழ்க்கை கதை வலி மிகுந்த சுவாரஷ்யத்தை கொண்டது.

இலங்கை கிரிக்கெட்டின் அடையாளமான காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில், மைதான ஊழியரான சுனில் சில்வாதான் பெதும் நிஸ்ஸங்கவின் தந்தை. பெதும் நிஸ்ஸங்கவின் தாயார், களுத்துறை விகாரையில், பூக்களை விற்பனை செய்து வருகின்றவர். இவ்வாறான சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும், சுனில் சில்வாவுக்கு இருந்த கிரிக்கெட் தொடர்பான அறிவு, தன்னுடைய மகனின் முதல் பயிற்றுவிப்பாளராக அவரை மாற்றியுள்ளது.

களுத்துறை வித்தியாலயத்தில் கல்வி கற்ற பெதும் நிஸ்ஸங்க, களுத்துறை பாடசாலையில் தன்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தார். இந்த பாடசாலைக்காக அதிக ஓட்டங்களை பெற்றிருந்த இவரை, பாடசாலை பயிற்றுவிப்பாளர் சுனில் சலவதன கண்காணித்துவந்தார்.

கொழும்பில் உள்ள பாடசாலைகள் சிறந்த வீரர்களை வலைவீசி தேடிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், சுனில் சலவதனவுக்கும், சிறந்த வீரர்கள் உள்ளார்களா? என்ற அழைப்பு வரத்தொடங்கியது. உடனடியாக பெதும் நிஸ்ஸங்கவை அடையாளம் காட்ட, புனித தோமையர் கல்லூரி உட்பட கொழும்பில் உள்ள சில முன்னணி பாடசாலைகள் பெதும் நிஸ்ஸங்கவை இணைக்க முற்பட்ட போதும், இசிபதன கல்லூரி முதல் பாடசாலையாக பெதும் நிஸ்ஸங்கவை இணைத்துக்கொண்டது.

கொழும்பு வாழ்க்கை எத்தனை கடினமானது எனவும், வாழ்க்கை செலவு தொடர்பிலும் அதிகமாக சிந்தித்த, பெதும் நிஸ்ஸங்கவின் பெற்றோர்களை, சமாதானப்படுத்த சுனில் சலவதன மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியது. மகனை கொழும்புக்கு அனுப்புவதில், பெதும் நிஸ்ஸங்கவின் பெற்றோருக்கு துளியும் விருப்பமில்லை. கல்வி அறிவு கொஞ்சமும் இல்லாத பெற்றோர், தமது மகனின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இசிபதன கல்லூரிக்கு அனுப்ப முடிவுசெய்தனர்.

இசிபதன கல்லூரியின் பயிற்றுவிப்பாளர் பிரதீப் நிஷாந்த மற்றும் அந்த சந்தர்ப்பத்தில் இசிபதன கல்லூரி அணியின் தலைவரின் தந்தையும், பிரதீப்பின் நண்பருமான நிலந்த அமரசிங்க ஆகியோர், பெதும் நிஸ்ஸங்கவை தேடி களுத்துறைக்கு புறப்பட்டனர். களுத்துறையில் பெதும் நிஸ்ஸங்கவின் வீட்டினை கண்டறிய முடியாத இவர்கள், பெதும் நிஸ்ஸங்கவின் பெற்றோரை களுத்துறை விகாரைக்கு அழைத்துள்ளனர்.

எந்தவொரு மாணவனோ மாணவியோ களுத்துறை விகாரையில் வைத்து, பாடசாலையில் இணைவதற்கான கடிதங்களில் கையெழுத்திட்டிருக்க மாட்டார்கள். ஆனால், களுத்துறை விகாரையில் கையெழுத்திடும் வாய்ப்பு பெதும் நிஸ்ஸங்கவுக்கும், அவரது பெற்றோருக்கும் கிடைத்தது.

பெதும் நிஸ்ஸங்கவின் வீடு களுத்துறையில் உள்ளது என தெரியும். ஆனால், சரியாக களுத்துறையில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பலதொட்ட என்ற வீதி பகுதியில் பெதும் நிஸ்ஸங்கவின் வீடு உள்ளது. குறித்த வீடானது சுனாமியின் பின்னர், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் அமைத்துக்கொடுத்த வீடாகும்.

அரசாங்கத்தினால் கட்டப்பட்ட வீட்டிலிருந்தும், சாதிக்க துடித்த பெதும் நிஸ்ஸங்கவுக்கு, கொழும்பு வாழ்க்கை மேலும் துன்பத்தை கொடுத்தது. இசிபதன கல்லூரியின் இளம் பழைய மாணவர்கள் ஒன்றியம், ஒரு தொகை பணத்தை கொடுத்த போதும், கொழும்பு வாழ்க்கைக்கு இந்த பணம் போதுமானதாக இல்லை. என்ன செய்வதென்று புரியாமல் பெதும் நிஸ்ஸங்க கடும் மன உளைச்சலுக்கு உள்ளானார். தன்னுடைய ஒருநாள் உணவை பெற்றுக்கொள்வதற்கும் பெதும் நிஸ்ஸங்க தடுமாறினார்.

ஒருவேளை உணவை பூர்த்திசெய்யமால் ஒரு வீரரால் விளையாடுவது எவ்வளவு கடினம் என்பதை அறிந்திருந்த பயிற்றுவிப்பாளர், ஜயரத்ன மலர்சாலையில் பணிபுரியும் அவருடைய நண்பர் நிலந்த அமரசிங்கவிடம் உதவி கோரினார்.

நிலந்த அமரசிங்க பெதும் நிஸ்ஸங்கவின் திறமையில் ஆர்வம் கொண்டதுடன், ஜயரத்ன மலர்சாலை உரிமையாளரிடம், பெதும் நிஸ்ஸங்க தொடர்பில் கூறினார். நாட்டின் முன்னணி மலர்சாலைகளில் ஒன்றான ஜயரத்ன மலர்சாலை உரிமையாளர் பெதும் நிஸ்ஸங்கவுக்கு உதவ தீர்மானித்தார். மாதாந்தம் ஒருதொகை பணத்தை பெதும் நிஸ்ஸங்கவுக்கு கொடுக்க ஆரம்பித்தார்.

பாடசாலை கிரிக்கெட்டை முடித்துக்கொண்ட பெதும் நிஸ்ஸங்க, மீண்டும் களுத்துறை வந்து, பதுரெலிய கிரிக்கெட் கழகத்துக்காக விளையாட ஆரம்பித்தார். பின்னர், இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹஷான் திலகரட்ன என்சிசி கழகத்துக்கு பெதும் நிஸ்ஸங்கவை அழைத்தார். என்சிசி கழகத்துக்கு அழைத்தது மாத்திரமின்றி தன்னுடைய சொந்த மகன்களில் ஒருவராக பெதும் நிஸ்ஸங்கவை, ஹஷான் திலகரட்ன பார்த்துக்கொண்டார்.

என்சிசி கழகமானது கொழும்புக்கு வெளியில் உள்ள திறமை வாய்ந்த வீரர்களை கண்டறிவதில் சிறப்பு வாய்ந்த கழகம். அது மாத்திரமின்றி இளம் மற்றும் அனுபவ வீரர்களுக்கு ஒரே அளவான பணத்தை வழங்கி, அனைவரையும் சமமாக பார்க்கும் கழகம். மிகச்சிறந்த கழகம் ஒன்றில் வாய்ப்பு கிடைத்தது மாத்திரமின்றி, தினேஷ் சந்திமால் மற்றும் உபுல் தரங்க போன்ற சிறந்த ஆலோசகர்களுடன் பழகும் வாய்ப்பும் பெதும் நிஸ்ஸங்கவுக்கு கிடைத்தது.

இலங்கையின் முன்னணி கிரிக்கெட் கழகங்களில் ஒன்றாக என்சிசி இல் இருந்த போதும், சில கிரிக்கெட் அரசியல்கள் காரணமாக, தேசிய கிரிக்கெட் அணிக்கு வீரர்களை அனுப்புவதில் சற்று வீழ்ச்சியை கண்டிருந்தது. ஆனால், அமைதியாக இருந்து இதனை உடைத்தெறிந்த பெதும் நிஸ்ஸங்க மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் முதன்முறையாக இணைக்கப்பட்டார்.

நீண்ட நாட்களாக இலங்கை அணியில் பெதும் நிஸ்ஸங்கவுக்கு வாய்ப்பு கிடைக்குமா? பெதும் நிஸ்ஸங்கவுக்கு வாய்ப்பு கொடுங்கள்! என்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு வந்த நிலையில், தன்னுடைய அனைத்து தடைகளையும் தாண்டி தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பை பெதும் நிஸ்ஸங்க உருவாக்கிக்கொண்டார். தேசிய அணியில் விளையாடிவிட்டாலும் அவர் கடந்து வந்த பாதைகள் மிகவும் கடினமானது.

பெதும் நிஸ்ஸங்க இந்த வாய்ப்பினை இலகுவாக எட்டிப்பிடித்துக்கொள்ளவில்லை. பாடசாலை கிரிக்கெட்டின் போது வறுமை அவருக்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. பின்னர், கழக கிரிக்கெட்டில் அரசியல் சிக்கல்கள் மற்றும் உபாதை. ஆனால், அத்தனையும் தகர்த்து தன்னுடைய திறமையை மாத்திரமே வைத்து அணிக்குள் நுழைந்தவர் பெதும் நிஸ்ஸங்க.

பெதும் நிஸ்ஸங்க மேற்கிந்திய தீவுகள் தொடருக்கு தெரிவாகியது எமக்கு மகிழ்ச்சி. பெதும் நிஸ்ஸங்கவின் பெற்றொருக்கும் மகிழ்ச்சி. ஆனால், எதற்குமே தொடர்புகள் கிடையாத ஜயரத்ன மலர்சாலை, பெதும் நிஸ்ஸங்கவின் திறமை கண்டு பூரித்து போய் நிற்கின்றது. பெதும் நிஸ்ஸங்க விளையாடும் போது, மாதாந்தம் பணம் வழங்கியது மாத்திரமின்றி, மேற்கிந்திய தீவுகள் தொடருக்கு தெரிவாகிய பின்னர், அவரின் செலவுக்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகள் சென்ற பெதும் நிஸ்ஸங்க கன்னி டெஸ்ட் போட்டியில், முதல் டெஸ்ட் சதத்தை பதிவுசெய்து சாதித்தது மாத்திரமின்றி, தன்னுடைய திறமை தனித்துவமானது என்பதை நிரூபித்து நாடு திரும்பினார். திறமையை வெளிப்படுத்த வறுமை ஒரு தடையில்லை.

தொடர் முயற்சிகள் இலட்சியத்தை அடைவதற்கான படிக்கல் என்பதை, தனது செயலால் வெளிக்காட்டிய பெதும் நிஸ்ஸங்க மேலும் சாதனைகளை படைத்து, கிரிக்கெட் உலகில் சாதனை நாயகனாக வலம் வர நாமும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## சிம்பாப்வே முன்னாள் அணித்தலைவருக்கு ஐ.சி.சி. தடை உத்தரவு

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும், கிரிக்கெட் பயிற்சியாளருமான ஹீத் ஸ்ட்ரீக் கிரிக்கெட் சார்ந்த விடயங்களில் அடுத்த 8 வருடங்களுக்கு ஈடுபடாத அளவிற்கு தடை உத்தரவினை வழங்கியிருக்கின்றது.

சிம்பாப்வே அணியின் பயிற்சியாளராக கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரையில் செயற்பட்ட ஹீத் ஹீத் ஸ்ட்ரீக், தான் பயிற்சியாளராக இருந்த காலங்களில் மேற்கொண்ட ஊழல் விடயங்களுக்காகவே தடை உத்தரவினை பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் தொடர்பான ஐந்து பிரிவுகளில் ஐ.சி.சி. ஹீத் ஸ்ட்ரீக்கினை குற்றவாளியாக இனம் கண்டிருப்பதோடு, ஹீத் ஸ்ட்ரீக்கும் தனது குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் குற்றவாளியாக மாறியிருக்கும் ஹீத் ஸ்ட்ரீக் 2029 ஆண்டின் மார்ச் மாதம் 28ஆம் திகதி வரையில் கிரிக்கெட் விளையாட்டோடு சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட தடை உத்தரவினைப் பெற்றிருக்கின்றார்.



கிரிக்கெட் பயிற்சியாளராக மாற முன் சிம்பாப்வே அணிக்காக சகலதுறைவீரராக விளையாடிய இவர் 65 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1990 ஓட்டங்களுடன் 216 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருப்பதோடு, 185 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2943 ஓட்டங்களுடன் 239 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் மீண்டும் ஒத்திவைப்பு

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரை 2022ஆம் ஆண்டு வரை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




1984 முதல் தற்போது வரை சிறப்பாக நடைபெற்று வரும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் இதுவரை 14 தடவைகள் நடைபெற்றுள்ளது. இதில் இந்திய அணி 7 தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்று உள்ளது. இறுதியாக கடந்த 2018இல் நடைபெற்ற ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சம்பியனாகத் தெரிவாகியது.

இந்த நிலையில், 2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்த திட்டமிட்டிருந்த ஆசிய கிண்ண கிரிக்கெட் ரி 20 தொடர் கொரோனா வைரஸ் காரணமாக 2021 வரை ஒத்திவைக்கப்பட்டது.

இம்முறை ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடத்த உரிமை பெற்றிருந்தது. எனினும், இந்தியாவுடனான அரசியல் முரண்பாடு, கொரோனா பரவல் உள்ளிட்ட ஒரு சில காரணத்தால் ஆசிய கிண்ணத்தை நடத்துவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

ஆனால், கொரோனாவின் தாக்கம் மேலும் அதிகரித்து வந்ததால் ஆசிய கிரிக்கெட் பேரவை தனது டுவிட்டரில் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை ஒத்திவைக்கப்படுகிது என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இதன்படி, இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸின் தாக்கம் இன்னும் குறையவில்லை என்பதால் இந்தாண்டும் குறித்த தொடரை நடத்த வாய்ப்பு இருக்காது என்று தெரிவிக்கப்பட்டது.

மறுபுறத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் ஐசிசி இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி லண்டனில் நடைபெறவுள்ளது. இதில் இந்திய அணி விளையாடவுள்ளதால் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் அந்த அணி பங்கேற்பது சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதேபோல, கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் எஞ்சிய போட்டிகள் மீண்டும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த சில தினங்களுக்கு முன் அறிவித்தது. இதனால் பாகிஸ்தான் அணியும் ஆசிய கிண்ணத்தில் பங்கேற்குமா என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த நிலையில், ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் 2022வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்தது.

"சர்வதேச கிரிக்கெட் பேரவை, இந்த வருடம் நடைபெறவுள்ள ஐசிசி இருபதுக்கு 20 உலகக் கிண்ணம், 2022வரை பிற்போடப்பட்டுள்ள ஆசிய கிரிக்கெட் பேரவையின் (ஏசிசி) ஆசிய கிண்ண கிரிக்கெட் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆளுநர் சபை உறுப்பினர்களுடன் இணையவழியில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஏஷான் மானி தெளிவுபடுத்தினார்' என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றை பார்த்து ரசிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இந்த அறிவிப்பின் மூலம் இல்லாமல் போயுள்ளது.

### கால்பந்து நடுவர்களுக்கான

## தொடர்பாடல் உபகரணங்கள் அமைச்சரால் கையளிப்பு



இலங்கை கால்பந்து சம்மேளனம் , இலங்கையின் கால்பந்து விளையாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் நோக்கில் நடுவர்களுக்கான தொடர்பாடல் உபகரணங்களை (12) கையளித்திருக்கின்றது.

அதன்படி, இவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கும் தொடர்பாடல் உபகரணத் தொகுதிகள், இலங்கை கால்பந்து வரலாற்றில் முதல் முறையாக இம்மாதம் 19ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் தொழில்முறை கால்பந்து தொடரான சுபர் லீக் தொடரில் உபயோகம் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் கால்பந்து நடுவர்கள் தமது தொடர்பாடல்களை மேற்கொள்வதில் இருந்த சிக்கல்களைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்டிருக்கும் இந்த தொடர்பாடல் உபகரணத் தொகுதிகள், இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் கால்பந்து நடுவர் அமைப்பின் தலைவர் தேசப்பிரிய மற்றும் பிபா நடுவர் புத்திக்க டயஸ் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உபகரணக் கையளிப்பு நிகழ்வில் இலங்கை கால்பந்து சம்மேளத்தின் தலைவர் அனுர டி சில்வா மற்றும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் மருத்துவக்குழுத் தலைவர் மனில் பெர்னாந்து ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் நடுவர்களின் தொடர்பாடல் விருத்தி கருதி இன்னும் நான்கு மேலதிக தொடர்பாடல் தொகுதிகளையும் இலங்கை கால்பந்து சம்மேளனம் தருவிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



Senthooram

# செந்தூரம்

2021 ஏப்ரல் 18 ஞாயிற்றுக்கிழமை

திருமலை
பிரியங்கா
கமலேஸ்வரன்

# 27 ஆண்டுகளாக தேடப்படும் புதையல்



பிரான்ஸில் 1993 ஆம் ஆண்டு வெளியான புத்தகம் ஒன்றின் பெயர், "தங்க ஆந்தையின் பாதை." புத்தகத்தை எழுதியவர் பிரான்ஸ் நாட்டு புதையல் வேட்டைக்காரர் மெக்ஸ் வெலன்டைன் மற்றும் மைக்கல் பெக்கர். இந்த புத்தகத்தில் புதைக்கப்பட்ட ஆந்தையின் சிலை ஒன்று பற்றிய தடயங்கள் கூறிப்பட்டிருக்கின்றன. அதனை வாசித்து தடயங்களை கண்டறிந்தால் ஆந்தை இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியும்.

இது கதையல்ல உண்மையாகவே புதையல் தேடும் புத்தகம். புதையலை கண்டுபிடித்தால் தங்கம் மற்றும் வெள்ளியாலான அந்த ஆந்தை சிலையின் பெறுமதி மாத்திரமல்ல 1,000,000 பிரான்க் பணம் பரிசாகத் தருவதாக கூறப்பட்டிருக்கிறது. என்றாலும் கடந்த 27 ஆண்டுகளாக இந்த புதையலைத் தேடி பலரும் வீராப்போடு கிளம்பியபோதும் இன்றுவரை அதனை கண்டுபிடிக்க முடியவில்லை. பிரான்சில் தான் அந்தப் புதையல் இருக்கிறது. புத்தகத்தை வாங்கி முடிந்தால் முயன்று பார்க்கலாம்.

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

# மர்மமாக வந்து மர்மமாக மறைந்த நோய்

உலகளாவிய வைரஸ் தொற்றுகள் மனிதனை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டு காணாமல்போவது வரலாறு நெடிகிலும் உள்ள கதை. கொரோனா தொற்றையும் இந்த ரகத்தில் சேர்த்துவிடலாம். ஆனால் 1485 ஆம் ஆண்டு ஏற்பட்ட வியர்வை நோய் இன்றும் கூட மர்மமாகவே இருக்கிறது.



ஐரோப்பாவில் தான் இது தோன்றியது. பிரிட்டன் இதன் பூர்வீகம் என்பதற்கான ஆதாரங்கள் அதிகம். இது ஏனைய தொற்று நோய்கள் போல் இருக்காது. பயங்கரமாக இருக்கும். முன்னெச்சரிக்கை எதுவும் இன்றி அவசர அவசரமாக வந்து ஆளைக் காலிசெய்து விடும்.

திடீரென்று ஒரு பய உணர்வு ஏற்படும், பின்னர் பயங்கரத் தலைவலி, கழுத்து வலி, உடல் சோர்வு வரும், கடைசியில் ஒரு குளிர் வியர்வை வரும் அது ஒட்டுமொத்த உடலையும் சூழ்ந்து வியர்வையாகக் கொட்டும். காய்ச்சல், இதயத் துடிப்பு அதிகரிப்பு மற்றும் உடலில் நீரிழப்பு ஏற்படும். இது எல்லாம் நிகழ்வதற்கு மூன்று தொடக்கம் 18 மணி நேரம் போதும். பின்னர் உயிரிழப்பு சர்வ நிச்சயம்.

இந்த தொற்று ஏற்பட்டு 30 தொடக்கம் 50 வீதமானவர்கள் உயிரிழந்தார்கள். ஆரம்பத்தில் பிரிட்டன் வட்டாரத்தில் தோன்றிய இந்த நோய் ஐரோப்பா எங்கும் பரவியது. 1551 ஆம் ஆண்டு வரை இந்த மர்ம நோயால் முழு ஐரோப்பாவும் பயந்தது. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தார்கள்.

பின்னர் இந்த நோய் வந்தது போன்றே மர்மமாக காணமல்போய்விட்டது. நோய் எப்படி தோன்றியது என்பதற்கு இன்றும் கூட விடை கிடைக்கவில்லை.

# அர்த்தம் தெரியாத கடைசி வார்த்தை






STENDEC என்பதற்கு பொருள் தெரியுமா? தெரிந்தால் உண்மையிலேயே நீங்கள் நாலும் தெரிந்தவர் தான். ஆங்கிலத்தினால் எழுதப்பட்ட இந்த சொல் அல்லது எழுத்துகளுக்கு பொருள் தொரியாது கடந்த 73 ஆண்டுகளாக தலையை பீய்த்துக் கொண்டவர்கள் பலர்.

இதற்குக் காரணம் 1947 ஓகஸ்ட் 2 ஆம் திகதி இடம்பெற்ற விமான வித்துத் தான். பிரிட்டிஷ் சவுத் அமெரிக்கா ஏயார்வெயிஸ் நிறுவனத்தின் லங்காஸ்ட்ரியன் விமானம் சிலி நாட்டின் டுபுன்காடோ மலைப்பகுதியில் விபத்துக்கு உள்ளானது. விமானத்தில் இருந்த 11 பேரும் உயிரிழந்தனர். இந்த விமானத்தின் பாகங்கள் 1990களின் பிற்பகுதியிலே கண்டுபிடிக்கப்பட்டது.

விமானம் விபத்துக்கு உள்ளாவதற்கு முன்னர் கடைசியாக அனுப்பப்பட்ட செய்தியில், STENDEC என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒரு முறை அனுப்பப்பட்டிருந்தால் தப்பாக அனுப்பப்பட்டதாக கூறலாம். மூன்று தடவைகள் இந்த வார்த்தை அனுப்பப்பட்டிருக்கிறது. என்ன மர்மம் என்றால் இந்த வார்த்தைக்கு எந்த அகராதியிலும் தெளிவான பொருள் இல்லை.

# கொலையா? தற்கொலையா?





எலிசா லாம் என்ற பெண்ணின் மரணம் உலக மகா மர்மங்களில் ஒன்று. கனடா நாட்டு மாணவியான அவர் 2013 ஜனவரி 31 ஆம் திகதி காணாமல்போனார். லொஸ் ஏஞ்சல்ஸில் இருக்கும் சிசில் ஹோட்டலில் தங்கி இருந்த போதே அவர் காணாமல்போனார். பெப்ரவரி 19 ஆம் திகதி ஹோட்டலின் தண்ணீர் தொட்டியில் இருந்து அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. மேலோட்டமாகப் பார்த்தால் இதில் என்ன மர்மம் இருக்கிறது என்று கேட்பீர்கள். ஆனால் துப்பறிந்தால் தான் இதில் ஏகப்பட்ட மர்மங்கள் இருக்கின்றன.

லாம்மின் மரணத்திற்கு முன்னரான சி.சி.டி.வி கெமராக்களை பார்த்தால் அவர் அங்கு ஏதோ பதற்றத்திலேயே இருந்திருக்கிறார். யாருக்கோ பயப்பட்டு ஒளிந்து கொள்வது, லிப்டிற்குள் அசாதாரணமாக நடந்து கொள்வதையும் பார்த்தால் ஏதோ இருக்கிறது என்று புரிந்துவிடும். ஆனால் பைபோலர் கோளாறு என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் கூறுகிறார்கள். ஆனால் அவரது பெற்றோர் தமது பிள்ளைக்கு அப்படி ஒரு நோய் இல்லை என்று கூறுகிறார்கள். வீடியோவை ஆராய்ந்தவர்கள், உண்மையிலேயே அவர் யாருக்கு பயந்தே இவ்வாறு நடந்து கொள்கிறார் என்று அடித்துக் கூறுகிறார்கள். அதாவது வெளியிடப்பட்ட வீடியோக்கள் திருத்தப்பட்டே வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதுவே பலத்த சந்தேகம். அது ஒருபக்கம் இருக்க ஹோட்டலில் தண்ணீர் தொட்டி இருக்கும் பகுதிக்கு சாதாரண ஒருவருக்கு நுழைய முடியாது. கடவுச் சொல்லை கொடுத்தே அதற்கான கதவை திறக்க முடியும். அது ஹோட்டல் பாதுகாப்பு அதிகாரிகளிடமே இருக்கிறது. மற்றது தண்ணீர் தொட்டி கூட 12 அடி உயரம் கொண்டது. ஏணி வைத்தே ஏற முடியும். அக்கம் பக்கத்தில் ஏணி கூட இல்லை. அப்படி இருக்க அவர் எப்படி அந்த நீர்த் தொட்டிக்குள் தற்கொலை செய்து கொண்டிருக்க முடியும்?

கொலை என்றால் அதற்கான தெளிவான ஆதாரங்கள் எங்கே. ஹோட்டல் ஊழியர் ஒருவரால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிது. அமெரிக்க உளவுப் பிரிவின் வேலை என்றும் சிலர் சந்தேகம் எழுப்புகிறார்கள். ஆனால், ஏழு ஆண்டுகள் கடந்தும் இந்த மர்மத்தை உடைக்க எந்தத் துப்பும் கிடைக்கவில்லை.

# பிரேசிலில் உருவாகும் பிரம்மாண்ட இயேசு கிறிஸ்து சிலையின் சிறப்பு என்ன?

**பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள புகழ்பெற்ற ரீடிமர் சிலையை காட்டிலும் உயரமான இயேசு கிறிஸ்து சிலை ஒன்று பிரேசிலில் கட்டமைக்கப்படவுள்ளது.**

பிரேசிலின் என்காண்டாடு நகரில் 43 மீட்டர், அதாவது 140 அடியில் இந்த சிலை உருவாக்கப்படவுள்ளது. இது உலகின் மூன்றாவது உயரமான இயேசு கிறிஸ்து சிலையாக இருக்கும்.

இந்த சிலையின் கட்டமைப்பு 2019ஆம் ஆண்டு தொடங்கியது. இயேசு கிறிஸ்துவின் தலை மற்றும் விரிந்த கைகள் கடந்த வாரம் உருவாக்கப்பட்டது.


இந்த யோசனை அர்ரொல்டூ கான்சாட்டி என்றும் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் வழங்கப்பட்டது. அவர் கடந்த மார்ச் மாதம் கொவிட்19 தொற்றால் உயிரிழந்தார்.

மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இந்த சிலையின் கட்டுமானம் இந்த வருடத்தின் இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது என இந்த இயேசு கிறிஸ்து சிலையை கட்டமைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் `தி அசோசியேஷன் ஒஃப் த ஃபிரண்ட்ஸ் ஆஃப் கிறிஸ்ட் க்ரூப்` தெரிவித்துள்ளது.

மேலும் இதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் நன்கொடை வழங்கி வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவிக்கிறது. ஒரு கையிலிருந்து மற்றொரு கை வரை இந்த சிலை 36 மீட்டர் அகலம் கொண்டது. மேலும் மார்பு பகுதியில் பார்வையாளர்கள் காணும் பகுதி (view point) உருவாக்கப்படும் இது தரையிலிருந்து 40மீட்டர் உயரம் கொண்டது.

இந்தோனீசியாவின் சுலவேசியில் உள்ள பண்ட்டு புராக்கே சிலை 52.55மீட்டர் உயரம் கொண்டது. போலாந்தில் உள்ள `கிறிஸ்ட் த கிங்` சிலை 52.5 மீட்டர் உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற ரீடிமர் சிலையின் உயரம் 38 மீட்டர். இருப்பினும் உலகளவில் டஸின் கணக்கான உயரமான பல சிலைகள் உள்ளன அதில் கன்னி மேரி மற்றும் புத்தர் சிலைகளும் அடக்கம்.







# செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் ஆண்டின் சில நாட்கள் மட்டும் உப்பு நீர்

**செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் ஆண்டின் சில நாட்கள் மட்டும் உப்பு நீர் உருவாக வாய்ப்பு உள்ளதாக அமெரிக்க ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**


அமெரிக்காவின் கிரக அறிவியல் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் ஏற்படும் மாற்றம் குறித்து ஆய்வு ஒன்றை நடத்தினர்.

இந்த ஆய்வின் முடிவுகள் வானியற்பியல் இதழில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

செவ்வாய் கிரகத்தில் திரவ நீர் உருவாவது மிகவும் கடினம். குளிர் காலத்தில் கிரகத்தின் மேற்பரப்பில் உருவாகும் பனி வெப்பசூழ்நிலைக்கு வந்து திரவமாவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாக வளிமண்டலத்தில் விரைவாகக் கரைந்துவிடும் என்பதே இதற்கு காரணமாகும். செவ்வாய் கிரகத்தின் வளிமண்டல அழுத்தம் நீர் மூலக்கூறுகளின் (எச்2ஒ) அழுத்தத்தை ஒத்துள்ளது. இது நிலப்பரப்பில் திரவ நீர் இருக்க தேவையான அளவை விட குறைந்த அழுத்தமாகும். கிரகத்தில் ஏராளமான குளிர் பனி நிறைந்த பகுதிகள் மற்றும் ஏராளமான சூடான பனி பகுதிகள் உள்ளன.

வெப்பநிலை காரணமாக பனிக்கட்டி உருகும் இடத்திற்கு மேலே இருக்கும் பகுதிகள் இனிமையான (மிதமான வெப்பநிலை) இடமாகும். ஆனால், அதன் இருப்பை துல்லியமாக கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த இடத்தில்தான் திரவ நீர் உருவாகிறது.




செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் நடு அட்ச ரேகைகளில் அமர்ந்திருக்கும் ஒரு பாறை குளிர்காலத்தில் ஒரு நிழலை கொண்டுள்ளது. குளிர்காலத்தில் அந்த கற்பாறைக்கு பின்னால் விழும் நிழல் பகுதியில் நீர் பனி குவிந்து கிடக்கிறது. அதில் சூரிய வெளிச்சம் படும்போது பனி திடீரென்று வெப்பமடைகிறது.

அதன் விரிவான மாதிரி கணக்கீடுகளில், கிரகத்தில் காலையில் மைனஸ்128 டிகிரி செல்சியஸ் இருந்த வெப்பநிலை மதியத்துக்குள் மைனஸ் 10 டிகிரி செல்சியஸாக உயர்கிறது. இது ஒரு நாளில் கால் பகுதி நேரத்தில் ஏற்படும் மிகப்பெரிய மாற்றமாகும்.

ஆனால், குறுகிய காலத்தில், உறைபனி அனைத்தும் கரைந்து வளிமண்டலத்திற்கு செல்லவில்லை. இதனால், அப்பகுதியில் இருக்கும் நீரானது உப்பு கரைசலாக இருக்கலாம். ஏனென்றால் உப்பு நிறைந்த தரையில், நீர் பனி மைனஸ் 10 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் உருகிவிடும். பனி அனைத்தும் திரவமாக அல்லது நீராவியாக மாறும் வரை உப்புநீர் இருக்கிறது. இந்த நிகழ்வு நடந்து முடிந்து, அடுத்த செவ்வாய் ஆண்டில் (687 நாட்கள்), இதே செயல்முறை மீண்டும் நிகழ்கிறது.

கற்பாறைகளுக்குப் பின்னால் இருக்கும் நிழல் பகுதிகள் குளிர்காலத்தில் மிகவும் குளிராக இருப்பதால், அங்கு நீர் உறைபனி மற்றும் கார்பன் டைஆக்சைடு நிறைந்த பனியும் உருவாகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# Sphinx

எப்போதும் ஆகர்ஷிக்க கூடிய பூமி!!தனகத்துக்குள் பல மர்மங்களை உள்ளடிக்கியது!!. Sphinx என்றால் என்னவென்று முதலில் தெரிந்து கொள்ளலாம். இது கிரேக்க கலாச்சாரத்தில் சிங்க உடலுடன் கூடிய மனித மற்றும் பிற மிருகத்தின் தலையை குறிப்பதாகும். கிரேக்கத்தில் இது பெண் தலையுடன் இணைந்து காணப்படுகிறது.





இது பிரமிட்டுக்கு முற்பட்ட காலத்தை சேர்ந்தது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

முதலில் அறிஞர்கள் உற்றுநோக்குவது இதன் சமன்பாடு தான். இவ்ளோ நீளமான உடம்பில் பொருந்தாத தலையை யாரோ ஒட்ட வைத்தது போல் உள்ளது.

இதன் உடல் பாலைவன மணலில் முதலில் புதைந்து காணபட்டது.

இதன் தலை பாலைவன காற்று, பனி மற்றும் சீதோஷண நிலைகளால் அதிகமாக பதிக்க பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அதன் உடல் அதிக அரிப்புகு உள்ளாகி உள்ளமையானது இந்த தலை பிற்காலத்தில் யாரோ ஒருவரால் பொருத்தப்பட்டதாக கருதப்படுகின்றது.

இதன் காலம் 4500ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்பட்டாலும் இது மேலும் பல வருடங்கள் பழமை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

மேலும் உலகிலிருந்து அழிந்து போன மாமோத் போன்றவற்றின் படிமங்களும் FOSSILS இங்கு காண கிடைக்கின்றன. ஆகையால் இது பெரும் அழிவிற்கு THE GREAT CATOSTROPHE முற்பட்ட நாகரிக மக்களால் கட்டப்பட்டது என்று கருதுகின்றனர். அதில் தப்பி பிழைத்தவர்கள் அதற்கு பிறகு வந்த எகிப்து பாரோக்களால் PHAROS தலை புனர்நிர்மாணம் செய்யபட்டதாக இருக்கலாம்.

இதன் காதின் அருகிலும் ரகசிய கதவுகள் உள்ளன. மேலும் இதற்கு கீழும் ரகசிய சுரங்க பாதை இருப்பதாக தெரிய வருகிறது.

இவை எங்கு செல்கிறது என்பது மர்மமாகவே நீடிக்கிறது.

சில வருடங்களுக்கு முன்பு போரிஸ்க BORISKA என்ற ரஷ்யா சிறுவன் இதன் காதின் அருகில் இருக்கும் கதவை திறந்தால் இந்த பூமி பந்தின் ரகசியங்கள் உடைக்கபடும் TIME CAPSULE உள்ளது என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு நிற குடை



கருப்பு நிறம் சூரிய கதிரை அதிகம் உறிஞ்சும் எனில் ஏன் குடை கருப்பு நிறத்தில் தயாரிக்கப்படுகிறது?

பொதுவாக பார்த்தீர்களென்றால் குடையானது உருவாக்கப்பட்டது அரச குடும்பங்களுக்காகத் தான். அது மிகவும் மேன்மை தங்கிய ஒருவர் பயன்படுத்துவதற்காகத் தான் இருந்தது.

குடைகள் இயல்பாக அனைவராலும் பயன்படுத்தப்பட்ட காலங்களில் பெரும்பாலும் மழைக்காகவே உருவாக்கப்பட்டன.

ஆரம்ப நாட்களில் குடைகள் அடர்த்தியான பருத்தி துணியால் செய்யப்பட்டன. மழையில் ஈரமாகும்போது, அவை வறண்டு போக நீண்ட நேரம் ஆகும்.

கறுப்புத் துணியால் செய்யப்பட்ட குடைகள் மற்ற வண்ணத் துணியால் செய்யப்பட்டதை விட வேகமாக உலர்ந்திருப்பது கண்டறியப்பட்டது. எனவே குடைகள் தயாரிப்பதில் கறுப்பு துணியைப் பயன்படுத்துவது ஒரு நிலையான நடைமுறையாக மாறியது.

கறுப்பு அல்லது இருண்ட மேற்பரப்புகள் கொண்ட நிறங்கள் மற்ற நிறங்களைவிட அதிக வெப்பத்தை உறிஞ்சுவதால் கறுப்புத் துணி வேகமாக காய்ந்துவிடும். கறுப்பு நிற குடைகளில் ஆவியாதல் செயல்முறை வேகமாக இருக்கும்(அதிக வெப்ப உறிஞ்சுதலின் காரணமாக).

ஆனால் இன்றைய தினங்களில் நாம் பயன்படுத்தும் குடைகள் தண்ணீரில் நனையாத, நீர்விலக்கு பண்பு கொண்டவையாக உள்ளன. எனவே, உலர்த்துவது இனி ஒரு பிரச்சினையாக இல்லாததால், குடைகள் எல்லா நிறங்களிலும் வண்ணங்களிலும் வருகின்றன.

வேறு ஏதேனும் காரணம் உண்டா?

ஆம் உண்டு.

முன்பு போலல்லாமல் தற்போது தொழில்நுட்பங்கள் மூலம் பருத்தியல்லாமல் செயற்கை மூலக்கூறுகளைப் பயன்படுத்தி குடைகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் வேறு எந்த நிறக் குடையை விடவும் மிகச் சிறந்ததாகவும் வேகமாகவும் வெப்பத்தை உறிஞ்சும் மேம்பட்ட திறனைக் கொண்டிருப்பதால் தான் இன்றும் கறுப்பு வண்ண குடைகள் வருகின்றன.

வெப்பத்தை அதிகமாக உறிஞ்சினால் அதன் கீழே இருக்கும் நமது உடலை வெப்பம் பாதிக்காதா? அப்படியானால் இந்த குடை பயன்படுத்த உகந்தது இல்லை தானே?

இப்போது இன்னொன்றும் நாம் கவனிக்க வேண்டும். கறுப்பு நிற குடைகளால் உறிஞ்சப்பட்ட வெப்பமானது விரைவான விகிதத்தில் விடுவிக்கப்படுகிறது. கீழே இருக்கும் நமது உடலை பாதிப்பதில்லை.

ஆனாலும் குடைக்குள்ளாக வெப்பத்தை உணர முடிகிறதே?

பெரும்பாலான குடைகள் அதன் உட்பகுதியில் வெள்ளி நிறத்தால் ஆக்கப்பட்டிருக்கும்.

குடைக்குள் வெப்பத்தைத் தடுக்கும் பொருட்டு கறுப்பு நிறமானது எல்லா திசைகளிலும் வெப்பத்தை வெளியேற்றுகிறது.

ஆனால் வெள்ளி நிறம் ஒரு கண்ணாடியாக செயல்படுவதால் இது குடைக்குள் வெப்பத்தைப் பிரதிபலிக்கிறது. எனவே வெள்ளி பூசப்பட்ட குடை வெப்பத்தை சிறிதளவு உள்ளே பிரதிபலிக்கிறது. (மழைக்காலத்திற்கு ஏற்றது)

உட்பகுதியில் கறுப்பு நிறத்துடன் இருக்கும் குடையினுள்ளே சிறிது குளிர்ச்சியை உணரலாம். (கோடைக்காலத்திற்கு ஏற்றது)

மழை நேரத்திற்கு நீங்கள் வண்ணக் குடைகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். வெயிலுக்கு பயன்படுத்துவதானால் கறுப்பு குடைகளே சிறந்தது. அதிலும் வெள்ளி நிறம் பூசப்படாத குடை மிகச்சிறந்தது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து.



வேலு : சட்டத்தை மாத்தணும்ங்கறதுல அவர் உறுதியா இருக்கார் ..
பாக்கி : ஏன் .. .. .. ?
வேலு : அவங்க வீட்ல எல்லா சட்டத்தையும் கரையான் அரிச்சிடுச்சாம் ..



ஒருவர் : அந்தப் பாடகருக்கு குரல் கடவுள் கொடுத்த வரம்னு சொல்றாங்களே?
மற்றொருவர் : ஆமாம்! அவர் வாயைத் திறக்கறதோட சரி. அதிலேருந்து என்ன வரும்னு கடவுளுக்குத்தான் தெரியுங்கறதுனால இருக்கும்.



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



தொண்டர் 1 : மத்தியிலே ஆட்சியைக் கலைச்சுட்டு திரும்பின நேரம் தலைவருக்கு ரெட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கு ..
தொண்டர் 2 : அப்படியா .. என்ன பேர் வெச்சிருக்கார் .. ?
தொண்டர் 1 : கலைச்செல்வன், கலையரசி ..



மொக்கை : முதலாளி.. எனக்கு கல்யாணமாயிருச்சு.. கொஞ்சம் சம்பளத்தை சேர்த்துக் கொடுங்க..
முதலாளி : கம்பெனி வளாகத்துக்கு வெளியே நடக்கற விபத்துகளுக்கு நான் நஷ்ட ஈடு தர இயலாது..!



ராணி : போஸ்ட் மேனைக் காதலிக்கிறீயே... என்ன சொல்றார் ?
வேனி : ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்கிறார்



ஜட்ஜ் : சாமி தலையிலிருந்து கிரிடத்தை திருடினாயா?
திருடன் : ஆமா எஜமான் சாமிக்கு மொட்டை போடுறதா வேண்டிக்கிட்டேன்.



மீசைக்காரர் : அந்த நடிகை, இது என்னோட மானப்பிரச்சினை விடமாட்டேன்னு சொல்றாங்களே என்னாச்சி ?
பிட்டுக்காரர் : படத்துல அவங்க குளிக்கிற ஸீனை சென்ஸார்ல கட் பண்ணிட்டாங்களாம்



ரமனன் : எங்க வீட்டு நாய் செத்துப்போச்சு . . . என்னால ஜீரணிக்கவே முடியல்ல.
முராரி : அய்யய்ய நீங்க நாயெல்லாம் சாப்பிடுவீங்களா?

# திரைத்துறை பற்றிய சிறந்த ஆழமான கல்வியினை பெற காத்திருக்கும் கன்னி

## திருமலை பிரியங்கா கமலேஸ்வரன்

**அந்தக் காலம் தொட்டு இன்று வரை சினிமா எனும் உன்னத கலையின் மீதான மோகம் குறைந்த பாடில்லை. காலத்திற்கு ஏற்ற வகையில் சினிமா பல்வேறு வடிவங்களைக் கொண்ட போதும் அவற்றின் மீதான ஈர்ப்பும் அதன் வளர்ச்சியும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இவ்வாறு கலையின் மீதும் சினிமா மீதும் ஆர்வம் கொண்ட இளம் பெண் பிரியங்கா கமலேஸ்வரன்.**

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் கமலேஸ்வரன், சிறு தொழில் வியாபாரி. இவரது தாயார் மல்லிகா, ஓய்வு பெற்ற ஆசிரியர். இவருக்கு ஒரே ஒரு சகோதரி மட்டுமே உள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் கற்றார்.

பாடசாலைக் காலங்களில் இருந்தே கலை, கலாசார நிகழ்வுகளின் மீது ஆர்வமும் விருப்பமும் ஈடுபாடும் கொண்டவர் இவர், பின்னர் உயர் தரத்தில் கணிதப் பிரிவை தேர்வு செய்தார். தற்போது இலங்கை அரச பல்கலைக்கழகமான தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார். கற்பது கணிதப் பிரிவாக இருந்தாலும் திரைத்துறையின் மீது ஓர் எல்லையற்ற ஆர்வம் கொண்டுள்ளார்.

அதனால் அண்மையில் நடத்தப்பட்ட குறுந்திரைப்பட போட்டியொன்றில் பங்குபற்றி தனது திறனை பயன்படுத்தி சிறந்த குறுந்திரைப்படமொன்றை தயாரித்து முதலாம் இடத்தை தட்டிக் கொண்டார்.

எனவே இவரை அணுகி இது பற்றி கலந்துரையாடியதில் கிடைத்த தகவல்களை இங்கே பகிர்ந்து கொள்கிறோம்.

**கேள்வி : உங்கள் திரைப்பட கனவு பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

**பதில்:** நான் சில சமயங்களில் கற்பனை செய்து கொண்டு போகும்போது என்னுள் தோன்றிய கதைகளை திரைப்படமாக்கினால் நன்றாக இருக்கும் என்று நினைத்தது உண்டு. இவ்வாறு என்னுள் உதித்த சில தொடர் கதைகளை திரைப்படமாக்க வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி ஏற்பட்டாலும்கூட இவை யாவும் வெறும் கனவுகளாகவே கரைந்தன.

காரணம் பெண்களுக்கு இவ்வாறான களவுகள் பொருத்தமற்றது எனப் பலர் கூறியதாலும் இவற்றில் துறை சார்ந்த கல்வி அறிவு மற்றும் துறை சார்ந்தோரின் அறிமுகம் இன்மையாலும் ஏற்பட்ட தயக்கத்தினால் ஆகும்.



**கேள்வி: நீங்கள் முதன் முதலாக எழுதிய சிறுகதையைப் பற்றி கூறலாமே...?**

**பதில்:** என்னுள் முளையிட்ட எழுத்துத்துறை ஆர்வத்தின் உந்துதலால் முதன் முதலில் 'இரு விழியில் ஓர் நிலவு' எனும் ஓர் சிறுகதையினை விளையாட்டாக எழுதினேன். இதனை இன்றும் யாரும் அறிந்திடா வண்ணம் என் புத்தகங்களோடு ஓர் எழுத்துப் பிரதியாக வைத்திருக்கிறேன்.

**கேள்வி : பெண்கள் கனவு காண்பது பற்றி.....?**

**பதில்:** பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த பின்பே பெண் பிள்ளைகளும் தமக்கு விரும்பியவாறு பல பரிமாணங்களில் கனவுகள் காண முடியும் என்று உணர்ந்தேன். அதன் பின் "ஓவியங்களோடு ஓர் முகம்" எனும் ஓர் சிறுகதையினை எழுதினேன்.



**கேள்வி : அந்த சிறுகதைகளை என்ன செய்தீர்கள்?**

**பதில்:** பின்னர் அச்சிறுகதையினை 'நீர்மை.Com' எனும் இலங்கையை சேர்ந்த வலையத்தளத்திலும் "பிரதிலிபி" எனும் இந்தியாவைச் சேர்ந்த செயலியிலும் பதிப்பித்தேன். அங்குள்ளவர்களோடு ஒப்பிட்டால் இது ஓர் சிறு பதிப்பாகும். ஆனால் இது என்னுள் நிறைவான மகிழ்ச்சியினை ஏற்படுத்தியது.

**கேள்வி: சரி திரைப்படத்துறைக்குள் நுழைந்தது பற்றி ..?**

**பதில்:** திரைப்படத் துறையின் மீது எனக்கிருந்த அதீத காதலால் கடந்த வருடம் இலங்கையில் இணையவழி மூலமாக நடைபெற்ற "பட்டறை" எனும் திரைப்பட பயிற்சி பட்டறையில் ஓர் மாணவியாக இணைந்து கொண்டேன். இந்த பயிற்சி பட்டறையே என்னுள் திரைப்படம் சார்ந்த ஓர் ஆழமான எண்ணத்தினை முதன் முதலில் ஏற்படுத்தியது. அந்த ஆழமான எண்ணத்தினை ஏற்படுத்திய பட்டறை குழுமத்திற்கு எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் எனது பல்கலைக்கழக பாட வகுப்புக்களும் இணைய வழி மூலமாக தொடர்ந்து நடைபெற்றதால் திரைப்படம் சார்ந்த கல்வியினை கற்றுக் கொள்ளத் தவறி விட்டேன். பின் எனது நண்பர் "ஜீரோ சான்ஸ் 2021" எனும் குறும்பட போட்டிக்கு "The way to home" எனும் மூன்று நிமிட குறும்படத்தினைத் தயாரித்து அனுப்பினார். அக்குறும்படத்திற்கான திரைக்கதை உருவாக்கத்தில் ஒரு சிறிய அங்கமாக இருப்பதற்கு முதன் முதலில் வாய்ப்பு கிடைத்தது.

**கேள்வி : இது எப்படி உங்களுக்குள் திரைப்படத்திற்கான வித்தாகியது?**

**பதில்:** நான் சற்றும் எதிர்பாரா தருணத்தில் இலங்கையில் "நட்சத்திர கலைக்கூடம்" எனும் அமைப்பானது முதன் முதலில் பெண் இயக்குநர்களைக் கண்டெடுக்கும் நோக்கில் "பெண் அவள் தேவதை – 2021" எனும் குறும்பட போட்டியினை நடத்தியது. அதில் மொத்தமாக 24 குறும்படங்கள் பங்குபற்றின.









இக் குறும்படங்களானது மதிப்பிற்குரிய முன்னணி இயக்குனர்கள் மற்றும் துறைசார் கலைஞர்களைக் கொண்ட நடுவர் குழாமினால் தேர்வு செய்யப்பட்டது. பின்னர் குறும்பட போட்டியிற்கான விருது விழாவானது கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி கொழும்பு இலங்கை மன்றத்தில் பெரு விழாவாக கொண்டாடப்பட்டது. அக் குறும்படங்களுள் எனது குறும்படமாகிய “ *Dreams Of Flowers* ” எனும் ஏழு நிமிட குறும்படமும் ஒன்றாகும் . அதில் எனது முதல் குறும்படமான “ *Dreams Of Flowers* ” முதல் இடத்தைப் பெற்றது.

**கேள்வி : இந்த வெற்றி தந்த களிப்பு எத்தகையது?**

**பதில்:** இந்தக் குறும்படம் முதலாம் இடத்தைப் பெறும் என நான் நினைத்திருக்கவில்லை. எனது இக் குறும்படமானது முதல் இடத்தைப் பெற்றதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இந்த மகிழ்ச்சியானது ஆச்சரியம் நிறைந்ததாகவே அமைந்தது.

குறும்பட தயாரிப்பின் போது சில சிரமங்களை எதிர் நோக்க வேண்டி இருந்தது. இந்த வெற்றியானது அந்த சிரமங்களை தவிடுபொடியாக்கி விட்டது என்றே கூறலாம் .

எனினும், என்னுள் இருந்த எதிர்மறையான எண்ணங்கள் நீங்கப்பெற்ற வாழ்வில் மறக்க முடியாத ஒரு தருணம் அது. மற்றும் இச் சந்தர்ப்பத்தில் எனக்குள் இருந்த ஓர் தயக்க நிலையினை நீக்கி என்னை ஊக்கப்படுத்தியமைக்காக எனது நண்பர் டினேஸிற்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இக் குறும்படத்தில் தமது திறமைகளையும் வெளிப்படுத்தி எனக்கு துணை புரிந்த எனது குழு நபர்களான ஒளிப்பதிவாளர் சபேந்திரன் அண்ணாவிற்கும் எனது நண்பர்களான டினேஷ் , இலக்கியாவிற்கும் மேலும் கனிஸ்ரன், உஷாநந்தன், குருஷேத், சஜீவன், மாதேஸ் ஆகியோருக்கும் இக் குறும்படத்தில் நடிந்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் நடிந்தவர்கள் அனைவருக்குமே இது முதல் அனுபவம். இதில் நடித்திருந்த எனது நண்பி இலக்கியாவும் ஏனைய சகோதரர்களும் இரவு நேரம் என்றும் பாராமல் எனக்காக வந்து நடித்துக் கொடுத்தார்கள். இறுதி நேரத்தில் அவசர அவசமாக தயாரிக்கப்பட்ட இவ் எதிர்பாராத அருமையான வாய்ப்பானது என்றும் எம் வாழ்வில் மறக்க முடியாத ஓர் பொக்கிஷம் ஆகும். மேலும் திரைத்துறை பற்றிய சிறந்த ஆழமான கல்வியினை பெற வேண்டுமெனவும் எதிர்காலத்தில் பல குறும்படங்களை இயக்க வேண்டுமெனவும் எண்ணுகிறேன் நன்றி.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ ஓர் திறமை ஒளிந்திருக்கும். பெரும்பாலாக அது அவர்களிற்கே தெரிவதில்லை.



இக் குறும்படமானது வெற்றி பெற்றமை எம் அனைவரிற்கும் மிக்க மகிழ்ச்சியாகும். இதுவரை காலமும் இலங்கையில் இவ்வாறான ஒரு போட்டி நடைபெற்று இருக்கவில்லை. ஆனால் தற்போது பெண்களின் ஆளுமைகளை வெளிக்கொண்டு வரும் விதத்தில் ஓர் சிறந்த களத்தினை உருவாக்கி எம்மவர்க்கு இத்தகைய போட்டியினை நடத்தியமைக்காக நட்சத்திர கலைக்கூடத்திற்கும் இவ் அமைப்பை நடாத்தும் சத்தியாவிற்கும் உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏட்டு கல்விற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பெண் பிள்ளைகளின் ஏனைய திறமைகளுக்கு சில பெற்றோர்களால் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் பெற்றோர் தமது பிள்ளைகளின் திறமைகளை கண்டறிதல் வேண்டும்.

வாய்ப்புக்களும் வசதிகளும் அமையும் போது தயங்காது அவர்களது திறமைகளை வெளிப்படுத்த துணையாய் அமைதல் வேண்டும். அத்தோடு என்றும் பெண் பிள்ளைகளுக்கு சிந்தனையில் தெளிவும் உள்ளத்தில் துணியும் இருக்க வேண்டும் என்பதனையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என விரும்புகிறேன்.

நான் முதல் முறையாக இத்தகைய விருதினை பெற்றுக் கொண்டுள்ளேன். இவ் அழகிய விருதானது மதிப்பிற்குரிய மூத்த கலைஞர் கே.சந்திரசேகரன் ஐயா, ஈழத்து விளம்பரப்பட மற்றும் குறும்பட இயக்குனராகிய இளங்கோ ராம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுயாதீன திரைப்பட தயாரிப்பாளர், குறும்பட இயக்குனர் மற்றும் பன்முக கலைஞராகிய பவனீதா லோகநாதன் ஆகியோரால் வழங்கப்பட்டது. கலைத்துறையில் அவர்கள் புரிந்த சாதனைகளையும் திறமைகளையும் கண்டு வியந்தவர்களுள் நானும் ஒருவர். அன்றைய விழாவில் அவர்களிடம் இருந்து இவ் விருதினை பெற்றுக் கொண்ட தருணமானது விபரிக்க முடியாத மகிழ்ச்சியைக் கொண்டதாகும்.

ஒரு பெண்ணாக ஓர் விழாவை ஏற்பாடு செய்து, அதனை வெற்றிகரமாக முடிப்பதென்பது சாதாரண விடயமல்ல.

ஆனால் முடியும் என்பதனை மதிப்பிற்குரிய சத்தியாவிடமிருந்து அன்றைய நெகிழ்வான நாளில் கற்றுக் கொண்டோம். களங்கள் அமைந்தால் திறமைகள் வெளிப்படும். காரணம் இக் குறும்பட போட்டியில் நான் உட்பட பலர் முதன் முதலில் குறும்படங்களை இயக்கி இருந்தோம். இத்தகைய ஓர் சிறந்த வழியினை உருவாக்கிக் கொடுத்த மைக்காக சத்தியாவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



கே.ஈஸ்வரலிங்கம்







# 'ஸ்மார்ட்' நடிகை சபிதா ராய்



**கவர்ந்திழுக்கும் கண்களும் பேசும் பேரழகு பெண்மை...**
**நடிப்பில் நவரசங்களை காட்டுவதில் தனி திறமை...**

தமிழ் சினிமாவில் தமிழ் பேசும் தமிழச்சி, வசனங்களில் உச்சரிப்புகளே அதற்கு பெரும் சாட்சி, இன்ஸ்டாகிராமில் இறங்கி கிறங்கடிக்கும் மங்கை, இவள் வெண்ணிற நிலவுக்கே தங்கை... என வர்ணிக்க தூண்டும் 'ஸ்மார்ட்' நடிகை சபிதா ராய் மனம் திறக்கிறார்.

துணை நடிகையான அம்மா பொள்ளாச்சி பிரேமா பிரபல தமிழ் நடிகர்களுடன்80 படங்கள் நடித்தவர். நானும் சிறுவயதில் அம்மா உடன் மேடை நாடகம், 'மிலிட்ரி' என்ற படத்தில் நடிச்சிருக்கேன். பிறகு திருமகள், கோலங்கள், அத்தி பூக்கள், இளவரசி, வாணி ராணி மெகா சீரியல்களில் நடித்து இப்போது சினிமாவில் என்ட்ரி கொடுத்துள்ளேன்.

இரும்புத்திரை, லீசா, நேர் கொண்ட பார்வை, தில்லுக்கு துட்டு பார்ட் 2, சூப்பர் டூப்பர், உள்பட 18 படங்கள் நடிச்சிருக்கேன். விஜய்சேதுபதியின் 'மா மனிதன்', சசிகுமாரின் 'ராஜ வம்சம்', ஹாஸ்டல், ஸ்ரீகாந்தின் 'எக்கோ' ரிலீஸ்க்கு வெயிட்டிங்...

இயக்குனர் சீனு ராமசாமி இயக்கும் மா மனிதன் படத்தில் விஜய் சேதுபதி உடன் முக்கிய கேரக்டர், கதிர் இயக்கத்தில் 'ராஜ வம்சம்' படத்தில் கடலோர கவிதைகள் ரேகாவின் மகளாக நடித்துள்ளேன். இந்த படத்தில் மொத்தம் 40 நடிகர்கள் நடித்துள்ளனர்.

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் தளங்களில் டிக் டாக் நடிப்பு, லைவ் டாக் என ரசிகர்களுடன் தொடர்ந்து இணைப்பில் இருக்கிறேன். இன்று சமூகவலை தள நடிகர்களும் சினிமா, சீரியல், வெப் சீரியஸ் வாய்ப்பு ஈஸியாக கிடைப்பது சிறு வயதில் இருந்து சினிமாவை நேசிக்கும் நடிகர்களுக்கு வருத்தம் தான்.

இதற்கு நேரத்தை தான் குறை சொல்ல வேண்டும். சினிமா ஒரு போர்க்களம். தினமும் போராடினால் என்றோ ஒரு நாள் வெற்றி கிடைக்கும். ஒரு படத்தில் ஒருவர் நடித்து பிரபலமானால் அவரை அடுத்த படங்களில் பயன்படுத்துகிறார்கள். திறமையானவர்களுக்கு வாய்ப்பு தந்தால் நானும் பிரபல நடிகை பட்டம் வாங்கி இருப்பேன்.

# பூஜா ஹெக்டேவுக்கு ரூ.3 கோடி சம்பளம்



மாஸ்டர் படத்துக்கு பிறகு சில வாரங்கள் ஓய்வில் இருந்த விஜய் இப்போது புதிய படத்தில் நடிக்க தொடங்கி உள்ளார்.

இந்த படத்தை நயன்தாராவை வைத்து கோலமாவு கோகிலா, சிவகார்த்திகேயன் நடித்து திரைக்கு வர உள்ள டாக்டர் படங்களை இயக்கி பிரபலமான நெல்சன் இயக்குகிறார். இது விஜய்க்கு 65வது படம்.

படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. இந்த படத்தில் விஜய் ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். இவர் 2012ல் திரைக்கு வந்த முகமூடி படத்தில் ஜீவா ஜோடியாக நடித்து பிரபலமானார்.

தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்து இருக்கிறார். படப்பிடிப்புக்காக விஜய் உள்ளிட்ட படக்குழுவினர் ஜார்ஜியா சென்றுள்ளனர். அங்கு 20 நாட்கள் படப்பிடிப்பு நடத்திவிட்டு சென்னை திரும்புகிறார்கள். இந்த படத்தில் கதாநாயகியாக வரும் பூஜா ஹெக்டேவுக்கு ரூ.3 கோடி சம்பளம் பேசி இருப்பதாக சமூக வலைத்தளத்தில் தகவல் பரவி வருகிறது. பூஜா ஹெக்டே இதுவரை ரூ.2 கோடி சம்பளம் வாங்கி வந்ததாக கூறப்படுகிறது. தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன் ஜோடியாக நடித்து திரைக்கு வந்த முந்தைய படமான அல வைகுந்தபுரமுலூ படத்தில் பூஜா ஹெக்டே ரூ.2 கோடி வாங்கி இருந்தார். ஆனால் விஜய் படத்தில் கூடுதலாக ரூ.1 கோடி கேட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

# திருமணத்தை வெறுக்கும் ஒரு மனம்



'காதலில் விழுந்தேன்' படத்தின் முலம் அறிமுகமானவர், சுனைனா. நீர் பறவை, வம்சம் உள்பட பல படங்களில் நடித்து இருக்கிறார்.

கடந்த ஆண்டு திரைக்கு வந்த 'சில்லுக்கருப்பட்டி' படத்தில் இவருடைய நடிப்பை பலரும் பாராட்டினார்கள். இதையடுத்து வெளிவந்த 'ட்ரிப்' படத்திலும் அவர் நடித்து இருந்தார். இது தவிர, ஒரு தெலுங்கு படத்திலும் அவர் நடித்து வருகிறார். இந்த நிலையில், சுனைனா திருமணம் செய்து கொள்ளப்போவதாக ஒரு தகவல் வெளியானது.

இதுபற்றி அவரிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:

''நான் திருமணம் செய்து கொள்ளப்போவதாக வெளியான தகவலில் உண்மை இல்லை. அது வதந்தி. இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ளும் 'ஐடியா' இல்லை. என்னைத்தேடி இப்போது நல்ல பட வாய்ப்புகள் வருகின்றன. என்னை முக்கிய கதாபாத்திரமாக வைத்து சில டைரக்டர்கள் திரைக்கதை எழுதி வருகிறார்கள். அதனால் நடிப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறேன். திருமணம் பற்றி பேசுவதை விட, நான் நடிக்கும் படங்கள் பற்றி பேசுவதையே விரும்புகிறேன்.''

இவ்வாறு சுனைனா கூறினார்.

# மாவீரன் பிள்ளை'யில் வீரப்பனின் மகள்



சந்தன மர கடத்தல் மன்னன் வீரப்பனின் இரண்டாவது மகள் விஜயலட்சுமி, 'மாவீரன் பிள்ளை' என்ற படத்தில் வழக்கறிஞர் வேடத்தில் நடிக்கிறார்.

சினிமாவில் நடிக்க வந்தது பற்றி அவர் கூறும்போது,

''விவசாயிகள் மற்றும் மது ஒழிப்பு போராட்டங்கள் பற்றிய படம் என்பதால் நடிக்க சம்மதித்தேன். படப்பிடிப்பு தர்மபுரி மாவட்டத்தின் பல இடங்களிலும், டெல்லியிலும் நடந்தது. திரையுலகுக்கு வந்ததற்காக எனக்கு என் கணவர் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறார். நான் கவர்ச்சியாகவோ, ஆபாசமாகவோ நடிக்க மாட்டேன். பெண்களுக்கு முக்கியத்துவம் உள்ள கதாபாத்திரங்களில் நடிக்க விரும்புகிறேன்'' என்றார்.

வீரப்பன் பற்றி பேசும்போது, ''என் அப்பாவை நல்லவரா, கெட்டவரா? என்று கேட்கிறார்கள். என்னைப் பொருத்தவரை அவர் நல்லவர்தான். அப்பா வாழ்ந்த காட்டுக்குள் புதையல் இருக்கிறது. ஆனால் அது எங்கே இருக்கிறது என்று எங்களுக்கு தெரியாது'' என்கிறார்.

'மாவீரன் பிள்ளை' படத்தில், ராதாரவி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். படத்தை தயாரித்து இயக்கி நடிப்பவர், ராஜா.

# ரகுமான் சினிமாவில் நடிக்க முடிவா?

இசையமைப்பாளராக உச்சம் தொட்ட ஏ.ஆர்.ரகுமான் ஆஸ்கார் விருதையும் வென்றார். தற்போது இன்னொரு பரிமாணமாக '99 சாங்க்ஸ்' என்ற படத்துக்கு கதாசிரியராகவும் தயாரிப்பாளராகவும் மாறி உள்ளார்.

அடுத்து படம் இயக்கவும் சினிமாவில் நடிக்கவும் முடிவு செய்து இருப்பதாக தகவல் பரவி உள்ளது. இதற்கு பதில் அளித்து ஏ.ஆர்.ரகுமான் கூறும்போது, ''இயக்குனராக மாறுவதற்கு இன்னும் பல காலம் ஆகலாம். அதற்கு இப்போது எனக்கு நேரமும் இல்லை.

ஆனால் படம் தயாரிப்பதும், கதை எழுதுவதும் எளிமையாக உள்ளது. நான் நிறைய கதைகள் எழுதி வைத்து இருக்கிறேன். தற்போது எனது கதையில் தயாராகி உள்ள 99 சாங்க்ஸ் படத்துக்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து அடுத்த படத்துக்கு கதை எழுதுவது பற்றிய முடிவை எடுப்பேன். சினிமாவில் நடிப்பீர்களா? என்று கேட்கிறார்கள்.

எனக்கென்று சொந்த உலகம் இருக்கிறது. அதில் இருக்கவே விரும்புகிறேன். நடிக்க ஆரம்பித்தால் இன்னும் பிரபலம் ஆகி விடுவேன். இசை மற்றும் கதை எழுதும் பணியை செய்யவே விரும்புகிறேன். எனது வாழ்க்கை வித்தியாசமானது. அம்மாக்கள் தங்கள் பிள்ளைகளை அரசு வேலைக்குத்தான் போகச் சொல்வார்கள். ஆனால் எனது தாய் இசைத்துறையில் பணியாற்றும்படி கூறினார்'' என்றார்.

# பாகிஸ்தான் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அல்லாமா இக்பால்

**ஆங்கிலேயர் விரட்டியடிக்கப்பட்டு இந்தியாவின் நாடாளுமன்றத்தில் முதன் முதலாக ஒலித்த பாடலான 'சாரேஜகான் சே அச்சா இந்துஸ்தான் ஹமாரா ஹமாரா' எனும் பாடலின் கவிஞர் தான் அல்லாமா முஹம்மது இக்பால் ஆவார்.**

ஓர் ஏழை தையல்காரனின் மகனாக இக்பால் 1871 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி ஸியால் கோட்நகரில் பிறந்தார்.

இக்பால் பாடசாலைப் பருவத்திலேயே கவிதை எழுதுவதில் ஆர்வமாக இருந்துள்ளார். இந்த ஆர்வமே பின்னால் உலகில் பிரசித்தி பெற்ற கவிஞராக உருவாவதற்கு காரணமாக இருந்தது. பாடசாலைப் பருவத்தில் கவிதை புனைவது மட்டுமல்ல கவிபாடுவதிலும் அதிக திறமை காட்டினார்.

இக்பால் மாணவராக இருந்த காலத்தில் பாடசாலைக்கு தாமதமாக சென்ற போது ஆசிரியரோ அவரிடம் 'நீ ஏன் தாமதமாக வந்தாய்?' எனக் கேட்டபோது அதற்கு 'இக்பால் எப்போதுமே தாமதமாகத் தான் வரும். என்று சொன்னார் (இக்பால் என்றால் புகழ் என பொருள்படும்) இக்பாலின் பதிலை வியந்து பாராட்டினார் ஆசிரியர்.


1894 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பின் பின்பு லாகூரில் இரு அரச கல்லூரிகளில் பேராசிரியராக கடமையாற்றியுள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் 'பொருளாதார கல்வி' என்ற நூலையும் எழுதினார் இக்பாலு க்கு மேற்படிப்பை தொடர்வதற்கு வாய்ப்பு கிடைத்தது.

இங்கிலாந்து சென்று பரிஸ்டர் படிப்பிலும் தத்துவஞான ஆய்வுகளிலும் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். பின்னர் கலாநிதி பட்டமும் பெற்றார. இக்பால் மேற்படிப்பை முடித்தபின் 1908 ஆம் ஆண்டு இந்தியா திரும்பியதும் சிறிது காலம் வழக்கறிஞராக பணியாற்றினார்.

இஸ்லாமிய புத்தி ஜீவிகளின் இயக்கத்தில் இக்பால் இணைந்து செயற்பட்டு பல சேவைகளில் ஈடுபட்டார். 1919ஆம் ஆண்டு இந்த இயக்கத்தில் பொதுச் செயலாளராக தெரிவானார்.

இலக்கிய உலகில் இக்பாலின் கவித்துவ படைப்பு முழு உலகையுமே அதிரவைத்தது. இக்பாலின் கவிதைகள் சமூகத்தின் எழுச்சி பிரளயமாகவே கவி வீச்சுக்கள் அமைந்தன.

இக்பால் முதலாவது தொகுப்பாக அஸ்ராரேகுதி (இதயப் புதையல்) என்னும் நூலை 1915ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதைத்தொடர்ந்து மேலும் பல நூல்கள் வெளியிட்டார். இக்பால் உருது, பாரசீக மொழி, ஆங்கிலம், பிரெஞ்ச் போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.



இக்பால் மாபெரும் அறிஞராக மதிக்கப்படும் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்பால் கவிஞர் மட்டுமல்ல மிகச்சிறந்த தத்துவஞானி, அரசியல் மேதை, வழக்கறிஞர், சிந்தனையாளர் ஆவார். இக்பால் தனது முதிர்ந்த சிந்தனையில் விளைந்த கருத்துக்களை கவிதை வடிவில் எழுதி மக்கள் மத்தியில் பரப்பினார் வெள்ளையர்கள் இந்திய நாட்டை அடிமைப்படுத்திய காலத்தில் தன்நாட்டையும் தான் பிறந்த மண்ணையும் நினைத்து ஆழ்ந்த கவலை கொண்டு தனது கருத்துக்களை மக்களுக்கு கவிதை மூலம் விழிப்புணர்வு உண்டாக்கி இந்திய மக்களை எழுச்சி பெறவைத்தார் கனல் பறக்கும் வைரவரிகளை தனது அறிவாற்றலின் மூலம் செதுக்கி அவை மக்களின் உதடுகளில் உச்சரிக்கப்பட வேண்டும் என்பதற்காக பாடலை எழுதி வெளியிட்டு இந்திய நாடு வெள்யளைரை எதிர்த்து விடுதலை பெற வேண்டும் என்ற தாக்கத்தை மக்கள் மனதில் விதைத்த பெருமை அல்லாமா முஹம்மது இக்பால் அவர்கலையே சாரும்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கும் அதிலிருந்து பாகிஸ்தான் தனி நாடு தோன்றுவதற்கும் இக்பால் அவர்களின் கவிதை வரிகள் துணை புரிந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களில் இக்பாலும் ஒருவர். அல்லாமா முஹம்மது இக்பால் 1938ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தனது 65 ஆவது வயதில் லாகூரில் காலமானார்.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**



**வருந்துகிறோம்**

**கடந்த வாரம் செந்தூரம் இதழில் வெளியாகிய ஹாசிம் உமரைப் பற்றி எழுதிய எழுத்தாளர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் ஆவார். அவரது பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

## பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**



செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.

**ஏ.ஆர்.எப். முஹம்மட் அன்சக்**
**வன்னியார் வீதி,**
**நிந்தவூர்-01**



**மனதை மயக்கும்**
**மங்கையின்**
**சிரிப்பை விட**
**மனம் கொண்ட**
**கவலையை**
**கன நொடியில்**
**கரைத்து விடும்**
**மழலையின்**
**சிரிப்பிற்கே!**
**மதிப்பு அதிகம்**



ஏ.எச். பாத்திமா
சபீஹா ஸம்றாத்
நிந்தவூர்


# செல்ஃபி உலா


பத்மா கொச்சிக்கடை


ஷைனீதரன்


அசங்க லக்ஷபாணவில்


ஷேன், கொட்டாஞ்சேனை



சதீஷ் கொட்டாஞ்சேனை



அக்ஷயன் மாபொலை

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


திருமண வைபவமொன்றில் நஜ்ரான் மொஹமட்



ரவி ராகமை


லலிதா சிவகுமார்



ஷமாஸ் அத்திட்டிய

## எல்பர்ட் ஐன்ஸ்டைன்

### சார்பியல் கோட்பாடு






நிறம் தீட்டுங்கள்

### உருவங்களின் ஆங்கில பெயர்களை கட்டங்களில் எழுதுங்கள்




### 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





# இளைஞர், யுவதிகள் நெசவுத் தொழிலில் ஈடுபாடு காட்டாவிடின் நெசவாளர்கள் இல்லாத பெரும் நெருக்கடி ஏற்படலாம்

## இளம் தொழிலதிபர் முகம்மது இப்றாகீம் உபைதுர் றஹ்மான்



**மனிதன் உலகில் வாழ்வதற்கு உணவு, உறைவிடம் முக்கியமானதைப்போன்று உடையும் மிக முக்கியமானதாகும். இன்றைய நவீன உலகில் பல்வேறுபட்ட வடிவமைப்புக்களில் இன்றைய மனிதர்கள் ஆடைகளை அணிந்து வருகிறார்கள்.**

எமது நாட்டு மக்களுக்குத் தேவையான ஆடை வகைகளை தயாரிப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் இன்னும் ஏற்படுத்தப்படாததால் வெளிநாட்டு ஆடை உற்பத்திகளையே நம்பியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கைத்தறி உற்பத்திக்குப் பெயர் பெற்ற கிராமம் மருதமுனையாகும். கிட்டத்தட்ட 500 வருடங்கள் பழமை வாய்ந்த மருதமுனைக் கிராமத்தின் முக்கிய பண்டைய காலத்தொழிலாக கைத்தறி நெசவுத் தொழில் இருந்து வந்ததை பல சான்றுகளும், ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

மருதமுனையில் காலையிலிருந்து மாலைவரை திரும்புகின்ற பக்கமெல்லாம் சக்கடி புக்கடி என்ற தறி ஓசையே கேட்கும். வயது வந்த இளைஞர் யுவதிகளும் இந்தத் தொழிலில் ஆர்வங்காட்டினார்கள் மருதமுனை கைத்தறி உற்பத்திக்கு இலங்கையின் பல பாகங்களில் அதிகமான மவுசும் இருந்தது.

பூர்வீக கைத்தறி நெசவுத் தொழில் துறையில் நவீன ஆடை வடிவமைப்பிலும், உற்பத்தியிலும் தன்னை ஈடுபடுத்தி புதிய வழிகாட்டல்களுடன் இந்தத் தொழில் துறையில் முனைப்புடன் பயணிக்கும் இளம் தொழிலதிபர் மருதமுனையைச் சேர்ந்த முகம்மது இப்றாகீம் உபைதுர் றஹ்மான் ஆவார்.

இவ்வார செந்தூரத்திற்காக அவரிடம் உரையாடினேன்.

இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலேயே கைத்தறி நெசவுத் துறையில் ஆர்வம் கொண்டவர். இவரது தந்தை இத்துறையில் ஈடுபட்டு வந்ததனால் இவருக்கும் இத்துறையில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இவர் பல இடங்களில் கைத்தறி நெவு நிலையங்களை அமைத்து பலருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கியிருக்கின்றார். இலங்கையின் முதற்தர ஆடை உற்பத்திக்காக இவரது. நிறுவனத்திற்கு 2020ஆம் ஆண்டுக்கான விருது மலேசியாவில் வழங்கப்பட்டுள்ளது. சமூக சேவையிலும் இவரது பங்களிப்பு மிகவும் கனதியாகக் காணப்படுகின்றது.

இவரது தொழித்துறை முயற்சிக்காக இந்தியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்கள் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டங்கள் வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** நீண்டகால வரலாற்றைக் கொண்ட மருதமுனை கைத்தறி நெசவுத் தொழில்துறை தற்பொழுது எவ்வாறு இருக்கின்றது என்பதைக் கூறுங்கள்.

**பதில்:** மருதமுனையின் பிரதான வருமானம் ஈட்டும் தொழிலாக கைத்தறி நெசவுத் தொழில்துறை இருக்கின்றது. இந்தத் தொழிலை பல சவால்களுக்கு மத்தியில் முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது. அதே போன்று தற்காலத்திற்கு ஏற்றவாறு செய்யவேண்டியும் இருக்கின்றது. இந்தத் தொழிலை எடுத்துக் கொண்டால் சிலர் தாங்கள் விரும்பியவாறு உற்பத்தி செய்து சந்தைக்கு கொண்டு செல்வதனால் இவர்கள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

**கேள்வி:** இவ்வாறானவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள் ?

**பதில் :** இந்த தொழில்துறை சார்ந்தவர்கள் கைத்தறி உற்பத்திகளைச் செய்வதற்கு முன் சந்தையில் எவ்வாறான உற்பத்திக்கு கேள்வி, கிராக்கி இருக்கின்றது என்பதை அறிந்து ஆராய்ந்து உற்பத்தி செய்வதன் மூலம் நஷ்டத்தில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டு தேக்க நிலை இல்லாது இத்தொழித்துறையை முன்னெடுக்க முடியும்.

**கேள்வி :** எல்லா உற்பத்தியாளர்களும் ஒரேமாதிரியான உற்பத்திகளைச் செய்வதால் பாதிப்பு ஏற்படுகின்றதா?

**பதில் :** ஒருவர் செய்கின்ற உற்பத்தியை அப்படியே மற்றவர்களும் கொப்பி பண்ணுகின்றார்கள் இந்த நிலைப்பாடு இல்லாமல் தனித்தனியே ஒவ்வொருவரும் தரமான உற்பத்திகளை இன்றைய நவீனத்திற்கு ஏற்ற வகையில் செய்வதன் மூலம் நல்ல பலனைப் பெறமுடியும். சாரி தேவையென்றால் எல்லோரும் சாரியை உற்பத்தி செய்கின்றார்கள். சாரன் தேவையென்றால் எல்லோரும் சாரனை உற்பத்தி செய்கின்றார்கள்.இதனால் சில சந்தர்ப்பங்களில் சாரி தேக்கமடைந்து விடுகின்றது சிலவேளைகளில் சாரன் தேக்கமடைந்து விடுகின்றது.

**கேள்வி :** இதனால் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

**பதில் :** உற்பத்திகள் தேக்கமடைகின்ற போது உற்பத்திச் செலவையும் விட குறைந்த விலைக்கு விற்பனை செய்து விடுகின்றனர். இதனால் பாரிய நஷ்டத்திற்குள்ளாகி இத்தொழிலைச் செய்ய முடியாத ஒரு அவல நிலை ஏற்படுகின்றது. சிலர் தங்கள் வாழ்விடங்களைக் கூட இழந்து மன நோயாளிகளாக மாறியிருக்கின்றார்கள்.

**கேள்வி :** மருதமுனை கைத்தறி உற்பத்திகளை யார் அதிகம் விரும்பி அணிகின்றார்கள்?

**பதில் :** தற்பொழுது சகோதர சிங்கள சமூகம் மருதமுனை கைத்தறி உற்பத்தியை மிகவும் விருப்பத்துடன் அணிந்துவருவதை நாங்கள் அவதானிக்கின்றோம் இதே போன்று ஏனைய சமூகங்களும், வெளிநாட்டுப் பிரஜைகளும் விரும்பி அணியும் வகையில் அவர்களின் ரசனைக்கு ஏற்றவாறு புதிய மெருகுடன் செய்வதே எங்களுடைய அடுத்த நகர்வாக இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த கைத்தறித் தொழில் துறையில் வெற்றி காணமுடியும்.

இந்த கைத்தறி உற்பத்திக்கு எமது நாட்டில் நிறையத் தேவை இருக்கின்றது அந்தத் தேவையை நிறைவு செய்து கொண்டு நாங்களும் வருமானத்தை ஈட்ட வேண்டுமாக இருந்தால் உற்பத்திகளைத் தரமானதாகச் செய்ய வேண்டும், எல்லாக் காலமும் இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்க முடியாது.

**கேள்வி :** இந்தக் கைத்தறி நெசவுத் தொழிலை இன்னும் மேம்படுத்தவதற்கு தொழிலாளர்கள் இருக்கின்றார்களா ?

**பதில் :** இந்த நெசவுத் தொழிலில் இருக்கின்ற பாரிய பிரச்சினை



இளம் சந்ததியினர் இந்தத் தொழிலில் எந்த அளவு ஆர்வமாக இருக்கின்றார்கள். ஆனால் பூர்வீகமாக கைத்தறி நெசவுத் தொழிலைச் செய்து வருகின்ற மருதமுனைனயில் இளைஞர் யுவதிகள் இந்தத் தொழிலில் இணையாமல் இருப்பதற்கு இந்தத் தொழில் இப்போது கவர்ச்சியிலாமல் இருப்பதாக நினைப்பதும் கல்வியில் ஆர்வம் காட்டுவதுமே காரணமாகும் என நினைக்கின்றேன். எதிர்காலத்திலே இந்த இளைஞர், யுவதிகளை இந்த நெசவுத் தொழிலின்பால் ஈர்க்கச் செய்ய வேண்டிய தேவையும் இருக்கின்றது. இல்லையென்றால் இன்னும் ஒரு இருபது வருடங்களில் நெசவாளர்கள் இல்லாது பெரும் நெருக்கடி ஏற்படும்.

மாற்று வழியாக இயந்திரங்கள் மூலம் இந்தத் தொழிலைச் செய்வதாக இருந்தால் கூட தொழிலாளர்கள் இல்லாத நிலை இருக்கின்றது. எதிர்காலத்திலே இயந்திரங்கள் மூலமாக இந்தத் தொழிலைச் செய்வதற்கு தொழிலாளர்களைத் தேடிக் கண்டுபிடித்துப் பயிற்றுவிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இல்லையென்றால் இந்தத் தொழிலைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும்.

நான் ரொம்ப பிஸி...

சுனாமிக்கு முன்னர் நெசவுத் தொழிலில் நல்ல அனுபவமுள்ள நெசவுத் தொழிலாளர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துபோனார்கள் இதனால் ஒரு வருடத்திற்கு மேல் மருதமுனைப் பிரதேசத்தில் தறிகளின் சத்தம் கேட்கவே இல்லை. பாதிக்கப்பட்ட நெசவுத்தொழிலை உயிர்ப்பிக்க அன்று ஆட்சியில் இருந்த அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.



தரமான பொருட்களை உற்பத்திசெய்கின்ற போதிலும் வெளிநாடுகளிலிருந்து வரையறையற்ற வகையில் துணிவகைகள் இறக்குமதி செய்யப்படுவதால் கிழக்கு மாகாண கைத்தறி உற்பத்திகள் சில வேளைகளில் தேக்க நிலையை அடைகின்றது. வெளிநாடுகளிலிருந்து நூல் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற போதிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாரம், சாரி மற்றும் துணி வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கைத்தறி நெசவாளர்களை மேலும் ஊக்குவிக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

**கேள்வி:** கொரோனா தொற்று ஏற்பட்டதன் பின்பு இந்தத் தொழில்துறை எவ்வாறு இருக்கின்றது.

**பதில்:** கொரானா தொற்று ஏற்பட்டதன் பின்னர் இந்த கைத்தறித் தொழிற்துறை பாதிக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மூலப் பொருற்கள் குறிப்பாக நூலின் விலை அதிகரித்துள்ளது. இந்தியாவில் தரமான பஞ்சு உற்பத்தி செய்யப்படாமையாலும் நூல் தட்டப்பாடு ஏற்பட்டு விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு சரியான விலை கிடைக்காமல் இருக்கின்றது. அதே போன்று நுகர்வோருக்கு பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலையை மாற்றியமைக்க வெளிநாடுகிளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நூல் மற்றும் சாயம் உட்பட ஏனைய உபகரணங்களுக்கு மானியம் வழங்க அரசு முன்வரவேண்டும் என்பதே நெசவுத் தொழிலாளர்களின் கோரிக்கையாகும். அதேபோன்று கிழக்கு மாகாணத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்த அரசு முனைய வேண்டும் என்றார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்** மருதமுனை
**தினகரன் நிருபர்**







# இயற்கையான முக அழகு பராமரிப்புகள்!





ஆரோக்கியமான மற்றும் ஒளிரும் சருமத்தைப் பெறுவதற்காக இந்த ரசாயனமில்லாத இயற்கைப் பொருட்களை பயன்படுத்துங்கள். ஒவ்வொரு தோல் வகைக்கும் இது பொருந்தும். இது எண்ணெய், உலர்ந்த, சாதாரண அல்லது உணர்திறன் கொண்டதாக சருமமாக இருக்கலாம். உங்கள் சருமத்தை குணப்படுத்தவும் இயற்கையாகவே அழகுபடுத்தவும் இயற்கையின் சக்தியை நீங்கள் தேர்வு செய்யுங்கள். உங்களுக்கு நேரம் இல்லாதபோது, உங்கள் அழகை மேம்படுத்த சில இயற்கையான முக அழகு குறிப்புகளை தெரிந்து கொள்வது அவசியம். சருமத்தை எரிச்சலூட்டாமல் விரும்பிய பளபளப்பை வெளிப்படுத்தும். இந்த அழகுக்குறிப்புகள் முயற்சிக்கப்பட்டு சோதிக்கப்பட்டுள்ளன மற்றும் எல்லோருடைய சருமத்திற்கு இயற்கைமுறைய சிறந்தது.

### வீங்கிய கண்களுக்கு குளிர்ந்த தேநீர் பைகள்:

தினமும் கிரீன் டீ குடித்துவிட்டு, பயன்படுத்திய தேநீர் பைகளை எறிந்து விடுகிறீர்களா? அடுத்த முறை சேமித்து வைக்கவும். உங்கள் உடலில் இருந்து நச்சுகளை வெளியேற்றும், பச்சை தேயிலை பைகள் உங்கள் சருமத்திற்கு அதிசயங்களைச் செய்கின்றன. இந்த இயற்கையான முக அழகு குறிப்பை பயன்படுத்துவதால், கண்களைச் சுற்றியுள்ள வீக்கத்தை உடனடியாகக் குறைத்து, அவை பிரகாசமாக மாறும். இதற்கு உங்கள் கண் இமைகளில் 5 முதல் 15 நிமிடங்கள் தேநீர் பைகளை வைத்து ஓய்வெடுக்கவும்.

### இறந்த தோல் செல்கள் கடலை மாவு:

இறந்த தோல் செல்கள், மற்றும் வெயிலால் பாதிக்கப்பட்ட சருமத்திற்கு, இருக்கு கடலை மாவு. தெளிவான, மென்மையான மற்றும் இயற்கையாக ஒளிரும் சருமத்தை நீங்கள் பெற விரும்பினால், ஒரு பாத்திரத்தில் சம அளவு கடலைமாவு மற்றும் தயிரை எடுத்து அவற்றை நன்கு கலந்து பேஸ்ட் செய்யுங்கள். இந்த பேஸ்ட்டை உங்கள் முகம் மற்றும் கழுத்தில் சமமாக தடவவும், முன் அரை மணி நேரம் உலர விட்டு பின் முகத்தை கழுவவும் இது இறந்த சரும செல்கள் மற்றும் ஆழமான அழுக்குகளை அகற்றும், இதனால் உங்கள் சருமத்தின் பிரகாசமாக இருக்கும்.

எண்ணெயைக் கட்டுப்படுத்த தக்காளி எமது நாட்டில் வானிலை பெரும்பாலான பகுதிகளில் ஈரப்பதமாக இருக்கும், அதிகப்படியான எண்ணெய் சருமம் உள்ளவர்கள் மிகவும் பொதுவானவர்களே. லைகோபீனுடன் செறிவூட்டப்பட்ட, தக்காளியில் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உள்ளன. மேலும் சிறந்த குளிரூட்டும் மற்றும் அஸ்ட்ரிஜென்ட் பண்புகளும் உள்ளன. இது சருமத்தின் இயற்கையான எண்ணெய்களை கட்டுப்படுத்த உதவுகிறது மற்றும் நீங்கள் அதிகப்படியான எண்ணெயிலிருந்து விடுபடவும் உதவும். இந்த இயற்கை முகம் அழகு குறிப்பு சுருக்கங்கள் மற்றும் நேர்த்தியான கோடுகள் போன்ற வயதான அறிகுறிகளைக் குறைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தக்காளியை கூழ் போல் செய்து உங்கள் முகத்தில் தடவவும். இதை 15 நிமிடங்கள் உலர வைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும், இயற்கையாக ஒளிரும் சருமத்தை இது வெளிப்படுத்தவும்.

பிளாக்ஹெட்ஸ் வெள்ளரி மற்றும் எலுமிச்சை நீங்கள் எல்லோரும் பிளாக்ஹெட்ஸ் உடன் போராடுகிறீர்களா? இவை உங்கள் தோலை மந்தமாக்கவும் சோர்வாகவும் வைக்கும். இயற்கையாகவே பிளாக்ஹெட்ஸிலிருந்து விடுபடவும், பிரகாசமான மற்றும் தோற்றமளிக்கும் தோல் பொலிவை பெறவும், வெள்ளரி மற்றும் எலுமிச்சை சாறு கலவையைப் பயன்படுத்துங்கள். வெள்ளரிக்காய் மற்றும் எலுமிச்சை சாற்றை சம அளவு எடுத்து குளிக்கும் முன் முகத்தில் தடவவும். அதைக் கழுவுவதற்கு முன்பு 10 நிமிடங்கள் இருக்கட்டும். இந்த இயற்கையான முறையை தவறாமல் பயன்படுத்துவது உங்கள் சருமத்தை பிரகாசமாக்கும் மற்றும் பிளாக்ஹெட்ஸ் குறைக்கும். இது அனைத்து தோல் வகைகளுக்கும் ஏற்றது.

### திறந்த துளைகளுக்கு ஆப்பிள்

விரிவாக்கப்பட்ட துளைகள் உங்கள் சருமத்தை முதிர்ச்சியடையும், எண்ணெய் மிக்கதாகவும், தோல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் அழுக்குகளை ஈர்க்கும். முகத்தில் மெல்லிய ஆப்பிள் துண்டுகளை வைத்து 15 நிமிடங்கள் விட்டு விடவும். அல்லது நீங்கள் ஆப்பிள் வினிகர், தேன் மற்றும் முல்தானி மிட்டி மற்றும் ரோஸ் வாட்டர் ஆகியவற்றை தடவலாம். இது உங்கள் தோலில் 30 நிமிடங்கள் உலர விடவும், பின்னர் கழுவவும். ஆப்பிள் உங்கள் முகத்திலிருந்து அதிகப்படியான எண்ணெயையும், துளைகளை மூடி, சருமத்தை இறுக்கி, ஆரோக்கியமாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிக்க வைக்கும்.

இறந்த சருமத்திலிருந்து விடுபட பப்பாளி பப்பேன் எனப்படும் இயற்கையான நொதியால் உட்செலுத்தப்பட்ட பப்பாளி இயற்கையாகவே சருமத்தை மென்மையாக்கும். பழுக்காத பப்பாளிப்பழத்தில் அதிக அளவு பப்பேன் உள்ளது. எனவே இறந்த சரும செல்கள் மற்றும் பிற அசுத்தங்களை அகற்றவும் பயன்படுத்தலாம். உணர்திறன் வாய்ந்த தோல் வகை உள்ளவர்கள் பப்பாளிப்ப ழத்தையும் பயன்படுத்தலாம், ஏனெனில் இது எதிர்வினையைத் தூண்டும் வாய்ப்பு குறைவு. ஒரு கப் பப்பாளி சதைகளை எடுத்து 1 தேக்கரண்டி புதிய அன்னாசிப்பழத்துடன் கலந்து மென்மையான கலவையை உருவாக்கி முகத்தில் தடவவும். பின்னர் கழுவுவதற்கு முன் 5 முதல் 15 நிமிடங்கள் வரை உலர விடவும்.

### எரிச்சலூட்டப்பட்ட சருமத்தை அமைதிப்படுத்தும் கற்றாழை!

ஆரோக்கியமான, ஒளிரும் சருமத்திற்கு கற்றாழை.





எரிச்சலூட்டப்பட்ட சருமத்தை அமைதிப்படுத்துவது முதல் ஊட்டச்சத்து அளிப்பது வரை, கற்றாழை ஜெல்லைப் பயன்படுத்துவது ஒரு இயற்கை முறை. ஒரு சிறிய வெட்டு, முகப்பரு, அரிக்கும் தோலழற்சி அல்லது வேறு ஏதேனும் தோல் பிரச்சினையாக இருந்தாலும், சில கற்றாழை ஜெல்லை ஒரு நாளைக்கு இரண்டு முறை பயன்படுத்தினால் அது குணப்படுத்தும்.

### ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்காக தியானம் செய்யுங்கள்:

சில நேரங்களில், உங்கள் மனமும் உடலும் தொடர்ந்து அழுத்தமாக இருந்தால் அழகு பொருட்கள் அல்லது இயற்கை பொருட்கள் எதுவும் உதவ முடியாது. உண்மையில், சில தோல் பிரச்சினைகள் கவலை மற்றும் மன அழுத்தத்தால் மோசமடைகின்றன. எனவே, ஒரு நல்ல இரவு தூக்கத்தைப் பெறுவதைத் தவிர, தியானம் மற்றும் மிதமான உடற்பயிற்சி மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. இந்த இயற்கையான முக அழகு உதவிக்குறிப்புகளுடன் நீங்கள் ஒரு நல்ல தோல் பராமரிப்பு வழக்கத்தை பின்பற்றும்போது, நல்ல மாற்றத்தை பெறலாம்.







# கலைத்துவம் வாய்ந்தவையாய் மிளிரும்
## பழனிபாரதியின் பாடல்கள்

பன்முகக் கலைஞராய் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி ஆளுமைகளில் கவிஞர் பழனிபாரதிக்கென்று ஒரு தனியிடம் இருந்து விடுவதுண்டு .தென்னிந்திய திரைத்துறைசார் வெளியில் பாடல்கள் என்று வருகின்றபோது பழனிபாரதியின் பாடல்கள் ஒவ்வொரு கோணத்தில் வைத்து நோக்கக்கூடிய வண்ணம் பல நல்ல பாடல்களை எழுதியிருக்கக் கூடியவர் இவராவார்.
ஒரு காத்திரமான கலைஞனாய் இன்று வரை தன் பாடல்களில் எந்தவிதமான சோர்வு நிலைக்கும் இடம் தராமல் சிறப்பான பாடல்களை தந்து கொண்டிருக்கும் பாடலாசிரியர் பழனிபாரதி தமிழ் இலக்கிய பரப்பு கண்ட மாபெரும் கவிஞரும் கூட . பாடல்களோடு சேர்ந்து பல நல்ல கவிதை நூல்களையும் தந்திருக்கும் பழனிபாரதி, கையாளுகின்ற மொழி கவிதைகளிலும் பாடல்களிலும் அவருக்குண்டான ஒரு தனி அந்தஸ்தை பெற்றுத் தந்திருக்கின்றது என சொல்ல முடியும் .

பாடலாசாரியராக திரைத்துறை வெளியில் தொண்ணூறுகளின் நடுப்பகுதிகளில் இவரது பாடல்கள் பிரபலயமாக தொடங்கின . அந்தநாட்களில் திரைத்துறையில் வெளியாகி இன்றுவரை முணுமுணுக்கக்கூடிய பல பாடல்களைத் தந்திருக்கக்கூடியவர் பழனிபாரதி. பழனிபாரதியின் பாடல்களுக்கென்று என்றைக்குமொரு ரசனையும் கலைத்துவமும் இருந்துகொண்டேயிருக்கும் .

பூவே உனக்காக திரைப்படம் உண்மையில் அந்நாளில் திரைக்கதைக்கு அப்பால் படத்தில் இடம்பெற்ற பாடல்களுக்காக நன்றாகப் பேசப்பட்டிருந்த ஒரு திரைப்படமாக அமைந்தது. பாடலாசிரியர் பழனிபாரதிக்கும் நல்ல நாமத்தை பெற்றுக் கொடுத்தது. அந்தத் திரைப்படத்தில் இடம்பெற்ற ஆனந்தம் ஆனந்தம் பாடும் பாடல் இன்றுகேட்டாலும் ஏதோ புதிதாக கேட்கின்ற பாடல் போன்ற ஒரு மனவுணர்வை தந்து நிற்கின்றது . அந்தப் பாடலில் ,

“இன்னும் நூறு ஜென்மங்கள்
சேரவேண்டும் சொந்தங்கள்
காதலோடு வேதங்கள்



ஐந்து என்று சொல்லுங்கள்

தென் பொதிகை சந்தனக் காற்று
உன் வாசல் வந்திட வேண்டும்
ஆகாயகங்கைகள் வந்து
உன் நெஞ்சில் பொங்கிட வேண்டும்”

என்ற வரிகளினூடாக பழனிபாரதி, காதலின் வேதனையை உள்ளார வைத்துக் கொண்டு வாழ்த்திப் பாடுகின்றதாக அமையப்பெற்ற இப்பாடலை அழகாக எழுதியிருப்பார்.

அடுத்து காதலுக்கு மரியாதை திரைப்படத்தில் இடம்பெற்ற இவரது பாடலான என்னை தாலாட்ட வருவாளோ பாடல் அந்நாளில் பல இளைய நெஞ்சங்களின் இதய நாளங்களை தொட்டு நின்றபாடலாக அமைந்திருந்தது. அந்தப் பாடலிலும் ,

“பூவிழி பார்வையில் மின்னல் காட்டினாள்
ஆயிரம் ஆசைகள் என்னில் ஊட்டினாள்
ஏனோ ஏனோ நெஞ்சை பூட்டினாள்
இரவு பகலும் என்னை வாட்டினாள்
இதயம் அவள் பெயரில் மாற்றினாள்”

என்ற மாதிரியாக வார்த்தைகளில் ஏக்கத்தை ஏறி உட்கார வைத்திருக்கும் அவரது மொழி அலாதியானது .

பூவெல்லாம் கேட்டுப்பார் திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய பாடலான “இரவா பகலா வெயிலா மழையா” பாடலும் இவருக்கு நல்லதொரு நாமத்தைத் தந்தது. அதிலும்

"வானவில்லில் வானவில்லில்
வண்ணம் எதுக்கு
வந்துதொடும் வந்துதொடும்
தென்றல் எதுக்கு
அந்திவானில் அந்திவானில்
வெட்கம் எதுக்கு
புரிந்தது புரிந்தது இன்று எனக்கு"

சந்தங்களை கூட சம்பிரதாயங்களுக்காய் மட்டுமன்றி சிந்தனைக்காக சிந்திக்க தருகின்ற ஒரு சில பாடலாசியர்களில் பழனிபாரதி தனித்துவமானவர் .

காதலுக்கு மரியாதை திரைப்படத்தில் இடம்பெற்ற ஆனந்த குயிலின் பாட்டு பாடலும் இவரது பாடல்களில் மிக முக்கியமான பாடல் என்பேன்.
மிக அழகான வார்த்தைகளை பிரயோகித்திருக்கும் நம் கவிஞர் பல கருத்தியல்களை கூட பதிந்து நிற்கின்றார். அதில் வருகின்ற

“பாசத்திலே வாசம்
தரும் பூவனம் நீதானே
நேசத்திலே ராகம் தரும்
வீணையும் நீதானே
சிலர் வேதம் பாடலாம்
சிலர் கீதை தேடலாம்
நான் கண்ட வேதம்
நான் கண்ட கீதை
அண்ணனின் வார்த்தைகள் தான்”

என்ற வரிகள் உண்மையில் நெஞ்சை தொட்டு நிற்கின்றன .

காதலை எடுத்துக் கொண்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இளையோரின் நெஞ்சங்களை குறி வைத்து எழுதி அதில் வெற்றிகளையும் கண்டிருப்பவர் பழனிபாரதி.

ஜெயம் திரைப்படத்தில் இவரது வரிகளிலமைந்த கோடிகோடி மின்னல்கள் பாடல் உண்மையில் நல்ல உவமைகள், இயற்கைசார் வர்ணனைகள் என நான் வியந்து ரசிக்கின்ற ஒரு பாடல். அதிலும் ,
"ரயிலின் ஓசை இங்கே சுக
நாதஸ்வரங்களாக
இதயம் இரண்டும் இணைந்து ஓடுமா?
பழகு பாதம் பார்த்து அவன் சுப்ரபாதம்
பாட சிணுங்கும் கொலுசு சுருதி
சேர்க்குமா?”
என்றவரிகள் உண்மையில் மிகத்தரம் வாய்ந்தவையாக மிளிர்கின்றன .

இலக்கியக்காரர்கள் பாடலாசிரியர்களாகவும் இருக்கின்ற போது உண்மையில் வார்த்தைகள் மிகச்சிறப்பாக வந்து வீழ்ந்து விடுவதுண்டு. அவை புதிய சிந்தனைகளிற்கும் வழிவிடுவனவாகவும் மாறி விடுவதுண்டு. அப்படியாக பழனிபாரதியின் பல பாடல்களில் இடம்பெற்றிருக்கக் கூடிய வார்த்தைகள் அவரை ஒரு இலக்கியத்தரம் வாய்ந்த வார்த்தைச் சிற்பியாக மொழிந்திருக்கின்றது.

பூவே உனக்காக திரைப்படத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பாடலான "சொல்லாமலே யார் பார்த்தது "பாடலிலும் தன் வார்த்தை விளையாட்டை மிக அழகாக வெளிப்படுத்துகின்றார். அதிலும்

"கண்ணே நீ முந்தாணை காதல் வலையா
உன் பார்வை குற்றாலச் சாரல் மழையா
அன்பே உன் ராஜாங்கம் எந்தன் மடியா
நீமீட்டும் பொன் வீணை எந்தன் இடையா
இதயம் நழுவுதடி உயிரும் கரையுதடி
உன்னோடு தான் ".

காதல் ததும்பும் இந்தவரிகள் உண்மையில் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

ஒன்ஸ்மோர் படத்தில் பூவே பூவே பெண் பூவே பாடலிலும்

"ஆண்டுநூறு நீயும் நானும் சேர்ந்து
வாழ வேண்டும்
மாண்டு போன கதைகள் நம்மை
மீண்டும் பாட வேண்டும் "


மிக சிறப்பாக தன் பாணியினை செய்திருக்கின்றார் கவிஞர் .

பல்வேறு பட்ட பாடலாசிரியர்களை கண்டிருக்கும் தமிழ் திரையிசை சூழலில் பழனிபாரதி தனித்துத் தெரிகின்ற ஒருவராக கணிக்கப்படுவதற்கு அவரது பாடல்களே கட்டியம் கூறி நிற்கின்றன. அவை இன்னுமின்னுமாய் ஆழ்ந்து நோக்கக்கூடியனவாயும் மிளிர்கின்றன.









வெற்றி துஷ்யந்தன்



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் நடனாலயா நடன பள்ளியின் மாணவிகளான ஆர். சுகன்யா, ரி. மிதுஷா, ரி. சுகிர்தா, யூ. யாழினி, எம். சங்கீர்த்தனா, ஏ. அபிஷா, ஏ. அலெக் ஷா, என். நிஷா

படம் : சங்கவி பிலிம்ஸ் நிறுவனப்பணிப்பாளர் துரைராசா சுரேஷ்